
"என் கடன் பணி செய்து கிடப்பதே"

# குமரன்



## ஆண்டுமலர்

சொந்தக்காரர்
தனவைசியன் கம்பெனி, லிமிடெட். காரைக்குடி.

# குமரநாயகன்.

உலகிரு ளகற்றப் பலகதிர் பரப்பி
 யொப்பிலா வனப்பொடு விளங்கிப்
பொலிவுறு முகமுந் தெறுகதிர் வெம்மை
 போக்குதற் கெண்ணிவிண் படர்ந்து
செலுமுனி வரைப் புரந்தபொற் கரமுந்
 திருநகை முறுவலு மருங்கிற்
குலவிய கரமுங் கண்டுகண் டுவந்தேன்
 குமரநா யகன்றிருக் கோலம்.

விழைபவர் விழையும் வரங்களை யளிக்க
 விரும்பிய திருமுகப் பொலிவை
அழகிய தொடையி லமைத்தபொற் கரத்தை
 யங்குசந் தாங்கிய கரத்தை
மழகளி றூர்ந்து வருதிரு வுருவ
 வனப்பினை நினைக்குமெல் லையிலே
குழைவுறு மனத்தேன் கண்டுகண் டுவந்தேன்
 குமரநா யகன்றிருக் கோலம்.

மந்திர விதியின் மரபுளி வழாது
 மாமறைத் தீயினை வளர்க்கும்
அந்தணர் வேள்வி புரந்தரு ளிறையை
 யந்தரத் தமரர்கள் வாழச்
சுந்தரப் பரிசை யயிற்படை. யேந்துந்
 துணைக்கரத் தெழிலுரு நிறைவைக்
கொந்தவிழ் பொழிலிற் கண்டுகண் டுவந்தேன்
 குமரநா யகன்றிருக் கோலம்.

அளிமிகு மியல்பா லருமறைப் பொருளும்
ஆகமத் துட்பொருண் முடிபும்
தெளிவுறின் மவுன மெனுந்திரு முகமும்
சின்மய மிதுவெனக் காட்டும்
ஒளிமிகு கரமும் மார்பினன் மாலை
யுற்றபொற் கரமுமா யொளிரக்
குளிரிதழ் மலர்மேற் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

விரைவினிற் செல்லுங் களிமயி லேறி
விளங்கிள வுருவின தெனினும்
பரிவொடு கறுவுந் திருமுக வனப்பும்
படுமணி யிரட்டிய கரமும்
திருநிறை தொடியோ டெடுத்தபொற் கரமுஞ்
சிந்தைநொந் தலைபவர்ப் புரக்குங்
குரைகழற் பொலிவுங் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

அணியர மகளிர் விழைவினை யகற்ற
அவர்மன நினைவினிற் பொருந்தும்
மணமக னுருவும் மாலையை யேந்தி
மயங்கிய திருக்கர வனப்பும்
பணிநல மடைய வுலகுயிர் தழைப்பப்
பயன்றரு மழைபொழி கரமும்
குணமிலேன் சிறியேன் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

—சுவாமி விபுலானந்தர்.

உ

சிவமயம்.

OFFICE OF ... BOOKS
10 MAY 1928
MADRAS

# குமரன் ஆண்டு மடல்.

நாளென்செயும் வினைதா னென்செயும் எனைநாடிவந்த
கோளென்செயுங் கொடுங்கூற் றென்செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

காரைக்குடி விபவ, ஆண்டு சித்திரைத் திங்கள்.

## சென்ற ஆண்டு

உலகத்தில் நடக்கும் எண்ணற்ற நிகழ்ச்சிகளுள் பல சென்ற ஆண்டிலும் நிகழ்ந்தன. உலகெங்கும் அமைதியை நிலைநாட்டப் பாடுபடும் முயற்சி ஒருபுறம்; உலகினை வஞ்சித்து வலிமையால் அடிமைகொண்டு நாடு பிடித்து வாழ முயல்வது மற்றொரு புறம்; எளிய நாடுகளிலுள்ள கைத்தொழில்களை அடியோடு தொலைத்து யந்திரங்களால் ஆக்கப் பெற்ற பொருள்களை மூலை முடுக்குகளிலெல்லாம் கொண்டுபோய்ப் புகுத்துவது பிறிதோர் புறம். இவற்றிற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிகளும் பிறவும் எண்ணில. இந்நிலைமையில் சென்ற ஆண்டைப்பற்றி நமது நாட்டைப்பொறுத்த அளவில் சில நிகழ்ச்சிகளை ஈண்டு நோக்கலாம்.

### ஐரோப்பா யாத்திரை.

இந்தியாவின் தலைமாட்டிலுள்ள ஆப்கன் நாட்டு அரசர்(அமீர்) ஐரோப்பிய நாடுகளைப் பார்த்தற்குப் பிரயாணமான நிகழ்ச்சி ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும். அமீர் அமனுல்லாகான் அமைதியும், ஆண்மையும், தேச பக்தியும், ஒழுக்கமும், பிற சீரிய குணங்களும் பெற்றவராவர். அவருடைய மேல்நாட்டுப் பிரயாணம் ஆசியா வாசிகளுக்கு ஒரு சிறந்த பயனை அளிக்குமென்று நம்பப்படுகிறது. அவர் மேனாட்டிலுள்ள ஒவ்வொரு தேசத்தையும் சென்று சுற்றிப் பார்த்து வருகிறார். ஆங்காங்குள்ள மன்னர்களும் அவருக்கு அளவிறந்த மரியாதைகள் செய்து வருகின்றனர். கீழ்நாட்டு மன்னருக்கு இவ்வளவு ஆடம்பரமான வரவேற்பு மேனாட்டாரால் கொடுக்கப்பட்டதுஇதுவே முதல் தடவை யென்னலாம். அமீருடைய போற்றலும், அருங்குணங்களும், அரசியல் நுண்ணறிவும் மேனாட்டினரைத் திகைக்கச் செய்திருக்கிறது. அவரது மனைவியார் கோஷா முறையை விடுத்து ஆடவர் கூட்டங்கட்கும் தாராளமாகச் சென்று தமது சுதந்திர புத்தியினையும், நாகரிக முற்போக்கினையும் வெளியிட்டுள்ளார். ஆப்கன் அமீரின் ஐரோப்பாச் சுற்றுப் பிரயாணம் ஆகிய

நாடுகளின் மேன்மையையும், சிறப்பையும் ஐரோப்பிய நாடுகளிலுள்ளவர்கட்கு நன்கு அறிவுறுத்துகிறதென்பதில் ஐயமில்லை.

### மிஸ் மேயோ.

அமெரிக்க மாதாகிய இவ் வம்மாள் ‘இந்தியத் தாய்’ என்னும் நூலை யெழுதி உலகெங்கும் பரப்பி விட்டாள். இந்நூல் பொதுவாக உலகினரது கவனத்தையும், சிறப்பாக இந்தியரது கவனத்தையும் ஈர்த்து நிற்கின்றது. இந்நூலில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களில் பல உண்மையாயினும் அதனை வெளியிட்ட முறை துவேஷங் கொண்டதாகும். நமது தேசத்தில் குற்றங் குறைகள் பெரிதுமிருக்கின்றன. பண்படுத்தப்பட்ட நன்செய் நிலங்களில் பலகாலம் தேடுவாரற்றுக் கள்ளியும் கற்றாழையும் வளர்ந்து மிகுந்தாற்போல நமது நாடு இன்று பாழ்பட்டுக் கிடக்கின்றது. இதனை அனுதாபத்தோடு எடுத்துக்கூற மிஸ் மேயோ முன் வந்திருந்தால் அதனை நாம் மறுக்க முடியாது; குறை கூறவும் இடமில்லை. ஆனால் நமது நாட்டிலுள்ள அரும் பெருங் கலைகளைப்பற்றியும், உலகிற்கே முடிமணிகளாக விளங்கும் போறிஞர்களைப்பற்றியும், பல்வளங்களும் செறிந்த இந்திய நாட்டை எப்படி அந்நியநாட்டார் அமிழ்த்தி வைத்திருக்கிறார்க ளென்பதைப் பற்றியும் நல்லெண்ணத்தோடு எடுத்துவிரிவாகக்கூறி, குறைகளையும்எடுத்துக்காட்டியிருந்தால் அவ் வம்மையாரைப்போற்றுவோம் அவ்வாறன்றி இந்தியர்களிடம் காணப்படும் தீய பழக்க வழக்கங்களை எடுத்து விளக்கி “இந்தியர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள்” என்ற கருத்தினை வெளிநாட்டிலுள்ளவர்கள் கொள்ளவேண்டு மென்னும் நோக்கத்தோடு இந்நூல் யாக்கப் பெற்றிருக்கிறது. எனவே இந்நூல் வெளியீட்டால் வெளிநாட்டினர் இந்திய நாட்டினரை இழிவாகக் கருதுதல் ஒருதலை. இந்நூலில் கூறப்பட்டுள்ள குற்றங் குறைகளைக் களையவேண்டுவது இந்தியமக்கள் ஒவ்வொருவருக்கும் தலைமேற் பொறுத்த கடனாகும். ஆனால் ஈண்டுள்ள வைதீகர்கள் மிஸ்மேயோவின் புத்தகத்தில் குறை கூறப் பெற்றுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் வைத்து வளர்க்க வேண்டுமென்று வாதாடி வருகின்றாரென்பதையும் நினைப்பூட்டுகிறோம்.

### ராயல் கமிஷன்.

இந்திய அரசியலுலகில் மிகவுங் குறிப்பிடத்தக்கது ஸர். ஜான்சைமனைத் தலைமையாகக்கொண்ட எழுவர்குழு இந்தியாவுக்கு விஜயஞ்செய்ததாகும். பல்லாண்டுகட்குஒரு முறை இந்தியர்களைப் பதம் பார்த்துப் படிபோடுவதற்காகச் செய்யப்படும் சூழ்வினைகளுள் இதுவும் ஒன்று. இக்குழுவானது இந்தியாவிற்கு வரப்போகிறதென்ற செய்தி கிடைத்தது முதல் இதனைப் பகிஷ்கரிக்க வேண்டு மென்ற எண்ணமும் தோன்றி வளர்ந்தது. நமது நாட்டிலுள்ள எல்லாவிதமான அரசியல் கட்சியாரும் இக்குழுவின் வருகையை எதிர்க்க முனைந்தார்களேயன்றி அணைக்க முயன்றாரல்லர். வழக்கம்போல் இக்குழுவினர் வந்தனர்; சுற்றினர்; புறப்பட்டுச்சென்றனர்.

### சென்னைக் காங்கிரஸ்.

பதினான்காண்டுகளாகச் சென்னைக்கு வாராதிருந்த காங்கிரஸ் மகாசபையானது சென்ற ஆண்டு டாக்டர் அன்ஸாரி அவர்கள் தலைமையில் கூடியது. மற்ற இடங்களைக் காட்டிலும் மிக்க ஆடம்பரமாகவே நடைபெற்றது. காங்கிரஸ் ஏற்பாடுகளும், வந்திருந்தோருக்குச் செய்யப்பெற்ற வசதிகளும் வேறெவ்விடத்திலும் செய்யப்பட்டதில்லையென்று கூறலாம். இதனை யொட்டிப் பொருட்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. உலகிலுள்ள பொருளெல்லாம் ஒருங்கே திரண்டாற்போல இக்காட்சிச் சாலை விளங்கியது. ஆனால் ஆங்கில நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்த காங்கிரசை ஒட்டியே நடத்தப்பட்ட பொருட்காட்சியில் ஆங்கில நாட்டில் செய்யப்பட்ட யந்திரங்களும், ஏனைய பொருள்களும் எண்ணற்றுக் குவிக்கப்பட்டிருந்தன. இப்பொருட்காட்சியால் இந்திய நாட்டின் மூலை, முடுக்கு, காடு, மேடெல்லாம் ஆங்கில நாட்டுப் பொருளும், அந்நிய நாட்டுப் பொருளும் நிறைவதற்குக் காரணமாகிவிட்டதென்று ஐயமின்றிக் கூற இடமுண்டாகிவிட்டது.

“யுனைடெட் இந்தியா” கம்பெனியே இம்மாகாண மக்களால் போற்றப்படுவது.



### மந்திரி சபை

சென்னைச் சட்டசபைக்குச் சென்ற தடவை நடந்த தேர்தலில் பதவி யெற்பதில்லை யென்ற சுயராஜ்யக் கட்சியினரே பெரும்பாலோராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதால் சுயேச்சைக்கட்சியைச் சேர்ந்த டாக்டர் சுப்பராயன், ஸ்ரீமான்கள் ஆரோக்கியசாமி முதலியார், அரங்கநாத முதலியார் ஆகிய மூவரும் மந்திரிகளாக நியமிக்கப் பெற்றனர். இவர்கள் சுயராஜ்யக் கட்சியினரின் ஆதரவாலேயே மந்திரிகளாக இருந்து வந்தன ரென்பது மிகையாகாது. சைமன் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று சென்னைச் சட்டசபையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை முன்னிட்டு ஸ்ரீமான்கள் ஆரோக்கியசாமி முதலியாரும், அரங்கநாத முதலியாரும் அவர்களது வரவேற்பிலும் பிறவற்றிலும் கலந்துகொள்ளவில்லை. இதுபற்றி யெழுந்த அபிப்பிராய பேதங் காரணமாக இவ்விருவரும் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்ய வேண்டியவராயினர். அவர்களுக்குப் பதிலாக ஸ்ரீமான்களான முத்தையா முதலியாரும், சேதுரத்தினம் அய்யரும் நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

### சட்ட அங்கத்தினர் பதவி.

சென்ற ஐந்து ஆண்டுகளாக சென்னை யாசாங்க சட்ட அங்கத்தவராக இருந்து வந்த ஸர் ஸி. பி இராமசாமி அய்யர் அப்பதவியினின்று விலகியதும் அட்வகேட் ஜெனரலான ஸ்ரீமான் டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார் நியமிக்கப்பட்டார். கடந்த கஅ ஆண்டுகளாக இப்பதவி பார்ப்பனர்களுக்கே அளிக்கப்பட்டு இத்தடவையும் ஓர் பார்ப்பனருக்கே அளிக்கப்பட்டது, பார்ப்பனரல்லாதாருக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது. ஆனால் சிற் சில இலாகாக்கள் வேறு அங்கத்தவருக்கு மாற்றப்பட்டதைக் காரணங்காட்டி திரு சாஸ்திரியார் பதவியேற்ற இரண்டு தினங்களுக்குள் ராஜீநாமாக் கொடுத்து விட்டார். பின்னர் அப்பதவிக்கு மிகுந்த திறமைசாலியும் பார்ப்பனரல்லாதார் கட்சியின் உபதலைவருமான திருவாளர் கிருஷ்ணன் நாயர் நியமிக்கப் பட்டிருக்கிறார். பல ஆண்டுகளாக ஒரே சமூகத்தார் ஆதிக்கம் வகித்து வந்த சட்ட அங்கத்தினர் பதவி இன்று ஒரு பார்ப்பன ரல்லாதாருக்குக் கிடைத்தது பெரிதுங் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

### பிராமணரல்லாதார் இயக்கம்.

தெய்வத் தமிழன்னையின் மக்கள் பல வகையிலும் சிதறுண்டு ஒற்றுமை கெட்டு இன்னல்கட்கு ஆளாகி நிற்கின்றனர். இந்நாள் தமிழ்நாட்டில் முருகி யெழுந்திருக்கும் முக்கியமான இயக்கம் பார்ப்பனர்பார்ப்பனரல்லாதாரியக்கமேயாகும். இப்பூசல் வரவர வளர்ந்தோங்கி வருகிறது. பன்னெடு நாளாக சமயநெறியைத் துணைக்கொண்டு மக்களை மக்கள் இழிவுபடுத்திக் கட்டுப்பாட்டினால் சுயநலத்தை நாடிவந்ததன் பயனாகவே இவ்வியக்கந் தோன்றியிருக்கிறது. கட்டுப்பாட்டினால் அடிமைப்

A Policy in the United India Combines patriotism and prudence.

படுத்தப்பட்ட குழுவினர்க்கு ஒருநாளும் தன்னறிவு தோன்றாதென்று கருதுவது அறியாமையாகும். அவ்வுணர்ச்சி தோன்றுமானால் அதன்பயன் விடுதலையாகவே இருக்கும். விடுதலை கிடையாதவரை பூசல் ஒழிவதில்லை யென்பது திண்ணம். இப்படியே சுயஆட்சிக் கிளர்ச்சியுமாகும். சுயஆட்சி வேண்டும், சுதந்திரம் வேண்டும் என்று கூறுபவர் ஜாதியடிமையை ஒப்புக்கொள்ள முடியாது. ஜாதியடிமையை ஆதரிப்போர் பேசும் சுயஆட்சித் தத்துவத்திற்குப் பொருளே இல்லை. அன்னியரிடமிருந்து சுயஆட்சி பெற உண்மையில் விழைவுறும் ஒருவன் பிறனொருவனை அடிமைப்படுத்தி வைக்க நினைப்பது முறையன்று. இத்தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டெழுந்ததே சீர்திருத்த இயக்கமாகும். அதனையொட்டியே பார்ப்பனரல்லாதாரியக்கமும் வளர்ந்துவருகிறது. பார்ப்பனரல்லாதா ரியக்கமானது முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் சென்ற ஆண்டில் மிகப் பரவிவிட்டது.

ஈ. ராமசாமி நாயக்கர்.

இவ்வியக்கமானது சென்ற சட்டசபைத் தேர்தலில் பெற்ற தோல்வி காரணமாகச் சிறிது கலங்கிவிட்டாலும் வைக்கம் வீரரான திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரின் கூட்டுறவால் வளர்பிறை போல் வளர்வதாயிற்று. அவரது உலையா முயற்சியாலும் களவிலா உள்ளத்தின்பெற்றியாலும் இவ்வியக்கம் தமிழ்நாடு முற்றும் ஒலியும் எதிரொலியுமாகப் பரவிவருவது கண்கூடு.

கோயமுத்தூர் மகாநாடு.

சென்ற ஆண்டு நிகழ்ச்சிகளுள் கோயமுத்தூரில் கூடிய பார்ப்பனரல்லாதார் மகாநாடு ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகவிருக்கின்றது. தேசப் பொதுவான காங்கிரசைக் கைப்பற்றிக் கொண்ட திருக்கூட்டத்தார் பார்ப்பனரல்லாதாரைத் தாழ்மைப்படுத்தக் கொண்ட சொல்லாயுதம் முறித்தெறியப்பட்டது கோயம்முத்தூர் மகாநாட்டில்தான் என்று கூறுதல் மிகையாகாது. காங்கிரஸில் சேர வேண்டுமென்ற கருத்துக்கொண்டவர்களும், ஜஸ்டிஸ் கட்சியானது அரசியலில் பிற்போக்குடையது என்ற எண்ணமுடையவர்களும் இம்மகாநாட்டுத் தீர்மானங்களால் மனத்தெளிவு பெற்றனர். தேசமக்களும் ஜஸ்டிஸ் கட்சியின்பேரில் பிறரால் கூறப்படுங் குறைகள் காங்கிரஸிலும் நிறைந்துள என்பதை நன்றாக உணர்ந்துகொண்டனர். தேசியத்துறையில்-பார்ப்பனரல்லாதாருட் பலர் கொண்டிருந்த மயக்கம் கோயமுத்தூர் மகாநாட்டின் பின்னர் தெளிந்ததென்னலாம்.

மாதரியக்கம்.

இந்திய மாதர்கட்குள் சென்ற ஆண்டில் பேருணர்ச்சி யுண்டாகியிருக்கிறது. காங்கிரஸ் வாரத்தில் சென்னையில் கூடிய மகாநாடுகளிலிருந்து இந்திய மாதர்கள் சீர்திருத்த இயக்கத்தில் முனைந்து முன்னிற்கிறார்கள். அரிபிலாஸ் சாரதாவால் இந்தியாச் சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவும் பம்பாய் சட்டசபையிலும், சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாக்களும் பெண்ணுலகைக் கைதூக்கிவிடக் கூடியனவாக இருக்கின்றன. இவைகளை அறிவுநிறைந்த பெண்மக்கள் கூடி ஆதரித்து வருவதொன்றே பெண்ணுலகத்தில் உயிருணர்ச்சி பெருகி வருகிறதென்பதைக் காட்டுகின்றதென்னலாம்.

பெரியார் பிரிவு.

ஆசாரத்திருத்தத்தில் போர்வமும் துணிவுங்கொண்டு முன்னின்ற பெரியாரான ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர், எம். டி. சுப்பிரமணிய முதலியார் ஆகிய இருவரும் காலஞ்

''யுனைடெட் இந்தியா'' கம்பெனியே இம்மாகாண மக்களால் போற்றப்படுவது.



சென்றமை தமிழ்நாட்டிற்கோர் பெருத்த நஷ்டமாகும்.

அடிகளின் சுற்றுப்பிரயாணம்.

மகாத்மா காந்தியடிகள் தென்னாடு முற்றும் பிரயாணஞ் செய்ததோடு வடநாட்டிலும் சில மாகாணங்களில் பிரயாணஞ் செய்தமை முக்கியமானதாகும். அவரது தமிழக விஜயத்தால் தமிழ் மக்கள் மனத்திலிருக்கும் தாகம் எது வென்பது யாவரும் உணருமாறு வெளிப்பட்டது. ஜாதிக் கொடுமையை பிராமணரல்லாதார் எவ்வளவு தூரம் உணர்ந்து வருந்துகிறார்களென்பது நன்கு விளங்கியது. இவ்வியக்கத்தில் கலந்தவர்கள் தேசிய இயக்கத்துக்குத் தீங்கிழைப்பவரென்று கூறிய புரட்டு, கதருக்களித்த நன்கொடையால் வெளியாகிவிட்டது. 'மகாத்மாவானாலும் ஜாதியடிமைக்கு ஆதரவளிப்பது தகாது; அதனால் தமிழ் மக்கள் படும்பாடு மிகப் பெரிது' என்ற உணர்ச்சி தமிழக மாந்தர் மனத்தில் நிறைந்திருக்கிறதென்பதை மகாத்மாவின் தென்னாட்டு விஜயத்தால் உலகம் அறிந்தது.

இனம் ! இனம்!! இனம்!!!

**135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனம்.**

5 வருஷம் உத்தரவாதம்.] ராஜூ'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

**தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5.**

இந்தத் தமிழ் எழுத்துக்களடங்கிய பெட்டி ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது. ஏனெனில், தங்களுக்குத் தேவையான, விலாசங்கள் முதலியவைகளைத் தாங்களே அடுக்கிக்கொண்டு கார்டு, கவர், கடிதம் லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம். இந்தப் படத்தில் கண்டபடி அதாவது:-

அஅஅஅஆஆஆஇஇஈஈஉஊஊஊஎஎஏஏஐஒஓ.





இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும் ஸ்பேசுகளும், பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துக்கள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சிராவணம் 1, மை ஊற்றிய ஸெல்ப் இங்கி பாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1, ஆக மொத்த சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப் பெட்டி நெ 5 செட் 1-க்கு விலை ரூ. 5—8—0. மேல்கண்ட தமிழ் ரப்பர் எழுத்துப் பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குமரன்' ஆண்டுமடலில் கண்டதாக எழுதினால் A B C D E இம்மாதிரியான இங்கிலீஷ்எழுத்துக்களும், நெம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்களை இனமாக அனுப்பப்படும். மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ. 1—6—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு,

எமது விலாசம்:— அ. ராஜு பிள்ளை அண்டு பிரதர்,

(11) இந்தியாரப்பர் எழுத்துத் தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை, மதராஸ்.

A Policy in the United India Combines patriotism and prudence

# பெண்கள் பந்தடித்தல்.



## சிலப்பதிகாரம்.

பொன்னிலங்கு பூங்கொடிபோலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே.

ஃ

பின்னும் முன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே.

ஃ

துன்னி வந்து கைத்தலத் திருந்த தில்லை நீணிலம்
தன்னி னின்றும் அந்தரத் தெழுந்த தில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே.







# தாலாட்டு.

ஆராரோ ஆராரோ
  ஆரிவரோ ஆராரோ.

மாமணியோ முத்தோ
  மாகதமோ மன்னவர்தம்
தாம முடிமீது
  தயங்கும் வயிரமதோ

முல்லை நறுமலரோ
  முருகவிழ்க்குந் தாமரையோ
பல்லிகைப் பூவோ
  பருக்கொழுந்தோ சண்பகமோ

தெள்ளமுத முண்டு
  தெவிட்டாக் கனியுண்டும்
உள்ளங் குளிர
  உரையாடும் பைங்கிளியோ

கற்கண்டு சீனி
  கனியுங் கனிந்தொழுகு
சொற்கொண் டெமக்குச்
  சுகமளிக்கும் பூங்குயிலோ

நெஞ்சிற் கவலையெலாம்
  நீங்கத் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டிபெம்மைப்
  போற்றும் இளவரசோ

பல்லக்கி லம்மான்
  பவனி வரும்பொழுது
மெல்ல மடியிருந்து
  விளையாடும் பைங்கிளியோ

பூமாலை வாடும் மணம்
  பொன்மாலைக் கில்லையென்று
பாமாலை வைத்தீசன்
  பாதம் பணிபவனே

A Policy in the United India combines patriotism and prudence.

## குமரன் ஆண்டு மடல்.

பாலமுத முண்டுதமிழ்ப் டாமாலை பாடியிந்தத்
தாலம் புகழவரும் சம்பந்தன் நீதானோ

கொன்றையணிந் தம்பலத்தில் கூத்தாடும் ஐயனுக்கு
வன்றொண்ட னாக வளர்ந்தவனும் நீதானோ

கல்லைப் பிசைந்து கனியாக்குஞ் செந்தமிழின்
சொல்லை பணியாத் தொடுத்தவனும் நீதானோ

பூவி லயனுமிந்தப் பூமீது வள்ளுவர்தம்
பாவின் நயமுணரப் பாலகனாய் வந்தானோ

கம்பன் கவியின் கனியமுதம் உண்டிடமால்
அம்புவியில் வந்திங் கவதாரம் செய்தானோ

தேவாரப் பாகுந் திருவா சகத்தேனும்
நாவார உண்ணஎம்மான் நன்மகவாய் வந்தானோ

ஆக்கம் பெருக அறம்வளர நாட்டையெல்லாம்
காக்கும் பெருமாள் கருணைத் திருவுருவோ

புள்ளி மயிலோடு புனங்காத்து நிற்குமந்த
வள்ளி மணவாளன் மதலையாய் வந்தானோ

ஆயர் பதியில் அற்புதங்கள் செய்துநின்ற
மாயவனே இங்கெமக்கு மகவாகி வந்தானோ

நாலாயிரக் கவியின் நல்லமுதம் உண்டிடமால்
பாலாழி நீங்கியொரு பாலகனா வந்தானோ

பெண்கள் சிறு வீட்டைப் பேணா தழித்தவர்தம்
கண்கள் சிவக்கவைக்கும் கண்ணபிரான் நீதானோ

ஆரடித்தார் நீயழுதாய் அடித்தாரைச் சொல்லியழு
சீரெடுத்த செல்வச் சீமான் திருக்குமரா

பாலைவிரும்பினையோ பணிகாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே சுந்தரமே சொல்லியழு

சப்பாணி கொட்டித் தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாவைக் காகக் கலங்கி யழுதனையோ


தித்திக்கும் தேனும் தினைமாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள் அழவேண்டாம் கண்மணியே

மாங்கனியும் நல்ல வருக்கைப் பலாக்கனியும்
வாங்கியுன் அம்மான் வருவா ரழவேண்டாம்
கண்ணுறங்கு கண்ணுறங்கு கண்மணியே கண்ணுறங்கு

—எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை.

## மலாய் நாட்டில் ஹிந்துக் கோயில்கள்.

மலாய் நாட்டில் ஹிந்து மக்கள் ஏராளமாகக் குடியேறி வசித்து வருகின்றனர். இவர்களின் நன்மை நாடிப் பல கோயில்கள் ஆண்டுக் கட்டப் பெற்றுள்ளன. திருப்பணிச் செல்வர்களென்று உலகம்போற்றும் நாட்டுக்கோட்டையாரால் காணப் பெற்ற கோயில்களே பெரும்பாலும் குறிப்பிட்டெடுத்துக் காட்டும்படியான பெருமையுடையனவாக விருக்கின்றன. தொழில் செய்வதற்காகச் சென்றுள்ள அந்நிய நாடுகளில் ஏனைய பல மதஸ்தர்கட் கிடையில் நம் மதக்



சிங்கப்பூர் பிள்ளையார் கோவில்.

கோயில்களைக் கட்டுவது பெரும் பணியாகுமன்றோ? அநேகமாக முருகக் கடவுள் ஆலயங்களே கட்டப் பெற்றுள்ளன. இந்தக் கோயில்களில் பார்ப்பனரல்லாத பண்டாரங்களே பூசை செய்கின்றனர். இதுகாரணமாகக் கோயில்கள் மரியாதையோடும், உண்மையோடும், அசுத்தமின்றியும், பக்தியோடும் நடைபெற்று வருவது கண்கூடு. சிவன் கோயில்களில்மட்டும் பார்ப்பனர்பூஜை நடைபெறுகின்றது. ஆனால் அவர்களுக்கு அக்கோயிலில் எவ்வித உரிமையுமில்லையாதலால் மிக்க மரியாதையுடன் நடந்துகொள்கின்றனர். மலாய் நாட்டில் சிங்கப்பூர், பினங்கு, வாலப்பூர், சுங்குரும்பை, சாவி, தைப்பிங் ஈப்போ, போா, கோலாலம்பூர், கிள்ளான், சொப்பான், மலாக்கா, மூவார், வத்துப் பகார், செகாமெட் முதலிய ஊர்களிலும்

Life Insurance is one matter on which no difference of opinion exists.

சைகோன் மைடான் முதலிய இடங்களிலும் நமது கோயில்களிருக்கின்றன. பர்மாவிலும் சிலோனிலும் பல கோயில்களுண்டு. அவைகளின் படங்கட்கும் விவரங்கட்கும் எவ்வளவோ முயற்சி செய்தும் கிடைக்கவில்லை. சில கோயில்கட்குப் படங்கள் வந்திருக்கின்றன. சிலவற்றிற்கு விவரம் கிடைத்துள்ளன. படங்களில் பல சுத்தமாக இருக்கவில்லை. ஆதலால் எல்லா வகையிலும் வசதிப்பட்ட சில கோயில்கள்மட்டும் இங்கு வெளியிடப்பெறுகின்றன. இதிற் குறிக்கப்பெறும் விஷயங்கள் பல அன்பர்களிடமிருந்து பல காலத்தில் விசாரித்து அறியப்பட்டனவாகும். மற்றவூர்க் கோவில்களைப்பற்றி அடுத்த ஆண்டு வெளியிட ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறோம்.

### சிங்கப்பூர்.

சிங்கப்பூர் மலாய்நாட்டின் தலைநகரமாக விளங்குகின்றது. உலகத்திலுள்ள நானு பாகங்களிலுமுள்ள பல்வேறு ஜாதியினரும் வசிக்கின்றனர். ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கெனக் கோயில்களமைத்திருக்கின்றனர். புத்தமதக் கோயில்களையும், பள்ளி வாசல்களையும், மாதா கோவிலையும், பிற கோவில்களையும் இவ்வூரில் காணல்கூடும். நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் கட்டப் பெற்றுள்ள பிள்ளையார் கோயில் மலாய் நாட்டிலேயே சிறப்புற்று விளங்குகிறதென்று கூறலாம். இப்பிள்ளையார் ஸ்தாபிக்கப்பெற்று எழுபத்தைந்தாண்டுகளாகின்றன. சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள், பட்டாளத்தில் சேர்ந்து சிங்கப்பூரிலிருந்த காலத்தில் இப் பிள்ளையார்ப்பிரதிஷ்டை செய்யப்பெற்றதென்று கூறுகின்றனர். இக்கோவில் மிகச் சிறிதாக அவுட்ராம் ரோடில் முன் இருந்தது. இப்போது சிபோங்சாக் ரோடில் இருக்கிறது. புதிய கோவில் குரோதன ஞல வைகாசி மீ ககூ உ கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ் வழகிய கோவில் ஒன்றரை ஆண்டில் கட்டி முடிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். கட்டிடமும் இடமுமாக சுமார் அறுபத்தையாயிரம் வெள்ளியாகின்றதென்று தெரிகிறது. தைப் பூசத்திற்கு முன்



தெண்டாயுதபாணி கோயிலும் ரதமும்.


A Policy in the United India combines patriotism and prudence.



தினம் தண்டாயுதபாணி கோவிலிலிருந்து முருகப்பெருமான் இவ்வாலயத்திற்கு எழுந்தருளுவதுண்டு. அதுவே இக்கோவிலில் நடைபெறும் முக்கிய உற்சவமாகக் கருதப்பெறும்.

### தண்டாயுதபாணி கோவில்.

சுமார் நூறு வருடங்கட்கு முன்னர் தெங்கு ரோட்டிலுள்ள கட்டிடத்தில் வேல் மட்டும் வைத்துப்பூஜிக்கப் பெற்றது. சுமார் எழுபது ஆண்டுகட்கு முன்பு அர்த்த மண்டபங் கட்டப்பெற்று பிறகு சிறிது சிறிதாகப் பெருகி இப்பொழுது இவ்வாலயம் மிகப் பெரியதொரு ஸ்தாபனமாகச் செழித்தோங்கியிருக்கிறது. தண்டாயுதபாணி கோவிலையொட்டிச் சிவாலயமு மிருக்கிறது. பெரிய பிரகாரம், மகாமண்டபம், அலங்கார மண்டபம், மகேசுவரபூஜைக்காகப் பெரியதொரு கட்டிடம் ஆகியவை நிர்மாணிக்கப் பெற்றுள்ளன. இக்கோவிலுக்குச் சுமார் ஒரு லக்ஷம் வெள்ளி செலவிடப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. இதோடு ௮0,000 ரூபா செலவிட்டுச் செய்யப்பெற்ற அழகிய வெள்ளி ரதம் ஒன்றிருக்கிறது. வெள்ளிக் கேடகமொன்று ௨0,000 வெள்ளி செலவிட்டுச் செய்யப் பெற்றிருக்கிறது. சிவன் கோவிலில் ஹிந்து விசேட நாட்களெல்லாவற்றிலும் அபிஷேக அலங்காரங்கள் செய்யப் பெறுவதுண்டு. முருகக் கடவுளுக்குப்பெரிய திருவிழா தைப் பூசத்தின்போது நடைபெறுகிறது. இதனையொட்டி நான்கு நாட்கட்கு மகேசுவரபூஜை



சிங்கப்பூர் வெள்ளிக்கேடகம்.


நடைபெறும். பூசத்தன்று மட்டும் சுமார் ௯000 ஜனங்கட்கு உணவளிக்கப் பெறுகிறது. இங்கு வரும் சர்க்கரைக் காவடிகள், பால்காவடிகள், வேல் காவடிகள் முதலியவற்றுக்குக் கணக்கேயில்லை. ஹிந்துக்கள் இங்கு ஏராளமாகக் குடியேறியிருப்பதால் பிரார்த்தனைகள் செய்து கொள்வதும் அதிகம். காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரையும் காவடிகள் வந்துகொண்டிருக்கும். முருகப் பெருமான் வெள்ளி ரதத்

"யுனைடெட் இந்தியா" கம்பெனியே இப்பாகாண மக்களால் போற்றப்படுவது.

தில் முக்கியமான வீதிகளின் வழியாகப் பிள்ளையார் கோவில் சென்று திரும்புவார் பூசத்தின் மறுநாள் சிறிய வெள்ளி ரதத்தில் ஆரோகணிப்பார். அன்றிரவு வாணக் காட்சி நடைபெறுவதுண்டு. வாணக் காட்சியைக் கண்டு களிக்க இரண்டு லட்சத்திற்கதிகமான ஜனக்கூட்டம் வந்து சேரும். ரப்பர்த் தோட்டங்களிலும் மற்ற ஊர்களிலுமுள்ள ஐரோப்பியர்களுள் ஆண் பெண் ஒருவர் பாக்கியில்லாமல் வாணக் காட்சி காண வந்துசேர்ந்து விடுகின்றனர். சீனர்கள் நாட்டுப்புறத்திலிருந்து வரும் சாமான்கள் யாவற்றுக்கும் கப்பல் கேள்வு கிடையாது. இனுமாகவே நாகபட்டினமிருந்து ஏற்றப்பட்டு வந்துசேர்கின்றன.

### ஈப்போ.

மலாய் நாட்டிலுள்ள வியாபார நகரங்களுள் இதை நான்காவதாகக் கூறலாம். இங்கும் நம் தமிழ் மக்கள் அதிகமாக வசித்து வருகின்றனர். இங்குள்ள நகரத்தாருக்குச் சொந்தமான தண்டாயுதபாணி கோவிலே சிறப்புடையதாயிருக்கின்றது. ஐரோப்பி வரு



ஈப்போ தண்டாயதபாணி கோயில்.

மலாய்க்காரர் முதலிய யாவரும் வந்து சேர்ந்து விடுவர். வாணக்காட்சிக்கு சுமார் நாலாயிரம் வெள்ளி செலவாகும். ஆனால் அந்த நாடு முழுமையும் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கி விடுகின்றது. தைப் பூச விழாச் செலவு சுமார் பத்தாயிரம் வெள்ளியாகும். இரண்டு கோயில்கட்கும் நித்தியப்படிச் செலவு வருஷத்தில் முப்பதாயிரம் வெள்ளிக்கு மேலாகிறது. தைப்பூசத் தினம் இங்கு அரசாங்க விடுமுறை நாளாக விருக்கின்றது. தைப்பூசத்திற்காக இந்தியாவி ஷத்தில் இக்கோவில் கட்டப்பட்டது. கோவில் கட்டிடத்திற்குமட்டும் சுமார் இருபத்தையாயிரம் வெள்ளி செலவிடப் பெற்றிருத்தல் கூடும். ஏராளமான நிலமிருக்கிறது. கோவிலை யொட்டி ஒரு நந்தவனமிருக்கிறது. பதினாயிரம் வெள்ளிவரை செலவிட்டு ஒரு அழகிய ரதம் செய்யப்பெற்றிருக்கிறது. வைகாசி விசாகத்தில் உற்சவம் நடைபெற்று வருகிறது. உற்சவ தினமாகிய விசாகத்தன்று சுமார் நாலாயிரம் ஜனங்கட்குமேல் உணவிடப் பெறுகிறது. விசாக உற்சவம்


The United India's Policies are equal to Gilt-edged Securities.

## மலாய் நாட்டில் ஹிந்து கோயில்கள்.

சாதாரண வருஷம் வைகாசி மாதத்திலிருந்து ஆரம்பித்து ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

### ஜாவி.

நகரத்தாருக்குச் சொந்தமான இந்தத் தண்டாயுதபாணி கோயிலுக்குச் சுமார் ௨௫000 வெள்ளிவரை செலவிடப்பட்டுக் கட்டப்பட்டிருக்கிறதெனத்தெரிகிறது. சித்திரைமீ சித்திரா பௌர்ணமியில் இங்கே உற்சவம் நடக்கிறது. ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள். சுமார் ஐயாயிரம் ஜனங் குறிப்பிடத்தக்கதாகும். ஆற்றின் பக்கமாகவே கோயிலின் படம் எடுக்கப் பெற்றிருக்கிறது. இக் கோவிலைச் சார்ந்து ஒரு பசுமடம் அமைக்கப் பெற்றிருக்கிறது. தென்னந்தோப்புகளுமிருக்கின்றன. வருஷத்தில் மகமை, சாமான் ஏலம், உண்டியல் வகையில் சுமார் பதினெண்ணாயிரம் வெள்ளிவரை வரும்படி யுண்டு. உற்சவச் செலவு படித்தரச் செலவு வகையில் வருஷத்தில் சுமார் பதினாயிரம் வெள்ளி செலவாகிறது. ரத்தப் பாந்சான், பாரப்பந்தா, வாக்கான்சிராய்,



ஜாவி தண்டாயுதபாணி கோவில்.

கட்கு மகேசுவர பூஜை நடைபெறும். திருவிழாச் செலவும், படித்தரச் செலவுமாக வருஷம் ஒன்றுக்குச் சுமார் ௧0000 வெள்ளி வரை செலவாகிறதென்று தெரிகிறது. சுவாமிக்குச் சுவர்ன மயில் ஒன்று செய்யப் பெற்றிருக்கிறது, கோவிலை யொட்டிப் பசுமடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எப்பொழுதும் நீரோடிக்கொண்டிருக்கும் ஆற்றின் பக்கத்தில் இக்கோவில் அமைந்திருப்பது சிலாமா நகரத்தார் பார்வையில் இக்கோயில் இருந்து வருகிறது.


### டேலுக்கான்சன்.

இவ்வூரில் சுமார் நாற்பத்தைந்து வருஷங்கட்கு முன் இவ்வூரின் வடபாகத்திலுள்ள ஆற்றோரத்தில் பிள்ளையாரும், தண்டாயுதபாணியும், முத்து மாரியம்மனும் பிரதிஷ்டை செய்யப் பெற்று சிறு கோயில் ஏற்படுத்தப் பெற்றது. பின்னர் நகரத்தார் வேண்டு

Life Insurance is one matter on which no difference of opinion exists.

கோளின்படி திருவாளர் மு. நா. ஏஜண்டு முத்தாக் கறுப்பஞ் செட்டியாரவர்கள் பார்வையில் நடு ஊரில் சுமார் முப்பது ஆண்டுகட்கு முன் ஐந்து லாட்டு நிலம் வாங்கிக் கோயில் கட்டி முடித்துக் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது.

புதுக்கோயிலானது முன்னுள்ள கோயிலுக்கு வடபுறத்தில் ஏற்கனவே வாங்கப்பட்டிருந்த இடத்தில் ருத்ரோத்காரி௵ ஆவணிமீ தச்சு செய்யப்பெற்று நத்தாய் நாட்டிலிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்து அதிக வேலைப்பாட்டுடன் அழகான திருப்பணியொன்று செய்யப்பெற்று அட்சய௵ ஆனிமீ கூஉ யன்று வெகு சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இத் திருப்பணிக்குக் கும்பாபிஷேகம் வரை செலவாயிருக்கும்தொகை கரு0000 வெள்ளியாகும். ஊருக்குக் கிழக்கே கால் மைல் தூரத்தில் அழகிய நந்தவனமொன்று ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. அதிலிருந்து



டேலுக்கான்சன் தண்டாயுதபாணி கோவில்.

ஏராளமான புஷ்பங்கள் கோயில் உபயோகத்திற்குக் கிடைக்கின்றன. திருவாளர் கரு. உல. வெ. வெள்ளையப்ப செட்டியாரவர்கள் பொருளுதவியால் ஓர் பசுமடம் ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. திருவாளர் சா. லெ. ராம. செ. செட்டியப்ப செட்டியாரவர்கள் பொருளுதவியால் ஒரு ஜதை மேளம் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. காப்பா உ. ராம. உ., மு. சுப. அவர்களால் கோயில் நிறைய மின்சார தீபங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சி. ந. சோம. கடை உலகநாதரவர்களால் சிறுவர்கட்குத் தேவாரம், திருப்புகழ் பயில்வித்து ஸ்ரீ குகானந்த பால கோஷ்டி என ஒரு தேவாரக்கோஷ்டி நடைபெற்று வருகிறது. இவ்வூரில் சித்திரா பௌர்ணமியில் விசேஷ உற்சவம் நடைபெறுகிறது. உற்சவத்தில் சுமார் ரு000 ஜனங்கட்கு உணவளிக்கப்படும். இக்கோவிலுக்கு நகரத்தார் மகமை, உண்டியல், வீட்டு வாடகை, சாமான் எலம் வகையில் வருஷத்


"யுனைடெட் இந்தியா" கம்பெனியே இம்மாகாண மக்களால் போற்றப்படுவது.



தில் சுமார் கOOOO வெள்ளிவரை வருகிறது. இது பேரா கவர்ன்மெண்டின் துறைமுகமாதலின் இவ்வூரைப் பேரா என்று வழங்குவதுமுண்டு.

### கிள்ளான்.

இவ்வூரில் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாக மாரியம்மன் கோயிலொன்று இருந்து



கிள்ளான் கோவில்.

வருகிறது. இது நகரத்தார் பார்வைக்கு வந்தபின்னர் கணபதி விக்கிரகமும் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. நகரத்தார் பார்வையில் கோயில் கட்டப்பட்டு அன்னதான மண்டபம், ரதக்கொட்டகை முதலியனவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் திருக்கார்த்திகையன்று வேலின்மேல் சுப்பிரமணியர் திருவுருவம் அமைத்து அலங்காரம் செய்து ரதோற்சவமும் மகேஸ்வர பூசையும் நடந்து வருகிறது. ரதோற்சவ செலவு ஆண்டுதோறும் சுமார் இரண்டாயிரம் வெள்ளி ஆகின்றது. வருஷாந்திரப் படிச் செலவு வகையில் ஆண்டுதோறும் சுமார் இரண்டாயிரத்தைநூறு வெள்ளிவரை செலவாகிறதெனத் தெரிகிறது. செலாங்கூர் சமஸ்தானத்தின் சுல்தான் இவ்வூரிலேயே வசிக்கின்றார். பெரிய கப்பல்கள் பிடிக்கும் துறைமுகப்பட்டினமாகவும் விளங்குகின்றது. இங்கும் தமிழ் மக்கள் ஏராளமாக வசிக்கின்றனர்.

### கிட்டா.


இங்குள்ள நகரத்தார்களின் தண்டாயுதபாணி கோவில் பிரமாதீச வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நள௵ வைகாசிமீ உஎஉ கோவில் வேலை முற்றும் முடிந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்வருஷம் முதல் திருக்கார்த்திகைதோறும் மகேஸ்வர பூஜை நடைபெற்றுவருகிறது. கோவில் படித்தரம், பூஜைவகையறாச் செலவு வருஷம் ஒன்றிற்கு உரு00 வெள்ளிவரை ஆகிறதென்று தெரிகிறது. இவ்வூர் கிட்டா சமஸ்தானத்தின் தலைநகராகவும், தமிழ் மக்கள் பலர் வசிக்கும் நகராகவும் இருப்பதால் இவ்வூரில் இக்கோவில் முக்கியமானதாகக் கருதப் பெறுகிறது.

### சில குறிப்புக்கள்.

பொதுவாக மலாய் நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களிலும் திருவிழாக் காலங்களில் பெரிய மனிதர்களும், செல்வர்களும, உத்தியோகஸ்தர்களும் அழைக்கப்படுவதுண்டு. இவ்வழைப்புக்கிணங்கி ஆகமகிழ்ச்சியோடு யாவரும் கோவிலுக்கு விஜயம் செய்வார். அறிவு நிறைந்த ஆண்மக்களும், பெண்மக்களும் ஜோடி ஜோடியாக வருங்காட்சி கண்

Life Insurance is one matter on which no difference of opinion exists.

கவர் வனப்பினதாகும். ஐரோப்பியர்களும், வணிகச் செல்வரே முற்றும் பரிமாறுகின்ற சீனர்களும், மலாய்க்காரர்களும் முறையே ளர். ஜனங்களெல்லாம் உணவுகொண்ட



கிட்டா தண்டாயுதபாணி கோவில்.

கிறிஸ்தவ, புத்த, மகமதிய மதத்தினைச் சார்ந்தவராவர். இவரியாவரும் மனமகிழ்ச்சியோடு இவ்விழாவைக் கண்டு விக்கிரகங்களை நோக்கி இன்புறுவர்; பலர் விபூதி வாங்கி அணிந்து கொள்வர்; பிரார்த்தனை செய்து கொள்வர்; உண்டியலில் பணம் நிறையப் போடுவர். கவர்னர் வரையிலுள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவர் தவறாது இக்கோவிலுக்கு விஜயஞ் செய்வதைக் காணலாம்.

பொது ஜனங்கட்கு அன்னமிடும்பொழுது எவ்வித வேற்றுமையுமின்றி எல்லா வகுப்பினரையும் முதலில் உட்கார வைத்து தன பின்னர் இவர்களிருந்து உணவருந்துவர். கோவில் வேலைகளையும், பூஜை முதலிய வேலைகளையும் பங்கு பிரித்துக்கொண்டு இவர்களே நேரிற் செய்கின்றனர். சிங்கப்பூர் முதலிய பெரிய ஊர்களில் சுவாமி ஊர்வலம் வரும்பொழுது டிராம் வண்டிகள் நிறுத்தப் படுகின்றன. தந்திக் கம்பிகள், டெலிபோன் கம்பிகள், மின்சார விளக்குக் கம்பிகள் முதலியன ஒதுக்கப்பட்டும், வெட்டப்பட்டும், ரதம் செல்வதற்கு இடைஞ்சலின்றி வசதி செய்யப்பெறுவதுண்டு.

"யுனைடெட் இந்தியா" கம்பெனியே இம்மாகாண மக்களால் போற்றப்படுவது.

# கடவுள் காட்சி.

திரு. வி. கலியாணசுந்தரன்.

"ஐவகை யெனும்பூதம் ஆதியை வகுத்ததனுள்
அசராசர பேத மான
யாவையும் வகுத்தால் லறிவையும் வகுத்துமறை
ஆதி நூலையும் வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ உன்னை நான் அணுகவுந்
தண்ணருள் வகுக்க இலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யர் அறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்கு வரவற்ற பொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே."

—தாயுமானுர்.

'கடவுள் காட்சி' என்னும் பொருள் பற்றி ஈண்டொரு நூல் எழுதப் புகுகின்றேனில்லை; ஓர் ஆண்டு மடலுக்கென ஒரு சிறு கட்டுரை வரையவே புகுகிறேன். இக்கட்டுரைக்குத் தாயுமானர் அருளிய "ஐவகை யெனும் பூதம்" என்னுந் திருப்பாட்டைக் குறிக்கோளாகக் கொள்கிறேன். குறிக்கோளாகக் கொள்ளும் ஒன்றற்குக் கொண்டுகூட்டல்வழி எவ்வுரையுங் கண்டு கூட்ட வேண்டுவதில்லை.

இனித் திருப்பாட்டை முற்றும் உற்று நோக்குவோமாக; உற்று நோக்கி அது வழங்கும் அடிப்படையான உயிர்ப்பொருள் என்னை என்று உன்னுவோமாக. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொன்று தோன்றும். எனது சிற்றறிவிற்கும் ஒன்று புலனாகிறது. அஃதென்னை? அது "கடவுள் காட்சி" என்பது. எனதுள்ளங் கவரும் அப்பொருளே இக்கட்டுரைக்கு முடியாக அணியப்பட்டிருக்கிறது.

கடவுள் காட்சிக்கு அக்கடவுள் துணை இன்றியமையாதது; அத்துணையுடன் உயிர்கள் முயற்சியும் வேண்டற்பாலது. இவ்விரண்டும் ஒன்றும்போது அக்காட்சிப் பேறு நிகழும். கடவுள் காட்சி வழங்கும் இத்திருப்பாடற்கண் இம்மூன்றற்குமுரிய வழி துறைகளுண்டோ எனில் உண்டு என்று நல்லிறையிறுக்க. அவ் வழிதுறைகள் பன்முகங் கொண்டு நிற்கின்றன. அவைகளைத் தொகுத்து முக்கூறுபடுத்தல் ஈண்டைக் கேற்புடைத்தாகுமெனத் தோன்றுகிறது. அவை வருமாறு:—

(க) கடவுள் உயிர்கட்கு அருளுந் துணை முறை.

(உ) அத்துணைபெறும் உயிர்கள் கடவுளுக்கு எவ்வழியில் கடமைப்பட்டு ஆளாதல் வேண்டும் என்பது.

(ங) அக்கடமையால் உயிர்கள் அடையும் பேறு.

இம்மூன்றுந் திருப்பாட்டில் இயைந்து நிற்கும் முறை வருமாறு:—


(க) "ஐவகை.......வகுத்தநீ"—இப் பகுதி கடவுள் துணை முறை குறிப்பது.

(உ) "பொய்வளரும்.....மெய்யர்"—

The United India is absolutely a safe Office from Policy holder's point of view.

84306

JC
O31n211.KU
N28

# ஜா ரெக்ஸ்.

## RUBY DROPS.

ஒரு சிறந்த [illegible]ம்ப ஔஷதம்.

அநுபவமும் ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்களையும் உடையது.

தலைவலி, பல்வலி, தொண்டைவலி, இடுப்புவலி முதலிய சகலவிதமான வலிகள், வெட்டு, முறிரணம், காயம், சுளுக்கு தேள்கொட்டு பூச்சி கடிகள் முதலியவற்றிற்கு கைகண்டதும் உத்தமுமான மருந்து. ஒரு புட்டி 1—4—0. ரூபாய்தான் ஒருமுறை பரிக்ஷீயுங்கள்!

# மைசூர் ஜவுளி வர்த்தகசாலை.

(2) அம்மன் சந்நிதி. காரைக்குடி.

# தாகசாந்தி.

## உயர்ந்த பானவகைகள்.

எங்கள் ஆரஞ்சு கிரஷ், லெமன் கிரஷ், கிரேப் கிரஷ், சாக்லேட் கிரஷ், முதலிய கிரஷ் வகைகளையும், கோலா சோடா, லெம்னெட், லைம் ஜூஸ், ஐஸ் கிரீம், சம்மர்கப், முதலிய கலர் வகைகளையும், ஜிஞ்சர் எல், ஜிஞ்சர் பீயர், கொய்னு டானிக், டானிக் முதலிய டானிக் வகைகளையும் என் மெச்சுகின்றனர்?

இயந்திரத்தால் வடிகட்டப்பெற்ற சுத்தமான ஊற்று நீரில் நிடித்ததால் அநுபவமும் தேர்ச்சியும்பெற்ற தொழிலாளரால் மிகவும் மேலான எஸ்லென்ஸ்களையே உபயோகப்படுத்தி கைபடாமல் செய்யப்பெறுவதால் எல்லோரும் விரும்புகின்றனர். மெச்சுகின்றனர். (27)

# கிருஷ்ணா அண்டு ஸன்ஸ்,

புதுக்கோட்டை.

இக்கூறு உயிர்களின் கடனை யுணர்த்துவது.

(ந) "அறிவிற்போத.....பொருளே....."—இஃது உயிர்கள் அடையும் பேற்றைத் தெரிப்பது.

இம் மூன்றையுங் கட்டுரைக்குரிய அதிகாரங்களாகவுங் கொள்ளலாம்.

(க) கடவுள் துணை.

திருப்பாட்டின் முதற் பகுதியில் "வகுத்து" என்னுஞ் சொல் அடிக்கடி பெய்யப்பட்டிருக்கிறது. "வகுத்தல்" எனில் யார் யாருக்கு எதை என்னும் வினா பிறக்கும். இதற்குக் கடவுள் உயிர்கட்கு உலகை வகுத்தார் என்னும் விடை பெறலாம். ஈண்டு உலகு என்பது அசுத்த மாயா காரியமாய தனுகரண புவன போகங்களையும், சுத்த மாயாகாரியமாய அறிவு நூல்களையுங் குறிப்பதென்க. இத்தோற்றுவாயுடன் முதற் பகுதி மீது கருத்துச் செலுத்துவோம்.

(ஐவகை யெனும் பூதம் ஆதியை வகுத்து)

கடவுள் உயிர் உலகு என்னும் மூன்றைப் பற்றிய ஆராய்ச்சி யாண்டும் என்றும் நிகழ்ந்த வண்ணமாயிருக்கிறது. இம்மூன்றைப் பற்றிய ஆராய்ச்சியினின்றும் இதுகாறும் வெளிப்போந்துள்ள உண்மைகள் பலப்பல. அவ்வாராய்ச்சியில் நுழைந்து முடிவு தெரிக்கவேண்டுவது இக்கட்டுரையின் நோக்கன்று.

முப்பொருளுள் நடுவணதாயுள்ள உயிரை எடுத்துக்கொள்வோம். உயிரின் முன்னிலை பின்னிலை முதலியவற்றை ஏதுக்களால் நிறுவிக்காட்டல் அரிது. ஆனால் இவ்வுலக நிகழ்ச்சி பல கொண்டு உயிரின் முன்னிலை பின்னிலை முதலியவற்றை ஒருவாறு அளந்து கூறலாம்.

உலகிடைப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரூஉம் நான் எதையும் என்னறிவால் தொடக்கத்தில் உணர்கின்றேனில்லை. ஒரு பொருள் குறித்து யான் ஆராயப்புகும்போது முதலில் அதைப் பற்றிய அறிவு எனக்கு விளங்குவதில்லை. முதறிஞர் எழுதிய நூற்றுணையானும், ஆன்ற அறிவும் அன்பும் அடைவுமுடைய ஆசிரியர் அறிவுறுத்தலானும், வேறு சில கூட்டுறவானும் அப் பொருளைப்பற்றிய அறியாமை சிறிது விலகி, அவ்விடத்தில் அவ்வளவில் சிறிது அறிவு விளங்குகிறது. அவ்வறிவு விளங்கப்பெற்றதும் அதனோடே ஒளி நினைவு இன்பம் முதலியன தோன்றுகின்றன. அவ்வறிவு விளக்கத்துக்கு முன்னர்-அதாவது அறியாமை பீடித்திருந்தபோது-அவ்விடத்தில் இருள் மறப்பு துன்பம் முதலியன படிந்திருந்தன. இவ்வாறே யான் ஆராயப் புகும் ஒவ்வொரு பொருட்கண்ணும் அறிவு விளங்க விளங்க அவ்வப் பொருளைப் பற்றிய அறியாமை தேய்தல் தேய்தல் பெறுகிறேன். இதனால் என் வாழ்வில் அறிவு அறியாமை யென்னும் இரண்டும் விரவி நிற்றலை உணர்வோனாகிறேன். என் மாட்டு இவ்வறிவு அறியாமை இருத்தல் கொண்டு முழு அறிவிற்கும் முழு அறியாமைக்கும் இருப்பு நிறுவலாமன்றோ?

யான் முழுஅறிவு—முழுஒளி—முழு நினைவு—முழுஇன்பம்—உள்ள நிலையினின்றும் இந்நிலை யெய்தி யிருப்பேனா அல்லது முழு அறியாமை—முழுஇருள்—முழு மறப்பு—முழுத்துன்பம்—உள்ள நிலையினின்றும் இந்நிலை யெய்தியிருப்பேனா என்பது உன்னற் பாலது. முழு அறிவு ஒளி நினைவு இன்பம் நிலவும் நிலையினின்றும், அறிவும் அறியாமையும் ஒளியும் இருளும் நினைப்பும் மறப்பும் இன்பமும் துன்பமும் விரவியுள்ள இவ்விடத்திற்கு யான் ஏன் போதரல் வேண்டும்? ஒளியில் வதியும் ஒருவன் இருளில் வீழ்ந்து இடர்ப்

பணம் போடுவோருக்கு முற்றும் பத்திரமான கம்பெனி யுனைடெட் இந்தியா.



பட ஒருப்படுவனோ? ஒருப்படான். ஆகலின், யான் எந்நிலையினின்றும் இந்நிலை யெய்தியிருத்தல் வேண்டுமென்று எளிதில் ஊகித்துணரலாம்.

அறிவு விளக்கஞ் சிறிதுமின்றி, முழு அறியாமை—முழுஇருள்—முழுமறப்பு—முழுத்துன்பம்—சூழ்ந்த நிலையினின்றும் இவ்வுலக வாழ்வை யான் எங்ஙனம் பெறுதல் கூடும்? இவ்வாழ்வைப்பெறுதற்கு ஒரு துணை வேண்டுமன்றோ? அத்துணை எத்தன்மையதாயிருத்தல் வேண்டும்? அஃது என்னைப் போன்றதாயிருத்தலாகாது. அஃது என்னைப் போன்றதாயிருப்பின் அஃதும் அறியாமை இருளில் வீழ்ந்துகிடக்க வேண்டுவதே. ஆதலால் அறியாமை இருளினின்றும் என்னை எடுத்து எனக்கு இவ்வுலக வாழ்வு நல்குதற்கு அறியாமை என்பது சிறிதுமில்லாததாய் முழு அறிவாயுள்ள ஒன்றே வேண்டற்பாலது. அவ்வொன்றே கடவுள் என்பது. (கடவுளை அவர் அவன் அவள் என்று கூறுதல் உலக வழக்கு)

கடவுள் என்பது அறியாமை கடந்து முழு அறிவாய் விளங்குவது. அறியாமையுள்ளவிடத்திலேயே பொய் பொறாமை பகைமை காழ்ப்பு முதலிய தீ நீர்மைகளிருக்கும். அறியாமை இல்லாவிடத்தில் அவைகட்கு இருப்பே இல்லை. கடவுளோ அறியாமை கடந்து அறிவாயொளிர்வது. அதன்மாட்டுப் பொய்யில்லை; பொறாமையில்லை; இன்னோரன்ன பிற எவையும் இல்லை. அன்பு அதன் உயிர்ப்பு; அருள் அதன் உடல். "அன்பே சிவம்" என்றும், "கருணையே வடிவமாகி" என்றும் பெரியோர்கள் அருளிய மெய்யுரைகளை நோக்குக.

கடவுள் அருளாளன் என்பதற்கு அறிகுறி என்னை? உயிர்களின் துன்பங்கண்டிரங்கி, அவைகளை அத்துன்பத்தினின்றும் நீக்கத் திருவுளங்கொண்டு துணைபுரிவதேயாகும். ஒருவன் தன்னால் விரும்பப்பெற்ற மற்றொருவன் துயருறுவது காணும்போது, மனமிரங்கித் தன்னால் இயன்ற துணைபுரிய முயல்வதைப் பார்க்கிறோம். இம்முயற்சிக்குப் பிறப்பிடம் யாது? அவனது நெஞ்சத்துள்ள அருளேயாகும். அவனுக்கு அருள் தன்னால் விரும்பப்பெற்றவரிடம் மட்டுஞ் சுரக்கிறது; மற்றவரிடம் சுரப்பதில்லை. என்னை? அவனுக்கு விருப்பு வெறுப்புண்மையான் என்க. எல்லாம்வல்ல ஆண்டவனோ வேண்டுதல் வேண்டாமையில்லாதவன்; திருவருளையே திருமேனியாகக் கொண்டவன்; பகைமை முதலியவற்றைக் கடந்து நிற்பவன். ஆதலால் அவன் எல்லா உயிர்களின் நலன்நாடி அருள் சொரிகிறான்.

"கடவுள் வலிந்து ஏன் உயிர்கட்குத் துணைபுரிதல் வேண்டும்? உயிர்கள் இருளில் கிடந்தால் என்னை" என்று சிலர் கருதலாம். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வோர் இயல்புண்டு. அதுமானக் கடவுளுக்கும் ஓர் இயல்புண்டு. அவ்வியல்பாவது உயிர்களின் துன்பங்கண்டிரங்கி அவைகட்குத் துணை புரிவது. ஆண்டவன் ஏழை உயிர்கட்கு எவ்வழியில் துணைசெய்கிறான்?

ஆண்டவன் என்னை அறியாமையினின்றும் எடுத்துத் தன்னைப்போலாக்குதற்கு மாயை யென்னுங் கருவி கொள்கிறான். அம்மாயையின் காரியமே இவ்வுடல் உலகம் முதலியன. இக்கருவி கொண்டு ஆண்டவன் என் அறியாமையைச் சிறிது சிறிதாக நீக்குகிறான். உயிர்களின் அறியாமை நீக்கத்துக்கெனவே ஆண்டவன் இவ்வுடல் உலகு(தனுகரணபுவன போகம்) முதலியவற்றை அவ்வுயிர்கட்குக் கொடுக்கிறான்.

ஆண்டவன் கொடைப்பொருளாகவுள்ள உடல் உலகம் (தனுகரண புவனபோகம்) முதலியன மாயா காரியமென்று தத்துவ நூலோர் கூறுப. மாயா காரிய வாலாற்றை

Safety and service are the foundation on which the United India is built.

ஈண்டு விரிக்கிற்பெருகும். மாயா காரியங்களுள் மிக மிக நுண்ணிய கூறுகளை (தத்துவங்களை) நம்மவர்கள் யோகக் காட்சியால் கண்டிருக்கிறார்கள். அந்நுண்ணிய தத்துவங்களின் உண்மையை நிறுவிக்காட்டுதற்கு நிலைக்களனாக நின்று துணைபுரியும் பொருள் ஐந்து (பஞ்சபூதம்.)

இவ்வைந்து பூதங்களைக் கொண்டே ஏனைய தத்துவங்களின் உண்மைகாணல் வேண்டும். இவ்வைந்தும் ஆராய்ச்சிக்கும் ஏதுக்கட்கும் பொருளாகும் நிலையில் இருக்கின்றன. இவைகளின் உண்மையை மறுப்போர் எவருமில்லை. ஐந்து பூத உண்மை, பல்லாற்றானும் அறிஞரால் நிறுவிக்காட்டப்பட்டிருக்கிறது. வேறு பல தத்துவங்களைப் பற்றியாதல் கருத்து வேற்றுமையுண்டு. ஐந்து பூதங்களின் இருப்பைப்பற்றி எங்குங் கருத்து வேற்றுமை இல்லை. ஆண்டவன் உயிர்கள்பொருட்டு முதல் முதல் வகுக்குந் தனுகரணபுவனபோகங்கட்குக் காரணமாயுள்ள மாயா காரிய தத்துவங்களுள், ஆராய்ச்சிக்கும் ஏதுக்கட்கும் புலனாகக் கூடியனவாய், எவரும் மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளக் கூடியனவாயிருப்பன ஐம்பூதங்களேயாகும். அவ்வைந்தின்பெற்றி நோக்கியே தாயுமான சுவாமிகள் முதல் வகுப்பைக் குறிக்குமிடத்து "ஐவகையெனும்......... வகுத்து" என்று திருப்பாட்டைத் தொடங்குகிறார்.

இப்பொழுது உயிர்கள்பொருட்டுப் பூதகாரிய மாய உடல் உலகு முதலியன வகுக்கப்பட்டன. இவ்வளவில் ஆண்டவன் துணை நின்றுவிடின், உயிர்கள் உய்யுங்கொலோ! படிப்படியாகத் துணைபுரிந்து உயிர்களைத் தன்னைப்போலாக்குதற்கு ஆண்டவன் முயல்கிறான். ஆண்டவன் உயிர்கட்கு இன்னும் என் செய்கிறான்?

(அதனுள் அசராசரபேதமான யாவையும் வகுத்து)

வெறும் உடலையும் உலகையும் வைத்துக்கொண்டு உயிர்கள் என் செய்யும்? அவ்வுடல் முதலியவற்றில் ஒருவித வளர்ச்சியிருந்தாலன்றி உயிர்கள் மேலும் மேலும் அறிவு விளக்கம் பெறமாட்டா. அவ்வறிவு வளர்ச்சி நாடி ஆண்டவன் தன்படைப்பில் அசரம் சரம் என்னும் வேற்றுமை அமைத்துள்ளான். தொடக்கத்தில் உயிர்கள் அசர உடலங்கள் தாங்குகின்றன; பின்னை அவ்வுடல் நீத்துச் சரவடிவங்கள் தாங்குகின்றன. இவ்வேற்றுமையுருக்கள் உயிர்களின் அறிவு வளர்ச்சிக்குரிய கருவிகளாகும். இவ்வளர்ச்சிக்குக்கூர்தல் அல்லதுஉள்ளது சிறத்தல்(Evolution) என்னும இயற்கையறம் துணைபுரிந்து வருகிறது. உள்ளது சிறந்து வளரும் முறையைப் பற்றி மேல்நாட்டுப் பூதபௌதிக ஆராய்ச்சியுடையார் எழுதியுள்ள நூல்கள் பல. அந்நூல்களை இக்காலத் தமிழ் மக்கள் பயில்வரேல், தங்கள் முன்னோர்களின் கூர்த்தமதியும் போகக்காட்சியும் விளங்கப் பெறுவார்கள். உள்ளது சிறத்தல் என்னும் இயற்கை முறைவைப்பு இத்தாயுமானார் திருவாக்கில் படிப்படியாக அமைந்திருத்தல் அறிஞர்க்கு இனிது புலனாகும்.

உயிர்கள் அறியாமை நீங்கி அறிவு விளக்கம் பெறுதற்பொருட்டு முதல் முதல் உடல் முதலியன வகுக்கப்பட்டன; பின்னை அவையிற்றுள் அசரம் சரம் என்னும் பிரிவு வகுக்கப்பட்டது. இன்னும் ஆண்டவன் உயிர்கட்கு என்ன வகுக்கிறான்? பார்ப்போம்.

(நல்லறிவையும் வகுத்து)

நிலையியல் இயங்கியல் என்னும் இரண்டையும் பெற்ற உயிர்கள் இன்னும் அறிவு வளர்ச்சி பெற்று ஆண்டவன் நிலையெய்தல் வேண்டும். அதற்கு ஆண்டவன் செய்யுந் துணையைத் தாயுமானார் "நல்லறிவையும் வகுத்து" என்று குறிக்கிறார். அறிவெனக் கூறாது 'நல்' என்னும் அடைதந்ததன்

பத்திரம், உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்.



நோக்கம் என்னை? அந்நோக்கம் கூர்ந்து உன்னற்பாலதே.

உயிர் அசர உடல் தாங்கியபோதும் சர உடல் தாங்கியபோதும் அவ்வவ்வுடல் நிலைக்கேற்ற அளவினதாக அறிவு விளங்கப் பெறுகிறது. அசரத்தினின்றுஞ் சரம் பிரிவது போல், சரத்துள்ளே மற்றொரு பிரிவு தோன்றுகிறது. அஃதென்னை?

விலங்கு முதலியனவும் இயங்குதிணையென்னுஞ் சர வுலகின்பாற் பட்டனவே. மனிதனும் அவ்வுலகினனே. இவ்விரண்டு உலகினுக்கும் வேற்றுமையுண்டென்பது வெளிப்படை. இங்கே சரவுலகில் விலங்கினின்றும் மனிதன் தோன்றுகிறான். இதுவே சரவுலகினின்றும் பிறந்த ஒரு பிரிவு.

மனிதன் எவ்வேற்றுமையுடன் தோன்றுகிறான்? வேற்றுமைகள் பலதிறத்தன. அவற்றுள் தலையாயது ஒன்று. அதுவே பகுத்தறிவென்னும் நல்லறிவு. இந்நுட்பம் விளங்கத் தாயுமானார் அறிவை 'நல்' என்னும் அடையால் அணிசெய்தார். ஈண்டு "நல்லறிவு" என்றது சரத்துள் மனித உலகைக் குறிப்பதென்க.

இப்பொழுது உயிர் மனித உலகிற்புகுந்தது. ஆண்டிருந்து அது பெறவேண்டுவதென்னை?

(மறையாதி நூலையும் வகுத்து)

நல்லறிவெனும் பகுத்தறிவிற்கு அறிகுறியாது? உண்டு கழித்து விலங்கெனத் திரிவதா? அன்று; அன்று. "நான் யார்? நான் யாண்டிருந்து போந்தேன்? எனக்கு இவ்வாழ்வைத் தந்தவர் யாவர்?" என்று இன்னோரன்ன ஆராய்ச்சியில் தலைப்படுவது பகுத்தறிவுடைமைக்கு அறிகுறியாகும். இவ்வாராய்ச்சியால் கடவுள்உணர்வு மனிதன்மாட்டு அரும்பும். பகுத்தறிவுக்குரிய பிறவிதாங்கிய அனைவரும் இவ்வாராய்ச்சியில் தலைப்படுகின்றாரா? இல்லை. பகுத்தறிவைப் பயன்படுத்தாது மனிதருள் கெடுவோர் பலர். இக்காரணத்தால் மனித உலகம் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று மாக்கள் உலகம்; இன்னொன்று மக்கள் உலகம். பகுத்தறிவெனும் ஆறுவதறிவைப் பயன்படுத்தாது, அவ்வறிவு விளக்கத்தைக் கெடுத்து விலங்கென வாழ்வோர் மாக்களெனப்படுவர். ஆறுவதறிவை நல்வழியில் பயன்படுத்துவோர் மக்களெனப்படுவர். மனிதப் பிறவி தாங்கிய உயிர்கள் மாக்களாகாது, மக்களாகி வாழுமாறு துணைபுரிதற்பொருட்டே மறைநூல் வகுக்கப் படுகிறது.

மறை நூல் எது? இறைவன் அருளியது மறைநூல் என்று பொதுவாகச் சொல்லப் படுகிறது. இறைவன் எதையும் நேரே அருள்கிறானில்லை. மெய்யடியார்கள் வாயிலாகவே இறைவன் பல வினைகளை நிகழ்த்துகிறான். மெய்யடியார் யாவர்? "நான்" என்னும் முனைப்பற்றவரே மெய்யடியாராவர். முனைப்பற்ற இடத்திலேயே ஆண்டவன் அருள்கொழித்தல் இயல்பு. அவ்வருள் கொழிக்கும் உளமுடையார் மொழிகள் யாவும் ஆண்டவன் மொழிகளாகும். உலகில் ஆண்டவன் மொழிகள் என்று சொல்லப்படுவனவெல்லாம் அவன் அருள்பெற்ற மெய்யடியார் மொழிகளெனக் கொள்க.

உயிர்களுள் மக்களாய்ச் செருக்கொழித்து, ஆண்டவன் அருள்பெற்று, ஆண்டவன் நிலையெய்திய மெய்யடியார்கள், தாங்கள்பெற்ற இன்பத்தை மற்றவரும் பெறுதல்வேண்டும் என்று தங்கள் அடைவுகளைத் திருவாய் மலர்வதுண்டு. அத்திருமொழிகள் உலகில் மறைநூல்கள் என்று வழங்கப்படுகின்றன. இம்மறை நூல்கள் இந்நாட்டில், இம்மொழியில், இம்முறையில் பிறத்தல் வேண்டும் என்னும் நியதியில்லை. மறைமொழி, யாண்டாதல், எம்மொழியிலாதல், எம்முறையிலாதல் பிறக்கலாம்.

South India has practically one Life Assurance Co , and it is the United India.

உயிர்கள் பொருட்டு (மெய்படியார் வாயிலாக) "மறையாதி நூலை" வகுத்த ஆண்டவன் பின்னுந் தொடர்ந்து அவ்வுயிர்கட்கு எவ்வழியில் துணை செய்கிறான்? அன்பர்களே! நோக்குங்கள். துணை படிப்படியாக வகுக்கப்படுகிறது.

(சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து)

மக்கள் மறைவழி நிற்க நிற்க அவர்கட்குக் கடவுள் உணர்வு அரும்புகிறது. அவ்வுணர்வு கடவுளைக் காட்டுஞ் செந்நெறி நாடல் இயல்பு. அச்செந்நெறியே சமயம் என்பது. இச்சமயம் விலங்கிற்கில்லை. இது மகனுக்கே உரியது. சமய நெறி நில்லாதவன் மகன் அல்லன்.

சமயம் ஒன்றாயிராது பலவாக ஏன் இருத்தல் வேண்டும்? ஆண்டவன் அருள்பெற்று மறைமொழிந்த மெய்படியார் அனைவரும் முடிவில் பெற்ற நிலை யொன்றாயினும், அந்நிலை பெற அவரவர் தொடக்கத்தில் கொண்டமுறை வெவ்வேறு. அவ்வம்முறையை அவரவர் அருளிய மறைமொழிகளிற் காணலாம். அம்முறைகளே உலகில் "சைவ முதலாம் அளவில் சமயங்கள்" என நிலவுகின்றன. முறைகள் பலவாயினும் அவைகளின் முடிவு ஒன்றென்பதை மறத்தலாகாது.

சமயங்கள் பலவாக வகுக்கப்பட்டதற்கு இன்னும் பல காரணங்கள் உள. அவைகள் ஈண்டு எற்றுக்கு? மக்கட்குத் தொடக்கத்தில் பன்மையிலேயே பற்றுண்டு. உயிர்கட்குப் பன்மைவழி ஒருமை கூட்டவேண்டுமென்பது ஆண்டவன் திருவுள்ளக்கிடக்கை போலும்! பலவகைப்பட்ட சமயங்களின் உட்கிடக்கைகளை ஆராய்ந்தாழி முடிவில் ஒன்றிய கருத்தே பெறலாம்.

ஒவ்வொரு சமயத்தையுந் தனித்தனி எடுத்து ஆராய்ந்தால் அதன் அதன் மாட்டு முடிவில் ஒருமை விளங்கல் காணலாம். ஒவ்வொரு சமயமும் "கடவுள் ஒன்றே" என்று சொல்கிறது; "அக்கடவுள் யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கிறது" என்றுஞ் சொல்கிறது. யாண்டுமுள்ள ஒன்று பலவாயிருத்தல் எங்ஙனம்? அஃது ஒன்றாகவே இருத்தல் வேண்டும். அதன் பெயர் பலவாயிருக்கலாம். ஆனால் பொருள் ஒன்றே.

"வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில்
  விளங்குபரம் பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
  வாரிதியில் நதித் திரள்போல் வயங்கிற்றம்மா"

என்று தாயுமானார் மற்றோரிடத்தில் வெளியிட்டுள்ள கருத்தையோர்க.

பன்மையுணர்வுடைய மக்களை அப்பன்மை வழி ஒருமையில் கூட்டக் காணப்பெற்ற சமயங்கள் பின்னே போருக்கும் பூசலுக்கும் நிலைக்களன்களாய்விட்டன. இக்குற்றம் சமயங்களின் பாலதன்று; சமயங்களை வளர்ப்பதற்கெனப் பின்னாளில் புறப்பட்ட குருமார்களின் பாலதே. பிற்காலத்தில் வயிற்றுப் பிழைப்புக்கென ஏற்பட்ட மடங்களுங் கோயில்களுமே சமயங்களின் நிலைகளைக் குலைத்தன.

எவரெவர்க்கு எவ்வெச் சமயத்திடை அன்புபடிகிறதோ அவரவர் அவ்வச்சமய வழிநின்றொழுகுவது அறிவுடைமை. அவ்வொழுக்கம் விரைவில் ஒருமை இன்பங் கூட்டல் ஒருதலை. அவ்வாறொழுகாது பிற சமயங்களைக் குறைகூறச் சமயவாதத்தில் தலைப்படுவது ஒருபோதும் ஒருமை இன்பத்தைக் கூட்டவேகூட்டாது.

"பன்முகச் சமயநெறி படைத்தவரும்
  யாங்களே கடவுள் என்றிடும்
பாதகத் தவரும் வாத தர்க்கமிடு
  படிறருந் தலை வணங்கிட" —தாயுமானார்.

"ஒன்றதுபேரூர் வழியா றதற்குள
  என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
  குன்று குரைத்தெழு நாயையொத் தார்க
  [ளே"—திருமூலர்.

தென்னிந்தியாவிலுள்ள ஒரே லைப் அஷ்யூரன்ஸ்கம்பெனி யுனைடெட் இந்தியாவே.



சமயங்கள் போருக்காக வகுக்கப்பட்டனவல்ல. சமாசஞானப் பேற்றிற்கெனவே அவைகள் வகுக்கப்பட்டன. சமயங்களின் நோக்கம் மக்களை வேற்றுமை யுணர்வினின்றும் விலக்கி, ஒற்றுமை யுணர்வில் நிறுத்த வேண்டுமென்பதே. சமயங்களைத் துருவித் துருவி ஆராய்ந்தால் அவைகளின் அடியில் சமாசம் நிலவுவது காணலாம். அச்சமாசங் கடவுள் காட்சிக்குரியது.

சமயங்களை வகுத்தகடவுள், அவைகளின் முடிவில் சமாசத்தைக் கிளத்தாதொழிவனோ? உயிர்களின் முழு அறியாமையை நீக்கி அவைகளைத் தன்னைப்போலாக்க வேண்டுமென்பதன்றோ கடவுள் திருவுள்ளக் கிடக்கை? அக்கருத்து முற்றுப்பெறும் வரை உயிர்களின் அறிவு வளர்ச்சிக்குரிய துறைகளைப் படிப்படியாக இறைவன் கோலியே வருவன். இதுகாறுஞ் சமயங்கள் வரை துறைகள் கோலப்பட்டன. இனி வருந் துறைகாண்போம்.

(மேற் சமயங்கடந்த மோன சமாசம் வகுத்த நீ)

மக்கள் சமயங்களிற் புகுந்துபெறவேண்டுவது சமாசமேயாகும். அச்சமாசத்துறையையும் என் ஆண்டவன் வகுக்கிறான். ஆருயிர் மக்களே! ஆண்டவன் துணையைக் கூர்ந்து கூர்ந்து நோக்குங்கள். நமது ஆண்டவன் அருள் இருந்தவாறென்னே! என்னே! அவ்வாண்டவனையா மறப்பது? மறந்தா உலகில் வாழ்வது? அன்பர்களே! ஆண்டவனை நினையுங்கள்; அவன் அருளைக் கருதுங்கள்; அவன் துணையை நோக்குங்கள். இன்னும் நம்பொருட்டு அவன் என்ன செய்கிறான்? சமயங்கடந்த மோனசமாசத்தை வகுக்கிறான். அவ்வாண்டவனை மனமொழி மெய்களால் வணங்குவோமாக; நமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவனுக்கு அர்ப்பணஞ் செய்வோமாக. எல்லாம் அவனுடைமை; எல்லாம் அவன் செயல்; அவனன்றி ஓரணுவும் அசையாது. "எல்லாம் அவன்" என்னும் உணர்வுபெற்று அவ்வழிநிற்பதே சமயங்கடந்த மோன சமாசமாகும். இச்சமாசம் கடவுள் காட்சி வழங்கும்.

சமாசம் மக்கள் வாழ்வின் முடிந்த நிலை என்பது ஈண்டு உன்னத்தக்கது. தாயுமானார் மிகத்திறம்பட அந்நுட்பத்தை இத்திருப்பாட்டில் அமைத்திருக்கிறார். சுவாமிகள் ஒவ்வொரு படியையும் "வகுத்து" "வகுத்து" என்று கூறிக்கொண்டே போந்து, சமாசத்தை மட்டும் "வகுத்த நீ" என்று முடித்துக் கூறியிருத்தல் காண்க. சமாசம் முடிந்த வகுப்பு என்பது சுவாமிகள் கருத்து.

கடவுள் ஒருவராயிருக்கும்போது அவர்க்குரிய நெறியும் ஒன்றாகவே இருத்தல் வேண்டும். உலகின் பொருட்டுப் போர்வைகள் பலவாயிருக்கின்றன. அப்போர்வைகளின் உள்ளுறை மட்டும் ஒன்றே. போக்குவரவிலா வெளி(ஆகாயம்) பலபொருள்களில் நீக்கமற நிறைந்துள்ள தன்மையை ஈண்டு அன்பர்கள் கருத்திற்கொள்வார்களாக.

சமாச நுட்பந்தேறாது, சமய வாதிகள் வாதப்போரில் தலைப்பட்டு முடிவில் சமயப் பொருளையே புணரா தொழிகிறார்கள். சமயவாத மிடுதலுக்கும் சமயவழி நிற்றலுக்கும் வேற்றுமையுண்டு. சமய வாதமிடுவோர் பன்மைப் படுகுழியில் வீழ்ந்து இடர்ப்படுவர். சமயவழி நிற்போர் ஒருமை கண்டு கடவுள் நிலையெய்துவர். பலகடவுள் உணர்வு உய்பு நெறிகாட்டல் அரிது அரிது என்று ஈண்டு அறைகூவுகிறேன். பல சமயங்களிலும் ஓராண்டவன் அருளாடல் கண்டு ஒருமையுணர்வு பெறவேண்டுவது மக்கள் கடமை.

ஈண்டுச் சமய வாதிகளைப்பற்றி இரண்டோர் உரை பகர விரும்புகிறேன். ஒரு

The United India's Policies are equal to Gilt-edged Securities.




மதராஸ் எக்ஸிபிஷன்
தங்க மெடல்
பெற்றிருக்கிரோம்.

**எங்கள்**
**ஸ்பெஷல்**

தங்கக் கொடிப்
பெட்டிக் கண்டாங்கி
தினுசுகளும்
மாப்பிள்ளை
வேஷ்டி துப்பட்டா
ரகங்களும்
எங்கும்
பிரசித்தமானவை.

**Awarded**
**GOLD MEDAL**
**in the All India**
**Exhibition (28)**
**(MADRAS.)**

## அன்புள்ள சிநேகிதர்களே!

எங்களிடம் இந்திய சாதனங்களையும் இந்திய வேலைக்காரர்களையும் கொண்டே தயார் செய்த நானாவித ஜவுளி தினுசுகள் தயாரிலிருக்கின்றன.

'எங்கள் பெங்களூர் சாதா-ஜரிகை கண்டாங்கி ரகங்கள் முறுக்குப்பாட்டில் எங்கள் சொந்த சாய பாக்டரியில் அனுபோகமுள்ள தொழிலாளர்களைக் கொண்டு சாயம் போட்டு உயர்ந்த ஜரிகையையே உபயோகித்து சொந்த மேற்பார்வையிலேயே தயாராவதால், சாயத்திற்கும் ஜரிகைக்கும் உத்தரவாதம் கொடுப்பதோடு "உடை மிக நயமாயும், முழம், அகலம் கூடுதலாயும் விலை சகாயமாயும் இருக்குமென்பதை"த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த வருஷத்திற்கென 18-முழம் பல மாதிரிச் சேலைகள், 11, 12, முழம் புதுமாதிரிக் கண்டாங்கிகள், ஏராளமான பாவாடை சித்தாடை தினுசுகள் தயார் செய்திருக்கிறோம்.

அவரவர் பெயர் போட்ட அட்ரஸ் துப்பட்டாக்களும் அவரவர் விரும்பிய மாதிரி எந்த ஜவுளி தினுசுகளும் தயாரித்துத் தரத்தக்க வசதிகள் எங்களிடம் உண்டு.

தங்கள் ஆர்டரை ஆவலுடனும் அன்புடனும் எதிர்பார்க்கிறோம்.

தங்கள் அன்புள்ள,
அரு. ராம. சு. சுப்பிரமணியன் செட்டியார்,
மானேஜிங் டைரெக்டர்.




குடும்பத்துக்கோர் : : பொக்கிஷம்!

சில மாதங்களுக்குள்
"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"
11,000 பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படித் தூண்டுகிறார். எனவே இந்தப் புஸ்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இல்வாழ்வை நல்வாழ்வாக
நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றாம் பதிப்பு விலை ரூ 2—0—0,
ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறாதீர்கள். புஸ்தகத்தின்பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதா வென்று பார்த்து வாங்குங்கள்.
எமது விலாசம்:— வாஸன் புஸ்தகசாலை,
224, தங்கசாலை வீதி, தபால்பெட்டி 119, மதராஸ்.



# "DENTISTRY."

"The mistakes of Physicians are buried in the ground; the mistakes of lawyers are dangled in the air; but the mistakes of dentists stare them in the face—constant reminder of carelessness, unskillfulness and disregard for the demand of scientific dentistry."

For the best and up to date treatment consult

## Dr., P. M. ABRAHAM,

DENTAL SURGEON,

(1) Naicker New Street,

MADURA.

## பி. எம். ஆப்ரஹாம்.

பல் ஸர்ஜன், புதுத்தெரு, மதுரை.

பல் சம்பந்தமான எல்லா வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். அறைகள் தேவையான எல்லாக் கருவிகளையும் சாமான்களையும் நன்கு நிறைந்திருப்பவை. நல்ல பயிற்சியும், அநுபவமும் நிறைந்த உதவி வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே ரங்கூனிலும், சிங்கப்பூரிலும் வேறிடங்களிலும் இருந்தவர்கள். ஆயிரக்கணக்கான வாடிக்கைக்காரர்கள் திப்ருதி பெற்றிருக்கின்ற [illegible] இனமாகக் கூறப்பெறும்.

மைசூர், கொச்சி, பரோடா முதலிய
கண்காக்ஷிகளில் மெடல்களும்
நற்சாக்ஷி பத்திரங்களும் பரிசுபெற்றதும்

அனேக வருஷங்கள் அநுபவமுள்ளதுமான

### ரிஜிஸ்டர்ட் யானைமார்க்

## சந்தனாதித் தைலம்.

மூளையை குளிர்ச்சிசெய்து கூந்தலை வளரச் செய்வதில்
ஜெகப்பிரசித்திபெற்றது.

இது
உயர்ந்த
மூலிகைகளாலும்
கடைச் சரக்குகளைக்
கொண்டும்
தயாரிக்கப்பட்டது.




பித்த சம்பந்தமான
வியாதியை நிவர்த்திக்கும்
குணம் உள்ளது
சிறு குழந்தைமுதல்
விருத்தர்வரை
உபயோகிக்கலாம்.

ஸ்நானத்திற்கும் தினப்பிரதி உபயோகத்திற்கும் இன்றியமையாதது.
உண்மையறிய ஒருமுறை பரீக்ஷியுங்கள்.
இதை உபயோகித்த ஒவ்வொரு குடும்பங்களிலும்
இதை போற்றாதவரில்லை.

இன்றைக்கே எழுதுங்கள்! கேட்லாக் இனாம்!!

## M. காதர் சாஹிப் அன் ஸன்ஸ்.

### மதுரை.

முக்கிய கவனிப்பு:- எங்களால் தயாரிக்கப்படும் ரிஜிஸ்டர் யானைமார்க் அரைக்கீரைத் தைலம், மிளகாய்த் தைலம், கேஸர்பவுடர், பல்பொடி, வாசனைப் பாக்கு, பத்தி வகையரா சாமான்கள் நயமானதாய் கிடைக்கும்.

(23)

சீர்காழி பண்டிட் சி. வா. ஞானசம்பந்தம் அவர்களின்
அநுபவமான சித்த மருந்துகள்.

## மூளைக் கொதிப்பை

# சிறு சந்தனாதித்தைலம்

நீக்கி, கண்களுக்குக் குளிர்ச்சியும் மூளைக்கு வலுவையும் உண்டாக்குகிறது. தலைவலி, பார்வைக் குறைவு வெட்டைச்சூடு இவைகளை நீக்குகிறது. உயர்ந்த மூலிகைகளின் இரசங்கள், வேர்கடியாழங்கள் முதலியவைகள் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. குறைந்த விலை 10-அவுன்ஸ் டின் விலை ரூ. 2. 5-அவுன்ஸ் டின் 1-க்கு விலை ரூ. 1.

## மதனாமிர்தம்

### (தாதுவிர்த்திக்கு உயர்ந்த மருந்து.)

இதில் ஜாலாமிஸ்ரி, ஷகாகுல்மிஸ்ரி நத்தைச்சூரிவிரை, கஸ்தூரி முதலிய உயர்ந்த சரக்குகளும், பழங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. சுறுசுறுப்புக் குறைவு, ஹிருதயத் துடிப்பு நாம்புத் தளர்ச்சி வெட்டைச்சூடு மூத்திர... ... ... குண்டிக்காய், முதலியவைகட்கு வி... ...டாக்கும்.

சொர்ப்பனஸ்கலிதம், துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கி தாதுவிர்த்தியை உண்டாக்கும். ஸ்திரீகளுக்கு வரும் சூதக வாயு போக்கையும் நீக்கும்.

15 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 1 10 0.
1 மாதம் ,, 1-க்கு ரூ. 3 0 0.

சீர்காழி பண்டிதர் ஞானசம்பந்தம் அவர்கள் பரம்பரைத் தமிழ்வைத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்களின் மருந்துகளும் வைத்தியமும் மிக்க பிரக்யாதி அடைந்தவைகள். அவர்கள் தங்கள் அனுபவமான மருந்துகளை விளம்பரம் செய்ய ஆரம்பித்திருப்பது பல விடங்களிலுள்ளவர்கட்கு மிக்க உபயோகமாக இருக்கும். ஒரு தடவை வாங்கி உபயோகித்தால் அவைகளை மறுதடவையும் வாங்கும்படி செய்யுமென்பதில் ஐயமில்லை. நான் பலதடவை இவருடைய மருந்துகளை உபயோகித்து நல்ல குணம் அடைந்திருக்கிறேன்.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், பி. ஏ. எல். டி.
ஹெட் அஸிஸ்டெண்டு, இராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல்,
சிதம்பரம்.
11—3—1923.

தயவுசெய்து எங்கள் கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

**பண்டிட். சி. வா. ஞானசம்பந்தம்,**
ஜீவரட்சாமிர்த இராஜ வைத்தியசாலை.
கடைவீதி, சீர்காழி, S. I. R.




**விலை சரசம்!** **துணி நயம்!!**

நகரத்தார்களுக்காகவே 100, 150, 200 நெம்பர் நூலில் அசல் ஹூயிங் ஜரிகையினால் டாலர் பவுன் பேட்டு துப்பட்டாக்கள், எழுத்துப் பேட்டு துப்பட்டாக்கள், அவரவர் அட்ரஸ் போட்ட எழுத்துப் பேட்டு துப்பட்டாக்கள், புது மாதிரியான பூச்செடி கொடி போட்ட போர்வை வேஷ்டி துப்பட்டாக்களும் சாதா துயிலி வேஷ்டி துப்பட்டாக்களும் சொந்த நிசவுகளில் தயார்செய்து சொற்ப லாபத்துக்கு விற்பனை செய்கிறோம். ஜரிகையினால் பூச்செடி கொடி வேலைசெய்த 12 முளம் கராச்சி பட்டு சாதா சேலைகளும் ஜரிகை புட்டா சேலைகளும் பலவித கலர்களிலும் கிடைக்கும். தவிர கதர் தினுசுகளும் கிடைக்கும். ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பாருங்கள்.

**கே. ஆர். வெங்கடகிரி சர்மா,**
ஜவுளி தயாரிப்போர்,
கீழப்பெருமாள் மேஸ்திரி தெரு,
ஸ்பென்சர் கம்பெனிக்கு எதிர் சந்து,
**மதுரை.**

# லக்ஷ்மி பிராண்டு சிமிந்தி,

விவரத்துக்கெழுதுங்கள்.




விரைவில் முந்துங்கள்.

ஜெர்மனியில் தயாரான லக்ஷ்மி பிராண்ட் சிமிந்தி மிக உத்தமமானது என எல்லாராலும் மதிக்கப்படுகிறது. லக்ஷ்மி பிராண்டு சிமிந்தியை உபயோகப்படுத்துவதனால் நமது வீடுகளும் பங்களாக்களும் மிக உறுதியாயிருப்பதோடு நீண்ட நாட்களுக்கு கட்டடங்கள் பலமாக இருக்குமென்பதை அநுபவத்தில் அறியலாம். ஒருமுறை பரீக்ஷியுங்கள்!

## பளபளப்பான பளிங்குப் பரப்புக் கற்கள்.

பளபளப்பான பளிங்குப் பரப்பு கற்களும், பலவித பூப்போட்ட கற்களும், சுவற்றிற் பதிக்கக்கூடிய புதுப்புது மாதிரி ரேக்குக் கற்களும், நூதனமாதிரி அழகிய பார்டர்களும் சானிட்டரி சம்பந்தமான ஸ்நானத் தொட்டி, முகங்கழுவுந் தொட்டி, லாட்டரின் தொட்டிவகைகளும், மார்பிள் கல்லினலாய பலவித லீலா விநோதச் சிலைகளும், இந்து விக்கிரகங்களும் 6 × 3 சலவைப் படுக்கைக் கற்களும் மணமக்கள் உட்காரும் மணைகளும் எப்பொழுதும் தயாரிலிருக்கின்றன.

## LAKSHMI RATANS LIMITED

## (லக்ஷிமி ரதன்ஸ் லிமிடெட்,)

(3) தம்புசெட்டித் தெரு, சென்னை.


OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 MAY 1928

# பொருளடக்கம்.


க. புதிய ஆண்டு:—(பாட்டு) பாலி. சு. நெல்லையப்பர், 'லோகோபகாரி' ஆசிரியர், சென்னை.

உ. குமர நாயகன் (பாட்டு):—சுவாமி விபுலானந்தர்.

௩. சென்ற ஆண்டு.

ச. பெண்கள் பந்தடித்தல்:—(பாட்டு).

ரு. தாலாட்டு:—எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை.

சு. மலாய்நாட்டில் இந்துக்கோயில்கள் (படங்களுடன்).

எ. கடவுள்காட்சி:—திரு. வி. கலியாணசுந்தரர் 'நவசக்தி' ஆசிரியர், சென்னை.

அ. நூதன ஆங்கிலப்பேரகராதி:— எஸ். வையாபுரிப் பிள்ளை. B. A., B. L, தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர் சென்னை..

கூ. விதவைகளின் பரிதாப நிலை:—டாக்டர் முத்து லெட்சுமி அம்மாள் M. B. & C. M. சட்டசபை உப தலைவர்.

க0. வாலிபக் கள்வன்:—டி. பி. கிருஷ்ணசாமி M. A., B. L, I. E. S.. இராமநாதபுரம் ஜில்லாக் கல்வி அதிகாரி.

கக. சமய உணர்ச்சி:—ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T.

கஉ. மணம்:—வ. உ. சிதம்பரம் பிள்ளை.

க௩. 'அப்பம் திருடின எலி'—(பாட்டு) (படங்களுடன்) எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை, தலைமைத்தமிழ்ஆசிரியர், மகாராஜா மகளிர் கல்லூரி, திருவனந்தபுரம்.

கச. ஸ்ரீ மாணிக்க வாசகரின் மாட்சி:— ரெவரெண்டு H. A. பாப்லி.

கரு. உடன்பிறப்புப்பான்மை:—த. இராமகிருஷ்ண விஸ்வகர்மன் (வேதமாணுக்கன்).

கசு. காலனுக்குரைத்தல் (பாட்டு):—சி. சுப்பிரமணிய பாரதியார்.

கஎ. உயர்தரக் கல்வி கற்றமுறை:—டி. கே. சிதம்பரநாத முதலியார் B. A., B. L. M. L. C.

கஅ. மருத்துவம்:—விருதை சிவஞான யோகிகள்.

ககூ. தந்தை மகற் காற்று நன்றி:—வல்லை பாலசுப்பிரமணியன் B. A.

உ0. மங்கையின் வீரம்:—பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள், யாழ்ப்பாணம்.

உக. கம்பனார் காவியம்:—பண்டிதை பத்மாசனி அம்மாள், யாழ்ப்பாணம்.

உஉ. பயிற்சியும் வலிமையும்:—சாண்டோ லெ. சோமசுந்தரச் செட்டியார், கீழச்சிவற்பட்டி.

உங. சாஸ்திரி மகன் சாஸ்திரி:—அஞ்சா நெஞ்சன்.

உச. பூங்காவனம் மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டு—குட்டிச் சாத்தன் A. B. C. D. E F. etc.

## படங்கள் விபரம்.

க. தாயின் அன்பு—(மூன்று வர்ணப் படம்)

### ஆப்டோன்படங்கள்.

உ சிங்கப்பூர்ப் பிள்ளையார் கோவில்.
ங ஷை தண்டாயுதபாணி கோவில்.
ச ஷை வெள்ளிரதம்.
ரு ஈப்போ தண்டாயுதபாணி கோவில்.
சு ஜாவித் தண்டாயுதபாணி கோவில்.
எ டெலுக்கான்சன் தண்டாயுதபாணி கோவில்.
அ கிள்ளான் கோவில்.
கூ கிட்டாத் தண்டாயுதபாணி கோவில்.
க0 காளையார் கோவில் கோபுரம்.

### வண்டிமாட்டு ஜோடி.

கக சிறிதும் பெரிதும்.
கஉ பெரிதும் சிறிதும்.
கங கொம்புள்ளதும், கொம்பொடிந்ததும்.
கச பச்சிளங் கன்றுகள்.
கரு சரியான ஜோடி.
கசு பி. ஏ. படித்த மாணவன்.

பொருளடக்கம்.

கஎ திண்ணைப்பள்ளிக்கூடம்.
கஅ ஷை
கசு எருமைமாட்டுச் சண்டை.
உ0 சாண்டோ சோமசுந்தரச் செட்டியார்.

## வேடிக்கைப் படங்கள்.

க. பெண்கள் பந்தடித்தல்.
உ. தாலாட்டுதல்.
ங. விதவையின் விலங்கு.
ச. ஒருவர்மேல் ஒருவர்.

### அப்பம் திருடின எலி.

ரு. எலியும் அடுப்படியும்.
சு. எலி அப்பத்தைத் திருடுதல்.
எ. அப்பத்தை எடுத்துக்கொண்டோடுதல்.
அ. எலியின் வயிறு ஊதிப்போதல்.
கூ. டாக்டர் எலியின் வருகை.
க0. வைத்திய பரிசோதனை.

### சந்நியாசி சம்சாரியானகதை.

கக. மழை பெய்தல்.
கஉ. எலிகடித்தல்.
கங. பூனை வளர்த்தல்.
கச. பால்தானம்.
கரு. பூனைக்குடும்பம்.
கசு. கோதானம்.
கஎ. வேலைக்கு ஆள் தேடல்.
கஅ. வேலைக்கு ஆள் அமர்த்தல்.
கசு. கண்டு மகிழ்தல்.
உ0. கை பிடித்தல்.
உக. பூசை கொடுத்தல்.
உஉ. முக க்ஷவரம்.
உங. தைலப்பாட்டில்.

## பொருளடக்கம்.


௨௪. உருப்படி ஏழு.
௨௫. உத்தியோகம்.
௨௬. ரயிலுக்குப் போதல்.


## ஒருகோடி கிறிஸ்தவர்.


௨௭. ஹிந்து கோயில்.
௨௮. ஹிந்து பள்ளிக்கூடம்.
௨௯. ஹிந்து வைத்தியர்.
௩௦. சோற்றுக்கடை.
௩௧. பிராமணத் தெரு.
௩௨. செட்டியார் ஊருணி.
௩௩. கிறிஸ்தவர் கோவில்.
௩௪. கிறிஸ்தவர் பள்ளிக்கூடம்.
௩௫. கிறிஸ்தவர் வைத்தியசாலை.
௩௬. கிறிஸ்தவர் உபந்நியாச மண்டபம்.
௩௭. திவசங்கொடுத்தல்.



720/2-1928

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1928
MADRAS



உ

சிவமயம்.

# புதிய ஆண்டு

வாழிய புதிய ஆண்டு, வருகநல் விபவ! எங்கள்
ஏழைமை போக்கி மிக்க ஏற்றங்கள் நல்காய் என்றும்
தாழ்விலா வாழ்வு தந்து தரணியில் உயர்வு தாராய்
தோழரோ டுன்னைப் போற்றிப் பரிவொடு துதிக்கின் றேமால்.

அறங்களை வளரச் செய்வாய், அன்பினைப் பெருகச் செய்வாய்
மறங்களை ஒழியச் செய்வாய், மழைவளம் பெருகச் செய்வாய்
பிறங்கொளி ஞானத் தோடு பத்தியும் பெருகச் செய்வாய்
உறங்கிடும் தளர்ச்சி போக்கி நாட்டினை உயர்த்து வாயே.

சைவத்தை வளரச் செய்வாய் தமிழொளி பெருகச் செய்வாய்
தெய்வத்தைப் போற்றி வையம் திருவொடு திகழச் செய்வாய்
மெய்யினை யோங்கச் செய்வாய், மித்தைகள் ஒழியச்செய்வாய்
உய்வைத்தந் தெங்கள் நாட்டார் உயர்ந்திடச் செய்வாய் மன்னே.

அடிமைபூண் டுழலுமெங்கள் நாட்டினுக் காண்மை நல்கி
விடுதலை யளித்துக் காப்பாய் வீரமும் அறிவும் ஓங்கப்
படியினிற் பரதநாடு பண்டைய மேன்மை யெய்திக்
கடவுளர் நாடாச் செய்வாய், கனிவுடன் வருவாய் வாழி!

—பரலி - சு. நெல்லையப்பர்.

241
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1? MAY 1928
MADRAS

குமரன்

ஆண்டுமலர் 1928

JL
O31n211,KU
N28
84306

சமய வாதி இன்னொரு சமயத்தை வெறுக்கிறான்; பழிக்கிறான். அவன் தான்தொழுங் கடவுள் தன்னால் வெறுத்துப் பழிக்கப்படுஞ் சமயத்திடை இல்லையென்று கருதுகிறான் போலும்! இப்போலி மனிதன் எந்நாளில் மெய்ப்பொருளை யுணரவல்லான்? "கடவுள் என்னிடத்தில் மட்டும் வீற்றிருக்கிறார்; என் வீட்டில்மட்டும் விளையாடுகிறார்; என் சமயத்தில்மட்டும் கிடக்கிறார்" என்று நினைந்து வாழ்வு நடாத்துவோனை எத்தகையன் என்று சொல்வது? இவன் கடவுளையா தொழுகிறான்? ஆ! ஆ! இவனினும் பொய்யன் வேறு ஒருவன் இருப்பனோ?

பாவங்களில் தலையாயது பொய்ம்மை. இவ்வொன்றுள்ள விடத்தில் மற்றெல்லாப் பாவங்களுமிருக்கும். இவ்வொன்றில்லா விடத்தில் மற்றப் பாவ நிகழ்ச்சியுமிராது. இவ்வுண்மையை,

"பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்று திருவள்ளுவனார் சுருங்கியவுரையால் விளக்கி யிருத்தல் காண்க. எங்குமுள்ள ஆண்டவனை "அங்கிருக்கிறான்; இங்கில்லை" என்றும், "இங்கிருக்கிறான்; அங்கில்லை" என்றும் வாதப் போருக் குட்படுத்துவது எத்தகை அறியாமை? எத்தகைப் பொய்ம்மை? இப் பொய்ம்மையாளர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தவே தாயுமானார் நூற்றிரட்டகத்தில், ஆண்டவன் உண்மையை "எங்கும் பிரகாசமாய்" என்னும் அளவில் நிறுத்திக்கூறாது, "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்று விளக்கிக் கூறினார். இங்கே பொய்யர் எவர் மெய்யர் எவர் என்பது உன்னற்பாலது.

எங்குமுள ஆண்டவனை "அங்கு இங்கு" என்று சுட்டி அவனைக் கூறுபடுத்துங் குறுகிய நோக்குடைய சமய வாதிகளைப் பொய்யர்களென்க. ஆண்டவன் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமா" யிருத்தலை யுணர்ந்து, எதனிடத்தும் எவரிடத்தும் பகைமை கொள்ளாது, அன்பு கொள்ளுஞ் சமரச நோக்குடையாரைமெய்யர்களென்க. கடவுள் இருப்பைப் பற்றி மெய்ஞ்ஞானியாகிய தாயுமான சுவாமிகள்,

"எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும்
அவ்வுயிராய்
அங்கங்கிருப்பதுநீ அன்றோ பராபரமே"
"எப்பொருளும் நீயெனவே எண்ணிநான்
தோன்றாத
வைப்பை அழி யாநிலையா வையாய் பராபரமே"

என்று செவ்விய மொழியால் சிறப்பித்திருத்தல் காண்க. ஆகவே உலகீர்! ஆண்டவனை "அங்கு இங்கு" என்று சுட்டிச் சமய வாதத்தில் இறங்கன்மின்; அச் சுட்டுணர் வழிக்குஞ் சமரசத்துறை நண்ணுமின்; அத் துறை படிந்து கடவுளைக் காண்மின்; கண்டு இன்புறுமின்.

எல்லாவற்றிலும் ஆண்டவன் வீற்றிருக்கும்போது எதைத் தள்ளுவது? எதைக் கொள்ளுவது? தள்ளல் கொள்ளல், பகைமை பொறாமையுள்ளவிடத்தில் நிகழ்வன. கடவுள் நெறியோ இவைகளைக் கடந்து நிற்பது. கடவுள் நெறி நிற்போர், உலகிலுள்ள பலதிற வேற்றுமைகளைக் கண்டு, வேற்றுமையுளம் பெறமாட்டார். சில காரணம்பற்றி உலக வளர்ச்சிக்கெனப் பலதிற வேற்றுமைகள் இயற்கையில் அமைந்திருக்கின்றன. அவ் வேற்றுமைகள் பலதிற முத்துக்கள் போன்றன. பரம்பொருள் அம் முத்துக்களினூடே நுழைந்துள்ள கயிறு போன்றது. ஆகவே எல்லா வேற்றுமைகளும் நிலவுதற்கு அடிப்படையாயுள்ள ஒன்றை யுணர முயல்வதே அறிவுடைமை.

ஒருவன் பாடுகிறான்; இன்னொருவன் யாழ் வாசிக்கிறான்; மற்றொருவன் முழவு கொட்டுகிறான்: வேறொருவன் தாளம் போடுகிறான். இவைகளின் (பன்மையின்) பயன் என்னை? இசை யெனும் ஒன்றே. இசை யென்பது இப் பன்மைகட்கு அடிப்படையாய் யாண்டும் நிலவுவது. அது பாடுவோன் மிடறு, மற்ற யாழ் முழவு தாளம் முதலிய பன்மை வாயிலாக வெளிப்படுகிறது. பன்மை ஒருமைக்குத் துணை செய்யவே ஏற்பட்டதென்க. பன்மைக்குப் பிறப்பிடம் ஒருமை என்பதையும் ஓர்க. இவ்வாறே இயற்கையின்பாலுள்ள பலதிற வேற்றுமைகளுந் தங்கட்கு நிலைக்களனாயுள்ள ஒன்றை யுணர்தற்குக் கருவிகளாக நிற்கின்றன என்று தெளிக. "ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை உண்டுபணுஞானமாகும்" என்றார் தாயுமானாரும்.

இசை யெனும் ஒருமை இன்பம் நுகராது, முழவு யாழ் தாளம் முதலிய பன்மை மீது கருத்துச் செலுத்துவோரு முளர். இவர் இசை இன்பம் இழக்கிறார். இவரனையார் வேற்றுமைகளில் மட்டுங் கருத்தைப் படிய வைப்போரென்க. வேற்றுமைகள் ஒற்றுமையுணர்விற்குத் துணை செய்யவே ஏற்பட்டன என்பதையும், ஒற்றுமையிலிருந்தே வேற்றுமைகள் தோன்றின என்பதையும் மீண்டும் வலியுறுத்துகிறேன். வேற்றுமைகளையே பொருளாக் கொண்டு, உயர்வு தாழ்வெனும் நரகக் குழியில் வீழ்ந்து இன்பத்தைக் குலைத்துக் கொள்வது அறிவுடைமையாகாது.

"எங்கும்" "எல்லாம்" ஆண்டவன் என்னும் உணர்வு பெற்று, அவ்வுணர்வு வழி நின்று, அநுபூதி நிலை பெறும் ஒருவன் தன்னுயிர்க்கும் மற்றவுயிர்க்கும் வேற்றுமை காண்பானில்லை. அவன் தன்னுயிர்போல் மன்னுயிரையும்பார்ப்பன். இந்நிலை யெய்திய ஒருவன் பிறப்பு இறப்பு என்னும் மயக்கத்தினின்றும் விடுதலையடைகிறான். இதுவே சமரச ஞானத்தால் விளையும் பேறு. இப்பேறு பெற்ற நந்தாயுமானார் தமது அடைவைப் பல பாக்களால் உலகிற்கு உணர்த்தியிருக்கிறார். அவைகளுள் சிலபாக்களை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

"பார்த்த இடமெல்லாம்
பரவெளியாய்த் தோன்றஒரு
வார்த்தை சொல்லவந்த
மனுவே பராபரமே"

"ஆதியந்த நீகுருவாய்
ஆண்டதல்லால் நின்னையன்றிப்
போதனையும் உண்டோ
புகலாய் பராபரமே"

"எண்ணில்பல கோடியுயிர்
எத்தனையோ அத்தனைக்குங்
கண்ணிற் கலந்தவருட்
கண்ணே பராபரமே"

"மண்ணும் மறிகடலும்
மற்றுளவும் எல்லாம் உன்
கண்ணி லிருக்கவும்நான்
கண்டேன் பராபரமே"

"கண்ட வறி வகண்டா
காரமென மெய்யறிவிற்
கொண்டவர்க்கே முத்தி
கொடுப்பாய் பராபரமே"

"பெற்றார் அநுபூதி
பேசாத மோனநிலை
கற்றார் உனைப்பிரியார்
கண்டாய் பராபரமே"

"எல்லாம் நினதுசெயல்
என்றெண்ணும் எண்ணமும்நீ
அல்லால் எனக்குளதோ
ஐயா பராபரமே"

"எல்லாரும் இன்புற்
றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்
றறியேன் பராபரமே"

"தம்முயிர்போல் எவ்வுயிரும்
தானென்று தண்ணருள்கூர்

யுனைடெட் இந்தியா பாலிஸிகள் மிகச்சிறந்த பத்திரங்களாகும்.

Safety and Service are among the distinguishing

செம்மையருக் கேவலென்று
செய்வேன் பராபரமே"
"வஞ்ச நமன் வாதனைக்கும்
வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனையடைந்தேன்
ஐயா பராபரமே"
"மார்க்கண்டர்க்காக மறலிபட்ட
பாட்டையுன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன
பயங்காண் பராபரமே"

இன்னுஞ் சமாசத்தைப்பற்றிப் பலபடப் பேசவேண்டுவதில்லை. சமாச ஞானப்பேறே வாழ்வின் முடிந்த நிலை. அந்நிலை பெற ஒவ்வொருவரும் முயல்வோமாக.

இதுகாறும் இறைவன் அருண்மேலீட்டான் உயிர்கட்கு வகுத்த படிகள் நிரலே கிளந்து கூறப்பட்டன. உலகம் முதல் சமயம் ஈறாகவுள்ள படிகள் கோலப்பட்டன. முடிவில் சமாச நிலையுங் கோலப்பட்டது. இறைவன் உயிர்கட்கு எவ்வெத்துணை செய்ய வேண்டுமோ அவ்வத்துணை செய்து முடித்தான். இனிப் படிகளேறி நிலையம் புகுந்து கடவுள் காட்சி பெறவேண்டுவது எவர் கடமை?

## (உ) உயிர்கள் கடமை.

(உன்னை நான் அணுகவுந்
தண்ணருள் வருக்கவிலையோ)

"சமாசம் மெய்ந்நெறியே; அது முடிந்த நிலையே; அதனால் உயிர்கட்கென்னை; அப்பேற்றை உயிர்கள் எங்ஙனம் பெறும்; அதற்கேதாயினும் வழியுண்டா" என்று சிலர் ஐயுறலாம். தாயுமானாரும் ஆண்டவனை நோக்கி "உன்னை நான் அணுகவுந் தண்ணருள் வருக்கவிலையோ" என்று வினவியிருக்கிறார். உயிர்கள் பொருட்டு உலகையும் அறிவையும் மறையையும் சமயங்களையும், இவை கடந்த மோன சமாசத்தையும் வகுத்த இறைவன் சமாச ஞானப் பேற்றிற்குத் தண்ணருள் பாலியாதிருப்பனோ? உயிர்கள் அப்பெருநிலை பெறுதல் வேண்டும் என்பதன்றோ இறைவன் திருவுள்ளக் கிடக்கை? அது குறித்தன்றோ அவன் எல்லாவற்றையும் உயிர்கட்கு வகுத்தான்? இவ்வருளுடைய இறைவனோ உயிர்களின் இறுதிப்பேற்றிற்குத் துணைசெய்யா தொழிவன்? பின்னை எற்றுக்குத் தாயுமானார் அங்ஙனம் வினவியிருக்கிறார்? அவ்வினாவின் பொருளை உற்று நோக்குக. அவ்வினா எப்பொருளின் மேற்று? அது கொள்பொருளில் அமைந்து கிடத்தல் காண்க. ஆதலால் உயிர்களின் இறுதிப்பேற்றிற்கும் ஆண்டவன் அருட்டுணையுண்டு என்றுணர்க.

அவ்வருளைப் பெறுவதெங்ஙனம்? இங்கேதான் உயிர்கட்குக் கடமை ஏற்படுகிறது. இக்கடனை யுணர்ந்தவே சுவாமிகள் உலகு அறிவு முதலியவற்றை 'வகுத்து வகுத்து' என்று சொல்லிக் கடந்த சமாசத்தை "வகுத்தநீ" என்று முடித்து, அருளைமட்டும் "வருக்கவிலையோ" என்று வேறு பிரித்து ஓதியிருக்கிறார்கள். இப்பகுதியில் ஆண்டவன் துணையும் உயிர்களின் கடமையும் இரண்டுந் திகழ்தலால் இஃது அரிமா நோக்குமுறையில் இடையில் கிளத்தப்பட்டிருக்கிறது. ஆண்டவன் அருட்பேறு பெரிதும் உயிர்கள் முயற்சியைப் பொறுத்து நிற்றலான் அதனை யானும் "உயிர்கள் கடமை" என்னுந் தலைப்புக்கீழ் வைத்துப் பொருளை முறைப்படுத்தலானேன்.

ஆண்டவன் அருளை உயிர்கள் பெறாதவாறு சில தடைகள் தகைகின்றன. அவைகளைக் களைய மக்கள் முயலல் வேண்டும். அவைகளின் ஊற்றாய் உயிராயுள்ள ஒன்று களையப்படின், மற்றவைகளெல்லாந் தாமே வீழ்ந்துபடும். அவ்வொன்று எது? பொய்ம்மை.

(பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாதகாட்சியே)

ஈண்டு அடிகள் ஆண்டவனைக் 'காட்சியே' என்று விளிக்கிறார். இதன்பொருள் என்னை?





ஆண்டவன் காட்சிக்குரியன் என்பதன்றோ? காட்சிக்குரிய அவனைக் காணாதவாறு தகைவது எது? அஃது எவர்பாலுளது?

"பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத" எனவரூஉஞ் செம்மொழிகளைச் சீர்தூக்கிப் பார்க்க. எவர் காணாதகாட்சி? "பொய்வளரும் நெஞ்சினர்கள்". எனவே மெய்வளரும் நெஞ்சினர்கள் காணுங் காட்சி நமது கடவுள் என்று தெளிக.

கடவுள் காட்சியை மறைக்குங் கொடுமை பொய்ம்மைக் கிருத்தல் பெரிதுங் கருதற்பாலது. மகனைக்கெடுப்பது பொய்யன்றிவேறென்னை? அதன் புன்மை தெரிக்கவேண்டி மீண்டுஞ் சுவாமிகள் அதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

(பொய்யிலா மெய்யர்)

பொய்யின் புன்மையையும் மெய்யின் மேன்மையையும் அடிகள் மக்கட்கு அறிவுறுத்துகிறார்கள். பொய்யின்புன்மை என்ன? மெய்யின் மாண்பு என்ன? எங்குமுள்ள ஆண்டவனைக் காணவொண்ணாதவாறு தகைவது பொய்யின் புன்மை. ஆண்டவன் காட்சியைத் தகையாது புலப்படுத்துவது மெய்யின் மேன்மை. பொய் நீத்து மெய்வழி நின்று உண்மைகாண முயலாது வாயில் வந்ததை உளறுவது மடமை.

பொய்ம்மை பாவங்கட்கெல்லாந் தாயகம் என்று முன்னருஞ் சொல்லப்பட்டிருக்கிறது. எங்குமுள ஆண்டவனை "அங்குளான் இங்கில்லை; இங்குளான் அங்கில்லை" என்று சொல்வது எத்தகைப் பொய்! ஆண்டவன் துணையை மறுப்பதும் மறப்பதும் எத்தகைப் பொய்! இன்னோரன்ன பொய்களில் வீழ்ந்துழலும் மனிதன் பேச்சொடு பேச்சுக்கெல்லாம் பொய் வழங்கிச் செயலொடு செயலுக்கெல்லாம் பொய் நிகழ்த்திப் பொய் வாழ்வினனாகிறான். இவன் எங்ஙனம் கடவுள் காட்சி பெறுவன்?

பொய்ம்மையினின்றும் பிறக்குங் குழவிகளோ பற்பல. அவை அழுக்காறு, வெகுளி, கொலை, களவு, காமம் முதலியன. இக்குப்பைகளை நெஞ்சில் பதியவைத்து, ஆண்டவன் அருள் நாடினால் அவனருள் கூடுங்கொல்! இவைகளெல்லாவற்றையும் விலக்கி உண்மையில் உறைந்து நின்றால் ஆண்டவன் அருள்கூடும்.

"வஞ்சனையும் பொய்யுமுள்ளே
வைத்தழுக்கா றுயுளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ
நெறிதான் பராபரமே"
"கொலைகளவு கள்காமம்
கோபம்விட்டா லன்றோ
மலையிலக்கா நின்னருள்தான்
வாய்க்கும் பராபரமே"
"அழுக்காற்றால் நெஞ்சம்
அழுங்கிய புன்மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம்
எய்தார் பராபரமே"

இத்திருப்பாக்களை உற்று நோக்குக.

மனிதன் பகுத்தறிவு பெறும்வரை ஆண்டவன் துணைசெய்து வருகிறான். அப் பகுத்தறிவுகொண்டு மனிதன் மெய்யில் உறுதிகொள்ளல் வேண்டும். மெய்யினின்றும் வழுவி வீழ்வது எவர் குற்றம்? வழுவி வீழினும் மீண்டுமாதல் மெய்ந்நெறி பற்ற முயலுதல் வேண்டும். மெய்யில் கருத்தின்றிப் பொய்யில் புகுந்துகொண்டே போனால் ஆண்டவன் அருளொளி எங்ஙனம் படரும்? "பொய்க் கடலில் வீழ்ந்த மனிதன் எங்ஙனம் மெய்க்கரை நண்ணுவன்; அவனுக்கொரு துணை வேண்டாமா" என்று சிலர் வினவலாம். பொய்யில் வீழ்ந்துள்ள மனிதனுக்குத் துணை வேண்டற்பாலதே. அத்துணை பெறுதற்குப் பொய்யில் வெறுப்பாதல் மகனுக்குத் தோன்ற வேண்டுமன்றோ? பொய்யில் சிறிது வெறுப்பாதல் தோன்றினால் போதும். அம்மகனை யாட்கொள்ள ஆண்டவன் அருள் காத்துக்

கொண்டிருக்கிறது. பொய்யில் வெறுப்புக் கொண்டு "ஆண்டவனே! நான் மனிதன்; அடிக்கடி நெறியினின்றும் பிறழ்ந்து விழுகிறேன். என்னைக் கரையேற்றல் வேண்டும்; உன் துணை நாடி நிற்கிறேன்" என்று கழிவிரக்கங்கொண்டு ஆண்டவனை நோக்கிக் கதறிக்கதறியழுதால், ஆண்டவன் அருட்டுணை கிடைக்கும். "அழுதால் உன்னைப் பெறலாய்" என்றார் மணிவாசகனாரும். ஒருமுயற்சியிலுந் தலைப்படாது, பொய்யில் கிடப்போனுக்கு உய்வுயாண்டிருந்துவரும்? ஆண்டவன் அருட்பேற்றிற்குச் சிறிதளவாதல் மனித முயற்சி வேண்டற்பாலதே.

மெய்ம்முயற்சியில் தலைப்படாது பொய்ச்சேற்றிலேயேநெளிந்துகொண்டு "ஆண்டவனாவது; ஐயனாவது; ஒன்றுமில்லை" என்று நாத்திகம் பேசுவது அறிவுடைமையாகாது. பொய் நீத்து மெய்வழி நின்றால் அருள் கூடும். கடவுள் என்பது உண்மை அல்லது சத்தியமன்றி வேறென்னை? மாறுதலின்றி, அழிவின்றி, என்றும் ஒரு பெற்றியாயிருக்கும் உண்மையே கடவுள். அவ்வுண்மையை உண்மையால் உணர முயல்வதே அறிவுடைமை. இதுவே உயிர்கள் ஆற்றவேண்டிய தலையாய கடமை. ஆகவே எவர் அறிவில் ஆண்டவன் பொலிவன்? "பொய்யிலா மெய்யர் அறிவில்" என்க.

௩. பேறு.

(அறிவில்போத பரிபூரண அகண்டிதாகாரமாய்ப் போக்கு வரவற்ற பொருளே ... ...)

மெய்ம்மையால் அடையும் பேறு யாது? சமரசஞானம். சமரச ஞானமாவது எங்குமுள கடவுள் காட்சி பெற்று, இரண்டறக் கலந்து, பிறவா இறவா நிலை அடைவதாகும்.

பொய்யுள்ளமட்டும் அறியாமையுண்டு. அறியாமையோடு கூடிய பொய்யறிவில் சுட்டுணர்வே விளங்கிக் கொண்டிருக்கும். பொய்யொழிந்தால் அறியாமையொழியும். அறியாமை யழிந்தால் மெய்யறிவு தோன்றும்; மெய்யறிவில் சுட்டுணர்வு தொலையும். சுட்டுணர்விற்குக் கண்டம் பொருளாகுமேயன்றி அகண்டம் பொருளாகாது. அகண்டாகார நிலையோ ஓதற்கரியது. உயிர்கள் அடையத்தக்க இறுதிப்பேறு இதுவேயாகும். இந்நிலையே கடவுள் காட்சி என்பது.

உயிர்கள் இக்காட்சி பெறல்வேண்டுமென்றே அருட் கடவுள் அவைகட்குப் பலதிறத் துணை புரிகிறான். அத்துணை பெறும் உயிர்கள் வாழ்வில் இறங்கும்போது, தங்கட்கு வாழ்வளித்த ஆண்டவனையும் அவனருளையும் மறவாது, மெய்ந்நெறி நின்றொழுகல் வேண்டும். அம்மெய்யொழுக்கம் கடவுள் அருள்கூட்டிச் சமரச உணர்வளித்து, முடிவில் கடவுள் காட்சியையும் பெறுவிக்கும். கடவுள் காட்சி பெரிதும் மக்களின் மெய்ம்மைக் கடமையைப் பொறுத்து நிற்றல் கருதற்பாற்று.

மெய்ம்மையைப்பற்றிப் பல்லாயிரம் பேச்சுப் பேசலாம்; பல்லாயிரம் நூல்கள் எழுதலாம். அவைகளால் பயன் விளையுங்கொல்! விளையாது. மெய்ம்மையை வாழ்வில் நடையில் கொணரவே உழைத்தல் வேண்டும். அந்நடைமுறைக் குரிய துறைகளைப் பலர் பலவாறு கூறுப. அத்துறைகளில் சிலவற்றையாதல் குறிப்பிட இக்கட்டுரை இடந்தராது. எவரும் எளிதில் கொள்ளத் தக்க முறைகளில் மட்டும் இரண்டொன்று நினைவூட்டி நின்று விடுகிறேன்.

கடவுள் சத்துப் பொருளென்று அறிஞர் பலர் முடிவு கண்டு, அம் முடிவை உலகிற்கும் அறிவுறுத்திப் போந்தார். அச்சத்து மண் புனல் தீ காற்று வெளி ஞாயிறு முதலியவற்றில் ஊடுருவி நின்று, உயிர்கட்குப் பல்லாற்றானுந் துணைசெய்து வருகிறது. ஈண்டுக்குறிக்கப்பெற்ற ஐம்பெரும் பொருளும் ஞாயிற்றொளியும் வாழ்விற்கு இன்றிமையாதன என்பது எவரும் ஒப்பமுடிந்த உண்

Promt settlement of claims is a renowned feature of the United India.



மை. இவைகளின் வாயிலாக ஊடுருவி நிற்குஞ் சத்தானது, பசுங்கீரையிலும் செங்காயிலும் பழங்களிலும் தானியங்களிலும் பரிணமித்து, உயிர்கட்குஉணவாகிறது. அச்சத்துணவை மனிதன் அளவாக முறைப்படி உண்டு வரவர அவனுக்குச் சத்தியத்தில் நாட்டஞ்செல்லும்.உணவுக்கும்இயல்புக்குந் தொடர்புண்டு. ஆகவே நல்லியல்பை விழையும் ஒருவன் சத்துணவு உண்டு வருவானாக. இவ்வுணவுடன் அவன் நல்லொழுக்கத்தைக் கடைப் பிடிப்பானாக; இவைகளுடன் அவன் அழிவிலாச் சத்தியத்தை—உண்மையை—கடவுளை இடையறாது உன்னி வருவானாக. இவ்வாழ்வுடைய மகனுக்கு ஆண்டவன் அருள் கூடும்; அருளால் சமரச ஞானம் உண்டாகும்; சமரசஞானத்தால் அவன் கடவுள்காட்சி பெறுவன்.

"புகழுங் கல்வியும் போதமும் பொய்யிலா
அகமும் வாய்மையும் அன்பும் அளித்தவே
சுகவிலாசத் துணைப்பொருள் தோற்றமாங்
ககன மேனியைக் கண்டன கண்களே"

—தாயுமானர்.

நியூ இந்தியா
அஷ்யூரான்ஸ் கம்பெனி, லிமிடெட்,
Fire Marine Accident

| | |
|---|---|
| Authorised Capital | 6 கோடி ரூபாய் |
| Subscribed ,, | 3 கோடியே 56 லட்சம் ரூபாய் சொச்சம் |
| Paid up ,, | 71 லட்சம் ரூபாய் சொச்சம் |
| Total Funds ,, | 1 கோடியே 15 லட்சம் ரூபாய் சொச்சம் |

கட்டடங்கள், கிடங்குகள், ஷாப்புகள், இவைகளிலிருக்கும் சாக்குகளுக்கு தீவிபத்தினால் ஏற்படும் நஷ்டங்களினாலும், கப்பலில் ஏற்றிப்போகும் சகல சாமான்களுக்கும் கடலில் ஏற்படும் விபத்துக்களினாலும், மோட்டார் வண்டிகளுக்கும் அவற்றில் ஏறிச்செல்பவர்களுக்கும் அஜாக்கிரதையினால் நேரிடும் அபாயங்களினாலும், அவ்வண்டிகளால் பிறருக்கு ஏற்படும் ஆபத்துக்களினாலும், அவைகளின் சொந்தக்காரருக்கு ஏற்படும் நஷ்டங்களுக்கும் இன்ஷ்யூரன்ஸ் மேற்கூறிய கம்பெனியாரால் ஏற்றுக்கொள்ளப்படும். அநேக கம்பெனிகளுக்கு மதராசில் பிராஞ்சு ஆபீஸ் கிடையாது. இக்கம்பெனிக்கு மதராவில் பிராஞ்சு ஆபீஸ் இருப்பதால் நஷ்டங்கள் தாமதமின்றி கட்டிக் கொடுக்கப்படும். இந்தியாவில் ஏற்படுத்தியிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுள் இக்கம்பெனி சிறந்ததாய் விளங்கிவருவது உலகப் பிரசித்தம்.

ஆகவே இந்தியக்கம்பெனிகளின் அபிவிருத்தியில் அபிமானமுள்ள அன்பர்கள்யாவரும் தங்கள் சரக்குகளையும், கட்டடங்களையும், மோட்டார் வண்டிகளையும் இக்கம்பெனியிலேயே கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி இன்ஷ்யூர் செய்துகொள்ள வேண்டுவாம்.

6, 1st Line Beach,
Madras.
Phone 3343. (4)

S. J. Rivers,
Branch Manager.

South India has practically one Life Assurance Co, and it is the United India

# நூதன ஆங்கிலப் பேரகராதி.

தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர் S. வையாபுரிப் பிள்ளை B. A. B. L.

நாளது ஏப்பிரல் மாதம் ககூ-ந்தேதி ஆங்கில மொழி வழங்கும் உலகனைத்தும் போற்றற்குரியதொரு பெரு நாளாகும். மொழி நூலாராய்ச்சி வல்ல அறிஞர்களனைவரும் இம்மங்கள தினத்தைப் பொன்னேபோற் போற்றுவர். இந்தச் சுதினத்தன்று ஆக்ஸ்பர்ட் ஆங்கில அகராதியின் இறுதிப்பகுதி வெளியிடப் பெறுகின்றது.

இப்பேரகராதியின் பிரசுரம் கஅஅச-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தொடங்கப் பெற்றது. அக்கால முதல் சச-வருஷமாக இதன் பகுதிகள் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. கஅகூஎ-ம் வருஷத்தில் அகராதியின் 'வயிர விழா' (Diamond Jubilee) கொண்டாடினர். அப்பொழுது விக்டோரியா மஹாராணியாருக்கு இவ்வரிய சொற்கருவூலம் உரிமையாக்கப் பெற்றது. உரிமையுரையிலே 'அம்ம! இது முற்று முதல் கூடுமாயின் பெரிதுஞ் சிறந்ததொரு செயலாக அமையும்' எனப் பொருள்படும் செகப்பிரியாது நன்மொழி வரையப் பெறலாயிற்று. பெருமை சிறந்த இவ்வரிய நூல் இன்று இனிது முற்றி ஜியார்ஜ் அரசரின் திருக்கரங்களில் அளிக்கப் பெறுகின்றது. இப்பெரு நூல் காலகதியிற் பற்பல கோலஞ் சமைந்து சொற்கள் நடனஞ் செய்யும் அரங்கமாக விளங்குகின்றது. நாடோறும் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பகமாகவுந் திகழ்கின்றது. இங்ஙனமாதலின் சச ஆண்டுகளாக—பகுதி பகுதியாக— இது வெளிவந்து கொண்டிருந்ததென்பதில் சிறிதும் வியப்பதற்கில்லை. மக்கள் ஆயுளில் இக்காலம் நீண்டதாகத் தோன்றினும் ஒரு மொழியின் ஆயுளை நோக்குமிடத்து மிகச் சிறியதொரு காலமென்றே கொள்ளல் வேண்டும். எனவே மிக நீண்டதாகக் கருதும் காலக்கழிவை ஒரு பொருட்டாக வெண்ணாது எல்லாவகையானும் நிறைவுடையதாய் நூல் முற்ற வேண்டுமென்பதொன்றே மனங் கொள்ளுதற்குரியது. நூலின் நிறைவினை வேண்டி அனுபந்தம் ஒன்று வெளியிடப்பெறும். இதன்கண் அதி பாலியதசையிலுள்ள சொற்களும் இடம்பெறுவனவாகும். இவ்வனுபந்தத்தை ஆங்கில அகராதிப் பகுதிகள் அனைத்தையும் வாங்கினவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க உத்தேசிக்கிறார்கள்.

## பேரகராதியின் செலவு.

மொழிநூற் கழகத்தின் உறுப்பினர்களும் அதனைச்சார்ந்த உபகார சீலர்களுமே அகராதிக் குரிய விஷயங்களைப் பெரும்பாலும் உதவியவர்களாவர். இங்ஙனம் உதவப் பெற்ற விஷயங்களையெல்லாம் அகராதி முறையில் தொகுத்து ஒழுங்கு படுத்தற்கும் பிரசுரஞ் செய்தற்குமாக ரு லட்சம் பவுன் செலவாயிருக்கிறது. இப்பெருஞ் செலவை ஆக்ஸ்பர்ட் சர்வகலா சங்கத்தினர் பொறுத்து வந்தனர். ககூOரு-ம் ஆண்டில் பொற்கொல்லர் கழகத்தினர் அகராதியின் ஆறுவது பகுதிச்செலவிற்கு ரு000 பவுன் உதவினார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள ஒரே லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி யுனைடெட் இந்தியாவே.



## அகராதியின் சரிதம்.

இவ் அகராதியின் சரித முழுவதும் இடைவிடாத உழைப்பினாலும் சலிப்பறியாத மனவொருமையாலும் நிரம்பியிருந்தது. இதன்பொருட்டுத் தம்மையே தத்தஞ் செய்து முயன்றுவந்தவர் ஒருவரிருவரன்று. பல அறிஞர்கள் தங்கள் ஆயுட்காலத்தையும் ஆத்ம சக்தியையும் இவ் அகராதி யொன்றற்கே உரிமையாக்கினர். அகராதியின் சரிதம் அதில் வெகு காலமாய் உழைத்துவந்த ஒருவரால் ஒருவாறு 'டைம்ஸ்' பத்திரிகையில் சென்ற மே மாதம் வெளியிடப்பட்டது. அவ்வெழுதுங் காலத்தில் அகராதி விரைவில் முற்றுப்பெறும் தறுவாயில் இருந்தது. இன்று, பல வருஷ காலமாகச் செய்துவந்த உழைப்பின் பலன் முழுதும் கைகூடி அகராதி முற்றுப் பெறுகின்றது.

உலகிலுள்ள அகராதிகளிலெல்லாம் தலைசிறந்து விளங்கும் இந்நூலின் அச்சுப்பிரசுரம் கஅஅச-ம் ஆண்டில் தொடங்கிய போதிலும், கஅஎகூ-ம் ஆண்டிலேயே டாக்டர் ஜே. ஏ. எச். மர்ரே என்னும் நிபுணர் இவ்வேலையை ஆரம்பித்தனர் எனக்கூறுவர். ஆனால் உண்மை நோக்குமிடத்து கஅருஅ-ம் வருஷம் ஜனவரி-மீ எ-ம் தேதியன்று அகராதி வேலை தொடங்கப் பெற்றதெனக் கூறல் வேண்டும். இத்தேதியில் டென்ட்ரெஞ்ச் என்பவரது முன்னிலையில் சம்பூரணமான நூதன அகராதி இயற்றப்படல் வேண்டுமென மொழிநூற்கழகம் தீர்மானித்தது. இத்தீர்மான காலத்திலிருந்து இப்பொழுது எ0 வருஷங்களாகின்றன. இது இனிது நிறைவேறுதற்குமுன் இடையூறுகள் பல காலகதியில் விளைந்தன. டாக்டர் மர்ரே, நூலின் தொடக்கத்தில் பதிப்பாசிரியராய் இருந்த கோலரிட்ஜ் என்ற இருவரையும் இழக்க நேரிட்டது. கஅருஅ-ம் ஆண்டில் அகராதி இன்ன வடிவில் முடிவாக உருப்பெற்றுப் பரிணமிக்கும் என ஒருவராலும் எண்ணுதற்கரியதாயிருந்தது. பிரகிருதி விசித்திரங்கள் நாடோறும் கண்டு பிடிக்கப்பட்டு வந்தன; எத்தனையோ யுத்தங்கள் குறுக்கிட்டன; எந்திர விசேடங்கள் தோன்றிக் கொண்டேயிருந்தன. இவைகளைக் கனவிலும் நினைத்தறியாத காலத்தில் அகராதி இன்ன அளவாக அமையும் எனக்கொண்டவொரு கருத்து உண்மையினின்றும் எத்துணை வழுவியிருக்க வேண்டுமென்பது கூறவும் வேண்டுமோ? கோலரிட்ஜ் இரண்டு வருஷ காலத்தில் அகராதியின் முதற் பகுதியை நிச்சயமாய் வெளியிடக்கூடுமென்று எண்ணியிருந்தனர். அன்றியும் அகராதிச் சொற்கள் முழுமைக்கும் கூ0,000 கடிதத் துண்டுகள் வைப்பதற்குத் தக்க அறைப் பெட்டியொன்று போதுமென நினைத்து அவ்வாறே ஒரு பெட்டி அமைத்து வைத்திருந்தனர். பின்னர் மிகச் சுருங்கிய சொல்லளவுள்ள ஒரேழுத்திற்கே அவ்வகைப் பெட்டியொன்று வேண்டியதாயிருந்தது. கஅகூக-ம் வருஷத்தில் கோலரிட்ஜ் மாணமாயினர். அவரோடு உழைத்து வந்த Furnivall என்பவரிடம் அகராதி வேலைப் பொறுப்பு முழுதும் சார்ந்து விட்டது. இவர் சொற்கள் திரட்டுவதிலும் கைம்மாறு கருதாது உழைப்பதற்குத் தக்க உதவிப் பதிப்பாசிரியர்களைத் தெரிந்து கூட்டுவதிலும் பெரிதும் முயன்று வந்தனர். பின் சில காலமாக அகராதியைக் குறித்து யாதொன்றும் கேட்கப்படவில்லை. டாக்டர் மர்ரே பதிப்பாசிரியராக அமர்ந்த பின்னரே அகராதியின் பெயர் மறுபடியும் தொனிக்கலாயிற்று. அவரது நிரம்பிய கல்வியறிவும் பிற பிற தகுதிகளும் பெரிதும் அநுகூல காரணங்களாய் அமைந்தன. அவர் இவ்வேலையை மேற்கொண்ட காலத்தே, அகராதி இப்போது முடிவாக வெளிவந்திருக்கும் அளவில் நேர்பாதியில்

The United India is "One of the strongest,

முற்றுமெனக் கருதப்பட்டது. ஆனுல் நூல் பெரிதும் விரிந்துவிடக் கூடுமென்றெண்ணி அதற்குத் தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

சஅஅஉ-ம் வருஷத்தில் அகராதி பிரசுரத்திற்குத் தயாராகி விட்டதென்றும் சO பக்கங்கள் அச்சில் உள்ளதென்றும் டாக்டர் மர்ரே பகிரங்கப்படுத்தினர். இதன்பின் உ-வருஷங் கழித்து அகராதியின் முதற் பகுதி வெளியிடப் பெற்றது. கஉ வருஷ காலத்தில் அகராதியின் பிரசுரம் முடியக் கூடுமென டாக்டர் தாமே எண்ணியிருந்தனர். ஆனுல் அகராதி ஒருவாது மதிப்பிற்குமடங்காது பெருகி வளர்ந்துகொண்டே வந்தது. (Set) என்ற ஒரு மொழியின் பல வேறு பொருள்களைத் திருப்தி கரமாக முறைப்படுத்தி அமைப்பதற்கு நாற்பது மணிநேரம் சென்றதாம். இச் சொல்லுக்கு ருக தனிப்பொருள்கள் இருந்தன; இதனடியாக 'Set Out' முதலிய அரு சொற்றொடர்கள் வழக்கில் அமைந்துள்ளனவாகக் காணப்பட்டன. இச்சொல்லைக் காட்டினும் மிகக்கடினமானது அகராதியில்இல்லையென்று டாக்டர் மர்ரே கருதினர். Webster அகராதியில் இச்சொல்லின் பொருள் இரண்டு பத்திக்கு மேற் காணப்படுகின்றது. வெளிவந்திருக்கும் ஆங்கிலப் பேரகராதியில் கஅ-பக்கங்களுக்கு மேலாக அடங்கியிருக்கின்றது. முக்கியமான பொருட் பகுதியினளவு கருச ஆகும். இவ்வுதாரணத்தா லகராதியின் விரிவும் முயற்சியின் கடுமையும் அருமையும் ஒருவாறு விளங்கலாம். ஒரு சிறியசொல்லின் பொருளால் அகராதியின் வேலை விரைவு எவ்வளவு தடைப்படு மென்பதும் இதனுற் புலனுகின்றது.

பிரசுரத்திற்கு அகராதி தயாராகி முடிந்த பொழுது மொழிநூற் கழகம் எடுத்துவந்த உழைப்பு நின்றுவிட்டது. எனினும் பிரசுரம் முற்றுமளவும் அக்கழகம் காட்டிவந்த ஆதரவு அளவிடுந் தரத்ததன்று. ஜனவரி மாதம் 13-ம் தேதி கூடிய அக்கழகக் கூட்டத்தில் அடியிற் கண்ட விவரத்தை ஸ்ரீமான் அனியன்ஸ் தெரிவித்தனர்:—

கஅருஅ-ம் வருஷம் ஜனவரிமீ ௭-ம்தேதி நிகழ்ந்த கூட்டத்தில் முன உத்தேசித்தபடி அகராதி அனுபந்த மொன்று வெளியிடுதற்கு மாருச, இக்கழகத்தின் சார்பில் 'நூதன ஆங்கிலப்' பேரகராதி, இயற்றி வெளியிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானமாகி எO-வருஷங்கட்குப் பின்னர் ககூஉஅ-ம் வருஷம் ஜனவரி மாதம் ரு-ம் தேதியன்று, ஆங்கிலப் பேரகராதியின் இறுதிப் பகுதி அச்சுக்கூடத்திற்கு அனுப்பப் பட்டது. கிளாரெண்டன் பிரஸ் அதிகாரிகளின் ஆதரவில் டாக்டர் மர்ரே பதிப்பாசிரியராயமர்ந்த ஐம்பதாவது வருஷத்தில் இப் பேரகராதி முற்றுப் பெறுவதாயிற்று!

### உதவியாளர்கள்.

இப் பேரகராதியின் பதிப்பாசிரியர்களுக்கு உதவியாளர்கள் செய்துவந்த நன்முயற்சியே பெரிதும் துணைநின்று பயன்புரிந்தது. டிரெஞ்சு என்னும் அறிஞர் எசு உதவியாளர்களைத் திரட்டினர். அந்நிய நாடு பலவற்றினின்றும் உதவியாளர்கள் துணை புரிந்தார்கள். பிரிட்டிஷ் தீவுகளில் மாத்திரமே அங்கங்கேயுள்ள முக்கிய நகரங்கள் பலவற்றில் உதவியாசிரியர்கள் பலரிருந்து அகராதிவேலையில் முயன்றுவந்தனர். இம்முறையில் கணக்கற்ற கடிதக் கட்டுகள் பதிப்பாசிரியர்களுக்குப்பலவிடங்களினின்றும்வந்து கொண்டேயிருந்தன. இவற்றுள் ஒன்று மாத்திரமே தவறிவிட்டது. இதில் 'Pa' என்று தொடங்கும் பகுதி அடங்கியிருந்தது. அபர்லந்து தேசத்துக்கு இந்தக் கட்டுப் போயிருப்பதாகத் தெரிந்து அங்கு முயன்று நோக்கியதில் கடிதங்களனைத்தும் தீயெரிப்பதற்குப் பயன்பட் டொழிந்தன

soundest, best managed and most economically.



வென்று அறியலாயிற்று. இதைத்தவிர வேறும் இரண்டொரு நஷ்டங்கள் நேர்ந்தன. ஆனுல் இவைகள் அத்துணை கவனிக்கத்தக்கன வல்ல.

அச்சுத் திருத்தமும் (proof-reading) அகராதியில் நியமனம் பெறுத மற்றையோர்களே பெரும்பாலும் செய்து வந்தனர்.

அகராதியின் பதிப்பாசிரியர்களில் கோலரிட்ஜ், பர்னிவல் என்ற இருவரையுங் குறித்து முன்னரே கூறினேம். ஸர் ஜேம்ஸ் மர்ரே சகூகரு-ம் ஆண்டில் மரணமடைந்தனர். இவரது காலத்தில் அகராதியில் நேர் பாதி இயற்றி முடிந்தது. டாக்டர் ஹென்ரி பிராட்லி எட்டு எழுத்துக்களின் சொற்பகுதியை ஆராய்ந்து வெளியிட்டனர். டாக்டர் க்ரெய்கி மூன்று எழுத்துக்களின் சொற்பகுதிகளைப் பதிப்பிப்பதில் உதவி செய்து வந்து பின்தாமாகவே ஆறு அல்லது ஏழு எழுத்துக்களின் சொற்களை வெளியிட்டனர். ஸ்ரீமான் C. T. அனியன்ஸ் சஅகூரு-ம் ஆண்டில் அகராதியின் பதிப்புக் கழகத்தில் சேர்ந்து மர்ரேயுடனும் பிராட்லியுடனும் தொழில் புரிந்து வந்தனர். பின் இவரே நூலின் பல பகுதிகளை யியற்றி வெளியிட்டனர்.

இப்பெரு நூலைப் பதித்து வந்த முறை பெரிதும் போற்றத் தக்கது. அங்கங்கே படைபோல் திரண்டு வேலை செய்து வந்த உதவியாளர்கள் அளவொத்து அமைந்த கடிதத் துண்டுகளில் சொற் பிரயோகங்களைக் குறித்து அனுப்புவர். பதிப்புக் கழகத்தைச் சார்ந்த பல அறிஞர்கள் இக்கடிதத் துண்டுகளை முறைப்படுத்தி ஒத்திட்டு ஆராய்ந்து தெரிந்து வைப்பார்கள். இவ் ஆராய்ச்சிக்கு எத்தனையோ ஆதார நூல்களைச் சோதிக்கும்படி நேரிடும். பின்னர் சொல்லும் பொருளுமாகத் தெளிவு படுத்தி எழுதப்பெற்றுப் பதிப்பாசிரியர்க்கு முன் வருவதாகும். இதன் பின்னர், அங்கீகாரம், பரியாலோசனை, அர்த்த நிச்சயம் முதலியன நிகழும். முடிவில் அச்சிடுதலும் அச்சுத் திருத்தமும் நடைபெறும். இவ்வேலை முறையில் இருந்துவந்த உழைப்பும் அல்லற்பாடும் சொல்லுந் தரத்தன வல்ல.

எவ்வகையான் நோக்கினும் தலை சிறந்து விளங்கும் நூதன ஆங்கிலப் பேரகராதியின் கண்ணே சகச,அஉரு சொற்களும், ருOO,OOO சொற் பொருளிலக்கணங்களும், சஅ,உஎ,௱Oசு சொற்பிரயோகங்களும் உள்ளன. கஉ நூற்றுண்டுகளாக நிகழ்ந்த சொற்களின் சரிதம் ஆராயப் பெற்றுள்ளன. 'S' என்ற எழுத்துப் பகுதியே மிகப் பெரிய பகுதியாகும். இதில் ருஎ,சஉஅ சொற்கள் உள்ளன. 'X' 'Y' 'Z' என்ற மூன்றெழுத்துக்களும் சேர்ந்த பகுதியில் சஎசசு சொற்களே யுள்ளன.

யுனைடெட் இந்தியா "மிகப்பலமாகவும், பழுதறவும், சிறக்கவும்,

# விதவைகளின் பரிதாப நிலை.

டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் M.B.& C.M., சட்டசபை உபதலைவர்.

வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ள நாங்கள், எந்நோய்க்கும், வராது தடுக்கும் முறை சிகிச்சை முறை எனும் இரு அம்சங்களையும் கவனிப்பது போல விதவைகளின் நிலை குறித்த இப்பிரச்னையையும் தீர்த்து வைக்க இருவழிகள் உள. ஏனெனில், நமது அறியாமையும் பொருளற்ற வழக்கமுங் காரணமாக நம் சமூகத்திற்கு நேர்ந்துள்ள நோயெனவே இதனை நான் உணர்கின்றேன். நமது தலைவர்களெல்லாம் எவ்வளவோ முயன்றும் நமது சமூகத்தில் இளமை மணம் இன்னும் நிகழ்ந்து கொண்டேதானிருக்கின்றது. இவ்விளமை மணத்தை ஒழிப்பதே வைதவ்யம் ஏற்படாவாறு தடை செய்தற்கு உற்றதோர் சிறந்த மார்க்கமென நான் கூசாது கூறிவிடலாம். இளமை மணத்தால், தோன்றும் தீமைகள் பலப்பல. அவற்றுள் சிசு விதவைகளும் அதி பால்ய விதவைகளும் ஏற்படுந் தீங்கு தலையாயதாகும். நம் இந்திய நாட்டில், ஒரு வயதுகூட நிரம்பப் பெறாத இந்து விதவைகள் சுகூஉ பேர்களும் இரண்டு முதல் மூன்று வயதுவரையுள்ள விதவைகள் கஉஅ0 பேர்களும், மூன்று முதல் நான்கு வயதுவரையுள்ள விதவைகள் உஅசுந பேர்களும், நான்கு முதல் ஐந்து வயதுவரையுள்ள விதவைகள் சுஎருஅ பேர்களும், பத்து வயதிற்குட்பட்ட விதவைகள் கூஎ,ருகூசு பேர்களும் பதினைந்து வயதிற்குட்பட்ட விதவைகள் ந,நக,எகூந பேர்களும் இருக்கின்றனவென ககூஉக-ம் வருஷத்து ஜனக்கணக்கு அறிக்கை கூறுகின்றது.

இவ்வித நிலையில், இந்திய நாட்டிலுள்ள பெரிய நகரங்களுளொன்றில் நிகழும் தற்கொலையில் நூற்றுக்குத் தொண்ணூற்றிரண்டு இந்துக்களிடையேதான் நிகழுகிறதென்பதையும், அநேகமாக இத்தற்கொலைகள் அனைத்தும் பெண்மக்களிடையேதான் நிகழ்கின்றனவென்பதையும் கண்டு நீங்கள் வியப்புற முடியுமா? மகப்பேறில்லா விதவை அவளது கணவர் குடும்பத்தவரால் மிக மிகக் கேவலமாகக் கருதப்படுகின்றாள். அவள் சொல்லொணாத் துன்பம் அனுபவிக்கின்றாள். அதிலும் விதவை நிலையடைந்த பின்னர் அவளுக்குக் கருத்தரித்து விடுமாயின் அவள் இன்னும் கேவலமான இழிந்த நிலையடைந்து விடுகின்றாள். இத்தகையோரிடையேதான் அம்பட்ட மருத்துவச்சிகள் தங்களது கருவழிக்கும் தொழிலை வெகு தீவிரமாக நடத்தி வருகின்றனர். அப்பொழுதுதான் பிறந்த சிசுக்கள் கொல்லப்பட்டு சாக்கடைகளில் எறியப்படும் செய்தி தினே தினே நமது செவிகளுக் கெட்டுகின்றது. இதனினும் கொடுமை வேறு ஏதேனுமுண்டோ? சமூகக் கொடுமை யெனும் பயம் தாயன்பையும் மீறி உலகிலேயே மிக மிகக் கொடிதான மேற்கூறிய தீச் செயலைச் செய்யுமாறு அவர்களை தூண்டுகின்றது.

எம்மதமும், எந்நாட்டிலுள்ள எச்சட்டமும் அனுமதிக்காத இளமை மணமெனும் இத்தீய வழக்கத்தினை, நமது பகுத்தறிவிற்

செட்டாகவும்" நடத்தப்படுமொரு லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியாகும்.



கும், நன்னெறிக்கும் ஒவ்வாத இவ்வழக்கத்தினை, தனி மனிதனுக்கும், இந்து சமூகத்திற்கும் இந்திய நாட்டிற்கும் மகத்தான இன்னல்களைத் தோற்றுவிக்கும்இக்கொடிய வழக்கத்தினை ஒழிக்க நமக்குப்போதிய தைரியமில்லாவிடில், அற்ப வசதிகளையெல்லாம் பொருட் படுத்தாது இதனைத்தவிர்க்க முன் வாராவிடில் நமது நாட்டிற்குக் கதி மோட்சமே கிடையாதென எனக்குத் தோன்றுகிறது. எனவே, நமது சமூகத்தின் சக்தியினை உறிஞ்சிக் குடித்துப் பாழ்படுத்துவதும், அத்துடன் நில்லாது நம்மிடமுள்ள நல்ல அம்சங்களை அழிப்பதுமான இத்தீய கெட்ட பழக்க வழக்கங்களுக்கு நாம் அடிமைப்பட்டுக் கிடக்கும்வரை வாழ்க்கைப் போராட்டத்தில் சமது சமூகம் உலகிலுள்ள பிற சமூகங்களோடு சமத்துவ நிலை வகிக்க முடியாதென்றும், விடுதலை பெற்ற இனமாகவும்,பிறஇனத்தவரால்மதிக்கப்படும் இனமாகவும் உலகில் நிலவ முடியாதென்றும் நான் திடமாகக் கூறுவேன். ஜப்பானை நோக்குங்கள்! ஜப்பானியர்கள் சாதிப் பாகுபாடுகளை ஒரே தினத்தில் ஒழித்து விட்டார்கள். துருக்கியைப் பாருங்கள்! முகமூடியணிதல் துருக்கிய மாதர்களின் உடல் வளர்ச்சிக்கும் அறிவு விருத்திக்கும் பெருந் தடையாக விருக்கிறதெனக் கூறி அந்நாட்டு மன்னர் காஜி முஸ்தபா கமால்பாஷா அந்நாட்டினின்றும் அவ்வழக்கத்தைத் தூரத்தி விட்டார்.

பரோடா பாதபுரி எனும் இரு இந்திய சமஸ்தானங்களும் இன்னும் ஒருபடி முற்போக்கான முறையைக் கையாண்டிருக்கின்றன. சிறுவர்களின் கலியாண வயது கஅ என்றும் சிறுமிகளின் கலியாண வயது கச என்றும் பரோடாச் சட்டசபை நிர்ணயித்திருக்கின்றது. சிறுவர்கட்கு கஅ வயதிற்கு முன்னரும் சிறுமிகட்கு கச வயதிற்கு முன்னரும் மண முடிக்கலாகாதெனத் தடை செய்யும் புதிய சட்ட மொன்றுக்கு காஷ்மீர் மகாராஜா அனுமதி கொடுத்திருக்கின்றார். கொண்டால், கோட்டா, மைசூர், இந்தூர் முதலிய இந்திய சமஸ்தானங்களும் இது போன்ற சட்டங்கள் இயற்றியிருக்கின்றன. பெண்களின் கலியாண வயதினை கரு ஆகவும், ஆண்களின் மண வயதினை ககூ ஆகவும் வரையறுத்துச் சட்டமியற்றி ராஜகோட் சமஸ்தானம் இந்தியாவிலேயே முதன்மை பெற்று மிளிர்கின்றது.

தந்தையராகவும் சகோதரராகவு முள்ள கோணு உளம்படைத்த ஒவ்வொரு பெரியாரையும் நான் மிகுந்த உண்மையோடும் போரார்வத்தோடும் வேண்டிக் கொள்வது யாதெனின், நீங்களனைவரும் இளமை மணத்தைத் தடைசெய்வதற்காகக் கொண்டுவரப் பெற்றுள்ள மசோதாவுக்கு ஒருவர் கூட மாறின்றி, ஒன்றிய ஆதரவு காட்ட வேண்டு மென்பதேயாம். நான் வேண்டுமென்றே மாதர்களை ஈண்டு குறிப்பிடாது விட்டு விட்டேன். ஏனெனில், அகில இந்திய மாதர் மகாநாட்டார், கலியாண வயதைப் பெண்களுக்கு கசு ஆகவும் ஆண்களுக்கு உக ஆகவும் உயர்த்த வேண்டுமென்று ஒருமனதாகக் கூறிவிட்டனர். இம்மகாநாட்டிற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர்.

நமது இந்தியா மிகச் செழிப்பான நிலையடைந்திருந்த காலத்தில், எல்லா வளங்களும் நிரம்பப்பெற்றுத் தன்னாட்சி செலுத்திவந்த காலத்தில் நமது முன்னோர்கள் "சுயம்வரம்" எனும் முறையைக் கையாண்டு வந்தார்கள். மணப் பெண்கள் மைனர்களாக விருந்திருப்பார்களாயின் (சிறுமிகளாயிருந்திருப்பின்) சுயம் வரத்தைப் பற்றி நமது முன்னோர்கள் நினைத்

United India aim is to provide the most efficient

திருக்கவுங்கூட முடியாது. அம்மண முறையை நாம் மீண்டும் கைக்கொள்ளும் வரை இந்தியா சுய ஆட்சி பெறுதலென்பது வெறுங் கனவாகவும் பொய்ம்மையாகவுமே முடியும்.

உண்மையைக் கூறுவதாயின் பெற்றோர்களால் செய்து வைக்கப் பெறும் கலியாண ஒப்பந்தம் மைனர்களாகவுள்ள குழந்தைப் பெண்களைக் கட்டுப்படுத்தாதென்றே சொல்ல வேண்டும். அவர்கள் இல்வாழ்க்கையை அனுபவியாதிருக்கையில் அவர்களை விதவைகள் என்று ஒருக்காலும் கூற முடியாது. தங்களது கணவர்களைக் கண்ணாற்கூடக் காணாமலும், அவர்களோடு உரையாடாமலும், கணவனது காதல் இன்பத்தை நுகராமலும் இருந்திருக்கும் அவர்கள் தம் கணவர்களது ஞாபகத்திற்கு உண்மையாகவும், பக்தியாகவுமிருப்பார்களென்று, பகுத்தறிவும் நியாய நோக்கும் உள்ள மனிதப்பிறவிகளாயநாம் எதிர்பார்ப்பதெவ்வாறு? கள்ளங் கபடற்றவர்களாகவும் திக்கற்றவர்களாகவுமுள்ள நம் நாட்டுச் சிறுமிகளுக்கு மதத்தின் பெயராலும், வழக்கத்தின் பெயராலும், நாம் தினந்தோறும் இழைத்து வரும் இன்னல்களின் கொடுமையை என்னென்று சொல்லுவது?

ஆடவர் தம் விருப்பம்போல் எத்தனை முறை வேண்டுமாயினும் மணக்கலாமென நாம் அனுமதிக்கையில், அவர்கள் தமது காம இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, முதலாவது இரண்டாவது மனைவிகள் உயிரோடு இருக்கையிலுங்கூட இன்னும் மண முடித்துக் கொள்ள நாம் அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கையில் பெண்களைப் பொறுத்த மட்டில் நாம் மிக மிகக் கடுமையாக இருந்து வருகிறோம். இவ்விஷயத்தில் பெண்களின் உணர்ச்சியை நாம் ஒரு சிறிதும் பொருட் படுத்தாது புலனடக்கம், தியாகம், துறவு முதலிய வற்றை அவர்கட்குப் போதிக்கின்றோம். இது முறையா? இது நியாயமா? இயற்கையை மீறி நாம் நடக்கவில்லையா? கன்னிகழியாது விதவை நிலையடைந்த மகள் அலங்கோலப் படுத்தப்பட்டு, சாதாரண வாழ்க்கை இன்பங்களுங்கூட மறுக்கப்பட்டு, தன் நிலை குறித்துப் பெரிதும் மனங் கலங்கித் துன்புற்று உழன்று கொண்டிருக்கையில், அதே வீட்டில் அவளது தந்தை, விதவையான தன் மகளின் உணர்ச்சியை ஒரு சிறிதும் பொருட் படுத்தாது இரண்டாவது மூன்றாவது மனைவிகளுங்கூட மணந்து அவர்களுடன் இன்பமனுபவித்து வருகின்றனர். இத்தகைய பல வயோதிகத் தந்தைமார் இருந்து வருவது எனக்கு நன்கு தெரியும். உலகிலுள்ள வேறெந் நாட்டிலும் இத்தகைய நீதியற்ற வழக்கங்கள் நிலவவில்லை. இந்திய நாடு இவ்விதவைகளின் இரத்தக்கண்ணீரில் நனைந்து ஈரமாயிருக்கின்றது.

இவ்வுலகில் ஓர் சமூகமாக நாம் செழித்து முன்னேற வேண்டுமாயின், பிற இனத்தவர்களால் கௌரவிக்கப்பட வேண்டுமாயின், விதவைகளாகப் பலரைப் பலவந்தமாக நம்மிடை வைத்துக் கொண்டிருக்கும் வழக்கத்தினை அறவே தொலைப்போமாக! நம் சமூகத்திற்கு மிகுந்த தீங்கு விளைக்கும் இக் கொடிய வழக்கம் இனியும் பரவாது தடை செய்ய உறுதி கொண்டு நீதி உணர்வு மேலீட்டால் நமக்குத் துணை நிற்க நமது இளைஞர்கள் முன் வருவார்களாக!

இந்திய நாட்டின் புதல்வர்களாகவும் புதல்விகளாகவுமுள்ள உங்களையே நாட்டின் வருங்கால நிலை பொறுத்திருக்கின்றது. நாம் தற்பொழுதிருந்து வரும் நிலைமையில் மற்ற இனத்தவர்களைக் காட்டிலும் கேவல நிலையிலேயே இருந்து வருகிறோம். உங்களுக்கு நாட்டுப் பற்று இருக்குமாயின், உங்

ympathetic Insurance service.

## விதவைகளின் பரிதாப நிலை.

கள் தாய்நாட்டை நீங்கள் நேசிப்பது உண்மையாயின் முட்டாள் தனமான வழக்கத்தால் ஏற்பட்ட இப் போலிக் கட்டுப்பாடுகளுக்கு இணங்காதீர்கள். சுதந்தரமாக நீங்களே ஆராய்ந்து, நீங்களே உங்களிஷ்டம் போல் செயல்களாற்றி, உடல் வளர்ச்சியும், அறிவு விருத்தியும், ஒழுக்க முன்னேற்றமும் பெறுவீர்களாக!

விழிமின், எழுமின், அல்லது என்றும் தாழ்ந்த நிலையிலேயே இருமின்!

துணையிழந்தாரை
மணப்பது புண்ணியம்.
விரும்பாதவரை
விரும்புதல் பாவம்.



சிறு பெண்ணாகிய விதவையை ஒன்றுக்கும் உதவாதவளென்று கட்டிப்போட்டு விட்டு மற்றவர்கள் இன்பமனுபவிக்கின்றனர்.

Star and Company Managers.

# வாலிபக் கள்வன்.

டி. பி. கிருஷ்ணசாமி MA., BL., I. E. S.

"நாம் வாளா நின்று நம்மிடம் உள்ளவற்றை ஒப்புவித்து விட்டோம்" என்றனர் கலக்கமடைந்த வழிப்போக்கர்கள். "இருந்தாலும் நாம்சிறிதளவாவது எதிர்த்துப்பார்த்திருக்கலாம்" என்றான் அப்புத்திசாலிகளுள் ஒருவன். 'ஆணைப்போலல்லாது பெரிதும் பெண்ணைப்போலிருக்கும் ஓர்பயல்" என்றார் அவ்வறிஞர்களுள் மதிநுட்பம் வாய்ந்த ஒருவர். "அவனுக்கு ஒரு காலிலாவது கெண்டைச்சதை யென்பதே கிடையாது. அவன் போன்றார் பிறவிக் கொள்ளைக்காரர்கள்; அதிவேகமாக ஓடும் இயல்பமைந்தவர்கள்; எளிதில் களைப்பு ஏற்படாதவர்கள்" எனக்கழன்றான் பார்த்து விஷயங்களை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பதாகக் கருதிக்கொள்ளும் ஒருவன். "அண்மையிலுள்ள நீரில் மூழ்கி உயிர்துறந்த யாரோ ஒரு பெண்ணின் ஆவியே அவன்போல் தோன்றுகின்றது" என்றனர்சிலர். அக்கொள்ளைக்காரனைத்தொட்டுப்பார்த்தவனொருவன், "இல்லை, இல்லை; நான் அவனது சதையைத் தொட்டுப்பார்த்தேன். அவனது சதை நன்கு பக்குவம் செய்யப்பட்ட மாம்சத்தைப் போல் மிருதுவாகவிருந்தது" என உரக்கக் கூவினான்.

இதற்குள்ளாக அவர்களனைவரும் ஒரே சமயத்தில் பேசத் துவங்கிவிட்டனர். எங்கும் ஒரே சப்தமாகவிருந்தது. இக்கள்வன் உண்மையில் கள்வன்தானோ, அல்லது ஆணோ, அல்லது பெண்ணோ, அல்லது வெறும் சாயைதானோ யாரறிவர்?

தொண்டர் படையினர் துப்பாக்கிப் பயிற்சி துவங்குவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரும், அச்சோலையின்கண்ணுள்ள கெம்பீரமான தோற்றமுள்ள மாங்களைக் காட்டிலும் அதிக உயரமான இராணுவ மாளிகைகள் கட்டப்படுமுன்னரும், அடையாற்றுக்கும் திருவல்லிக்கேணிக்கும் இடையேயுள்ள பாட்டையில் கொள்ளைக் கூட்டத்தினர் தங்களது திருவிளையாடல்களைப் புரிந்துவந்தனர். அவர்கள் அப்பாதையில் சைதாப்பேட்டையிலிருந்து ஸ்ரீபார்த்தசாரதி கோவில்வரையும் இடையிடையே தங்களது தொழிலை நடத்தி வந்தனர். வாங்கிய கடனைத் திரும்பக்கொடுக்க வழிபற்றவர்களும் (Insolvents), அத்தகையோரது பிள்ளைகளும், ஒழுக்கநெறிதவறியவர்களும், தீயதுறைகளில் புகுந்துள்ள போக்கிரிகளும், இன்னும் பலவித தீச்செயல்கள் புரியும் இழிந்தோரும், ஸென்தோமிலுள்ள மாங்களடர்ந்த இருண்ட சோலைகளைத் தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தனர். பகலில் ஜனங்களைத் துன்புறுத்துவதும் இரவில் வழிபோக்கர்களைச் சூறையாடுவதும் அவர்களது வழக்கம். இவ்வாலிபக் கள்வன்தான் அவர்களனைவரையும் ஒன்று சேர்த்தானோ, அல்லது அவர்களது தீச்செயல்களுக்கு அவன் உள்ளாக நேர்ந்து, ஆழ்ந்து அமைதியாகச் சிந்திக்கும் இயல்பு அவன் பெற்றிருந்தமையால் அவர்களது

பத்திரம், உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்



தலைவனாக வந்துவிட்டானோ எனும் விவரம் தெளிவாகத் தெரியவில்லை. அதனைத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவ்வளவு அவசியமெனவுந் தோன்றவில்லை. எனினும் ஒரு விஷயத்தைமட்டிலும் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுவது முக்கியமாகும். ஒரு தடவை ௩0 தட்டுகள் நிறைய அவர்களுக்குஅவன் அல்வாக்கொடுத்ததாக சிலருக்கு ஞாபகமிருக்கின்றது. கொள்ளைக்காரர்களை அல்வா எங்ஙனம் ஒன்று சேர்த்ததென்பது இன்னும் மாயமானதோர் மர்மமாகவே இருந்துவருகின்றது. இம்மர்மத்தினை ஆன்ம தத்துவ நூல்தான் தீர்த்துவைக்க வேண்டும். அக்கொள்ளைக் கூட்டத்தினர், தமக்கு அல்வா அளித்த அவ்வொல்லியான இளைஞனது முயற்சியால் ஒன்றுபட்டிருந்தனரெனவும், அவன் அவர்களைத் தன் விருப்பம்போல் எங்கு வேண்டுமாயினும் அழைத்துச் செல்வானென்றும், தன் விருப்பம்போல் அவர்கள் நடக்குமாறு செய்வானென்றும் சேலம் தலைமைக் குமஸ்தா கூறியது முற்றும் உண்மையே.

மிரு[illegible]வான வதனமும், பரிமளத் தைலமிட்டுச் சீவப்பட்ட சுருண்ட குழலுமுள்ள அவ்விளைஞன் அடிக்கடி வழிப்போக்கர்களை வழிமறித்து அவர்களோடு உரையாடி அவர்களிடம் உள்ள பொருள்களைப் பறித்துக் கொள்ளுவான். பெண்ணைப் போன்ற வதனமும் உயர்ந்த கூர்மையான மூக்கும் உள்ள அவ்வொல்லியான இளைஞனிடம் கண்டோர் வியக்கத்தக்க அம்சம் எதுவுமில்லை. கெண்டைச் சதையில்லாத அவனது கால்களிலுங் கூட அதிசயிக்கத்தக்க அம்சமெதுவுமில்லை. ஏனெனில் இவ்வுலகிற்கு எதுவும் புதிதல்ல. அத்தகையோர் இதற்கு முன்னரும் இருந்து வந்திருக்கின்றனர்; இனியும் இருந்து வருவார்கள். அவ்வாலிபக்கள்வனது கருமையான சுருண்ட கூந்தலிலும் இருண்ட கண்களிலும் ஓர்வித விசித்திரமான அம்சம் காணப்பட்டது. அவனது கரிய சுருண்ட கேசமும், கருமையான கண்களும் பிறரது புலன்களைக் கொள்ளை கொண்டன. அவனைக் கண்டமாத்திரத்தில் பலரும் அவன்பால் ஈடுபடுதற்கு இவையே காரணமெனத் தோன்றிற்று. வழிபோக்கர்கள் அவனைக் கண்டதும் மதிமருண்டு தைரிய மிழந்து விடுவார்கள். அச்சங் காரணமாகவோ அன்றி அனுதாபங் காரணமாகவோ அவர்கள் தாமாகவே தம்மிடமுள்ள பொருள்களை, சந்திரனது கிரணங்களால் ஒளிபெற்று மிளிர்ந்து யாவரது மனத்தையும் கொள்ளை கொள்ளத்தக்க வதனமுள்ள அவ்விளைஞனிடம் ஒப்புவித்து விடுவார்கள்.

உடை தயாரிப்பவர்களிடமிருந்து ஆடைகள் கைப்பற்றப்படும். வைத்தியர்களிடமிருந்து பணம்பறிக்கப்படும். சந்தோஷத்தையும் லாபத்தையும் முன்னிட்டு குப்பைவாரிகள், குடிகேடர்கள், சூதாடிகள் முதலியோர் தண்ணீரில் அமிழ்த்தப் படுவார்கள். ஸ்ரீ கிருஷ்ணனது பக்தர்கள் துன்புறுத்தப்பட்டுப் பல இன்னல்கட்கு உட்படுத்தப் படுவார்கள். கண்ணபிரானையுங் கூட அவர்கள் தூஷித்துப் பேசுவார்கள்.

பிரளய காலத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்வதுபோல ஓர் பெரும் மாற்றம் இக்கொள்ளைக் கூட்டத்தவர் நிலைமையில் ஏற்பட்டது.

ஓர் இரவு சந்திரன் இப் பூவுலகின் மீது களங்கமற ஒளிபரப்பிக்கொண்டிருந்தான். இளந்தென்றல் மனத்திற்குகந்த புஷ்ப வாசனையோடு மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. அகன்ற ஆழியின் அலைகளது ஒலியும், அவ்வலைகள் நாணல்களின் மீது மோதுவதால் ஏற்படும் ஒலியுமல்லாது வேறு எவ்வித சத்தமுமின்றி எங்கும்

M. Ramamoorthi, Chief Agent for Tanjore, Pudukottah & Ramnad Districts.

அமைதி நிலவியது. அதுகாலை, பரந்த புருவங்களோடும், காருண்யக் கண்களோடும், மனிதரது உள்ளத்தையும், விலங்குகளது உள்ளத்தையும் ஒருங்கேகொள்ளைகொண்டு அவர்களை இன்புறச்செய்யும் தெய்வீகத் தோற்றத்தோடும் கண்ணபிரான் அங்கு வந்திருப்பதாகத் தோன்றியது. இது உண்மைதானோ அன்றி உருவெளித் தோற்றமோ எவர்தானறிவர்? அக்கள்வர்கூட்டத் தலைவன் கண்ணபிரானது உருவத்தைப்பின்பற்றிச் சென்றான்.

பின்னர் நிகழ்ந்ததென்ன வென்பதை அவர்கள் கூறக்கூடவில்லை. கள்வர் தலைவன் மனம் சலிப்புற்றுத் தற்கொலை புரிந்துகொண்டானென அவர்கள் கருதுகின்றனர். அவர்கள் எங்ஙனம் எண்ணியபோதிலும் அவனது ஆவியை நன்கு கண்டிருக்கின்றனர். வாசகர்களே! நானும் கண்டிருக்கிறேன்; நீங்களும் காணலாம். அக்கொள்ளைக் கூட்டத்தினருக்குத் தலைமைதாங்கியது ஓர் பெண்ணெனவே தோன்றுகிறது. அவள் தன் வீட்டில் மிகமிகக் கொடுமையாக நடத்தப்பட்டாள். அன்பர்களும் சுற்றத்தாரும் அவளைக் கவனிக்கவில்லை. தன் வீட்டிலுள்ளாரோடு அவள் அடிக்கடி போராடவேண்டியிருந்தது; பலவித இன்னல்களை எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது. தனது இத்தகைய விதிப்பயனை நினைந்து நினைந்து மனம் நொந்து, கண்ணீர் உகுத்துத் தனது இருப்பிடம்விட்டு வெளியேறினாள். ஓர் சிறுவனைப்போல் வேடம்பூண்டு மிகுந்த கவலையுடன் தன்கற்பைக் காத்து வாழ்க்கை நடாத்திவந்தாள். அவள் இக்கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்த ஆரம்ப காலத்தில் இக் கூட்டத்தினைச் சேர்ந்த ஓர் தடியன் ஓர்தடவை அவளைத் தாக்கினான். அவள் ஒழுங்கான வாழ்க்கை நடத்திவந்ததன் காரணமாகவும், மற்போரில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததன் காரணமாகவும், பூதம்போன்ற அப் பெருங்குடிகாரத் தடியனைக் கணப்பொழுதில் கீழே வீழ்த்திவிட்டாள். அச் சம்பவம் நடந்தது முதல் அவளைக் கண்டால் அனைவருக்கும் நடுக்கந்தான். பின்னர் அவர்கள் அவளைத் தம் தலைவராகக் கொண்டனர். ஏனெனில் அக்கூட்டத்தினரும் பல தாக்குதல்களுக்கு உள்ளாகவேண்டி வந்தது. ஆழ்ந்த சிந்தனையும் நுண்ணறிவும் வாய்ந்தவர்கள்மட்டுமே அவர்களை அத்தகைய தாக்குதல்களினின்றும் காப்பாற்ற முடியும். ஒருவனிடம் புன்முறுவல் காட்டுவாள்; மற்றொருவனிடம் இனிமையாகப் பேசுவாள். இவ்வாறாக அவள் அனைவரையும் அன்பாலும், நயத்தாலும், பயத்தாலும், ஒன்றுசேர்த்து வைத்திருந்தாள். அவள் ஆணோ அன்றிப் பெண்தானோ என்பதைப்பற்றி எவரும் எப்பொழுதும் ஒரு சிறிதும் சந்தேகித்ததில்லை. அவள் இவ்விரகசியத்தை வெகு கவனமாகக் காத்துவந்தாள். அவ்வாறு காத்துவருவது அவளுக்கு மிகுந்த கஷ்டமாகவே இருந்துவந்தது. அவளது உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த பக்தி கிருஷ்ண கடாட்சத்தால், துவாரகா நாதனது அருளால் ஓர் நாள் வெளிப்படலாயிற்று. அவனது பக்தியிலீடுபட்டுத் தனது கவலைகளனைத்தையும் விட்டொழித்தாள். தனது இரகசியத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற கவலையையும், தனது ஆதிக்கத்திலிருந்து வந்த கொள்ளைக்காரர்களுக்குத் தலைமை வகித்து நடத்தவேண்டுமென்ற எண்ணத்தையும் கைவிட்டாள். அவளது உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த இப்பக்தி தற்காப்பினிமித்தம் இதுகாறும் உள்ளடக்கி வைக்கப்பட்டிருந்தது. யாவற்றிலும் வெறுப்பான தோற்றமும், துக்ககரமான பார்வையும்

எம். இராமமூர்த்தி, சீப் ஏஜண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமனுதபுரம் ஜில்லா.



உடையவளாயிருந்தாள். இவைசாதாரண பாமர மக்களின் உளத்தையும் உருக்கித் தம்மிடமுள்ள பொருள்களனைத்தையும் அவள் கேட்காமலே அவளிடம் ஒப்புவிக்கும்படி செய்தன.

எனவே, அவள் பாத்துவமடைந்து வெள்ளப் பிரவாகத்தில் தவறிப் போனாள். அவளது ஆவி அடையாற்றுக்கரைகளில், பாலத்திற்குச் சற்று தூரத்தில் இன்னும் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சந்திரனது கதிர்கள் தண்ணீரில் பாய்ந்து, அவ்வாற்றின் கரைகளில் அமைக்கப்பெற்றுள்ள உயரிய கோபுரங்களின்மீதும், மாளிகைகளின்மீதும் பாவி ஒளிதந்துகொண்டிருக்கும் காலத்து அவ்வழகிய உருவம், பச்சைநிறப் போர்வையோடும், தூய வெண்மையான ஆடையோடும், கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த கரிய சுருண்ட கூந்தலோடும் அந்நீரோட்டத்திற்கு அருகாமையில் வந்து வழிப்போக்கர்களைப் பார்த்துப் புன்முறுவலுற்று, பின்னர் முகத்தில் ஓர்வித ஒளியோடு திடீரென, தனது வேணுகானத்தால் அனைவரது உள்ளத்தையும் கொள்ளைகொண்டு அவர்கள் தன்னை நாடிவரும்படி செய்யும் எல்லாம்வல்ல இறைவனிடம் சென்றுவிடுகின்றது.

யான் கூறிய இக்கதையில் உங்களுக்கு நம்பிக்கையில்லாவிடில் சேலத்திற்குச் சென்று, பனைமரத்துப்பட்டிக்குப் போகும் வழியிலுள்ள 'பொய்மான்கரடு' எனுமிடத்தைக் காட்டும்படி கேளுங்கள். அங்கு மாலைச் சூரியனது ஒளியிலும் காலைக் கதிரவனது கதிர்களிலும், சீதையை ஏமாற்றிய பொன்மானைக் காண்பீர்கள். நீங்கள் அதன் அருகாமையில் நெருங்க நெருங்க அது மாயமாக மறைவதைக் காணலாம். அங்கு நடைபெறுவது போல் வேறு இடங்களிலும் நிகழக்கூடும்.

Safety and service are the foundation on which the United India is buil

# சமய உணர்ச்சி.

ச. சச்சிதாநந்தம் பிள்ளை B. A., L T.

உலகப் பொருள்கள் உயிருள்ளனவும் உயிரில்லனவும் என இருவகைப்பட்டுக் காண்கின்றன. உயிருள்ள பொருள்களிடத்து, அறிவும் துன்ப நீக்க முயற்சியும், இன்ப வேட்கையும் பொருந்தியுள்ளன. உயிரிலாப் பொருள்கள் பெரிய யந்திரங்கள் போல் மிக்க வலிமை பெற்றிருப்பினும், அவற்றினிடத்து இத்தன்மைகள் இருக்கக் காண்கிலோம். இவ்வகையில் ஒரு சிறிய புழுவும் மிகப் பெரிய பீரங்கியினுஞ் சிறந்ததே. உயிர்களின் இன்பநாட்டம் அவற்றிற் குற்றுள்ள கட்டு நீக்கத்தைத் துணைக்கொண்டு நிகழ்கின்றது. இப்படிக் கட்டினின்று விடுபடு முயற்சியை எல்லாப் பிராணிகளும் இடைவிடாது செய்து வருகின்றன. இஃதே சமய உணர்ச்சியின் மூலமாகின்றது.

அறிவுடை யொருவன் தன் னுடம்பை உற்று நோக்கின், அதனிடத்து, நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களின் சிறு பகுதிகள் வேற்றுருவடைந்தோ தனித்தோ இருப்பதை உணர்கின்றான். உடம்பில் இப்படிக் காணும் ஒவ்வொரு பூதப்பகுதிக்கும் ஆதாரமாக உடம்பிற்கு வெளியே அவ்வப் பூதத்தின் அளப்பரும் பெரும் பகுதியுள்ளது. உடம்பில் ஐம்பூதச் சிறு பகுதிகள் காணப்படுவதோடு, அதில் வாழும் உயிரிடத்தும் அறிவும், ஆற்றலும், அன்பும், இன்பும் மிகக் கட்டுப்பட்ட நிலையில் இருப்பதும் தெரிகின்றது. இவற்றிற்கும் ஆதாரமாய்ப் பேறிவும், பேராற்றலும், பேரன்பும், பேரின்பும் உயிருக்கப்பாலாய் இருத்தல் கூடுமே என்னும் ஓர் ஊகம் தோன்றுகின்றது. அங்ஙனம் கட்டிலடங்கா அறிவாற்றல்களோடுகூடிய பொருளொன்றுளதென்று கொள்ளப்படின் அதுவே கடவுட் பொருளென்றுணரப்படும். தமது கட்டுக்களை நீக்க விரும்பும் உயிர்கள், இயல்பாகவே கட்டுகளெதுவுமில்லாத கடவுளின் துணையை நாடல் வியப்பன்று. எண்குண இறைவனருளை உயிர்கள் நாடல் இயல்பேயாகின்றது. இவ்வாற்றால் கடவுள் வழிபாட்டிற்குத் தோற்றுவாய் காண்கின்றது.

இத்தகைய பெரிய பொருளினிருப்பை மக்கள் பல்லாயிர ஆண்டுகளாகவே பல வகைகளில் உணர்ந்து வந்துள்ளார்கள். இயற்கையில் காணும் ஞாயிறு, திங்கள், விண்மீன்களின் புடைபெயர்ச்சியும், தடவரை, கனைகடல், பேரியாறு முதலியவற்றின் தோற்றமும், புயல்காற்று, பூமியதிர்ச்சி முதலிய கொடுநிகழ்ச்சிகளின் வன்மையும் ஆதிமக்களுக்கு வியப்பையும் அச்சத்தையும் விளைவித்தன. முதலில் அவைகளை வெவ்வேறு கடவுளர்களின் வேலைகளென அவர்கள் கருதியிருக்கலாம். பின்னர், அவை யாவும் ஒரே அறிவுடைப் பரம் பொருளின் சத்தி வெளியீடென்று தெளிந்திருக்கலாம். அத்துணை ஆற்றலுடைய தெய்வங்களை வணங்கி, அவற்றால் துன்பமுறாமல், வேண்





டிய இன்பங்களைப் பெற முயன்றனர். இந்நிகழ்ச்சி சரிதகாலத்தும் இந்நாளிலுங்கூடத் தொடர்பாய்ப் பல மக்களிடையே நிகழ்ந்து வருகின்றது. முழுமுதற் கடவுளொருவரே உளர் என்னு முண்மை மன்பதைகட்குத் தெரிந்து பல்லாயிர ஆண்டுகளாகியும், தேவதேவனுஞ் சிவபெருமானைத் தேரிலேற்றி விட்டு, அத்தேர் தெரு முடுக்குகளில் தடைப்பட்டு நிற்குங்கால் கருப்பனுக்காடு வெட்டினாலன்றி அவன் தேரோடவொட்டானென்னு நம்பிக்கையோடு ஆடு வெட்டும் ஏழை மக்கள் இன்றும் எத்தனையோ பேர் இருக்கின்றனரன்றோ ?

அச்சத்தில் தொடங்கும் வழிபாடு நாளடைவில் அன்பின் வழித்தாய்த் தூய்மையடைகின்றது. உலக சரித்திரத்தைப் பார்க்குங்கால் பல்வேறு நாடுகளிலும் பொதுவாக இம்முறையிற் சமய உணர்ச்சி வந்திருக்கும் உண்மை தெரிய வருகிறது. தன்னை, நோய், இயற்கையுற்பாத முதலியன துன்புறுத்த விடவேண்டாமென்றும், பல்வேறு போகங்கள் தனக்கு வேண்டுமென்றும், இயற்கைப் பொருள்கள் பலவற்றில் மனிதன் தன்னறிவு வளர்ச்சிக்கேற்பக் கடவுளைக் கற்பித்து வணங்கிக் குறையிரந்து வந்துள்ளான்.

தன்னின்மேம்பட்ட ஒருபரம்பொருளின் அருளால் பாசவீடும் பேரின்ப வாழ்வும் பெறவேண்டுமென்னும் சமயவுணர்ச்சி தற்கால வாழ்க்கையில் மக்களறிவினின்றும் அடிக்கடி மறைந்துபோகின்றது. ஓய்வொழிச்சலில்லா உலக வியாபாரமும், செல்வச் செருக்கும், நெஞ்சத்தவலமில்லாக் கயவர் கூட்டுறவும் சில காரணங்களாம். ஆனால், நோய், வறுமை, தோல்வி, அவமானம் முதலிய உருவங்களில் அடிக்கடி துன்ப அலை மோதுவதாலும்மரணநிகழ்ச்சிநாள்தோறும் கட்புலனாவதாலும், நல்லாரிணக்கத்தாலும் சமயவுணர்ச்சி மீண்டும் உரம் பெற்றெழுகின்றது. சமயவளர்ச்சி முறுகி வளர, அதன் வழிச் செல்லும் ஆன்மாவிற்குப் பல வித தடைகள் உண்டாவதியல்பு. இதன் விவரத்தை மணிவாசகப் பெருமான் தமது "போற்றித் திருவகவ" லில் இனிது விளக்கியுள்ளார். ஆங்கிலத்திலுள்ள "Pilgrim's Progress" என்னும் ஆன்ம யாத்திரைக் கதையும் ஈண்டு கருதத் தக்கதே.

பாழ்த்த கர்மங்கள் போராடுவதால் சமய மேனெறியிற் செல்லு முயற்சியை நெகிழவிடாது மேன்மேற் சென்று அப்பாலுக்கப்பாலை யறிந்தின்புற்றுப்பாடிய ஆறிஞர் பலருளர். மேற்குறித்த மணிவாசகப் பெரியார், தாம்பெற்ற இன்பம் சொல்லுந்தரத்ததன்றெனச் சொல்லி, எழுதவரிய சொல்லோவியத்தால் அவ்வனுபவப் பயனை எழுதிக்காட்டியிருப்பதை ஒரு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இவர் இறைவனை வாழ்த்தி வணங்கியதெல்லாம் பொன்னும் பொருளும் போகமும் வேண்டியன்று. மற்றெது கருதியோ என்னின், "பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானு முனைப்பரவுவனே" என்று அவர் பதிலுரைப்பர். இத்தகைய சமய உணர்ச்சியின் முதிர்ச்சியால் தனிப்பெருங் கடவுளோடு சார்ந்து நிற்கவல்ல சான்றோர்பலரையுடையநாடெதுவோ அதுவே சாலச் சிறந்த நாகரிக முடையதென நன்கு மதிக்கத்தக்கதாம்.

இத்துணைச் சிறப்பினதாகிய சமயவுணர்ச்சி, பலப் பல சமயங்களின் வாயிலாக வளர்ந்து வருகின்றது. ஒவ்வொரு பெருஞ் சமயத்திலும் உட்பிரிவுகளிருக்கப் பார்க்கிறோம். இவைகள் மனித இயற்கைக்கும் தேவைக்கும் ஒத்திருப்பதால் கடியத்தக்கனவல்ல. ஆனால் இவற்றைப் பின்பற்றுவோர் தமது சமயப் பிரிவே மற்றெவற்றினும் சிறந்ததென்று நம்புவதோ

டமையாது, அப்பிறவெல்லாம் தீயனபொய்ம்மைய என்று கருதி அவற்றைப் பழித்து அவற்றிற் கின்னல் விளைப்பது அடாத அநாகரிகச் செயலாகும். இவ்வநாகரிகம் பன்னெடுநாளாய் உலகில் இருந்துவருகின்றது. மத்திய கால ஐரோப்பாவில் சமயப் பொறையின்மையால் மக்கள் தம்மினைய மக்களுக்கு இழைத்த இன்னல் மிகக் கொடியவை. இந்நாளில் அக்கொடுமை பெரிதுங் குறைந்து வருகின்றது. ஆனால் சகோதர உணர்ச்சியைத் தடுத்து நிற்கும் சக்திகளில் சமயமும் ஒன்றாக இன்னும் இருந்துகொண்டுதா னிருக்கின்றது. சைவ சமயக் கோட்பாட்டின்படி பார்க்கையில், எல்லாச் சமயங்களும் மெய்ம்மையே தமக்கு உயிர் நாடியாய்க் கொண்டிருப்பனவே. யாவும் வேண்டப்படுவனவே. ஆதலின் அவையனைத்தையுந் தழுவிக் கொண்டு அவற்றையெல்லாம் நீதியினால் முறைப்படுத்தியமைத்துச் சமய உடம்பின் உறுப்புகளெனக் காண்டலே உண்மைச் சமய நோக்கமாம். சைவப் பெரியார்களாகிய தாயுமானாரும் இராமலிங்கரும் தம் சமய நிலையிலிருந்து கொண்டே வேதாந்த சித்தாந்த சமரசத்தையும் சமரசசன்மார்க்க ஒழுக்கத்தையும் உலகிற்கு வற்புறுத்திப் போதித்திருப்பது இதற்கு ஒருசிறு சான்றாம்.

இவ்வாறு சமயப் பொறையைக் கைவிடாமலே ஒவ்வொருவனும், தான் பிறந்த, அல்லது தன்னாராய்ச்சியின் பயனாய் மேற்கொண்ட, சமயஞானம் உலகில் இறந்துபடாது நிலவுதற்கேற்ற பணிகளைச் செய்தல் கடமையாம். தன் சமய சகோதரர் அறிவாற்றற் குறைவுகளாலும் விபரீத ஞானத்தாலும் தன் சமயத்திற்கு அகப்பகைவர்களாய் முடியலாம். பிற சமயிகள் தத்தம் நிலையில் திரிந்து, தன் மதத்தைத் தாக்கும் புறப்பகைவர்களாகலாம். இவ்விருவகைப் பகைகளையும் தக்கவாறு வென்று தன் சமயத்தைப் பாதுகாத்தல் சமயப் பொறைக்கு மாறான செயலன்று. இம்முறையில் ஒவ்வொருவனுக்கும் தான் பிறந்த சமயத்திற் பற்றிருக்க வேண்டியதவசியம். இல்லையேல், அச்சமயம் அவன் பின் சந்ததியாருக்குக் கிட்டாது மறைந்தொழிந்து போமன்றோ? இந்நிலைமையையுணர்ந்தன்றோ மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும் தாம்பிறந்த சைவத்தைச் சமண எதிர்ப்பால் நேர்ந்த அழிவினின்றுங் காத்தனர்?

இந் நாளில் விரிவிலா அறிவினர் சிலர் மூர்க்கத்தனமாய்ச் சமயப் பூசல் விளைத்தல் சிற்சில இடங்களில் காணப்படினும், பொதுவாய் நோக்குமிடத்துத் தென்னிந்திய இந்துக்களிடம் உண்மைச் சமயப்பற்று மிகவும் குறைந்திருக்கிறதென்றே தோன்றுகின்றது. 'எலெக்ஷன்' பற்றுக்கு முன்னே இறைவன் பற்று விண்மணியின் முற்பட்ட விளக்காய்ப் பொலிவிழந்துள்ளது. சமயத்தின் முப்பகுதிகளாகிய தத்துவக் கோட்பாடு, சமய அமைப்புகள், சமயச் சடங்குகள் என்னுமியாவும் பெரிதும் சீர்கெட்டுள்ளன. சமய சாத்திரங்களை முறைப்படி கற்போர் கேட்போர் தொகை சூனியத்தோடுறவாடுகின்றது. சமய அமைப்புகளாகிய கோயில்களும் மடங்களும் தங்கள் தூய்மையை இழந்துவிட்டன. பெரும்பாலும் திருவிழாக்கள் வெறும் கேளிக்கையும் வேடிக்கையுமாய் நிகழ்கின்றனவேயன்றி, சமய அறிவையோ அன்பையோ வளர்ப்பனவாயில்லை. மடங்களிற்பல செயத்தக்கவல்ல செய்தும் செய்தக்க செய்யாதும் கெடுகின்றன. சமயச் சடங்குகள் பொருளிழந்து பொலிவொடுங்கி அனுசரிப்போர் தொகையுங்குன்றப்பெற்று



அந்திய நிலையை அடைந்து வருகின்றன. இவற்றை அடியோடு தொலைத்து விடுவதே கடன் என்று பொதுநல நாட்டமுடைய சில சீர்திருத்தக்காரர்கள் செப்பத் தலைப்பட்டுவிட்டனர். ஆனால் இம்மூன்று பகுதிகளும் இன்றி எச்சமயமும் உலகில் நிலைத்ததில்லை. இவற்றில் ஒன்றோ பலவோ கால சக்கரச் சுழற்சியால் நிலைகுலைந்து பித்த பாண்டு போன்றதோர் நோயாற் பீடிக்கப்படுவது வழக்கம். தக்க மருந்து தந்து அவ்வப்போது குருதியைச் சுத்தப்படுத்தி சமய உடலைக் காத்தலே தலையாயார் கடனாகும். உண்மையும், தூய்மையும், கடவுளுணர்ச்சியும், அருளொழுக்கமும் நிறைந்த சமயவுணர்ச்சியை வளர்த்தற்கான வழியில் இம்மூன்று அமைப்புக்களையும் புதுக்கி அமைப்பது அறிஞர் இந்நாளில் விரைந்து செய்யவேண்டிய முதல் வேலையாகும். பொதுஜனங்களும் இத்தகைய திருத்தங்களை அறிஞர்கூட்டம் கொண்டுதரல் வேண்டுமென்று வற்புறுத்தி வருதல் நலம்.

தனிப்பெருங்கடவுளிடம்நம்மைச்சேர்க்க வல்ல சமய உணர்ச்சியானது தற்காலம் பேய்ச்சுர வாழ்க்கையிலும் இறந்தொழியாதிருத்தற்கு நமக்குத் துணை செய்ய வல்ல நினைவொன்றுண்டு. அது சாவின் உண்மையே. ஒருவன் எத்துணைப் பொருளும் போகமும் படைத்து வாழினும், ஒருநாள் அவன் செத்தாரோடு சேர்த்தெண்ணப் படுவது திண்ணந்தானே? அந்நாளில் அவனைத் தொடர்ந்து வரும் உலகப் பொருளும் உயிர்ப் பொருளும் யாதுளது? சிலர், மரணத்தின் பின் மனிதற்குறுநிலையொன்றுளதென நமக்கிப்போது தெரியாதாதலின், அதனை நாமேன் கவனிக்கவேண்டுமென்று, இம்மைக் களியாட்டத்தில் எளியராய் இடருறுகின்றனர். அறிவாற்றற் குறைவாலும் அக்கறையின்மையாலும் மறுமை நிலை ஈதென உணராதபேர்கள் மரணத்தோடு தமக்கெல்லாம் முடிந்துவிட்டதென எண்ணலாம். ஆனால் அவர்களிற் சிறந்த மடவோரில்லை என்றறிவோமாக. நமது பருவுடல் நழுவியபின்னும், நம்முயிர் பல்வகைப் பண்டையுணர்ச்சியோடு நுண்ணுடலில் வைகி இன்பதுன்ப நுகர்வதேபெருவழக்கு. பண்டைக்காலத்திலேயே அறிவிக்கப்பட்ட இக்கொள்கை இக்காலத்தில் Sir Oliver Lodge, Sir william brooks, Sir william Meyer முதலிய பொருளியலறிஞரேறுகளாம் மேனாட்டுமேன்மக்கள் ஆராய்ச்சியால் மெய்ப்பிக்கப் படுகின்றதே. இறந்துபோனவரிடமிருந்து நம்பத் தக்க செய்திகள் பல கிடைக்கின்றனவே. இறந்தோர் ஆவிகளின் படமும் சில சமயங்களில் எடுக்கப் படுகின்றனவே. அவ்வுலக வாழ்க்கையின் இயல்பு இவ்வுலக வாழ்வை யொட்டியே நிர்ணயிக்கப்படுகின்ற தாமே. இவ்வுண்மைகளைக் கருதாது 'கண்டதே காட்சி கொண்டதே கோல'மென்று கொண்டானடித்து வண்ணாத்திப் பூச்சி வாழ்க்கையை நடத்தி மடிதல் மனிதர்க்கழகாமோ!

மரணத்தின் பின்னரும் மாயாதிருக்கும் நம்முயிர் இன்புற்றிருப்பதோ அல்லது துன்பிற் றுளங்குவதே ஓளவில் நம் வசத்திலேயேயுள்ளது. "தாமே தமக்கு விதி வகையும்" என்பது மணிவாசகம். ஆதலின், பகுத்தறிவு படைத்த நாம், நம் பிற்கால வாழ்வும் செப்பமுடைத்தாயிருக்கும்படி—செத்தபின்னும் க்ஷேமமாயிருக்கும்படி—இவ்வுலகில் நமது வாழ்க்கையை நடாத்திவர வேண்டும். இப்படி வாழ்க்கையை நடாத்துதற்குச் சமய உணர்ச்சியும் அதன் வழித்தாய ஒழுக்கமும் இன்றியமையாதன.

இத்தகைய தூயவாழ்க்கையில் இரண்டு கூறுகள் உள்ளன. முதலாவது, நம்மைநாம்

தூய்மைப்படுத்திக் கொள்ளுவதாம். இயமம், நியமம், பிராணாயாமம் முதலிய எட்டுப் படிகள் சமயநெறியிற்செல்லுவார்க்கு விதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலிரண்டாயுள்ள இயம நியமங்களாவது ஒவ்வொரு மகனும் மகளும் தவறாது கைக்கொள்ள இடைவிடாப் பெருமுயற்சி செய்யவேண்டும். இறைவன், யாண்டும் நீக்கமற நிறைந்திருந்து நல்லாரின் நன்மையையும், பொல்லாரின் புன்மையையும் எப்போதும் அறிந்து அவரவர் குணஞ்செயலுக்கேற்ப இன்பதுன்பங்களை என்ஞான்றும் ஊட்டிவருகின்றான் என்பதை மறத்தலாகாது. இந்த ஒரு நினைவு நம்முள்ளத்தில் நிலைபெறுப் தங்கியிருக்குமாயின், இயம நியமப் படிகளைத் தாண்டுதல் எளிதாம். இஷ்டதேவதை வழிபாடும் இதற்குத் துணைபாமாறுண்டு. உபாசகன் அதனை உருவமாகவோ மற்றெவ்வாறோ நாடோறும் நினைத்து வணங்கித் தன் குறைகளை எடுத்துக்கூறித் தன்னை மேனெறிக்குய்க்குமாறுவேண்டுதல் பெரும்பயனுடைத்தாம். ஆனால், இதில் ஒரு எச்சரிக்கை தேவை. தான் கொள்ளும் இஷ்டதேவதையின் வடிவு, குணம், தொழில், வரலாறு முதலிய யாவும் தூயவாயும் கடவுளிலக்கணத்துக்கு மாறுதனவாயும் இருத்தல் வேண்டும். காமக் குரோதாதிகளுடையதென்று தன் வழிபடுதேவதையே கருதப்படின், அவற்றைத் தொலைக்கமுயலுந் தனியுயிருக்கு நாடிய பொருள் கைகூடாது. தூய அன்போடு செய்யும் வழிபாட்டைப் போலவே, புலனழுக்கற்ற அன்பர் கூட்டமும்பேருதவிசெய்யவல்லது. அத்தகைய அன்பர்கள் அருளிச்செய்த நூல்களும் துணைமிகத் தருவனவே.

'குறிகளும் அடையாளமும் கோயிலும்' சமயவுணர்ச்சிக்கு அரண்செய்யவே ஆதியில் அமைக்கப்பட்டன. பின்பு அம்மாங்களிற் புல்லுருவி முளைத்துவிட்டது. நமது பழைய கோயில்களைப் புதியதோர் முறையிற் பயன்படுத்திக் கொள்ளலாமென்று தோன்றுகிறது. அன்பர்கள் இதைச் சோதித்துப் பார்த்துப் பயனுடையதெனக்காணின் தாம் கைக்கொள்வதோடு ஏனைய இந்துக்களையும் கைக்கொள்ளத் தூண்டுவார்களாக. இப்போது பல ஆலயங்களில் ஜனங்களுக்குச் சமய அறிவோ உணர்ச்சியோ ஒரு நெறியாய்க் கிடைக்கவில்லை யென்பதும் அவர்களை மேனெறியிலுயர்த்த வில்லை யென்பதும் வெளிப்படை. நான் குறிக்கும் உபாயம் பின்வருமாறு:-குறித்த வாரத்தில் ஒரு நாள் மாலையில் தீபாராதனை வேளையில் ஒவ்வொரு ஊரிலுமுள்ள அன்பர் பலர் ஒன்று சேர்ந்து அவ்வூர் ஆலயத்திற்குச் செல்லவேண்டும். திருக்கோயிலின் மூலத்தானத்திலுள்ள திருவுருவைத் தரிசித்து வலம் வந்ததும், அக்கோயில் எல்லைக்குள் தூயதோர் இடத்தில் அவர்கள் கூட்டமாய் அமரவேண்டும். மனதைச் சாந்தப்படுத்த யாவரும் சிறிது நேரம் மோனஞ் சாதிக்க வேண்டும். பின்பு தத்தம் பயிற்சிக்கேற்றவாறு பரமனை நெஞ்சகத்தே தியானிக்க முயலவேண்டும். இப்படிச் சுமார் ௧௦ நிமிடநேரம் கழிந்த பின்பு, முன்னமே குறிக்கப்பட்ட ஒருவர் மக்கட்குத் தூய்மையிலும் அருளொழுக்கத்திலும் ஆர்வத்தை விளைக்கவல்ல பெரியார் திருவாக்கு ஒன்றிரண்டைப் படித்தோ பாடியோ சுமார் ௧௫ நிமிடம் பொருள் விளக்கவேண்டும். வாரத்திற்கு ஒவ்வொருவர் இப்படிப் பேசிப் பழகுதல் நலம். பின்னர், மற்றொருவர், கூட்டத்தாரனைவர்க்கும் பொருந்தும் வகையில் இறைவனை நோக்கி ஒரு விண்ணப்பத்தை மனவுருக்கத்தோடு உரை நடையில் செய்யவேண்டும். இறுதியாக யாவரும் முன்போல் மௌன வழி

Star and Company Managers.



பாட்டில் அமர்ந்து ௧௦ நிமிஷம் அமைதியாயிருக்க வேண்டும். இவ்வாறு வழிபாடாற்றிப் பின்னர் மறுவாரம் ஓதிப் பொருள் கூற வேண்டிய பாடல், உபந்நியாசகர் முதலிய விவரங்களை அறிந்துகொண்டு அவரவர் இல்லமேக வேண்டும். இம்முறையில் அக வழிபாட்டை அவரவர் ஊரிலுள்ள ஆலயங்களில் அனைவரும் கிரமமாய்ச் செய்து வருவரேல் அவர்களிடம் உண்மை, அன்பு, அஞ்சாமை ஆகிய சமயப் பண்புகள் விளங்கும். ஆலயங்களும்புத்துயிர் பெற்றிலங்கும். சன்மார்க்கத்திற்கு மீண்டும் உலகில் வலிமை பெருகுக. இவ்வாறெல்லாம் பாடுபட்டு நாம் நம்மைப் படிப்படியாய்த் தூய்மைப்படுத்திக்கொண்டு, பின்பு, நம்மினுந்தாழ்ந்த பக்குவத்திலுள்ள உயிர்கட்கு நம்மாலியன்ற அன்புப் பணி இடைவிடாது செய்துவரவேண்டும். எல்லாப் பணிகளையும் தூய்மைப்படுத்துவதும், தானே தனிப் பெரும் பணியாய் நிற்பதும் சமயப் பணியேயாம். இத்துணைச் சிறப்புவாய்ந்த சமயத்தொண்டைக் காலமிடமறிந்து, தக்க தலைவர்கள் கட்டயமாய்ச் செய்ய முற்படுவாராயின் இந்தியாவே உலக குருவாய் விரைவில் விளங்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை

இந்த நோக்கங்களும் முயற்சிகளும் ஆண் மக்களுக்குமட்டுமிருத்தல் சாலாது; பெண்மக்களுக்கும் வேண்டும். மக்கட் கூட்டம் ஆண் பெண் வடிவினதாயுள்ளது. ஒன்றைவிட்டொன்று உயர்நெறிச் செல்லுமாறில்லை. மாதிருக்கும் பாதியனாய் மகாதேவன் கோலங்கொண்டது இவ்வுண்மை புலப்படுத்தவே. இப்படி ஆணும் பெண்ணுமாயிலகு முலகில் ஆண்பாதி பெருமுயற்சியிலீடுபடப் பெண்பாதிமட்டும் தாழ்நிலையில் தங்கிக்கிடந்தால், மக்கள் தொகுதி விகார நிலையையே எய்தும். உடம்பிலோர் பாதி பாரிசவாயுவால் செயலற்றுக் கிடக்கையில் மற்றப் பாதி தொழிற்பட்டால் ஏற்படும் விகாரநிலையை நினைவுகூர்தல் வேண்டும். ஆதலின் பெண்மக்களும் உயர்ந்த குறிக்கோளுடையராய் ஆண்களுக்குதவி உயர்த்தி, அவருதவியால் தாமுமுயர்தல் தலைவன் காட்டிய நன்னெறி முறையாம். பெரிய புராண நாயன்மார்களுள் இல்லறநெறி நின்றார் வாழ்வில் இவ்வுண்மையியல்பைக் காணலாம். இங்ஙனமெல்லாம் சமயவுணர்ச்சியைப் போற்றி வளர்த்து, ஆடவரும் மகளிரும் உலகு, உடம்பு, பிறவுயிர், காலம், தேசம்முதலிய எவற்றாலும் தடைப்படுத்தப்படாத பேரின்ப நிலையை அடைந்து இறைவன் திருவுளப்பாங்கின்படி இனிது வாழ்தலே நிரம்பவும் அழகிய நிலைமை. இஃதே சமயஉணர்ச்சியின் சிறந்த பயனுமாகும்.

ஸ்டார் அண்டு கம்பெனி மானேஜர்கள்.

வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர் ! முப்புவைக் கண்டுபிடித்தவர் !!
வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர். மதுரை சித்தவைத்திய சங்கம் பிரசிடெண்டு.
ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்.
பழனி ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளையவர்கள்

# தாம்ர பஸ்பம்

சாப்பிடுங்கள். உங்கள் கவலை தீர்ந்துவிட்டது.

## திமிர், குஷ்டம், ரணம், தீர்ந்துவிட்டது.

ஆறாத ரணம் குழிப்புண்களெல்லாம் ஆறிவிட்டது. கிரந்தி, மேகப் பத்துகளெல்லாம் படல்படலாய் உதிர்ந்துவிட்டது. வட்ட-வட்டமாயுள்ள செம்மேகத்-தடிப்புகள் போன இடம் தெரியவில்லை. திமிர் மதமதப்புகளெல்லாம் தீர்ந்து சுரணையுண்டாகிவிட்டது. குழகுழவென்று அழுகிப்போன குஷ்ட ரோகங்களெல்லாம் சொஸ்தமாகிவிட்டது.
100 வேளை தாம்பா பஸ்பம் அநுபானம் சூ. சூரணத்துடன் விலை ரூ. 50.
50 வேளை மருந்து ரூ. 25. ஏழைகட்குப் பாதி விலை.

# தங்க பஸ்பம்

## சாப்பிடுங்கள் ! தாதுபுஷ்டிக்கு நிகரற்றது !!

வீரியத்தையும் டவத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திருப்பிவருப்படி செய்கிறது. தாதைக் கட்டுவதில் அபார சக்தி வாய்ந்தது. நல்ல பசியும், ரத்த விர்த்தியும் புத்திர சந்தானத்தையும் உண்டுபண்ணும். தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. அநுபானம் காயசேசரி அல்வாவும் தங்க பற்பமும் 100 நாள் மருந்து ரூபா 50. 50 நாளைக்கு ரூபா 25.

# தாளகபஸ்பம்

## சாப்பிடுங்கள் ; இருமலுக்குக் கைகண்டது ;

எவ்வளவு நாட்பட்ட காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், சோகை, கபக்கட்டு, பீனிசம் முதலிய 8 வித காசமும் அவசியம் தீரும்.

20 நாள் மருந்து அநுபானம் சூரணத்துடன் ரூ. 25. ஏழைகளுக்குப் பாதி விலை.

ஆயிரக்கணக்கான நீரிழிவு ரோகஸ்தர்கள் சொஸ்தமடைந்திருக்கின்ற அப்ரேக் செந்தூரம் உங்களுக்கு வேண்டுமானால் பழனி ஆர். எம். கே. வேலுசாமி அவர்களிடந்தான் கிடைக்கும். 40 நாள் மருந்து அநுபானத்துடன் ரூ. 50. 20 நாள் ரூ. 25. ஏழைகட்குப் பாதி விலை.

வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,
சித்த வைத்தியசாலை, பழனி.


## காளையார்கோயில் கோபுரம்.



பாண்டி நாட்டில் பாடல் பெற்ற ஸ்தலம் பதினான்கனுள் ஒன்றாகிய இக்கோயிலின் கோபுரம் சிவகெங்கை மருது சகோதரர்களால் நூற்றிருபது ஆண்டுகட்கு முன்னர் கட்டி முடிக்கப் பெற்றது. இதற்கு சுமார் பதினைந்து மைல் தூரத்திலுள்ள மானாமதுரையிலிருந்து வேலையாட்களின் கைமூலமாகவே செங்கல் கொண்டு வரப்பெற்றதாம்.


a United India Policy than else-where.

# ஜோடி சேர்த்தல்.

மருவிய காதல் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று.

—அறநெறிச்சாரம்.

காட்சி க.




சிறிதும் பெரிதாக இருக்கிறது. இது கொஞ்ச தூரந்தான் ஓடும்.

று எதனையும் விடச் சிறந்த லாபத்தை உங்களுக்குத் தருவது யுனைடெட் இந்




காட்சி உ.



இவை எப்படி ஒன்றோடொன்று சேர்ந்து சரியாக வண்டியை இழுத்துச் செல்ல முடியும்?

A Policy in the United India combines patriotism and prudence.

காட்சி ௩.



கொம்புச்சீர் இல்லை. கொம்பொடிந்த மாட்டை இதோடு சேர்த்தது விகாரமாய் விட்டது உடனே மாற்றி விடவேண்டும்.

"யுனைடெட் இந்தியா" கம்பெனியே இம்மகாண மக்களால் போற்றப்படுவது.




காட்சி ௪.



இவற்றின் கழுத்தில் இவ்வளவு பாரம் ஏற்றலாமா? இந்த வண்டி ஒழுங்காக ஓடாது.

Life Insurance is one matter on which no difference of opinion exists.

காட்சி ரு.



நல்ல பருவம். நல்ல உடல். நல்ல ஜோடி. எத்தனை மைல் தூரமானாலும் ஒன்றுக்கொன்று களைக்காமல் செல்லும். இப்படிச் சோடி சேர்த்தால்தான் என்றும் கெப்பிரமாக இருக்க முடியும்.

“ மனிதருக்கு ஜோடி சேர்க்கும்போதாவது சிறிது கவனிக்கலாமல்லவா

Safety and service are the foundations on which United India is built.

# மணம்.

திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை

## பதப் பொருள்.

‘மணம்’ என்னும் சொல்லில் ‘மண்’ என்பது பகுதி; ‘அம்’ என்பது விகுதி. “புள்ளியீற்றுமுன் உயிர் தனித்தியலாது; மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே” என்னும் தொல்காப்பிய சூத்திரவிதிப்படி ‘மண்’ என்னும் பகுதி ‘அம்’ என்னும் விகுதியுடன் சேர்ந்து ‘மணம்’ என்றாயிற்று.

மணம், மன்றல், விவாகம், கலியாணம் என்பன ஒருபொருள் உணர்த்தும் பல சொற்கள். இல்வாழ்க்கையை இனிது நடாத்துவதற்குத் துணையாக ஒரு பெண்மகளை ஓர் ஆண்மகன், அல்லது ஓர் ஆண்மகனை ஒரு பெண்மகள், வரைந்து கோடல் ‘மணம்’ எனப்படும்.

‘மண்’ என்னும் பகுதி ‘அலங்கரி’ எனப் பொருள்படும்; ‘அம்’ என்னும் விகுதி தொழிற் பெயரை உணர்த்துவது. பெண்மகளின் சேர்க்கை ஆண்மகனையும், ஆண்மகனின் சேர்க்கை பெண்மகளையும் அலங்கரித்துச் சிறப்புறச் செய்தலால், மணம் எனப்பட்டது.

“மணம்” என்பதனைப் பண்புப்பெயராகக் கொண்டு ஓர் ஆண்மகனும் ஒரு பெண் மகளும் சேர்ந்துவாழும் வாழ்க்கை அறமணம், புகழ்மணம், முதலிய பலவகை மணங்களை வீசுதலால், அது மணம் எனப்பட்டது என்று கூறினும் அமையும்.

## மணமகனும் மணமகளும்.

இல்வாழ்க்கை இன்னது எனவும், இல்லறங்கள் இன்னவை எனவும், அவற்றை நடாத்தும் நெறி இன்னது எனவும் கல்வி, கேள்வி, பார்வைகளால் அறிந்தும், இல்வாழ்க்கையையும் இல்லறங்களையும் இனிது நடாத்துவதற்குத் தக்க உடல்வலு உளவலுக்கள் பெற்றும் உள்ள ஆண்மகனும் பெண்மகளும் முறையே மணமகனும் மணமகளும் ஆவர்.

ஒருவரை ஒருவர் மணம் செய்துகொள்ள விரும்பும் மணமகனும் மணமகளும் ஒத்த குலத்தினராயும், ஒத்த குணத்தினராயும், ஒத்த வயதினராயும் இருத்தல்வேண்டும். உணவிலும் ஒழுக்கத்திலும் வேறுபாடு இல்லாத குடும்பத்தினர் ஒத்த குலத்தினர். புலால், கள் அருந்துவோரும், அவை அருந்தாதாரும் ஒத்தகுலத்தினர் அல்லர். கொலை, களவு செய்வோரும், அவை செய்யாதாரும் ஒத்தகுலத்தினராகார். இவ்வுணவொழுக்க வேற்றுமை இல்லாத மாந்தரெல்லாரும்—எந்த ஜாதியாராயினும், எந்த மதத்தினராயினும்— ஒத்த குலத்தினர் என்று கொள்க. “நல்லகுல மென்றும் தீய குலமென்றும் சொல்லளவல்லாற் பொருளில்லை” யாகலான்.

மனிதர் இருவகைப்படுவர். ஒருவகையினர் ‘மக்கள்’ எனப்படுவர். மற்றொருவகையினர் ‘கயவர்’ எனப்படுவர். இவ்விருவகையினரும் உருவத்தில் முழு ஒப்பும், குணத்தில் முழு ஒப்பின்மையும் உடையவர். அதுபற்றியே “மக்களே போல்வர்கயவர்; அவர் அன்ன ஒப்பாரையாம் கண்டதில்” என்றனர் வள்ளுவர். தண்டம் காரணமாக

A policy in the United India combines patriotism and prudence.

வும், அச்சக்காரணமாகவும் கயவர் தீவினை புரியாதிருப்பர். இயற்கையிலேயே மக்கள் தீவினைபுரிய விரும்பார். இவ்விருவகையினரும் ஒத்த குணத்தினர் அல்லர். கயமைக் குணம் இல்லாத மக்களெல்லாரும் ஒத்த குணத்தினராவர்.

மக்களுள் பதினைந்து வயதில் ஆண்மகனும், பத்துவயதில் பெண்மகளும், பூப்பு எய்துகின்றமையின், மணமகன் வயதுக்கு ஐந்து வயது குறைந்த மணமகளே அவனுக்கு ஒத்தவயதினள் என்று கொள்க.

## மணப்பருவம்.

இல்வாழ்க்கையும் இல்லறங்களும், அவற்றை நடாத்தும் நெறியும் இன்னவையென அறிந்தும், அவற்றை நடாத்துவதற்குரிய உயல்வலு, உளவலுக்கள் பெற்றும் உள்ள ஆண்மகனும் பெண்மகளும் முறையே மணமகனும் மணமகளும் ஆவர் என்றுமுன்னரேகூறியுள்ளேம். இவ்வறிவையும் வலுக்களையும் அடைவதற்குக் குறைந்தது ஆண்மகனுக்கு இருபத்தைந்து வயதும், பெண்மகளுக்கு இருபதுவயதும் ஆக வேண்டும் என்பது உலக அனுபவமுடைய ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளத்தக்க தொன்று.

தனது துணையாகி, தன்னுடன் ஒத்து, தனது குடும்பக்காரியங்களை நடாத்துவதற்குரிய தகுதியும், திறனும், பயிற்சியும் உடையளா என்று தேர்வதற்கும், தெளிவதற்கும், அத்தகுதியும், திறனும், பயிற்சியும் தான் அடைவதற்கும் ஆண்மகன் இருபத்தைந்து வயது வரையிலாவது இவ்வுலக அனுபவம் பெற்றிருக்கவேண்டாவா? அவ்வாறே, தனது துணையாகி, தன்னுடன் ஒத்து, தனது குடும்பக்காரியங்களை நடாத்துவதற்குரிய தகுதியும், திறனும், பயிற்சியும் உடையனா என்று தேர்வதற்கும், தெளிவதற்கும், அத்தகுதியும், திறனும், பயிற்சியும் தான் அடைவதற்கும் பெண்மகள் இருபதுவயது வரையிலாவது இவ்வுலக அனுபவம் பெற்றிருக்க வேண்டாவா?

அன்றியும், வளர்ந்து திரண்ட பெண்மகள் மணத்தை (வாசனையை)யும், ஆண்மகன் மணத்தை(வாசனையை)யும், முறையே இருபத்தைந்து வயதுக்குக் குறைந்த ஆண்மகனும், இருபது வயதுக்குக் குறைந்த பெண்மகளும், உள்ளவாறு அறியமுடியாதபடி அவ்விருவருடைய உடலும் உளமும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த மணங்களை உள்ளபடி அறியாத ஆண்மகனும் பெண்மகளும் முழு இன்பத்தையடைய முடியாது. இவ்வுண்மையைச் சரீரதத்துவ நூலாராய்ச்சியாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்க.

இதுகாறும் சொல்லிய காரணங்களால் இருபத்தைந்து வயதிற்குக் குறைந்த ஆண்மகனும், இருபது வயதிற்குக் குறைந்த பெண்மகளும் மணப் பருவத்தினர் அல்லர் என்பது தெற்றென விளங்கும். ஆயினும், பதினைந்து வயது நிரம்பிய ஆண்மகனும் பத்து வயது நிரம்பிய பெண் மகளும், முறையே தமது மணப் பருவ வயதுகளை அடையும் வரையில் சோம்பியிருக்க நேரம் இல்லாதபடி உழவுதொழில், கைத்தொழில், மனைத்தொழில், முதலிய உடற்றொழில்களும், ஒழுக்கக்கல்வி, மொழிக்கல்வி, கணக்குக்கல்வி, முதலிய உளத்தொழில்களும் கொடுக்கப்பட்டுத் தாய் தந்தையர் முதலிய உறவினர்களால் பிஞ்சில் பழுக்காதவாறு பாதுகாக்கப்பட வேண்டும்.

## பருவம் பிழைத்த மணங்கள்.

பால் மணம் மாறாத ஒரு பாலனுக்கு, அவனுடைய தாயோ என்று பார்த்தவர்கள் ஐயுறும்படியான வயதும் வடிவும் உடைய ஒரு பெண்மகளை மணம் செய்வித்தலும், பால்மணம் மாறாத ஒரு பாலிகைக்கு, அவளுடைய பாட்டனோ என்று பார்த்தவர்கள் ஐயுறும்படியான வயதும்



வடிவமும் உடைய ஓர் ஆண்மகனை மணம் செய்வித்தலும் நமது நாட்டில் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. அவை மணங்கள் அல்ல; அமணங்களே யாம்.

"பாலிய விவாகம்" என்னும் பெயருடன் நமது நாட்டில் தாம் உயர்ந்த ஜாதியார் எனச்சொல்லிப் பெருமை பாராட்டிக் கொள்ளும் பார்ப்பனருள்ளும், அவர் போலத் தாம் உயர்ந்த ஜாதியாராக வேண்டும் என்று விரும்பும் வேறு சில ஜாதியார்களுள்ளும் நடத்தப்பெறும் குழந்தை மணங்கள் மக்கள் மணங்கள் அல்ல; உயிர்க்கும் பாவைகள் மணங்களேயாம். அம்மணங்கள் அக்குழந்தைகளை நோயாளிகளாகவும், உடல்வலு, உளவலு இல்லாதவர்களாகவும், ஆயுள் குறைந்தவர்களாகவும் செய்து விடுகின்றன. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வெப்பியுதிர்ந்தும், அங்கம் குறைந்தும், நோயுற்றும், ஆரோக்கியம் இழந்தும், வலு இழந்தும், ஆயுள் குறைந்தும் அழிந்து போகின்றன. பாலிய விவாகத்தைக் கொண்டுள்ள ஜாதியார் மேற்கண்ட காரணங்களால் நாளடைவில் இவ்வுலகிலே இல்லாது முற்றும் அழிந்துவிடுவார்களோ என மெய்யான தேசபக்தர்களெல்லாம் கவல்கின்றார்கள்.

## கைம்பெண் மணம்.

நமது நாட்டிலுள்ள பல ஜாதியார்களுள்ளும், நமது நாடு தவிர மற்றைய நாடுகள் எல்லாவற்றினும், தொன்றுதொட்டு நடந்து வருகின்ற இந்த மணம், நமது நாட்டில் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லித்திரியும் சில ஜாதியார்களுள் விலக்கப்பட்டிருப்பது மிக மிகப் பரிதபிக்கத்தக்கதொரு காரியம். இம்மணம் விலக்கப்பட்டிருக்கிற ஒரு காரணத்தால், அந்த ஜாதியார்களுள் நிகழும் விபசாரம், குழவிக்கொலை, மக்கள் கொலை, முதலிய பாவங்களுக்குக் கணக்கேயில்லை. ஒன்றும் அறியா ஆண் குழந்தையையும் பெண் குழந்தையையும் சேர்த்துப் 'பொம்மைக் கலியாணம்' செய்துவைத்துப் பார்த்துக் களித்த தாய் தந்தையர்களும், பூப்பு எய்தும் முன்னர் புருஷனை இழந்த பெண்களுக்குக்கூட மறுமணம் செய்யலாகாது என்கின்றார்கள். அந்தோ! அவர்கள் அறிவுதான் என்னே! அன்புதான் என்னே! அவர்கள் அந்தணர்களாம்! அந்தண்மைவடிவாய கடவுளுடைய அடியார்களாம்! அன்பின் நிழலும்கூட இல்லாத அவர்களை அன்பே வடிவாய அறக்கடவுள் என்ன செய்வார் என்பதை யாம் இங்குக்கூற அஞ்சுகிறேன். வள்ளுவர் கூறியுள்ளதைக் கூறிவிடுகின்றேம். "என்பில் அதனை வெயில்போலக் காயுமே அன்பில் அதனை அறம்" (அறம்—அறக்கடவுள்)

பூப்பு எய்தும் முன்னர் புருஷனை இழந்த பெண்மகள் புதியதொரு புருஷனை மணந்து கொள்ளலாகாதாம்! ஆனால், பல மக்களைப் பெற்றும், பல்லெல்லாம் இழந்தும் எண்பது தொண்ணூறு வயது அடைந்துள்ள கிழவன் ஒருவன் பத்துவயதுள்ள இளங்கன்னி ஒருத்தியை மணம்செய்து கொள்ளலாமாம்! இவ்வாறான அநீதிபுரியும் நமது நாட்டினர்களிடம் நமது நாட்டு அரசாட்சியைச் சர்வ நியாயாதிபதியாக விளங்கும் சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒப்பிப்பாரா? இவ்வநியாயத்தை நீக்கும் வரையில் நம் நாட்டினர்கள் அடிமைகளாகப் பிறரால் ஆளப்படுதல் நியாயமல்லவா?

கைம்பெண்மணம் நம்நாட்டினர் எல்லாராலும் பாராட்டப்பெறுமானால், கிழவர்களுக்கு இளங்கன்னிகளை மணம் செய்து கொடுக்கும் பாவமும், மேற் கூறிய மற்றைய பல பாவங்களும் நமது நாட்டைவிட்டு ஒழியும். அது பற்றியாவது, தேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் இம்மணத்தை நம் நாடு விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வதற்கு வேண்டுவன செய்வார்களாக?

யுனைடெட் இந்தியாவில் பணம் போடல் தேச பக்தியையும் முன் ஜாக்கிரதையையும் காட்டுவதாகும்.

### மணமும் தீர்வும்.

ஒருவன் ஒருத்தியையே மணந்துகொள்ளுதல் வேண்டும். ஒரு காலத்தில் ஒருவன் ஒரு மனைவிக்குமேல் கொண்டிருத்தல் ஆகாது. ஒரு காலத்தில் ஒருத்தி ஒரு கணவனுக்குமேல் கொண்டிருத்தல் ஆகாது.

ஒருவன் பல பெண்களை மணந்துகொள்ளுதலும், ஒருத்தி பல ஆண்களை மணந்துகொள்ளுதலும், சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. அவ்விரண்டு வகை மணங்களும் தள்ளற்பாலன.

வரன் 'தட்சணை' வாங்கியே ஒரு பெண்ணை மணம் செய்துகொள்ளுதலும், வரி 'தட்சணை' வாங்கியே ஓர் ஆணை மணம் செய்துகொள்ளுதலும், நம் நாட்டில் சிற்சில வகுப்பினருள் நிலவுகின்றன. இவை மணம் எனப்படுதற்குரிய தகுதியுடையன அல்ல; உயிரையும் பொருளையும் ஒன்றாகக் கவரும் கொலைஞரும், கள்வருமாகிய கொடியோர் செயல்கள் எனத்தக்கவை.

ஒருவனும் ஒருத்தியும் மணம் செய்துகொண்ட பின்னர், அவ்விருவரில் ஒருவர் இல்வாழ்க்கைக்கே தகுதி இல்லாத நோயாளியாயும், மற்றவரால் தீர்த்துவிடப்பட்டால் பேணுவார் இல்லாமல் அலக்கண் உற்று அழியவேண்டிய நிலைமையினராயும் இருப்பின், அவர் சம்மதிபெற்று வேறு ஒருவரை மணந்துகொண்டு முந்திய நோயாளியைப் பேணிவருதல் ஓர் அறம் எனவே யாம் கருதுகின்றோம்.

மணம் செய்துகொண்ட ஒருவனும் ஒருத்தியும் தக்க காரணங்களால் தம்முள் ஒத்துவாழ்வதற்கு முடியாதென்று காண்பாராயின், அவ்விருவரும் மனோராசிபாய் ஒருவரை ஒருவர் தீர்ந்துகொள்வதற்குரிய உரிமையை உடையாராயிருத்தல்வேண்டும். ஒருவர் மாத்திரம் மற்றொருவரினின்று தீர்ந்துகொள்ள விரும்புவாராயின் அவ்வாறு விரும்புவோரிடமிருந்து மற்றவர் ஒரு தகுதியான நஷ்டயீடு பெறுதற்குரிய உரிமை உடையாராயிருத்தல் வேண்டும்.

### மண முறை.

நம் தமிழ் நாட்டில் முற்காலத்தில் நிகழ்ந்த மணமுறையும் மற்றைய கீழ்நாடுகளிலும் மேல் நாடுகளிலும் இக்காலத்தில் நிகழ்கின்ற மணமுறையும் ஒன்றே. அம்முறையாவது, மணமகளும் மணமகனும் தம்முள் தனித்துச் சந்தித்து, நேசித்து, சேர்ந்துகொள்ளுதல்; அவ்வாறு சில நாள் கழிந்த பின்னர்த் தம் தாய் தந்தையர் சுற்றத்தார் அறிய மணந்து கொள்ளுதல். முந்திய சேர்க்கையைக் களவு மணம் எனவும், பிந்திய மணத்தைக் கற்பு மணம் எனவும் தொல்லாசிரியர் கூறுவர். முற்காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய அரசு நிலையும், ஒழுக்க நிலையும், கல்வி நிலையும் வேறு; இக்காலத்தில் நம் தமிழ் நாட்டில் நிலவுகின்ற அம்மூன்று நிலைகளும் வேறு. இக்காலத்தில் நம் தமிழ் நாட்டுக்குப் பழைய களவு மணம் பொருந்தாது; கற்பு மணமே பொருந்தும்.

என்னை? இக்காலத்தில் நம் தமிழ் நாட்டு மணப் பருவப் பெண்கள் தம் தாய் தந்தையர் வீடுகளை விட்டுத் தனித்து வெளியேறி மணப்பருவ ஆண்கள் சஞ்சரிக்கும் இடங்களுக்குச் சென்று சஞ்சரிக்கும் வழக்கமேனும், மணப்பருவ ஆண்களுடன் நன்செய், புன்செய் தொழிற்சாலை முதலியவற்றில் வேலை செய்யும் வழக்கமேனும் இல்லை. சில காரணங்களால், இக்காலத்தில் அவ்வாறு சென்று சஞ்சரித்தலும், வேலை செய்தலும் தகுதியல்லவென்றும் சொல்லலாம். ஏனெனில், இக்காலத்தில் ஆண்மக்கள் ஒழுக்கங்களும் பெண் மக்கள் ஒழுக்கங்களும் எங்கும் போதிக்கப்படுவதும் இல்லை; கையாளப்படுவதும் இல்லை. இந்த நிலைமையில் தற்காலம் நம் நாட்டில் களவு மணத்திற்கு இடமே இல்லை.





கற்பு மணம் நடப்பிக்கும் நெறிதான் யாதோ எனின், கூறுதும். மணப் பருவமுற்ற மணமகனுடைய, அல்லது மணமகளுடைய, தாய் தந்தையர் முதலிய நெருங்கிய உறவினர் அம் மணமகன், அல்லது மணமகள், சொல்லக் கேட்டாவது, பிறர் சொல்லக் கேட்டாவது, நேரில் பார்த்தாவது மணமகனுக்கு ஏற்ற மணமகளை, அல்லது மணமகளுக்கு ஏற்ற மணமகனைத் தெரிந்து தேர்ந்து, தெளிந்து, அம் மணமகன் மணமகள் சம்மதம் பெற்று மணம் செய்வித்தலாம்.

### மணச்சடங்கும் கடமையும்.

மணமகனும், மணமகளும் ஆகிய இருவர் தம் உறவினர், நட்பினர், ஊரார், முதலியோருக்கு மணச்செய்தி விடுத்து, அவர்களை வரவழைத்து, அவர்கள் முன்னிலையில் நல்லதோர் இடத்தில் மணமகனும மணமகளும் அமர்ந்து கடவுளை வாழ்த்தி ஒருவருக்கொருவர் மணமாலை சூட்டிக்கொள்ளுதலே மணச் சடங்கு. இதற்குமேற்பட்டனவெல்லாம் மிகை எனத் தள்ளற்பாலனவேயாம். பார்ப்பாரையோ, குருமாரையோ, ஓதுவாரையோ தருவித்துத் தெரியாத மொழியிலேனும், தெரிந்த மொழியிலேனும், மந்திரங்கள் என்பன பல சொல்லுவித்துப் பணம் முதலியன கொடுத்தல் வீண் காலச்செலவும் பொருட்செலவுமேயாம். உறவினர், நட்பினர், முதலியோருக்கு நல்லமுது அளித்தலும், மணகன், மணமகளுடைய பொருள் நிலைமைக்குத் தக்கவாறு ஏழைகளுக்கு அன்னம் இடுதலும், தொழிற்சாலைகள், கல்விச்சாலைகள், வைத்திய சாலைகள், முதலியன ஏற்படுத்தலும் மணக் கடமைகளாம்.

### மணப்பயன்.

மணமகனும் மணமகளும் உடலால் இருவராயினும், உளத்தாலும உடைமையாலும் ஒருவரேயாகித் தமது இல்லத்தின்கண் இனிதமர்ந்து பொருள் ஈட்டுதலும், இன்பம் நுகர்தலும், இன்மகப் பெறுதலும், இல்லறம் புரிதலும் புகழ்பெருக்கலும், மெய்யுணர்தலும், வீடடைதலும் மணப்பயன்களாம். இவற்றின் விரிகளையெல்லாம் நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருக்குறள் முதலிய நூல்களிற் கண்டுகொள்க.

## ஒருவர்மேல் ஒருவர்.



பாரதமாதா:— இத்தனை நாளாக ஒருவரை யொருவர் கீழ்ப்படுத்தி மேலேறியது போதும். எல்லாரும் இறங்கி வரிசையாக இருங்கள். இல்லாவிட்டால் பிழைக்க மாட்டீர்கள்!

---

த்திரம் உபகாரம்: இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டடத்தின் ...

## அப்பம் திருடின எலி.

எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை.

செட்டியார் வீட்டில் அடுக்களையில்—சென்ற
தீபாவளியன் றிரவதனில்
வட்டியிலப்பம் இருந்ததம்மா அதை
வாசத்திலறிந் தோரெலிதான்



“ நெய்யினில் சுட்ட பணியாரம்—இது
நேர்த்தியாய்ச் சுட்ட பணியாரம்
பையப்பையக் கடித்துண்பதற்கும் வெகு
பக்குவமான பணியாரம்

யார்க்கும் கிடையாப் பெருநிதியாம்—இதை
யானின்று பெற்றதென் பாக்கியமே
பார்க்கும் பொழுதேநீர் வாயதனில் ஊறிப்
பாய்கின்ற தேபசி யாகின்றதே. ”



(அப்போது கீ! கீ! என்று வேறு சில எலிகள்
சத்தமிடக்கேட்டு)


“ என்னசத்தம்? ஓ! ஓ!! தம்பிமார்கள்—கூடி
இங்கு விளையாட வந்தனரோ?
அன்னவரோடி வருமுன்னமே யானும்
அப்பத்தைக் கொண்டு மறைந்திடுவேன்.

ஏது மொருபொடி யாகிலும்—யானவர்க்
கீந்திடேன், முற்றுமே தின்றிடுவேன்,
ஓதியதானம் தனக்குப்போக மீதி
உள்ளவ ரல்லவோ செய்திடுவார். ”



என்றுசொல்லி யந்த அப்பத்தினை—வாயில்
ஏந்திக் கடித்திழுத் தோடிடவே
கன்றிப் பசித்த இளைஞரெல் லாம்வந்து
கால்கடுக்கத் தேடிப் போயினரே.

## குமரன் ஆண்டு மடல்.



ஆருமறியாத மூலையிலே—அந்த
அப்பத்தை அவ்வெலி கொண்டுவைத்து
கூரியபல்லால் கறம்பி யொருபொடி
கூடச் சிதறாமல் தின்றதம்மா.

மட்டுக்கு மிஞ்சிப் புசித்ததனால்—மூச்சு
வாங்க வருந்தி வயிறூதி
கஷ்டப் படுவதைச் சுற்றத்தா ரெல்லோரும்
கண்டொரு பண்டிதர்க் காளும்விட்டார்.



பண்டிதர் வந்துகை பார்த்தனர்—அவ்வெலி
பண்ட முழுதையும் உண்டகதை
விண்டதும், கேட்டுக் குறிகளும் நோக்கி
விதிப்படி நூலின் முறையுணர்ந்து

அப்பம் முழுதும்நீ தின்றனையே—அதை
அன்பிற் குரியஉன் தம்பியர்க்கும்
ஒப்பவே பங்கிட் டளித்திருந்தால் துன்பம்
உன்னை யணுகியி ராதேயப்பா.


அன்றியும் உன்தம்பி மாரும்—கடும்பசி
ஆறிக் களித்திருப் பார்களன்றோ?
இன்றினிச் செய்வதென்? இவ்வுலகம் விட்டு
யாத்திரை போவது திண்ணம் என்றார்.



ஆனதி னாலே கிடைத்த பொருளை—நாம்
ஆகுமட்டும்பகுத் துண்ணவேண்டும்
ஈனமாந் தன்னயத் தால்வருந்துன்பமே;
இன்பமளிக்கும் பொதுநயமே.

அளவு கடந்திடில் ஆமுதும்—விஷம்
ஆகு மென்றுநம தான்றோர்கள்
உளபடி யேசொன்ன வாக்கியத் துண்மையை
உள்ளத்திற் கொள்ளுங்கள் தோழர்களே.




# தமிழ் டைப்ரைட்டர்.

... ... .... .... ... ... ... ... ... ...

நந்தமிழ் நாட்டாரின் சௌகர்யத்தையும் தமிழ் பாஷாபி விருத்தியையும் கருதி 'Ideal தமிழ் டைப்ரைட்டர்' மிஷின் புதிதாய்த் தருவித்திருக்கிறோம். மிகவும் அழகும், அடக்கமும், வேலைக்கு எளிதும் உறுதியுமானது. மிகவும் சுத்தமான எழுத்துக்களையுடையது. சில நிமிஷ நேரத்தில் நமக்கு வேண்டிய கடிதங்கள், கார்டுகள் கவர்கள் முதலியன நாமே அச்சடித்துக்கொள்ளலாம். ஏராளமான மிஷின்கள் சீக்கிரம்செலவழிந்துகொண்டிருப்பதால் உடனே முந்திக்கொள்ளுங்கள்!

## காலிப்பாட்டில்கள்.

சோடாபாக்டரிகளுக்கும் வியாபாரிகளுக்கும் சோடா கலர் காலிப்பாட்டில்கள் ஏராளமாய் சப்ளை செய்கிறோம். அழகும், உறுதியும் சுத்தமுமானவை. 8 அவுன்ஸ் 10 அவுன்ஸ் பாட்டில்கள் கைவசமிருக்கின்றன. ஒரு பெட்டி அரைக் குரோஸ் நிறைந்தவை. விலை விவரத்திற்கு எழுதுங்கள்!

## மோடக் ஆயில் இஞ்சின்.

மோடக் ஆயில் இஞ்சின் குறைந்த எண்ணெய்ச் செலவில் அதிக நேரம் உழைக்கக் கூடியது. வேலைக்குச் சுலபமானது. யார் வேண்டுமானாலும் சுலபமாய் ஓட்டலாம்.

## கிருஷிகர்களுக்கு.

நன்செய், புன்செய் நிலங்களுக்கு மிக நேர்த்தியான உரம். குறைந்த செலவில் அதிகமான விளைவைத் தரக்கூடியது. ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

## லக்ஷிமி ரதன்ஸ் லிமிடெட்,

தம்பு செட்டித் தெரு, சென்னை.

குமரன் அச்சுக்கூடம், காரைக்குடி.

உயர்தர அச்சுவேலைகளில் கைதேர்ந்தது இதுவே.

குறைந்த கூலிக்கு உயர்ந்தவேலை செய்யும் அச்சுக்கூடம்

இப்பகுதியில் இது ஒன்றே.

ஆகையால்

உங்கள் வேலையை எங்களிடம் கொடுங்கள்.

*         *         *

தமிழிலும் ஆங்கிலத்திலும்

வேலைகள் செய்து திருப்திகரமாய் கொடுக்கப்படும்.

கலியாணம், புதுமைகட்கு அழைப்புப்

பத்திரிகைகள், கார்டு, கவர்கள், பழப்பைகள்

முதலியன

பல கலர்களில் விசேஷ

வேலைப்பாட்டுடன் செய்து வருவது

யாவரும் அறிந்ததே.

தேர்ச்சிபெற்ற வேலையாளர்களைக் கொண்டு

வேலைகள் செய்யப்படுவதால்

கண்கவர் வனப்போடு விளங்குகிறது.

மானேஜர், குமரன் ஆபீஸ், காரைக்குடி.

# ஸ்ரீ மாணிக்கவாசகரின் மாட்சி.

ரெவரெண்டு எச். ஏ. பாப்லி.

இத்தேசத்தில் எழும்பி வாரநின்ற பக்தர்களில் மிக்க சிறப்பமைந்த சில மகான்களிலே ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் ஒருவர். சங்கராச்சாரியர், ராமானுஜாச்சாரியர், சைதன்னியர், துளசிதாஸ், என்பவர்களைப் போன்று அவர் ஆத்ம பக்தியை விருத்தியாக்கி ஈஸ்வர ஞானத்தைச் சிறப்பித்து நிலைநிறுத்தி அனேகர்க்குப் பக்தியனுபவ முறையை வெளிப்படுத்தி நாட்டினர். தமிழகத்தில் அவர் பாடின பாடல்களைக் கொண்டு பக்தர் அனேகர் பிழையுணர்ந்தோதும் திருநாமந் துதித்தும் கடவுள் வழிபாடு செய்துமிருப்பார்கள். தமிழ் நாடெங்கும் அவர் பாடல்கள் வழங்கி வருகின்றன. ஸ்ரீமான் சுந்திரம் பிள்ளையவர்கள் பின் வருமாறு சொன்னது அவர் மாட்சியைக் காண்பித்தது.

> மனங்கரைந்து மலங்கெடுக்கும்
> வாசகத்தின் மாண்டோர்கள்
> கனஞ்சடையென் றுருவேற்றிக்
> கண்மூடிக் கதறுவரோ?

போப் பண்டிதர் திருவாசகத்தைக் குறித்து 'தூய்மையும் சாந்தியும் சாயுச்சியமும் வேண்டும் என்ற ஆவல் இந்நூலில் சிறந்து விளங்கினதுபோல் மற்றுள நூலில் காணப்பட்டதரிது.' என்றெழுதியுள்ளார். வேறிடத்திலும், அவர் இதயமும் மனமும் சிறு பட்டுப்பூச்சிகள் பூக்களெல்லாம் பறந்துவிட்டு சாறு உண்டதுபோல இயற்பொருட்களெல்லாவற்றிலும் கடவுளது இயக்கங்களெல்லாவற்றிலும் புது நயங்களைப்பெற்று அனுபவத்தில் வைத்து விளக்கிக்காட்டினர்'' என்றும் எழுதினர். சிலர் அவரை சைவ சமயத்தின் ஸ்ரீ பவுல் என்பவரையும் சிலர் ஸ்ரீ பிரான்ஸிஸ் என்பவரையும் விளம்பி உவமப்படுத்தினர். எவ்வாறு சொல்லியும் அவர் நமது தேசத்தில் பக்தி விஷயங்களில் சிறந்துவிளங்கின பாடகரும் கீர்த்திபெற்ற பக்தருமானர் என்பதைப்பற்றிச் சிறிதும் ஐயமில்லை.

அவரது ஜீவிய சரிதை இரண்டு நூற்களில் விரித்தெழுதியுளது என்று காணப்படுகிறது. அவை வாதவூரர் புராணம் திருவிளையாடற் புராணம் என்பன. எனினும் இவைகளில் காணப்பட்ட சரிதை முழுவதும் உண்மையுள்ளதென்று சாதித்தல் ஏலாது. அனேக கட்டுக்கதைகளும் இவைகளில் சேர்ந்துகொண்டிருக்கின்றன என்பது திண்ணம். அவர் இறந்து நாலைந்து நூற்றாண்டுகளுக்குப் பின் இரண்டு புராணங்களும் ஆக்கப்பட்டன என்பது தெளிவு. அக்காலத்தில் அவர் சரிதையைக்குறித்து பற்பல விநோதமான கதைகள் தோன்றியுள்ளன. புராணம் எழுதினவர் அவையெல்லாம் சேர்த்து எழுதினர் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அவைகளில் எழுதியுள்ள மூலசரிதை உண்மையென்று நம்பினல் அவர் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சனாய் அரசனால் சிறப்புப்பெற்றவர் என்றறியலாம். அவர் ராஜாங்க விஷயத்திலும்கல்வியிலும் கீர்த்தி பெற்றவர் என்றும் உலக இயக்கங்களைப்பற்றி ஆத்மதிருப்தி

South India has practically one Life Assurance

யடையாதவர்என்றும் நினைக்கப் பலசான்றுகள் உள்ளன. அவர் பாடின போற்றித் திருவகவல் என்றதிலே இது தெளிவாய் விளங்கிற்று.

'மிண்டிய மாயாவாத மென்னும்
சண்டமாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து,
உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபேதத்த கடுவிடம் எய்தி,
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்'

இதுகொண்டு அவர் பல சமய நூற்களைக் கற்றுணர்ந்து ஆழ்ந்த ஆராய்ச்சி செய்த பின்பே சைவ சித்தாந்த கட்டளைகளை ஒப்புக்கொண்டு மனமமைந்த மகிழ்வுடன் அவைகளை நன்னெறி மொழியென்று பெற்று நடந்தார் என்று நாம் அறியலாகும். ஸ்ரீ பவுல் என்ற மகானைப்போல தெய்வீக தரிசனம் கண்டபின் உறுதி அடைந்தார் என்பது வெளிப்படை. திருப்பெருந்துறையில் சிவபிரானைக் கண்டு அவர்க்கு உயிரைக் கொடுத்து அவரை சற்குருவாக ஏற்றுக்கொண்டனர். இது விஷயம் பல பாட்டுகளினும் வெளிப்பட்டது. அந்நாள் முதல் அவருக்கு ஆத்ம சாந்தி ஆரம்பித்தது என்பது திண்ணம். முக்கியமாய் திருவம்மானை என்ற பாடலில் இந்தச் சம்பவத்தின் உணர்ச்சி மிகவும் விரித்துரைக்கப்பட்டது.

'பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்
[சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா வமுதா அலை கடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மா
[னாய்'

'வான் வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்
[திட்டு,
ஊன்வந் துரோமங்க ளுள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே, பாடுதுங்காண் அம்மா
[னாய்'

இவையிரண்டினும் மற்றும் பலவற்றினும் அவ்வாத்மீக அனுபவத்தை வெளிப்படுத்தினார் என்பதற்கு ஐயமின்று. அந்நாள் முதலாக உயிர்விடும் நாள் வரைக்கும் அவர் கடவுள் மாட்சியையும் தமது ஆத்ம பக்தியையும் பாடிக்கொண்டு வந்தனர்.

இப்பாடல்களிலே சைவ சித்தாந்தத் தாற்பரியங்களைச் சொற் சுவையும் பொருள் மாட்சியும் பாவினிப்பு முடையதாக விளக்கிக் காட்டினர். ஸ்ரீமான் பண்டிதர் அனவரதவிநாயகம்பிள்ளையவர்கள் இதைப்பற்றி 'சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக விளக்கும் ஒரு தோத்திர நூல்' என்றும் 'தேவாரத் திருமுறைகளில் அவை வெளிப்பட்டதைக் காட்டிலும் இங்கு அதிக விளக்கமாக வெளிப்பட்டுள்ளன' என்றும் எழுதினார்.

ஸ்ரீ மாணிக்கவாசகர் ஆகமங்கள், இருவினையொப்பு, மாயாவாதம், மூதிய சமயங்கள், கடவுளது அங்காரக் கர்த்தத்துவம் முதலிய ஞானோபதேசங்களையும் பலமுறையில் சொல்லிப் பாடல்களில் வெளிப்படுத்தினார். இப்பாடல்களில், முக்கியமாய் திருவாசகம் என்ற நூலில், அவரது மனோநிலையின்னதென்று அறிந்து கொள்ளலாகும். இவைகளில் தோன்றுகிற முக்கியமான கருத்துக்கள் பின்வருபவை யென்றறிக.

### ஏகதேவபக்தி.

ஸ்ரீ மாணிக்கவாசகர் ஒரே தெய்வம் கொண்டாடி முழு மனத்துடன் அவரைப் பற்றிக் கொண்டனர். பொய்யில் புலவர்,

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்று பாடினதுபோல ஸ்ரீ மாணிக்கர் கடவுளைப் பற்றிக்கொண்டு மற்றுப்பற்றெல்லாம் விட்டுப்ந்தனர். 'கடவுளை அறிவதே நித்திய



ஜீவன்' என்று இயேசுபெருமான் சொல்லியது அவர் கருத்துமாயிற்று. கடவுள் ஒருவர் என்றும் அவ்வொருவருக்கே வழிபாடு செய்தலொழிய வேறொரு தெய்வத்துக்குச் செய்தலாகாது என்றும் பலமுறையாக அதிகமாக வற்புறுத்திப்பாடினார். இது பின்வரும் உதாரணங்களால் விளங்கும்.

'பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும்
கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கும்
இயல்பானான்சாழலோ'

'கொள்ளேன் புரந்தரன் மாலயன்,
வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடியாரொடல்லா
னரகம்புகினும்
என்னேன், திருவருளாலே
யிருக்கப்பெறின், இறைவா
உள்ளேன் பிறதெய்வம், உன்னையல்லா
தெங்கள் உத்தமனே'

இவ்வாறாகக் கடவுளைப் பற்றிக்கொண்டு அவரது குணாதிசயங்களை மிகவும் அழகாக வர்ணித்துக்காட்டினார். திருவெம்பாவையில்,

முன்னைப் பழம் பொருட்கு
முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே

என்று கடவுள் ஆதிபந்தமில்லாதவர் என்று அதிக நன்னயமாகப் பாடினார்.

திருவம்மானையில் பற்பல விடங்களில் கடவுளின்மாட்சியை, மறக்க முடியாத பாக்களில் விளக்குகிறார். பின் வருவன சில.

"ஆராலுங் காண்டற்கரியான் எமக்கெளிய
பேராளன்"

"தூயாதே யுள்குவாருள்ளிருக்கும் உள்ளானை"

"தாயான தத்துவனை"

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானை"

மறுபடியும் கைமாறு கொடுத்தல் என்ற பாட்டில்,

"தன்னுங் கீழுளு மேலுளும் யாவுளும்
என்னு மெண்ணெயும்போல் நின்ற எந்தையே"

என்று சொல்லிக் கடவுளது உயர்தன்மையையும் அவரது அன்பு நிலையையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்தினார். பக்தர் யாவரும் கடவுளை அறியும் அறிவடைந்து அவருடன் ஐக்கிய சகவாசஞ் செய்து அவரது மிக்க மாட்சியை உரைத்தது போல ஸ்ரீ மாணிக்கரும் இவ்வகையான அனுபவத்தை அடைந்தார் என்று பலவாறாகக் காண்பித்தனர். பக்தர் அனைவரும் அடையும் ஒதுக்க வொற்றுமையை அவர் பூரித்தடைந்தனர்.

### தீவினையுணர்ச்சி.

உண்மைப் பக்தர் யாவரும் தீயகுணங்களையும் தீய செய்கைகளையும் மிகவும் தெளிவாகக் கண்டறிந்து இவைகளைப்பற்றி மனமாரப் புலம்பினார்கள். எத்துணை உயர்ந்து கடவுளை அண்டிக் கொண்டனரோ அத்துணையாகவே தமது இத்தன்மையை உணர்ந்து கொண்டனர். இதுபோலவே ஸ்ரீ மாணிக்கவாசகரும் தமது மனத்தின் குறைவுகளையும் இழிவுகளையும் நன்கு உணர்ந்து பல பாட்டுக்களில் புலம்பினார். தமது சீர்கெட்ட நிலையைப் பின்வரும் பெயர்களில் காண்பித்தார்.

'யாவரினுங் கடையனுப நாயினேன்"
"நாணமில்லா நாயினேன்"
"பொல்லா நாயான புன்மையேன்"
"எட்டி மரம்"
"வஞ்சகப்பெரும் புலையனேன்"
"வல்வினைக்காடு"
"இரும்பு தருமனத்தேன்"

என்பனவே.

'பாவிகளில் தலைவனாய நான்' என்று ஸ்ரீ பவுல் அப்போஸ்தவர் தம்மை விளித்ததுபோலஇவரும் கடவுளின் தூய்மையான தன்மைக்கு முன்னதாகத் தம்மையே அவ்

கென்னிங்டியாவிலுள்ள ஒரே லைப் அஷ்யூரன்ஸ்

வாறே கண்டுகொண்டனர். சூரியன் உதித்த பின் உலகின் விளக்குகளும் வானத்தின் மீன்களும் எரியாமல் நின்கின்றனபோல பக்தர்களும் கடவுள் முன்னிலையில் தூய்மைய ரல்லாதவ ராவார்கள் என்பது உறுதி. நீத்தல் விண்ணப்பம் ஆனந்தாதீதம் என்ற பாட்டுகளில் இவ்வுண்மை விளங்கும்.

பொருத்தமின்மையேன் பொய்மையுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்தமின்மையேன் வஞ்சமுண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே''

என்று மனமார்ந்து புலம்பினர். மறுபடியும் ஆனந்த பரவசத்திலும்,

'யானேபொய், யென்னெஞ்சும் பொய்,
யெனன்பும் பொய்''

என்றும் பாடினர்.

அவர் இவ்வாறு பாடினது உண்மையைக் காட்டாமல் மனோராஜ்யமாய் மனிதர்களில் உண்டான தாழ்நிலையை உரைத்தனர் என்று சிலர் கருதுவார்; அது பொருத்தமன்று. ஏனென்றால் இப்பாடல்கள் உண்மையான அனுபவத்தை வெளிப்படுத்தின என்பது கையில்நெல்லிக்கனிபோல்காணப்படுகிறது. அதுவுமல்லாமல் இவ்வாறு எண்ணிக்கொள்ளல் குற்றம் என்று நினைக்கற்பாலதன்று. இது பாடகரின் உயர் மாட்சியை மிகவும் தெளிவாகக் காண்பிக்கிறது. மெய்ப் பக்தர் யாவரும் இப்படியே உணர்ந்துகொண்டார்கள். கடவுளோடு அவர் அடைந்த நெருங்கிய ஒற்றுமை இதினாலே விளங்கும்.

## விடுதலையின் ஆனந்தம்.

ஸ்ரீ மாணிக்கவாசகரின் ஆத்மீக அனுபவத்தில் இவ்வரிய உணர்ச்சியே அதிக சிறப்பாய் உண்டாயிற்றென்று ஐயமின்றியே சாதிக்கலாம். திருவாசகத்தில் அநேக பாட்டுக்கள் வெற்றியின் பாடல்கள் என்பது திண்ணம். திருவெம்பாவை என்ற பாடல் சிவபிரான் முதலில் அவரைச் சந்தித்து ஆட்கொண்டுவந்து மனச்சாந்தியைத் தந்ததை வெளிப்படுத்துகிறது.

'கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான்
[பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை'

என்பது இவ்வாத்மீக வெற்றியைக் காட்டுகிறது.

திருவம்மானை, ஆனந்தாதீதப், திருக்கோத்தும்பீ முதலியவைகளில் சிவபிரான் திருவருள் செய்து தம்மை ஆட்கொண்ட செய்கையையே அவர் காண்பித்தார். பிடித்த பத்து, கண்ட பத்து என்றவைகளிலும் வேறு சில பாடல்களிலும் தாமே பற்றிக்கொண்ட பற்றையும் அடைந்த இன்பத்தையும் காட்டுகிறார். ஆத்மவிடுதலையில் கடவுள் செய்கையும் மனிதன் செய்கையுமாகிய இரண்டும் சேர்ந்துகொள்ளல் வேண்டும். பார்வையில் சூரியனொளியும் கண்ணறிதலும் வேண்டியது போலிருக்கிறது. 'பிடித்த பத்து' என்ற பாடலில் இது அதிக சிறப்பாக விளங்கிற்று.

'எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே'
'இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'
'பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே'

'அச்சோப்பதிகம்' என்ற உன்னதப் பாடலில் விடுதலையின் ஆனந்தம் மிகவும் சிறந்து விளங்கும். இதிலே அவர் மனம் எல்லாக் குறைவுகளுக்கும் மேற்கொண்டு மிதமிஞ்சி மகிழ்ந்து கடவுளைப் போற்றிப் பாடுகிறது. அசத்துள்ள இவ்வுலகில் சத்





துள்ள மெய்ப்பொருளை அவர் கண்டறிந்து இம்மையில் யான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்றவாறு சின்மயக் கடவுளுடன் நெருக்கமான ஒற்றுமை பெற்றாரென்பது வெளிப்படை. ஐம்பொறிகளுக்குரிய இவ்வுலகத்தின் சம்பவங்களையும் பொருட்களையும் கொண்டும் பெண்கள் சிறு விளையாட்டுகளைக் கொண்டும் அவர் மனோ வாக்குக் காயத்திற்கு அதீத பொருளையும் தீர்த்தத்தையும் அடைந்து மற்றோர்க்கு வெளிப்படுத்தினார். அவர் உலகின் சின்மய தரிசினிகளுக்குள் சிறந்தவர் என்பது திண்ணம். அவர் கடவுளுக்கென்று எல்லாவற்றையும் எறிந்துவிட்டு கடவுளிடத்தில் எல்லாவற்றையும் அடைந்தனர்.

"யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க் கொன்றைச்
சிவனே எம்பெருமான் எம்
மானே உன்னருள் பெறு நாள்
என்றென்றே வருந்துவனே"

என்று அவர் பாடியவாறு யாம் யாவரும் சொல்லத் துணிவோமாக.

# V. V. Co.,

**புதிய சரக்குகள் !** **குறைந்த விலைகள் !**

சகோதர சகோதரிகளே !

தங்களுடைய தேவைக்கு வேண்டிய சாமான்கள்யாவும் நயமானதாகவும் விலை குறைவாகவும் கீழ்கண்ட கம்பெனியில் பெற்றுக்கொள்ளலாம்.

கோட்டிங் துணிகள், ஷர்ட்டிங் சில்க், ஜாகெட் சில்க், இங்கிலீஷ் மருந்துகள், குழந்தைகள் ஆகாரம், ரொட்டி பிஸ்கட்டுகள், சிகரெட் டின், ஸ்டேஷனரி விளையாட்டு சாமான்கள், டென்னிஸ் புட்பால், பாட்மிண்ட்டன் செட், பெட்ரோமக்ஸ் லைட், தெர்மாஸ் பிலாஸ்க், எலெக்டரிக், டார்ச் பாகட் லைட்டுகள், காரச்சிச் சேலைகள், கைக்கெடியாரங்கள், கண் மார்க்கு நூல் கண்டுகள், டீ, காப்பி, கொக்கோ ஓவல் டைன், பார்லி, ஆரூட் முதலான அநேக சாமான்கள் கிடைக்கும்.

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும் :

வி. வி. கம்பெனி, **கோட்டையூர்.**

(இராமநாதபுரம் ஜில்லா.)

# உடன் பிறப்புப் பான்மை.

த. இராமகிருஷ்ண விச்வகர்மன் வேதமாணிக்கன்.

*அஜ்யேஷ்டாஸோ அகநிஷ்டாஸ ஏதே*
*ஸம் ப்ராதரோ வாவ்ருது: ஸௌபகாய*
—இருக்கு, ரு-௬0-ரு.

*தே அஜ்யேஷ்டா அகநிஷ்டாஸ உத்பிதோ*
*அமத்யமாஸோ மஹஸா விவாவ்ருது:*
*ஸுஜாதாஸோ ஜநுஷா ப்ருச்நி மாதரோ*
*திவோ மர்யா ஆ நோ அச்சா ஜிகாதந.*
—இருக்கு, ரு-ருக-௬.

"எவரும் முதியாருமல்லர் இளையாருமல்லர் யாவரும் உடன்பிறந்தார். நற்றிரு வெய்தற்கு யாவருங்கலந்து வளம்பெற முயன்றிடுமின்."

"அவர்கள் அனைவரும் முதியாருமல்லர் இளையாருமல்லர் நடுவனுமல்லர். எவ்வகை முற்போக்கும் அடைதற்குரியர். உள்ளக் கிளர்ச்சியுடன் நன்னெறியே வளம்பெற முயன்றிடுவர். நற்குடிப் பிறந்து நாட்டைத் தாயாக வழிபடுகின்ற இத்தகை நன்மக்களை நப்பால் அழைத்திடுமின்."

இச்செய்யுட்கள் 'சுற்ற வன்மை' யுணர்த்துவன. மாறுபட்ட உயர்வு தாழ்வுகளை யொறுப்பன. யாவரும் சரி நிகர் சமான மென்றறைவன. எவரும் சிறியார் பெரியார் நடுத்தரத்தினரென்ற பாகுபாடு கிடையாது. சிலர் உயர்ந்தார் சிலர் இழிந்தா ரென்பதில்லை; சிலர் தீண்டுதற் குரியர் சிலர் தீண்டத் தகாதா ரென்பதில்லை; சிலர் பிறப்பால் புனிதர் சிலர் பிறப்பால் மாசுடைய ரென்பதில்லை; யாவரும் சரிநிகர் சமானர்; எவர்க்கும் பிறப்புமுதல் ஏற்பட்ட உரிமைகள் ஓரே தன்மைத்து; யாவரும் (திவ: மர்யா:) நற்சோதியீன்ற நன்மக்கள். இவருள் உயர்வு தாழ்வு கற்பிப்பாரும் வேற்றுமையினை வளர்ப்பாரும்; மாறுபட்ட, இயற்கையோ டொவ்வாத கொள்கையினை நிறுவ முயல்வாரும் கயவராவர். யாவரும் முழுமுதற் சோதியின் புதல்வர்களாகலான் இறக்குந் தன்மை வாய்ந்த இம்மாநிடர் ஒவ்வொருவ ரிதயத்தும் ஒளிமிக்க உயர்ந்த இறவாச் சோதிப் பொருள் குடிகொண்டு சுடர்விட் டெரிகின்றது. அன்புடையீர்! அச்சோதியைக் காண்மின்! நுகர்மின்! புறத்தே தோன்றும் நிறம் உருவ வேறுபாட்டால் அவ்வுயர் சோதியை உயர்ந்தது இழிந்ததெனக் கருதாதீர்.

ஒவ்வொரு மக்களும் (ஸௌ—பகாய) சீரிய ஆக்கம் படைத்தற்குரியர். யாவரும் சீரிய செல்வமும் உயரிய ஆளுகையும் இனிய உரிமையும் அரிய புகழும் தேடற்பாலனவாம். முயற்சி யுடையார் ஆக்கமெய்துவர். முயற்சி யில்லார் இழிந்து நிற்பர். எவர்க்கும் பிறரைத் தடை செய்வதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. முற்போக்கடைந்தவர் பின்னிற்பவருக்குத் தக்கன வுதவித் தம்முடன் இயக்குதற்கு முயலுதல் வேண்டும். மேனிலை யெய்துவாரைத் தடுப்பவனும், அந்நெறிகளை மறுப்பவனும், பிறர்க்குத் தாழ்ந்து நிலவவேண்டுமென்னுங் கருத்தோடு தம்மாலியன்றவளவு முயல்வானும் பிறர்க்கே யன்றித் தமக்கும் கேடு சூழ்பவனாவான்.

யாவரும் உயர்வடைதல் வேண்டும். மக்கள் (உத்—பித:) மேலோங்குதற்கே பிறந்திருக்கின்றனர். மேற் செல்லல் உயர்வடைதல் முற்போக்கிற் புகழ் பெறுத லென்பன ஒவ்வொருவருக்கும் பிறப்பு முதற் கிடைத்த உரிமைகளாகும். யாவருக்கும் ஒப்ப முடிந்த தனியுரிமையொன் றுண்டெனின் இதுவேயாம். இதற்கு மாறுபடப் புகல்வன கற்பனையே. 'உத்பித' மென்பது மேன்மேலுயர்தல்; முன் வளர்ச்சியில் நிகழுந் தடைகளை வேரறக் களையு மாற்றலையுந் தெளிவுறச் சுட்டும். உழைப்பால் வளர்ச்சி குன்றுறது; பிறரால் குறைக்கவு மியலாது. குறைக்க முயல்வார்க்கு அடியோடு கேடு விளையு மென்பதையும் இச்சொல் வற்புறுத்துகின்றது. மக்களொவ்வொருவரும் இவ்வாற்றலைத் தம்மகத்து நிறுவுதல் வேண்டும். இதற்கேற்பப் பயிலுதல் இன்றியமையாதது. இத்தகைய ஊக்கம் நல்காப் பயிற்சி அகற்றற் பாலதாம். ஆண்மையும் வீரமும் ஆக்கமும் வளர்ப்பதே நற்பயிற்சி முறை. மக்கள் புறவளர்ச்சியும் அகவளர்ச்சியும் பெருக்குதற்கே பிறந்திருக்கின்றனர். சிறப்பும் செல்வமு மடைதலே பிறவிப் பயன். தம் வளர்ச்சி பிற்றோன்றும் எதிர்ப்புக்களைத் தகர்க்கு மாற்றல் அகத்தே நிலவுகின்றது. வலிமையிலோமென் றெவருங் கருத வேண்டா; நும்மகத்து உத்பேதன சக்தி மிளிர்கின்றது. எதிர்ப்பவற்றைத் தகர்க்கும் உத்பேதன வாற்றலைப் பயன் படுத்தின் தவறுது வெற்றிபெறுவீர்.

மக்கள்யாவரும் (ஜநுஷா—ஸு—ஜாதாஸ:) பிறப்பால் உயர்ந்தவர்களே. பிறப்பால் இழிந்தவர்கள் எவருமில்லை. உலகில்காணப் பெறும் உயர்வு தாழ்வு செயல் வேற்றுமையான் நிகழ்வதே யன்றி உண்மையில் நிலைத்ததன்று. பிறப்பால் இழிந்தவன் தாழ்ந்தவன் ஏழை வலியிலா னென்றெவருந் தம்மைக் கருதற்க. எவருந் தம்மைத் தாழ்ந்தோ ரென்றும் பிறரை இழிந்தோ ரென்றும் நினைக்கவேண்டாம். இறைவன் அனைவர்க்குந் தந்தை. யாவரும் அவனது 'இறவா-மக்கள்' அமுத புத்திரர். இவருள் எவருயர்ந்தார்? எவர் தாழ்ந்தார்?

ஒரு தந்தை ஈன்ற மக்களெல்லாம் தமக்குள் ஒத்த உரிமையுடையவர்களேயாம். முற்பிறந்தார் பிற்பிறந்தார் நடுவண் டோன்றின ரென்ற வேறுபாடு கிடையாது. 'அஜ்யேஷ்டாஸ:, அ-மத்யமாஸ:, அ-கநிஷ்டாஸ:, முதியார் இளையாரென்ற பாகுபாடின்றி யாவரும் சமானர். எத்துணைப் பெயராயினும் யாவரும் ஒத்த உரிமை வாய்ந்த உடன் பிறந்தார். எல்லாத் தேயத்தும் முற்போக்கிலும் செல்வாக்கிலும் நுகர்வுகளிலும் ஒத்த உரிமையுடையார். தன்னலங்கருதிப் பிறரை ஏமாற்றித்தம்பொருட்டு எல்லா நுகர்வுகளையும் பெற முயலுதல் எவர்க்குமாகா. அவாவொன்றே உயர்வு தாழ்வுக் கடிப்படை. சமநிலை கருதுவார் ஆசை யொழித்தற் குரியர். பொது நலன் பயக்கும் நெறியே செல்லுதல் இன்றியமையாதது. நிலன் உடன் பிறந்தா ரனைவருக்கும் சமவுரிமை யுடையது. பிறர்க்கின்றித் தமக்கே உரிமை யென்று கருதுவோன் குற்றமுடையானும்நீதிதவறிபவனுமாவான்

யாவரும் (ப்ருச்நி) நிலத்தைத் (மாதா:) தாயாகக் கொள்ள வேண்டும். தாய் நாட்டிற்கு நற்புதல்வர்களாதல் வேண்டும். உண்மையில் எல்லா உயிர்கட்கும் தாயாகத் திகழ்வது நிலன். நிலத்தில் விளையும் உணவுப் பொருட்களாலேயே உயிர்கள் வாழ்கின்றன. மிகச் சில நன்மக்களே தாய்நாட்டின் பொருட்டுத் தங்கள் பொருட்களைத் துறந்து நின்று பணியாற்ற முனைந்திருக்கின்றனர். தாயிடத் தன்புறுதலும் தாய்நாட்டுப் பற்றுடன் பணியாற்றலும் மக்கள் முதற் கடமையாம்.

and sympathetic Insurance service.

மிகத்திறமையாகவும் அனுதாபத்துடனும் உதவிபுரிவதே

## குமரன் ஆண்டு மடல்.

மக்கள் யாவரும் சமநிலை வாய்ந்த உடன் பிறந்தார். தாய்ப்பணி யாற்றல் அவர்தம் சிறந்த கடன். ஆராய்ந்து காணின் உடன் பிறப்பு வன்மை எத்துணை விழுமியது? பிரிந்து வாழ்வதால் வலிமை மிகுகின்றதா, அன்றிக் கலந்துறைவதால் வலிமை பெருகுகின்றதா சிந்தித்திடுமின். இவ்வாற்றல் வளர்த்தற்கு இருநெறிகளுண்டு. (ஸம்வாவ்ருது) கலந்து நின்று உயர்வு கருதி உழைத்தலும்; (வி-வாவ்ருது) தனித்து நின்று தம் மாற்றல் பெருக்கலுமாம். யாண்டும் மனித வாழ்க்கை தனித்தும் சமூகத்துடன் கலந்தும் நிகழ்தற் பாலதாம். மறைகளில் பலவிடத்துக் கலந்து வாழ்தலை 'ஸம்-பூதி, ஸ-ஜந்ய, ஸம்-வாவ்ருது' என்றும்; தனித்து வாழ்தலை 'அ-ஸம்பூதி, ப்ரதி-ஜந்ய, வி-வாவ்ருது, என்றும் வழங்கப் படுகின்றன. இச்செய்யுட்களும் இருவகை வாழ்க்கையினையும் புலப்படுத்துகின்றன. தனித்த வாழ்க்கையில் பலதுறைகளிலும் சிறந்தபயிற்சி பெறவேண்டுவது இன்றியமையாததோடு, சமூக வாழ்க்கைக்கு எவ்வித இடையூறும் பயத்தலாகாது. தனித்தியங்கித் தன்னலம் பெருக்குதலிற் சுதந்திரமும்; கலந்தியங்கிச் சமூகநலம் நாடுதலிற் பிறர்வயப்பட்டு மிருத்தற் பாலதாம். குழூஉநலன் யாவருங் கலந்தியற்றுந் திறத்தது. தன்னலன் தம் விருப்பு ஆராய்விற் கேற்ப அமைக்குந் திறத்தது. உறுதிப் பயன்கருதித் தனித்துங்கலந்தும் முயல்வன (மஹஸா) சுறுசுறுப்பு களிப்பு தன்னலமின்மை மகிழ்வு வண்மை யனைய நற்பண்புக்களோடியற்றற் பாலதாம். அன்றியும் விடாமுயற்சியோடுழைத்து பயனெய்தற்குரித்தென்று 'மஹஸ' என்னுஞ் சொல்லால் வற்புறுத்தக் கிடக்கின்றது. சோம்பர் அசட்டை தன்னயம் அவா அச்சம் பற்றின்மை யாதிய இழிநீர்மையான் பயனெய்திப் புகழடைதற் கியலாவாம்.

இவையனைத்தும் முற்காட்டிய இருசெய்யுட்களின் கருத்துக்களாகும். இவ்வுரைகள் உள்ளத்து நிலவின் உடன்பிறப்பு வன்மை வலிபெறும். மக்கட் சமூகத்துக் கழகங்களுங் கூட்டங்களுமே ஒருமை வன்மை வளர்ப்பன. ஒருமை வன்மை நிலவும் வரையில் உயர்வு இழிவென்னும் வேற்றுமையுணர்வு வலிமை யடையாது. எவரும் உயர்ந்தாரல்லர்; எவரும் இழிந்தாரல்லர்; எவரும் நடுநின்றாரு மல்லர். யாவரும் சரி நிகர் சமானர். இந்நீர்மை யாவருள்ளத்தும் உரையிலுஞ் செயலிலும் யாண்டுங் கருதலோடு உறைதற் பாலதாம். அறிஞர் இச் செய்யுட்களை மேலும் ஆராய்ந்திடுக. இவை கூட்டுறவு வன்மை வளர்ப்பன.

> பாருக்குள்ளே சமத்தன்மை—தொடர்
> பற்றுஞ் சகோதரத் தன்மை
> யாருக்குந் தீமை செய்யாது—புவி
> யெங்கும் விடுதலை செய்யும்.


### கூழை ரங்கன்.

இது அஞ்சா நெஞ்சனால் எழுதப்பெற்ற ஓர் இனிய அற்புத நவீனகம்.
தமிழ்ச் சுவை அறிவார்க்குத் தேனென இனிக்கும் என்பதில்
ஐயமில்லை. இதன் விலை ரூபாய் ஒன்றுதான். தபாற்கூலி வேறு.

மானேஜர்,
"குமரன் புத்தகசாலை" காரைக்குடி.




# காலனுக் குரைத்தல்.

காலா! உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்—என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்!—அட (காலா)

வேலாயுத விருதினை மனத்திற் பதிக்கிறேன்—நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர்தமை யெண்ணித் துதிக்கிறேன்—ஆதி
மூலா என்று கதறிய யானையைக் காக்கவே—நின்றன்
முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ! கெட்ட மூடனே!—அட (கா)

ஆலால முண்டவ னடிசரணென்ற மார்க்கண்டன்—தன
தாவி கவரப் போய் நீ பட்ட பாட்டினை யறிகுவேன்—இங்கு
நாலாயிரங் காதம் விட்டகல்! உனை விதிக்கிறேன்—ஹரி
நாராயணனாக நின் முன்னே உதிக்கிறேன்—அட (காலா)

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

# உயர்தரக் கல்வி கற்ற முறை.

திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி.

பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்த பிறகு ஏட்டைக் கட்டி இறப்பில் வைத்து விடுவோர் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது என்றால் உயர்வு நவிற்சி அணி அல்ல. அவர்கள் பி. ஏ, எம். ஏ., பட்டங்களைப் பெற்று உரிய அணிகளை அணிந்துகொண்டு விடுபட்ட கைதிகளிலும் மிக்க களிப்போடு வீட்டுக்கு ஒரே வேகமாய்த் திரும்பிப் போய்விடுகிறார்கள். இந்த உவகைப் பெருக்கில் தாங்கள் கல்விக் கடலின் கரையேறிவிட்டதாகக் கருதி, (க) "கற்பனவும் இனி அமையும்" என்று உறுதி செய்துகொள்வார்களானால் வியப்பன்று. இதையொத்த மருள்கொண்ட மன நிலை காண்பதரிது. இதற்கோர் குறியீடாகத் தான் இருள்மயமான கருநிற அங்கியைப் போர்த்துக் கொள்வதுபோலும்!

கல்விமேற் கைப்பு இவர்களிடத்திலிருப்பது போல் யாரிடத்திலும் இல்லை. புத்தகம் என்றால் வேப்பங்காய். உறுதி பயக்கும் ஆன்றோர் நூலெல்லாம் தலைவலிகொடுக்கும் கொடிய நஞ்சு. கவியோ மனதைப் புண்படுத்தும் பொல்லாத கருவி. (க) "நவில்தொறும் நூல் நயம் போலும்" என்ற உவமானத்திலும் பொக்கான சொற்றொடர் கிடையாது. (உ) "தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்" கல்வியென்றாராம். யாம் கண்டது துன்பம் ஒன்றுதான்; அதுவுந் தொடங்குங்கால் இருந்ததற்கு முடிவில் இருந்தது அவ்வளவு குறைவில்லை என நமக்குக் கையடித்துக்கொடுப்பார்கள்.

கல்விமேல் இத்தகைய கைப்பு எளிதில், தானாக வந்ததா? எவ்வளவு சிரமம் எவ்வளவு செலவு ஏற்பட்டு வந்தது என்று கணித்தாலன்றோ அதன் அருமையும் பெருமையும் தெரியவரும்.

படிக்க வைக்கும் சடங்கில் தாம்பாளத்தின்மீது ஒரு பக்கா அரிசியைப் பரப்பி, அதில் வரைந்து எழுதுவதற்கு ஒரு கருவியாக முதலில் கொண்டு, பின்னர் அரிசியோடு சேர்த்து ஆசிரியருக்கு அர்ப்பணம் செய்து விடுகிற வெள்ளி ரூபா ஒன்றுதான் முதல் முதலாகக் கொடுக்கிற அச்சாரம். கற்பலகைகள் உடைய உடைய வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். சின்னஞ் சிறு கைக்குள் அடங்காது விரல்கள் நோவ எடுத்துச் செல்லும் நோட்டுப் புத்தகங்கள் எத்தனை! அச்சிட்ட புத்தகங்கள் எத்தனை! இவைகள் ஒருக்கால் கைக்குள் அடங்குபவையாய் இருந்த போதிலும் அவ்வறியாச் சிறுவர் தலைக்குள் அடங்குதல் முடியவே முடியாது. பள்ளிக்கூடச் சிறையைக் கடந்த புண்ணிய ஆன்மாக்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் கேடென்றெண்ணி வாங்காது வாசியாது ஒழித்தெறியும் புத்தகங்களையெல்லாம் பள்ளிப்பிள்ளைகள் தலையிற் கட்டுகிற வியாபாரந்தான் என்னை! ஆங்கில நாட்டில் அச்சிட்ட புத்தகங்கள் அங்கு விலையாகாது கட்டிக்கிடந்தால் அடுத்த ஆண்டில் பறந்தோடி வந்து நல்ல விலையோடு நமது மாணவர் கையில் அமர்ந்துவிடும். பள்ளிப் பிள்ளைகள் தலையிலிருக்கும்

Insure Your life with United India Life Assurance Company.

சும்மாட்டில் கண்வைத்த வண்ணமாய் நம்மவர் இப்போது எழுதிவரும் இலக்கிய இலக்கண சமய சரித்திர ஆராய்ச்சிநூற் சுமைகளைப்பற்றி உரைக்க மனம் துணியவில்லை. நூல்களை,

எழுதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருக்கின்றார் மாணவர்கள் எண்ணில் பல்லோர்
எடுத்தெடுத்து விலைகொடுக்கப்பெற்றோர் தாமும்
இருக்கின்றார் இருக்கின்றார் இருக்கின்றாரே.

என்பது நூலாசிரியர்களுக்குப் புத்தக வியாபாரிகள் பாடும் பல்லவி.

வேறொரு வியாபாரத்திற்கும் மாணவர் இலக்காகிறார்கள். அதாவது பரீக்ஷைகள். இவைகளால் வரும் வரும்படிபற்றிய விவாதம் சர்க்காருக்கும பல்கலைக் கழகத்தாருக்கும் இடையே தீர்ந்த பாடில்லை. இப்போது இவ்விரு 'கம்பேனிக்காரும்' நடத்திவரும் வியாபாரம் வளர்ந்தேறி வருகிறது. வியாபாரத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் தற்காப்பு இவர்கள்பால் இல்லை என்று சொல்லவேண்டாம். பரீக்ஷைகளுக்குக் கட்டணம் கட்டும் நிபந்தனைகளைப் பார்த்தால் போதும். பரீக்ஷையில் மாணவன் தவறினால் 'கம்பேனி'க்காரருக்கு லாபம். ஒப்பேறிவிட்டாலோ நஷ்டம். இந்த வியாபார தத்துவத்தைப் பார்த்துத்தான், 'காந்த' விளக்குக்கு இன்றியமையாத ஊத உகும் 'மான்றில்' என்ற வலைக்கூட்டைக் கண்டுபிடித்தான் போலும். விளக்கில் வலைக்கூட்டை நித்தியமாய்ப் பிரதிஷ்டை செய்துவிட்டால் கோடிக்கணக்கான லாபம் எங்கிருந்துவரும். உத்தியோகம் கிடைக்கும் என்ற உறுதி எவ்வளவோ தற்போது குறைந்துவிட்ட போதிலும் மாணவர்பால் பரீக்ஷைக்குத் திரும்பத் திரும்பப் பணம் கட்டுவதில் விடாமுயற்சி குறைந்த பாடில்லை. பரீக்ஷைகளில் மடியும் மாணவர் எண்ணப் பெருக்கையும் செங்குறுதி நீர்ப்பெருக்கையும் அதனாற் பல்கலைக் கழகத்தாருக்கு உண்டாகும் வெற்றியையும் ஊதியத்தையும்பற்றி எழுதலாம் இதிகாசம். இந்தப் புறப்பொருளின் விரிவையும் பெருமையையும் கண்டிருந்தால் கலிங்கரையும் சோழனையும் அப்படியே விட்டுவிட்டுப் புலவர் ஜெயங்கொண்டார்,

வீழ்க வீழ்க மாணவர்
மடிந்து வீழ்க மாணவர்
வாழ்க வாழ்க பல்கலைக்
கழகம் வாழ்க வாழ்கவே

என்று பரணி பாடியிருப்பாரன்றோ.

பள்ளிக் கூடத்துக்குச் செலுத்திவந்த சம்பளத்தை மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் வேலை கிடையாது பரிதபிக்கும் ஏழை மாணவருக்கும் அவர் பெற்றோருக்கும் கண்ணீர் ஆறாய்ப் பெருகிவிடும். மாணவர்கள் பொதுவாக ஆறாவது வயது முதல் இருபத்திரண்டாவது வயது வரையும் மாசந்தோறும் செலுத்திவந்த தொகைகளை அப்போதைக்கப்போது வட்டிக்குப் போட்டிருந்தால் உத்தியோகத்தைத் தேடவேண்டாதபடி தக்க பெருந்தொகையாய்ச் சேர்ந்திருக்கும். இதைப்பற்றி, 'பி. ஏ. பட்டத்தைச்' சுருட்டிக் கையில் வைத்தபின் எண்ணுவது பசித்தவன் பழங்கணக்கைப் பார்த்த கதைதான்.

இன்னும் ஒரு விசித்திரச் செலவு மண்ணெண்ணெயை வற்றவைத்து வற்றவைத்து வெள்ளி எழும்வரை படித்துக் கண்ணாடி போட்ட கண்ணப்ப நாயனார் எத்தனை பேர்! பத்துவயதுப் பசலைகள் கண்ணாடி போட்டு உலாவுவதைப் பார்ப்பது கண்காட்சியா? சில தினங்களுக்கு முன் ஒரு பள்ளிக்கூடத்துக் காலேஜ் வகுப்புப் பிள்ளைகளின் கண்களை வைத்தியர் வந்து பரிசோதித்ததில் நூற்றுக்கு ஐம்பது பேருக்குக் கண் ஊனம் என்றும் கண்ணாடிபோட வேண்டும் என்றும் ஏற்பட்டு விட்டதாம். இதிலிருந்து, கல்வி இலாகாவுக்கும் கண்

யுனைடெட் இந்தியா லைப் அஷியூரன்ஸ் கம்பெனியில் இன்ஷியூர் செய்யுங்கள்.



ணாடி வியாபாரிகளுக்கும் பற்றுவரவு உண்டோ என்று சந்தேகிக்கச் சிலருக்கு இடந்தருகிறது.

இவ்வளவெல்லாம் செலவு செய்த பிறகு கல்வி வந்ததா? இல்லை. கலைகள் சம்பந்தமாகவும், சரித்திர சம்பந்தமாகவும், இலக்கிய இலக்கண சம்பந்தமாகவும் விலை கொடுத்துப் புத்தகங்கள் வாங்கியதற்கும், கண் பூத்துப்போகப் படித்ததற்கும் குறைவில்லை. அதற்கு வரவு வந்த படிப்புத்தான் மூன்று கலமும் பூஜ்யம்.

சரித்திர பாடங்களைப் படித்துப்படித்துப் பதக்கமும் பெற்றுவிடுவார்கள்; ஜப்பான் சரித்திரமும் ஜெர்மன் சரித்திரமும் "அண்ணாவிக்குப் பாடம்" என்றுகூடச் சொல்ல முடியாது. மின்சார விளக்கு எப்படி ஒளி வீசுகிற தென்பது தெரியாது. மின்சார தத்துவத்தைப்பற்றியோ நீண்ட நீண்ட ஆராய்ச்சி. வான சாஸ்திரம்பற்றித் தீருகிற கணக்குகளோ அபாரம்; செவ்வாய், புதன், வியாழன், சனி, எவையோ தெரியாது; வெள்ளியைப் பார்க்கவோ தூரதிருஷ்டிக் கண்ணாடி வேண்டும். ஆஸ்திரேலியா, கானடா முதலான நாடுகளிலுள்ள காற்றியக்கம் மழையின் போக்கு, நிலத்தைப் பற்றிய அடிப்படை பேதங்கள், நிலவரத்தை ஒட்டிஒட்டி ஓடும் ரயில்பாதைகள் வியாபார ஓட்டங்கள், இவைபோன்ற எண்ணிறந்த விஷயங்கள்பற்றிச் செய்கிற ஆராய்ச்சியின் அக்கறையைப் பார்த்தால், ஏதோ இன்னும் நாலைந்து வருஷத்தில் நாம் அந்நாடுகளில் கால் வைக்கக்கூடாது என்று இப்போதிருக்கிற அரசியல் தத்துவம் ஒழிந்துபோய், அந்நாடுகள் நமது 'சுயராஜ்யாதிபத்தியத்தின் அடியின் கீழுற்று, அவைகளை அடக்கியாளும் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டு, துரைத்தன நிர்வாகத்துக்கு நம் மாணவர் உத்தியோகஸ்தராய் அந்நாடுகளுக்குப் போகவேண்டியதேற்படும் போலும் என்று எண்ண இடந்தருகிறது. நாம் ஓடிஆடித் திரியக்கூடிய நமது நாட்டைப்பற்றிப் பாடமே கிடையாது. கல்கத்தா பல்கலைக் கழகத்து எம். ஏ. ஒருவருக்கு பம்பாய் எவ்விடத்துள்ளது என்று தெரியாது போயிற்றென்பது உலகப் பிரசித்தம். நமது சென்னைக்கழகத்து எம். ஏ.க்களைப் பற்றி அத்தகைய உலகப் பிரசித்தம் ஏற்படவில்லை. அவர்களோடு பூமி சாஸ்திர சம்பந்தமாய் அளவளாவிய பின்தான் ஏற்படும் போலும்.

ஆங்கில மொழியை எழுதப்பேசப் பயிலும் முறையைப்பற்றி அழுகிறதா சிரிக்கிறதா என்று தெரியவில்லை. ஆரம்பத்திலிருந்து அந்தம்வரை பண்டைய நூல்கள்தான் பாடம். வழக்கொழிந்த இலக்கியங்களைக் கற்று தற்கால வழக்குக்குரிய நூல்களைத் தொடாமலே இருந்துவிட்டால் எழுதுவது எப்படி 'இங்க்லீஷ்' ஆகும்? வெள்ளைக்காரர் கைகொட்டிச் சிரிப்பதற்கு இலக்கியமான 'பாபு இங்க்லீஷ்' அல்லது, 'பொட்லர் இங்க்லீஷ்' ஆகத்தான் முடியும்.

ஆங்கிலத்தில் கவிகளைக் கற்பதற்கும் அளவில்லை. முதல் பாரத்து வகுப்புக்கு முந்தின வகுப்புகளுக்குள்ளேயே டெனிசன், ஷெல்லி, முதலான கவிகள் புகுந்து பிள்ளைகளை 'தொம்ஸம்' செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இவர்களால் பிள்ளைகள் படும்பாடு சொல்லிமுடியாது. அதைவிட அக்கவிகளுக்குத் தான் சித்ரவதை. செய்யுள்களைக் கீறிக்கீறி எழுவாய் பயனிலைகளை வெளியே பறித்தெடுத்து, அடிகளையும் சீர்களையும் கணுக்கணுவாய் முறித்து வாசகமாக்கிப், கரும்பை ஆலையிலிட்டுச் சக்கை யாக்குவதுபோல் பொழிப்புரையும் ஆக்கிச் செய்கிற கொடுமையைக் கண்டு விண்ணில் உள்ள அக்கவிகள் உருக்

Safety and service are the foundations on which United India to built.

கும் கண்ணீர்ப் பெருக்குத்தான் மழை போலும், என்று கற்பனை கட்டலாம். கரும் பாலைக்குள் செய்யுள்களோடு மாணவரும் செல்லுகிறார்கள் என்றால் பொருத்தந்தான். ஆங்கிலக் கவிகளைக் கற்கும் முறை இது. தமிழ்க் கவியின் வாசனையே இன்னதென்று தெரியாது. தமிழ்ச் செய்யுளை வாசிப்பது முடியாத காரியம். ஆனால் அதில் கௌரவக் குறைவு ஒன்றும் இல்லை. அவர்களுடைய உயரிய சித்தாந்தம் தமிழில் கவியே இல்லை என்பது. இப்படித் தாய்மொழியிற் கவி நயம் காணமுடியாத படாடோபிகள் ஆங்கிலக் கவிகளின் சுவையைப் பருகிவிட்டோம் என்பது ஆகாயத் தாமரையில் அத்தர் வடித்தோம் என்று சொல்வதுதான்.

ஆகவே இவ்வாறெல்லாம் பாழாய்ப் போன காலத்தையும் பொருளையும் கணக்கிட்டுப் பார்த்த பிறகு ஒன்று தெளிவாயிற்று. அது யாதெனில்; "பணத்தைக் கொடுத்துப் பைத்தியத்தை விலைக்கு வாங்கல்" என்ற பழமொழியின் செம்பொருள்.

பணத்தைக்கொடுத்து வந்ததுதான் இது. பணங்கொடாது சமுதாயப் பழக்கத்தால் கற்கக்கூடிய இன்பக் கலைகளின் நுட்பத்தைக்கண்டறிந்த நுட்பத்தை என்னென்று கூறுகிறது! மேல்நாட்டு நிபுணர்கள் உலகிற் சிறந்தன என்று கொண்டாடுகிற நம்நாட்டுச் சித்திரங்கள், பதுமைகள், கட்டிடங்கள், கோயில்கள் முதலான அற்புத சிருஷ்டிகளைப் பார்த்தால் திருதராஷ்டிராகத் திருதிரு என்று விழிக்க வேண்டியதுதான். இசை சம்பந்தப்பட்டமட்டில் இராக வேற்றுமைகள் எல்லாம் பாகவதர்கள் ஒத்துப்பேசிக் கட்டிச்சொல்லும் ஏமாற்றுத்தான். குறளை ஆங்கிலமொழிபெயர்ப்பில் வாசித்தால் குற்றமில்லை, தமிழிலேயே வாசிக்கிறது. பி. ஏ.க்களுக்குச் குறைவுதான், கம்பராமாயணம் படிப்பதைப்போல் அநாகரிகம் வேறில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் திரு. லாலா லஜபதிராய் அமெரிக்காவில் நெடிது வசிக்கும்படி நேர்ந்தது. அவ்வமயம் அமெரிக்கர் பலர் அவருக்கு உற்ற நண்பர் ஆயினர். பல இடங்களிலும் தருணங்களிலும் அன்னவருடன் உறவாடவும் அவருக்கு நேர்ந்தது. அங்கு அவர் அனுபவித்ததைப் பின்வருமாறு எழுதுகிறார். "அமெரிக்கர்களில் சாமான்ய மக்களுக்கே எத்தனையோ விஷயங்களில் தேர்ச்சி இருக்கிறது. உல்லாஸ ஸமயங்களில் விருந்தினரை உவகையூட்டப் பாட்டும் கவியும் கூத்துமாக ஏராளமான சரக்கு வைத்திருக்கிறார்கள். பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவரோ ஒரு கூட்டத்திடையில் எளிதில் அணிகலமாய் விளங்கிவிடுகிறார்கள். நான் மாத்திரம் அவர்களிடையில் ஒன்றுக்கும் உதவாதவனாய்த் தோன்றினேன். இந்தியப் பள்ளிக்கூடங்களில் படிப்பது எவ்வளவு பயனற்றது என உணர்ந்தேன். பல்கலைக்கழகம் எனக்களித்த பட்டம் பொய்ப்பட்டம் என்று நாணினேன். அவர்களிடம் நான் ஒரு பி. ஏ., பி. எல். என்று சொல்லுவது அவமானமாயிருந்தது. என்னுடைய அறியாமையை நோக்கி அவர்கள் உள்ளுக்குள் நகையாடிக் கொண்டார்கள்." இந்தியப் பல்கலைக் கழகம் ஒன்றின் வயிற்றிற் பிறந்த சிறந்ததோர் மணியான லாலாலஜபதிராயரின் பாடு இதுவென்றால், நம்முடையபாடு எவ்வாறிருந்திருக்கும். பல்கலைக் கழகத்தைத் "தாய்" என்று உபசரிப்பது மேல்நாட்டார் வழக்கு. அதற்கிணங்க நம் பல்கலைக் கழகத் தாய்க்கு வாயார வழுத்தவேண்டிய புகழ் இதுதான்:—

"பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று".

இவ்வளவும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் மட்டில் உண்மை. ஏதோ

பத்திரம், உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்.



ஒருவர் இருவர் அறிவாளிகளாக இருந்தால், பள்ளிக்கூடங்கள் அவர்கள் மனோ சக்தியை அமிழ்த்திவிட எவ்வளவோ முயன்றும், முக்குளித்துத் தப்பிவந்த அபூர்வ திறம்படைத்தவராவர். அவர் வேறல்ல. இப்படியெல்லாம் கல்விப் பொருள் பற்றிய "இன்ஸால்வெண்டுகள்" ஆய்விட்டது மாணவரின் குற்றமல்ல. ஆசிரியர்களுக்கு ஒருவாறு பொறுப்பு இல்லையென்றும் சொல்லலாம். காரணம் எல்லாம் கல்வி இலாகாவின் கட்டுப்பாடுதான். இலாகாத் தலைவர் நம்மாணவன் ஒருவனோடும் பேசியறியார். அவனுக்குத் தெரிந்தன தெரியாதன இன்னவென்றும், உவப்பன வெறுப்பன இவையென்றும், வேண்டுவன வேண்டாதன இவையென்றும் தெரியாது. தெரிய முயல்வதும் இல்லை. அவர் அவன் கல்விபயிலும் முறையை வகுப்பது எங்ஙனம்? கல்வி இலாகா தொன்மையைப்பற்றுவதுபோல் உடும்புக்கும் பற்ற இயலாது. இறந்தொழிந்துபோன முறைகளைக் கையாண்டு கையாண்டு கல்விப் பயிற்சியில் உயிர்த்தத்துவம் அணுவளவும் இல்லாமற் போயிற்று. தற்போதுள்ள கல்வி இலாகாவின் சட்டதிட்டங்களும் கற்பிக்கும் முறைகளும் அறவே ஒழிந்து புத்தம்புதிய முறைகள் கையாளப்பட்டால் அன்றி உயர்தரக் கல்வி நம் மாணவர்க்கு உண்டாகும் என்று எண்ண இடமில்லை. உயர்தரக் கல்வியின் தத்துவத்தை பி. ஏ. வகுப்பில் இருபதாவது வயதில் ஆரம்பிப்பது, பட்டுப்போன மொட்டைப்பனைக்குக் கொத்திக் கொடுத்து நீர் வார்ப்பதுதான். உயிரையும் உணர்வையும் உறிஞ்சிவிடும் பாடப்புத்தகத்தைக் கையால் தொடுவதற்கு முன்னதாகவே ஆரம்பித்துவிட வேண்டும். அறிவின் சுவையைப் பருக ஐந்திலேயே பயிற்ற வேண்டும்; அறுபதுக்கு ஒற்றிவைக்கக் கூடாது.

உயர்தரக் கல்வியைப் புகட்டுவதற்கு ஒரே வழி, ஒரே தந்திரம். மாணவருக்குக் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பொருளும் அன்னவர் பருவத்துக்கு ஒத்ததா, அவர் அனுபவத்தோடு ஒன்றக்கூடியதா, அவர் மனம் ஈடுபடக்கூடியதா என்று ஆசிரியர் கருதிக் கருதிக் கற்பிக்கப்புகவேண்டும். இவ்வாறு கற்பிக்கப் படுவார்களானால் எத்தனையோ கல்வித் துறைகளில் இறங்கியாட அவா உண்டாகி, அத்துறைகளில் முழுகி முழுகி புதிது புதிதான மணிகளை எடுத்து உலகுக்கு உதவும்மேதைகள் ஆவர். உள்ளிருந்து ஆவேசம் பொங்கிப் புளகித்திடக் கலைகளையும் கவிகளையும் ஆய்ந்து கற்கத் தலைப்படுவர். அதுவே இன்பம், அதுவே செல்வம் என்று "சாந்துணையும் கல்லாரோ" ஏனைய பொருளெல்லாம் பொய்க்கும் பொருள் என்று கருதிவிடாரோ. இப்போதுள்ளபடி "பொருள்மகள்" கடாக்ஷம் குறித்தா கலைமகளை வழிபடுவார்! கலைமகள் கடைக்கண் கொழிக்கும் கருணை வெள்ளத்திலேயே குடைந்து குடைந்து பரவசமாகாரோ.

"தொழுவார் வலம் வருவார், துதிப்பார், தம்
தொழில் மறந்து
விழுவார், அருமறை மெய்தெரிவார், இன்ப
மெய்புளகித்(து)
அழுவார், இருகண்ணின் நீர்மல்குவார், என்னை
ஆளும் அன்னை
வழுவாத செஞ்சொற் கலைமங்கை பாலன்பு
வைத்தவரே."

என்ற பொய்யில் புகழுக்கு இலக்கியமும் ஆவர் அன்றோ!

Chief Agent for Ramnad District &c M. Ramamoorthi, Karaikudi.

# படித்து முடித்துவிட்டான்.



ஒரு தச்சு வேலைக்காரன் தன் மகனைப் பிறந்த ஏழாவது ஆண்டில் ஆங்கிலம் பயிலச் சென்னைக் கனுப்பினான். அதற்காக அவன் செலவிட்ட பணத்திற்குக் கணக்கு விவரம் வருமாறு :—

5-வது கிளாஸ்வரை படித்த
ஆண்டு மூன்றுக்கு

| | |
|---|---|
| சம்பளம் | 45—0—0 |
| சாப்பாட்டுக்கு | 432—0—0 |
| துணியும் மற்ற செலவும் | 60—0—0 |
| புஸ்தகம் வகையில் | 15—0—0 |

முதல் பாரம் முதல் மூன்றாவது பாரம் வரை
ஆண்டு மூன்றுக்கு

| | |
|---|---|
| சம்பளம் | 99—0—0 |
| சாப்பாட்டுக்கு | 504—0—0 |
| துணியும் மற்ற செலவும் | 90—0—0 |
| புஸ்தகம் வகையில் | 60—0—0 |

4-வது பாரம் முதல் 6-வது வரை
ஆண்டு மூன்றுக்கு

| | |
|---|---|
| சம்பளம் | 189—0—0 |
| சாப்பாடு | 540—0—0 |
| துணியும் மற்ற செலவும் | 120—0—0 |
| புஸ்தகம் வகையில் | 60—0—0 |

இண்டர்மீடியேட் ஆண்டு மூன்றுக்கு

| | |
|---|---|
| சம்பளம் | 396—0—0 |
| சாப்பாடு | 720—0—0 |
| துணியும் மற்ற செலவும் | 180—0—0 |
| புஸ்தகம் வகையில் | 90—0—0 |

பி. ஏ. மூன்று ஆண்டுக்கு

| | |
|---|---|
| சம்பளம் | 648—0—0 |
| சாப்பாடு | 900—0—0 |
| துணியும் மற்ற செலவும் | 210—0—0 |
| புஸ்தகம் வகையில் | 120—0—0 |

ஆக மொத்தம் ரூ. 5478 செலவாகி விட்டது. பையன் ஊருக்கு வந்திருக்கிறான். தனி அறை யொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. காலணா வரும்படிக்கு வழியில்லை. செருப்பு மாட்ட ஆள் கட்டாயமாகத் தேவையிருக்கிறது. பாவம்! தச்சனுக்கு இதுவரை வட்டியும் முதலுமாக சுமார் 7000 கடனிருக்கிறது.

ராமனாதபுரம் ஜில்லா முதலிடவற்றின் சீப் ஏஜண்டு எம். ராமமூர்த்தி அய்யர் காரைக்குடி.

# திண்ணைப் பள்ளிக்கூடங்கள்.

காட்சி க



தமிழ் நாட்டில் கல்வியைப் பற்றிப் பெற்றோர் அதிகமாகக் கவனிப்பதே யில்லை. தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் ஆங்காங்குள்ள பஞ்சாங்கக்காரர், போஸ்டு மாஸ்டர்முதலிய சிலரால்நடத்தப்படுகின்றன. விசேஷகால வரும்படியையே அவர்கள் நோக்குகின்றனர். பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் காணமுடியாது. அவர்கள் முறையாகப் படித்தவர்களும் அல்லர். படிப்பிக்கவுந் தெரியாது. தொண்டை வாண்டுபோகுமாறு கதறவிடுவதும், பிரம்புகொண்டு அடித்தும், கோதண்டம் போட்டுப், விலங்குக்கட்டை மாட்டியும், பலவிதமாக நினைக்கமுடியாத தண்டனைகொடுத்துப் பிள்ளைகளை உயிருடன் கொலைசெய்துவிடுவர். உபாத்தியாயரைக்

Insure in the United India Life Assurance Company.

காட்சி உ



கண்டால் பிள்ளைகள் எமனைக் கண்டமாதிரி ஒடுங்கிவிடுவார்கள். ஆனால் "இவன் எப்போது தொலைவான்" என்பதே பிள்ளைகளின் முக்கிய கவலையாக இருப்பதைக் காணலாம்.

> நெடுமால் திருமருகா நித்தநித்தம் இந்தெழவா
> வாத்தியாருஞ் சாகாரா வயிற்றெரிச்சல் தீராதா!

என்று சாதாரணமாகப் பிள்ளைகள் பாடுவதைக் காணலாம். திறமையான உபாத்தியாயரில்லாவிட்டால் பிள்ளைகள் ஆண்மையற்று பொறாமையும் எரிச்சலுங் கொண்ட நடைப்பிணங்களாகிச் சாகவேண்டிய நிலையில் வந்துவிடுகின்றன ரென்பதைப் பெற்றோர்கள் உணரவேண்டும். இப்படங்கள் உறங்கி விழுகின்ற உபாத்தியாயர்களின் பரிதாப நிலையையும், பிள்ளைகளின் பொறாமை நிறைந்த குறும்பையும் விளக்குகின்றன.

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் இன்ஷியூர் செய்யுங்கள்.

84306

# மருத்துவம்.

விருதை, சிவஞான யோகிகள்.

## வைத்தியம்.

வந்த உடல்நோய், உளநோய்களை மறுத்து (போக்கி) இனி நோய் வாமல் மறுக்கும் வழிகளைக் கூறுவது மருத்துவம் எனப்படும். இச்சொல் மறு என்ற பகுதியினடியாய்ப் பிறந்த தொழிற் பெயர். மறுஎன்ற பகுதியிலுள்ள றகரம் ரகரமாதல் விகாரம். நோய்களை மறுப்பதும் சாவை மறுப்பதுமாகிய பொருள் மருந்து எனப்படுகின்றது.

திருமூலர் திருமந்திரம் அ000.

> மறுப்ப துடல்நோய் மருந்தெனல்சாலும்
> மறுப்ப துளநோய் மருந்தென லாகும்
> மறுப்ப தினிநோய் வாராதிருக்க
> மறுப்பது சாவை மருந்தென லாமே.

என்று விளக்குகின்றது.

இனி மருத்துவம் என்பதற்கு வைத்தியம் என்ற வேறிற் பெயருளது. அது உயிருடல் கெடாது வைத்து இயலும்படி செய்தல் வைத்தியம் எனப்படுகின்றது. ஷை திருமந்திரம் அ000 "வைத்திய லச்செயல் வைத்திய மென்ப" என்று கூறுகின்றது.

ஆய்+உளதாம் காலம் ஆயுள்=வயது ஆய்=தோன்றி,உள்=உள்ளதாகும், வேவு (உளவு) கூறும் நூல்=வேதம் (உடல் தோன்றி வளர்ந்து உளதாய் நிலைபெறுதற்குரிய இரகசியங் கூறும் நூல்.) சித்தர்களாற் கூறப்படும் மருத்துவம் சித்தமருத்துவம். ஆதலால் மருத்துவம், வைத்தியம், ஆயுள் வேதம், சித்த மருத்துவம் என்றழைக்கப் படுகின்றது.

இவ்வுலகில் இப்பொழுது இந்துமாக் கடலுள் மூழ்கியிருக்கும் நாவலந்தீவின் (Submerged land = Lemuria) ஒரு பகுதியாகிய தமிழகமே மக்கள் முதற்கட்டோன்றிய நிலமெனப் புலவர் மீறக்கல் முதலிய மேனாட்டுச் செய்தி யாசிரியர் பலர் கூறுகின்றனர். அத்தமிழகத்திருந்த தென்மதுரையில் தமிழ் முதற்கழகம் இற்றைக்கு கசு000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றி விளங்கியது. அம் முதற்கழகம் சசசO ஆண்டுகளிருந்து கடல் கோட்பட்டபின், கவாடபுரத்தில் இடைக் கழகம் ௩எ௫0 ஆண்டுகளிருந்து கடல் கோட்பட்டது. இப்போதுள்ள தென்மதுரையில் சஅ௫0 ஆண்டுகள் கடைக்கழகம் இருந்தொழிந்தது. அக்கழகங்க ளிருந்த காலம் க0௯சO-ம், இடையே சென்ற காலம் சககூஉ-ம், கடைச் சங்கம் ஒழிந்தபின் இதுவரை ஆண்டுகள் கஎகூஅ-ம் ஆக ஆண்டுகள் ககூ000 என்று கணக்கிடப்படுகின்றது. முதற்கழக காலத்தில் சங்கத் தலைவர் அகத்தியர் என்ற பெயரால் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இயல் நூல் (இலக்கணம்)இயற்றியதுபோல் மருத்துவம் (வைத்தியம்), கற்பம், வாதம், யோகம், ஞானம் என்ற பொருள்களையுடைய சித்த நூல்கள் பல இலக்கக்கணக்காகவியற்றினர். இடைக்கழக காலத்தில் மா புராணம் என்ற மருத்துவ நூல் வழங்கியது. கடைக்கழகத்தில் புலவர் மருத்துவன் தாமோதரனார் சித்தவைத்தியத்திற் சிறந்

தோங்கினர். இக்காரணங்களால் தமிழ்ச் சித்தவைத்தியம் தமிழகத்தில் ௧௯000 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றதென்று தெளிவாகின்றது.

## சம்ஸ்கிருத வைத்தியம்.

இது ஆயுள்வேத வைத்தியம் எனப்படுகின்றது. வடமொழியில் இந்திரன், சோமன், வருணன், அக்கினி முதலிய சில்லரைத் தேவதைகளுக்குப் பலியிடல் வேள்விகள் கூறும் இருக்கு யசுர் சாமம் என்ற மூன்று வேதங்களும், பகைவரைக் கொல்லல் முதலிய செய்வினைகள் (அபிசாரப் பிரயோகம்) முதலியன சொல்லும் அதர்வ வேதமுமுள்ளன. அவைகட்குப் பழைய இந்திய நாகரிகச் சரித்திரம் என்ற நூலில் இருக்கு, கி. மு. ௨000 முதல் ௧௪00க்குள்ளும், யசுர், சாமம், ௧௫00 முதல் ௧௨00க்குள்ளும் தோன்றின என்று கூறப்படுகின்றது.

உஜ்ஜைனியை ஆண்ட விக்ரமாதித்தன் காலம் கி. பி. ௫00—௫௫0. இற்றைக்கு ௧௪00 ஆண்டுகளுக்கு முன்னிருந்த அமரசிம்மன் எழுதிய அமரகோசமென்ற நிகண்டில் அக்காலத்தில் ௩ வேதங்களேயிருந்ததாய்க் கூறுவதால், அதர்வம் என்ற வேதம் பிற்பாடு எழுதப்பட்டதென்பது தெளிவு. உபவேதங்கள் ஆயுள்வேதம், அருத்த வேதம், தனுர்வேதம், கந்தர்வ வேதம் என நான்கு எழுதக்கருதிப் பெயரிடப்பட்டதன்றி அந்த நான்கிலொன்றுவது வடமொழியில் இருந்ததாய்ப் புலப்படவில்லை. இப்பொழுது ஆயுள்வேதம் என்பது வடமொழியிலுள்ள வைத்தியத்துக்குப் பெயராய் வழங்கி வருகின்றது. விக்கிரமன் சபையிலிருந்த புலவர்களிலொருவராகிய திவோதாசன் என்ற தன்வந்திரியார் வடமொழி வைத்திய நிகண்டு செய்தார். சுசுருதமும் தன்வந்திரியைப் பின்பற்றியதே. ஆதலால் அவற்றின்காலம் கி. பி. ௫00—௫௫0. அவற்றுக்கு முந்திய சரகசம்மியதை பல காரணங்களால் கி. பி. ௧-வது ௨-வது நூற்றாண்டிற் றோன்றியதெனப்படும். சரகம் உடல் மருத்துவத்தையும் (காய சிகிச்சையையும்) சுசுருதம் அறுவை மருத்துவத்தையும் (சல்லிய சிகிச்சையையும்) சிறப்பாய்க் கூறுகின்றன. அந்நூல்கள் நோயறிவகைகள் காண்டல் தொடல் கேள்வி (தர்சநம், ஸ்பர்சநம், பிர்ஸ்நம்) என்று மூன்றே கூறியிருக்கின்றன. தமிழ்ச் சித்த நூல்கள் ௧. நாடி, ௨. கண், ௩. நா, ௪. உடல், ௫. மலம், ௬. நீர், ௭. தொடல், ௮. ஒலி என்ற எண்வகைத் தேர்வுகள் கூறுகின்றன.

## வடமொழி மருந்து வகைகள் ௨௧.

௧. குடிநீர்வகை:—(அ) சுரசம், (ஆ) கல்கம், (இ) க்வாதம், (ஈ) ஹிமம், (உ) பாண்டம், (ஊ) சீதகசாயம், (எ) பானீயம், (ஏ) பிரமஸ்தயம், (ஐ) க்ஷீரபாகம், (ஒ) மந்தம், (ஓ) கஞ்சி, (யவாகு). (ஔ) அவலேகம்; ௨. சூரணம், ௩. வடிகள், (குளிகை) ௪. மோதகம் உண்டை, ௫. கண்டபாகம் (லேகியம்), ௬. பாவநம், ௭. புடபாகம், ௮. காஞ்சிகம் (புளிப்புப்பானம்), ௯. திராவகம், ௧0. சுவல்பத்திராவகம், ௧௧. சங்கத்திராவகம், ௧௨. ஆசவம்(காச்சாத செயற்கள் செய்வது) ௧௩. அரிஸ்டம், (காய்ச்சிய செயற்கள்) ௧௪. கிருதம்(நெய்), ௧௫. தைலம், ௧௬. வமனம் (வாந்தி) ௧௭. விரேசனம் (பேதி), ௧௮. வஸ்தி, (பீச்சு மருந்து) ௧௯. நசியம் (மூக்குறை), ௨0. தூமபானம் (புகை குடித்தல்), ௨௧. கண்டூஷம் (கொப்பளிமருந்து)என்பன.

அவையனைத்தும் மக்களுறையிலடங்கும். மூலிகைக் குடிநீர், சூரணம், குளிகை,லேகியம், புளிப்புப்பானம் (காய்ச்சாச் செய்கள்) நெய், காய்ச்சிய செய்கள், தைலம், தீநீர், (திராவகம்)புகைகுடித்தல் முதலியன உடல்

ஸ்டார் அண்டு கம்பெனி மானேஜர்.



வைத்தியத்திற் பயன்படுபவன. களிம்பு முதலியன அறுவை வைத்தியத்திற் பயன்படுவன. சம்ஸ்கிருத ஆயுள் வேத வைத்தியமும் எதிருறை (Allopathy)யே.

பல மூலிகைகளும் சரக்குகளும் பிராணிகளின் பொருள்களும் சில உபரசச் சரக்குகளும் லோகங்களும் மருந்துகளுக்குபயோகிக்கப்படும் முறைகள் கூறப்பட்டுள்ளன. அவைமேற்கூறிய ௨௧ வகைகளேயன்றி பற்பம், செந்தூரம், சுன்னம்,கட்டு,சத்துக்களாகச் செய்துபயோகிக்கும் மருந்து முறைகள் சரகராவது சுசுருதராவது தந்வந்திரியாவது கூறவில்லை. ஆனால் ஆடு மாடு முதலியவற்றின், ஊனிலிருந்து லேகியமுதலியன செய்யுமுறைகள் பல கூறியிருக்கின்றனர்.

ஆனால் பிற்காலத்தில் தமிழ் சித்தர் நூல்களிற் றேர்ச்சியடைந்து வடமொழிப் பூர்வநூல்களிலில்லாத இரச சம்பந்தமான பற்பம், செந்தூரம், சுன்னம் முதலியன செய்யுமுறைகளை இரச ரத்தின சமுச்சயம் (இரச ரத்தினங்களின் றற்றிரட்டு), முதலிய நூல்களில் நாகார்ச்சுனன், ஆதிமன், நித்யநாதன், சந்திரசேநன், சோமதேவன், கோவிந்தன் முதலியோர் கூறியிருக்கின்றனர். மலையாள பாஷா சரித்திரத்தில் தந்வந்திரியென்ற திவோதாசர் காலம் கி. பி. ௫00 எனக் குறிக்கப்படுகின்றது.

திருவனந்தபுர நாட்டில் கி. பி. ௯00-ல் வாக்படாச்சாரியரியற்றிய வடமொழி அஷ்டாங்க இருதயமும் சித்த வைத்திய சிந்தாமணியென்ற நூலும் வழங்கிவருகின்றன.

௧. காய சிகிச்சை ௨. பாலசிகிச்சை ௩. கிரகசிகிச்சை ௪. ஊர்த்துவாங்க சிகிச்சை ௫. சல்யசிகிச்சை (அறுவை வைத்தியம்) ௬. விஷசிகிச்சை ௭. ரசாயன சிகிச்சை (உடல் வலுவுறுத்தல்) ௮. வாஜீகரணம் (தாதுபுட்டி தரல்) என எட்டு அங்கங்களையுடைமையால் அட்டாங்க இருதயம் எனப்பட்டது. கி. பி. ௧௩00 ல் சாரங்கதார் எழுதிய வடமொழிச் சாரங்கதரசம்மிதையில் தமிழ்ச்சித்தர் நூல்களிற் கூறப்பட்டுள்ள வாதபித்த கபநாடி நடைகளையும்; தங்கம், வெள்ளி, தாம்பிரம், பித்தளை, வெண்கலம், நாகம், கருவங்கம், வெள்வங்கம், அயம், நிமிளை முதலிய லோகங்களின் பற்பமுறைகளையும்; அப்பிரகம், மனோசிலை, இரசம், கெந்தி முதலிய பாடாணச் சரக்குகளின் பற்பமுறைகளையும்; இரசஞ்சேர்ந்த மாத்திரை முறைகளையும் எழுதி வெளியிட்டனர்.

கி. பி. ௧௬00-ல் பாவமிசிரால் இயற்றப்பட்ட பாவப் பிரகாசம் என்ற சம்ஸ்கிருத நூல் மிக விரித்து விளக்கப்பட்டுளது. சம்ஸ்கிருத ஆயுர்வேத வைத்தியம் தென்னிந்தியாவாகிய தமிழ் நாட்டில் வைத்திய ரத்தினம் பண்டிட் கோபாலாச்சாரியவர்களால் ௨0 ஆண்டுகளுக்கு முன் கொண்டுவந்து நாட்டப்பட்டு, அதிலும் பல வகையில் மேம்பட்ட சித்தவைத்தியத்தைக் காட்டிலும் ஆயுள் வேத வைத்தியத்தை அதிகமாகப் பரவச் செய்யச் சம்ஸ்கிருதத்தில் அவாவுற்றவர்கள் உத்தியோக முறையில் முயல்கின்றனர். தமிழர் தமிழ் மொழியிலும் தமிழ் நூல்களிலும் பற்றுதலற்றவராயிருக்கின்றனர்.

## கிரீக்.

கிரீக் தேசத்தில், கி. மு ௯00-ல் இருந்த ஹோமர் (Homer) காப்பியங்களால் வைத்தியம் நிகழ்ந்தது விளங்குகின்றது. மருத்திடல் வன்மையன் மக்கயான், அறுவை வைத்திய வல்லான் பொடலிரியஸ் என்றிருவரிருந்தனர். அவர் நோய் நீக்கற்கு, ௧. ஒழுக்கம், ௨. தெய்வபத்தி, ௩. பத்தியம், ௪. மருந்து என்ற நான்கும் வேண்டியனவெனக்கொண்டனர். கி. மு. ௭00-ல், கிரீக் தேசத்திலிருந்து பித்தாக்கொரஸ்

M. Ramamoorthi, Chief Agent for Tanjore, Pudukottah & Ramnad Districts.

(Pythagoras) என்பவர் இந்தியாவுக்கு வந்து வைத்திய முதலியவற்றைக் கற்றுச் சென்றனர் என்று என்சைகிளொபீடியா பிரிட்டானிகாவில்வரையப்பட்டுளது. கி.மு. ரு00-ல் ஹிப்பாகிரேட்ஸ் (Hippacrates) என்றவர் வைத்தியத்திற் சிறந்தவராய் வைத்திய நூல்களுக்காசிரியராயிருந்தனர்.

அவர் "க. இரத்தம் உ. கவம் ௩. மஞ்சட்பித்தம் ௪. கரும்பித்தம், என்ற நாலு சாரங்களால் உடலாக்கப்பட்டது. அவை உரிய அளவிலிருந்தால் உடலுக்கு நலம். மிகல் குறைதல் உண்டானால் நோயுண்டாம். நோய்போக்கும் வழிகளில், பத்தியம் முதன்மைப்பட்டது. மருந்து இரண்டாவது." என்று கூறியிருக்கிறார். ஆனால்நாடிபார்க்கும் வகையை அவர் எழுதவில்லை.

### எகிப்து.

கி. மு. ௬00 முதல் எ00-க்குள் எகிப்து அலக்சாண்டிரியாவில் உடற்றொழில்நூல் உடற்கூறுநூற் பயிற்சியோடு மருத்துவமும் சிறந்து உடல் கெடாமல் வைத்திருக்க மருந்துகள் கண்டுபிடிக்க முயன்று இறந்தவர் உடலை ஒரு தைலத்திற் போட்டுப் பக்குவப்படுத்தி நெடுநாட் கெடாது வைத்திருக்கக்கண்டுபிடித்தனர். அந்நாட்டரசர் செல்வவான்களின் பிணங்கள் ஒரு தைல உதவியால் இற்றைக்கு உ௬00 ஆண்டுகளாயும், கெடாதிருக்கின்றன. அப்பிணங்களுக்கு எகிப்து மம்மீசு என்று பெயர். நெடுநாட் கெடாதிருப்பதால் ஆராய்ச்சிக்காக அதை உ௫000 முதல் ரு0000 ரூபாவரை கொடுத்து வாங்குகின்றனர்.

ஒரு ஆராய்ச்சிக்காரர் அப்பிணத்தினுள்ளிருக்குந் தைலத்தைச் சோதித்துப் பார்த்து அத்தைலத்தில் வெள்ளுள்ளித் (Garlic) தைலஞ் சேர்ந்திருப்பதாய்க் கருதுகிறார்.

### ரோம்.

இட்டாலியைச் சேர்ந்த ரோமில் கி. பி. உ-வது நூற்றாண்டில் காலன் (Galen) என்பவர் வைத்திய நூலாசிரியராயிருந்தனர். நான்கு சாரங்கள் ஆவியொன்று கலந்திருந்து, அவற்றின் தொழில்களை நடத்துகின்றது. அச்சத்துக்கள் அனல் (Hot) குளிர்ச்சி, (Cold) ஈரம்,(wet) உலர்வு (Dry) என்பன. அவை சம நிலையாயிருந்தால் நோயின்று, மாறினால் நோயுண்டாம். அனலுக்குக் குளிர்ச்சியும், ஈரத்துக்கு உலர்வும் ஆகிய எதிரிடை மருந்துகளே பரிகாரம் என்று எழுதியிருக்கிறார்.

### ஆங்கில வைத்தியம் (எதிருறை)

டாக்டர் எஸ். ஹானெமன் (S. Hahnemaun) என்பவரால் எதிருறையென்ற பொருளால் ஆலோபாதி வைத்திய முறையமைக்கப்பட்டது. அவர்கள் காலம் கி. பி. கஎ௫௫—கஅ௪௩. ஜெர்மனி மொழியில் ஆலோஸ்=எதிரான (Gr Allos=Other) பாத்தியா=நோய் (Pathia 'Patsos=Suffering) அதாவது எதிர் மருந்து. குளிர்ச்சிக்கு வெப்பம். வெப்பத்திற்குக் குளிர்ச்சி மருந்து தால். இக்கருத்தோடு இவ்வைத்திய முறை தோன்றி நாளாவட்டத்தில் ஆராய்ச்சியால் பயன்றருவனவாய்த் தோன்றிய முறைகள் பலவற்றையேற்றுக் கையாள்கின்றனர். இப்பொழுது ஆராய்ச்சியில் மருந்து குத்து முறை (Injection) கண்டுபிடிக்கப்பட்டு நிகழ்ந்து வருகிறது. அம்முறை செய்யும்பொழுது சில நன்மைகள் உண்டாவதுபோல் ஆராய்ச்சிக் குறைவால் சில தீமைகளுமுண்டாகின்றன. ஆதலால் மருந்து குத்தும் வைத்தியர் மிக ஊன்றி ஆய்ந்து செய்தல் கடமை.

### ஒப்புறை (ஹோமியோபாதி)

டாக்டர் எஸ். ஹெனமன்(S. Hamnemaun) என்பவர் ஒப்புறை (Honeopathy) என்ற வைத்தியமுறையை கி. பி. கஎ௫௫-ல் நாட்டினர். ஜெர்மன் ஹோமியஸ் (ஒத்த)=





(homias=like) பாத்தஸ்=உணர்ச்சி—(pathos=feeling) ஒரு மருந்தை யுட்கொண்டால், எந்தக் குணத்தையுண்டாக்குமோ அந்தக் குணமுள்ள நோய்க்கு அம்மருந்தைக் தருதல் (ஹோமியோபாதி) ஒட்புறை முறையாகும். சேங்கொட்டை உடலிற் பட்டாலும், உட்கொண்டாலும், வீக்கம், கொப்புளம், புண், சுரம், சூலை, உண்டாகும். அந்த நோய்களுக்குச் சேங்கொட்டையாற் செய்த மருந்து தாக் குணப்படும். இந்த வைத்தியம் ஜெர்மெனி, பிரான்சு முதலியவிடங்களிற் பரவியிருக்கிறது. இப்பொழுது வட இந்தியாவிலும் பரவி வருகிறது. இந்நூலார் ஒப்புறை மருந்து துளி ஒன்றை ௫0 துளி ஆல்கோவில்கலந்து, அதில் ஒருதுளியை ௫0 துளி ஆல்கோவில் கலந்து, இவ்வாறு ௩0 மடக்கு மடக்கினால் அதிவீரிய முண்டாகிற தென்று தீர்மானிக்கின்றனர். ஒரு துளி பாடாணத் தீநீரை க,00,000 துளி நீரிற்கலந்தால் அதிற் பாடாணச்சத்துச் சிறிதும் காணப்படாமையால் அவர்கூற்று ஒப்புந்தகையதாயின்று.

### யூநாநி.

கி. பி. ௬00-ல் யூநாநி என்ற மருத்துவம் விளக்கமடைந்தது. இது யவன நாட்டுப் பழைய வைத்தியம். உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் தீ, வாயு, நீர், மண் என நான்கு பூதங்களாலாயின. அவற்றின் குணங்கள் சூடு, கொழுமை, குளிர்ச்சி, வரட்சி யென்பன. யூநாநி நூல்களுக்கு முதலாசிரியர் பொருத். யூநாநி வைத்திய நூல், உடலிலக்கணம், நாடி பரீக்ஷை,மூத்திரப் பரீக்ஷை முதலியன கூறுவது. க. நஜரி. நோய்த் தோற்றம், இலக்கணம், வைத்தியஞ் செய் முறைகளைக் கூறுவது. உ. அமலி. மருந்துகளும் அவற்றின் செய்பாகமும் கூறுவது. ௩. ஃகராபாதீன் என மூன்று பிரிவினையுடையனவா யிருக்கின்றன. இதில் பலவகை மருந்துகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அயச்செந்தூரம் முதலியன நெருப்பிற் புடமிடாமல் நீரிற்றுருவாக்கிச்செந்தூரித்துபயோகிக்கு முறைகளும் தங்கம் வெள்ளிகளை நீற்றாமல் இலைக்காக அல்வா முதலியவற்றி லுபயோகிக்கு முறைகளும் முற்காலத்திருந்தன. இப்பொழுதும் நிகழ்கின்றன. பிற்காலத்தில் சித்த முறைகளையநுசரித்து பற்பசெந்தூர முறைகளுங் கைக்கொண்டுபயோகித்து வருகின்றனர்,

### தமிழ்ச் சித்த வைத்தியம்.

தமிழ் முதற்கழகம், இடைக்கழகம், கடைக்கழகம் என்ற முச்சங்க காலத்தும் பிறந்த சித்தநூல்களின்படி செய்யப்படும் வைத்தியம், (மருத்துவம்) மூவகை. அவை மணி, மனு, (மந்திரம்) மருந்து என்பன. மணிஎன்பது சூதத்தைத் தூயதாக்கிக் கட்டி சாரணைதீர்ந்த சூதஉண்டை. அதைக் கையில் வாயில் வைத்திருத்தல், இடையிற் கட்டல் முதலியவற்றால் வந்த நோய்களைத் தீர்த்தல்; நோய் வாராமற் காத்தல்; உடல் வலுவுற்று ஆயுள் வளர்ச்சி உண்டாக்கல் மணியின் வன்மை. உ. மனு என்பது மந்திரவலியால் அல்லது (மெஸ்மெரிசம் என்னும் மானசத்தியால்) நோய்கள் தீர்த்தல். ௩. மருந்து மக்களுறை, சூருறை, தேவுறை என்ற மூவகை மருந்துகளால் நோய் தீர்த்தலாம்.

௧. மக்களுறை (மானுஷிய சிகிச்சை.) என்பது மூலிகை முதலியவற்றால் செய்யப்பட்ட ௩௩ வகைப்பட்டன. அவை க. பச்சிலை (வேர்) உ. குடிநீர் (கியாழம்) ௩. பொடி (சூரணம்) ௪. நெய், ௫. பிட்டவியல், ௬. முடித்தைலம், எ. சுடர்த்தைலம், அ. குடித்தைலம், ௯. துளைத்தைலம், க0. பிடித்தைலம், கக. கறைபோக்கி, கஉ. செவியுறை, க௩. இளகம் (லேகியம்,) க௪.

கருக்கப்பர் (இரசாயனம்,) கடு. குழம்பு, கசு. கவாடம், கஎ. வடகம், கஅ. உண்டை (குளிகை) ககூ. ஒற்றிடம், உ௦. நஞ்சுறை, உக. முறிவு, உஉ. கண்ணுறை, உங. பேதியுறை, உச. வாந்தியுறை, உரு. புழுப்போக்கி உசு. வேது, உஎ. நீர்ப்பெருக்கி, உஅ. வேர்ப்பி, உகூ. மெழுகு, ங௦ மூக்குறை, ஙக. தும்மி, ஙஉ. பாகு, ஙங. வல்லுறை (Tonic) என்டன.

உ. சூருறை. (ராக்ஷத சிகிச்சை)

அறுவைமுதலியன உக. அவை அறுவை, உ. சூடு, ங. அட்டை, ச. குடோரி, ரு. வெறியுறை, (மயக்குறை) சு. தெளிவுரை எ. அவர்நெய், அ. களாச்சி, கூ. புண்ணுாக்கி க௦. ஊதுரை, கக. களிம்பு கஉ. பீச்சு, கங. கழுநீர், கச. செலாகை, கரு. கட்டு, மாக்களி, கசு. கொப்பளி, கஎ. நீருறை, கஅ பூச்சு, ககூ. பூதவுறை, உ௦. முயற்சி, உக. மருத்துவம், என்பன.

ங. தேவுறை (தேவசிகிச்சை)-

நீறு முதலிய கஉ வகை. அவை, க. நீறு (பற்பம்), உ. செந்தூரம், ங. சுண்ணம், ச. கட்டு, ரு. படங்கு, சு. களங்கு, எ. சுடர், அ. புகை, கூ. மின், க௦ சத்து, கக. செய்நீர், கஉ. திநீர் என்பன.

மருந்தின் பயன்.

மருந்து, காப்பு, நீக்கம், நிறைப்பு என முப்பயன்களையுடையன. அவற்றில் க. காப்பு நோய் வாரமற் காக்கும். மருந்துகளும் ஒழுக்கமும் முப்பிணிகளை ஒழிக்கும் உயர்ந்த மருந்துகளும், கற்ப மருந்துகளும் ஆம். உ. நீக்கம் மக்களுறை, சூருறை, தேவுறைகளால் வந்தநோய்களை நீக்குதல். ங. நிறைப்பு. உடலிற் குறைந்துபோன க. சாரம் (இரசம்), உ. செந்நீர் (இரத்தம்), ங. ஊன் (மாமிசம்), ச. கொழுப்பு (மேதஸ்), ரு. என்பு (அஸ்தி), சு. மூளை (மச்சை), எ. வெண்ணீர் (சுக்கிலம்) என்ற தாதுக்கள் ஏழில் அல்லது தங்கம், வெள்ளி, இரும்பு, காரீயம், வெள்ளீயம், இரசம் முதலிய உலோகச் சத்துக்களில் குறைந்தவற்றை மருந்துகளால் நிறைத்தல் நிறைப்பு.

குறைந்ததாதுச்சத்துக்களைப் பிற மருந்துகளால் நிறைப்பினும், குறைந்த உலோகச் சத்துக்களை உலோகச் சத்து மருந்துகளாலே நிறைக்கவேண்டும். அம் மருந்துகள் சித்த வைத்தியத்திலேயே மிகுந்திருக்கின்றன. உலோகச் சத்துகள் குறைந்ததனால் உண்டாய பல மருந்துகளாலும் குணப்படாத (தீராத) நோய்களை சித்த வைத்தியத்திலுள்ள சத்துச் செந்தூரங்களை நிறைத்துக் குணப்படுத்தும் வலியுடையன. பிற வைத்தியங்களில் சத்துச் செந்தூரம் முதலிய மருந்துகளின்மையானே உலோகச் சத்துக் குறைந்ததாலுண்டாய நாட்பட்ட நோய்கள் தீராத நோய் என்ற வகுப்பிற் பிற வைத்தியரால் ஒதுக்கப்படுகின்றன.

சித்த மருந்துகள்.

உப்பு வகை உரு. தாதுப் பொருள்கள் கஉ௦. அவற்றின் சத்துகள் கஉ௦. பாடாணங்கள் சுச. மூலிகை வகைகள் க௦௦அ.

மருந்தின் வலிமை.

மருந்துகளின் வலி மிகு வலி, இடைவலி, குறை வலி, (அதி வீரியம், சம வீரியம், அதம வீரியம்) என மூவகைப்படும். அவற்றில் மிகு வலி மருந்து ஒப்புறையாகவும், இடைவலி மருந்துகள் எதிருறையாகவும், குறைவலி மருந்துகள் கலப்புறையாகவும் பெரும்பாலும் பயன்படுகின்றன. அவற்றில் ஒப்புறை (Homeopathy) என்று ஜெர்மனியாராலும், எதிருறை, (Allopathy) என்று ஆங்கிலேயராலும் வழங்கப்படுகின்றன.

ஒப்புறை.

எது எந்த நோய்க் குணத்தைத் தோற்றுவிக்கும் வலியுடையதோ அது அந்த





நோயைப் போக்கும் வலியுடையதாம். அத்தகையதே ஒப்புறை. அவை, சூதம், சவ்வீரம், வெள்ளைப்பாடாணம், சேங்கோட்டை, ஊமத்து முதலிய மிகுவலியுடையனவாம். அவற்றில் உதாரணமாக :—

க. சூதம். பச்சை வெட்டாய்ச் சாப்பிட்டால் வாயிற்புண், வீக்கம், சூலைக்கட்டு, காய்ச்சல், கால்முடக்கு முதலியன உண்டாக்கும். சூதபற்பம் அல்லது சூதப்பதங்கம் உட்கொண்டால் அந்நோய்கள் குணப்படும்.

உ. சேங்கொட்டை சாப்பிட்டாலும், அதன் பால் உடலிற் பட்டாலும், அதன் வேகம் பட்டாலும் உடல் வீங்கும், தடிக்கும், அரிப்பெடுக்கும், காய்ச்சல், சிரங்கு. புண், சூலை, இருமல் முதலிய நோய்களுண்டாகும். சேங்கொட்டையிற் செய்த மருந்துகள் உட்கொள்ளில் அந்நோய்கள் நீங்கும்.

எதிருறை

வாதத்துக்குப் பித்த மருந்தும், பித்தத்துக்கு வாதமருந்தும், ஐயத்துக்கு பித்த மருந்தும், பித்தத்துக்கு ஐய மருந்தும் கொடுத்தலும், வெப்பத்துக்குத் தண்மை மருந்தும், குளிர்ச்சிக்கு வெப்ப மருந்தும், மிகுந்ததைக் குறைக்கவும் குறைந்ததை நிரப்பவும், வளரவும் மருந்து கொடுத்தலும் எதிருறை. இவற்றுக்கு இடைவலி மருந்துகளே பெரும்பாலும் பயன்படும்.

தக்ஷிணாமூர்த்தி திருமந்திரம் கரு௱ பாட்டு க௦உ.

"தாருவாய் மஞ்சளிஞ்சி வாத பித்தம்"

பதார்த்தகுண சிந்தாமணி பாட்டு சகச.

"இஞ்சிக்கிழங்குக் கிருமலைய மோக்காளம்
வஞ்சிக்குஞ்சன்னிசுரம் வன்பேதி—விஞ்சுகின்ற
சூலையறும் வாதம்போம் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணுய் விளம்பு."

என்றபாட்டுக்களின்படி வரட்சியோடுகூடிய பித்தச்சரக்காகிய இஞ்சி க, ஐயஞ்சார்ந்த இருமல், கபநோய், சன்னி, சுரங்களைப் பித்தச் சத்தாலும், உ. வாதஞ்சார்ந்தசுரம், பேதி, சூலை, ஒக்காளம், வாதநோய்களைப்பித்தச்சத்தாலும் நீக்கல் எதிருறைபாம்.

கலப்புறை.

வாதம், பித்தம், வாதமையம், பித்தமையம், வாத பித்தமையம் கூடிய, அல்லது தனித்த சரக்குகளை அவற்றுடன் சேர்க்கும் சரக்கின் குண பலத்தால் தனித்தனி வாத பித்தமைய நோய்களைத் தீர்க்கும் மருந்தும், குறித்த நோய் தீர்த்தற்குரிய ஒரு சரக்கைத் தலைமையாய்க் கொண்டு துணைச் சரக்குகளைச் சேர்த்து முதற் சரக்கின்பெயராற் செய்யும் குளிகை, நெய், எண்ணெய், லேகியம், சூரணம், மெழுகு, தைலம் முதலிய மருந்துகளும் கலப்புறையாம். "வாத பித்தச் சரக்கு வாதச் சரக்கோடு சேரும்பொழுது வாத பலமும், பித்தச் சரக்கொடு சேரும் பொழுது பித்த பலமும், ஐயச்சரக்கு ஐயச் சரக்கொடு சேரும் பொழுது ஐய பலமும், வாதவையச் சரக்கொடு சேரும் பொழுது ஐய பலமும் உண்டாம்! இல்வாறு சரக்குகளின் சேர்க்கையால் சிறப்புக் குணங்களுண்டாய் நலம்பல செய்யும்.

கற்பம்.

இல்லறத்தாரும் துறவறத்தாரும் போகிகளும் கற்பம் யோகம் இரண்டும் பயிலலாம். மூலிகைக் கற்பம், மகா மூலக் கற்பம், சத்துக் கற்பம், பெருங் கற்பம் (ப்ரம கற்பம்) எனக்கற்பம் ச வகைப்படும். கருமயோகம், ஞானயோகம்என யோகம்இருவகைப்படும். கருமயோகத்திலொரு பகுதியாகிய உயிர்ப்புப் பயிற்சி(பிராணாயாமம்)யால் நோய்வாராமற் றடுத்தலும், ஆயுள்வளர்ச்சியுமுண்டாம். இத்தகைப்பெருநலங்களையுடையசித்தவைத்திய நூல்களையும் மருந்து செய்முறைகளையுங் கற்பிக்க ஒரு பாடசாலையு மித்தமிழ் நாட்டிலில்லை. சென்னையில் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் இந்திய மருத்துவ பாட

## குமரன் ஆண்டு மடல்.

சாலையில் தமிழ் மட்டும் தெரிந்தோர் படித்தற்குத் தக்க வசதி இல்லை. தமிழ் மொழியை நன்கு பயிலலுக்குத் தமிழ்ச் சர்வகலாசாலை (Tamil University)யுமில்லை. அண்மையில் தமிழின் கிளை மொழிகளிலொன்றாகிய தெலுங்குக்குச் சர்வகலாசாலை யொன்று ஏற்பட்டு நடைபெறுகிறது. தமிழ் மொழி உலகின் முதன் மொழியாயும் சிறந்த சீர்த்தேற்றமுடையதாயும், எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாயும் இருந்தும், தமிழர் செல்வமுஞ் சிறப்பும் நாகரிகமும் பெற்றிருந்தும், தந்தாய்மொழியிற் பற்றுதலின்மை, செவ்விய நடுநெறி கூறும் தமிழ் நூல்களைப் பரப்பாமல் ஓரங்கூறும் வடமொழிநூல்களைப் பரப்ப இலக்கக் கணக்கிற் செலவிடல் வருந்தத் தக்கதாம்.

### சித்தர் நூன் முறைப்படி உடல்நலம் பேணுமுறை.

பாலுண்போமெண்ணெய்பெறின்
வெந்நீரிற்குளிப்போம்

பகற்புணரோம் பகற்றுயிலோம்
பயோதரமுமூத்த

ஏலஞ்சேர்குழலியரோ
டிளவெயிலும்விரும்போம்

இரண்டடக்கோமொன்றைவிடோ
மிடதுகையிற்படுப்போம்

மூலஞ்சேர்கறிநுகரோம்
மூத்ததயிருண்போம்

முதனாளிற்சமைத்தகறி
யமுதெனினுமருந்தோம்

ஞாலந்தானீய்ந்திடினும்
பசித்தொழியவுண்ணோம்

நமனார்க்கிங்கேதுகவை
நாமிருக்குமிடத்தே.

உண்பதிருபோதொழிய
மூன்றுபொழுதுண்ணோம்

உறங்குவதிராவொழியப்
பகலுறக்கஞ்செய்யோம்

பெண்கடமைத்திங்களுக்கோர்
காலன்றிமருவோம்

பெருந்தாகமெடுத்திடினும்
பெயர்த்துநீரருந்தோம்

மண்பரவுகிழங்குகளிற்
கருணையன்றிப்புசியோம்

வாழையிளம்பிஞ்சொழியக்
கனியருந்தல்செய்யோம்

நண்புபெறவுண்டபின்பு
குறுநடையுங் கொள்வோம்

நமனார்க்கிங்கேதுகவை
நாமிருக்குமிடத்தே.

ஆறுதிங்கட்கொருதடவை
வமனமருந்தயில்வோம்

அடர்நான்குமதிக்கொருக்காற்
பேதியுறைநுகர்வோம்

தேறுமதியொன்றரைக்கோர்
தரநசியம்பெறுவோம்

திங்களுறைக்கிரண்டுதரஞ்
சவளவிருப்புறுவோம்

வீறுசதுர்நாட்கொருக்கால்
நெய்ம்முழுக்கைத்தவிரோம்

விழிகளுக்கஞ்சனமூன்று
நாட்கொருக்காலிடுவோம்

நாறுகந்தம் புட்பமிவை
நடுநிசியின் முகரோம்

நமனார்க்கிங்கேதுகவை
நாமிருக்குமிடத்தே.

# ஜெர்மானியர்களின் - - -

# - - - நூதன ஆராய்ச்சி.

## நோயாளிகள் இனி பயப்பட வேண்டாம்.



ஆயுதம் தொடாமலும் ஆப்ரேஷன் செய்யாமலும் ராஜபிளவை, பிளவைபுற்று, மேகநீர்க்கட்டிகள், ஊமைக்காயம் முதலிய ரண ரோகங்களை அடியோடு நாசம் செய்யத்தக்க ஒரு திவ்விய ஔஷதம் சமீபத்தில் ஜெர்மானியர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இனி இந்த நோய்களுக்கு ஆயுதம் தேவையில்லை. கைவிடப்பட்ட எவ்வித நீடித்த, பழைய பயங்கர வியாதி ஆயினும் தீரா வியாதி யென எண்ண வேண்டாம். ஜுரம், ஜன்னி, குஷ்டம், குன்மம், காசம், க்ஷயம், மூலம், வெறி பைத்தியம் முதலிய பலதரம் எல்லாவித நோய்களையும் சிறப்புவாய்ந்த ஜர்மன் ஊசிகளினாலும், நிகரற்ற திவ்ய ஔஷதங்களினாலும் வேரறச் செய்துவிடுவோம். செட்டிமார் நாட்டில் நாலு பக்கங்களிலும்முள்ள பலநோயாளிகளையும் பலவித கொடிய பயங்கர நோய்களில் நின்றும் தப்புவித்து காப்பாற்றி புத்துயிரளிக்கப்பட்டிருப்பதே நிதர்சனமாகும். ஒருதரம் உபயோகித்தால் ஜர்மன் மருந்துகளின் உண்மை விளங்கும். நோயாளிகளை எங்களிடம் ஒப்புவித்து உங்கள் கவலையை விட்டுவிடுங்கள்.

ஜெர்மன் டாக்டர்,

**டி. ஆர். என். தாஸ்,**

(13) எச். எம். பி. அண்டு. எல். எம். எஸ். (யு)

மேலையூரணி சமீபம். **காரைக்குடி.**

குணத்தில் சிறந்தது! மணத்தில் மிகுந்தது!!

விலையில் நயமானது !!!

# கலியாண உற்சவ காலங்களுக்கு

## உபயோகிக்கத் தகுந்ததும்

மிகக்கியாதிபெற்றதும், மெடல் மார்க் அடையாளமும், பல கண் காக்ஷிகளில் பரிசோதிக்கப் பெற்று 16 தங்கம் வெள்ளி மெடல்கள் பரிசுபெற்றுமுள்ள.

## ரஹிமானியாவின் வாசனை சாமான்களை

வாங்குங்கள்.

| | |
|---|---|
| ஒப்புவமையற்ற சந்தனாதித்தைலம் | மேலான ஊதுவத்திகள் |
| பரிமள மிகுந்த வாசனைப்பாக்கு | கியாதிவாய்ந்த அரகஜா, |
| நிகரில்லா கேசர் பவுடர் | உயர்ந்த அத்தர் பில்லைகள் |
| சுத்தமான அத்தர் தினுசுகள் | கலப்பில்லா குங்குமப்பூ |
| அப்பட்டமான புனுகு | பச்சைக்கற்பூரம் |
| ஜவ்வாதுகள் | பரிமள இந்தியன் செண்டுகள் |
| | இன்னும் பலவித வாசனை சாமான்கள் |
| உயர்ந்த காஜீபூர் பன்னீர் | மேலானவைகள் கிடைக்கும். |

# டி. ஏ. ரகிமான் அண்டு சன்ஸ்,

16, தங்கம் வெள்ளி மெடல்கள் பரிசுபெற்ற

அத்தர் வியாபாரிகள்

**நெ, 10, சைனுபஜார், ரோட், மதராவ்ஸ்,**

பிராஞ்சு : கல்லுக்கட்டி காரைக்குடி.





# வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த

பம்பாய் ராவல் அண்டு கம்பெனியாரின்

சென்னைக் கிளைஸ்தாபனம்

8, செகண்டு லைன் பீச்

கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

1885ம் வருடத்தில் பம்பாயில் ஸ்தாபிதமாகி நீண்டகாலம் புகழுடன் உழைத்து வரும் ராவல் அண்டு கம்பெனியைப் பற்றித் தெரியாதவர்கள் மிகச் சிலரேயாவர். கனவான்களுடைய மாளிகைகளுக்கும் அரண்மனைகளுக்கும் பொதுவாக பெரிய கட்டடங்களுக்கும் வேண்டிய தளவாடங்கள் அவரவர்கள் திருப்திக்கேற்றவாறு சப்ளை செய்து வருவது இக்கம்பெனி யென்பது பலருக்கும் தெரிந்த உண்மை.

பலரகங்களிலும் சித்திரவேலை செய்து கண்கவர் வனப்புடன் மிளிரும் நூதன மாதிரிக் கற்கள், தரை ஓடுகள் இத்தாலிய சலவைக்கற்கள், பளிங்குக் கற்கள், சித்திரவேலை செய்த மரச்சாமான்கள், வீட்டிற்கு உபயோகப்படும் சுகாதாரா தளவாடங்கள் முதலிய சாமான்கள் இக்கம்பெனியால் செய்யப்படுபவைகளுள் சில. சாமான்களுடைய நயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அவைகளுக்கு நாங்கள் குறிப்பிடும் விலை மிகவும் சரசமாகத் தோன்றும்.

சென்னை மாகாணத்தில் எங்களுடைய ஆர்டர்களை கவனித்து வரவும் கனவான்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கவும் எங்களுடைய கிளைஸ்தாபனம் திறந்திருக்கிறோம் என்ற செய்தியை பொதுஜனங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

விவரத்துக்கு எங்களுக்கு எழுதுங்கள்.

கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு கட்டடங்களுக்கு டைல்ஸ் போட ஏற்பாடுகள் செய்யப்படும்.

சென்னையில் எங்கள் காட்சிஸ் தலத்தை ஒருதரம் பார்வை யிடக் கோருகிறோம்.

தங்கள்

ராவல் அண்டு கம்பெனியார்,


(மதருஸ் பிராஞ்சு)

**8, Second Line Beach,**
**MADRAS.**

உயர் தர பொருள்களைப போல் இந்தத் தாம்பாளங் களும் உபயோகிக்க உபயோகிக்க சிறப்பெய்தும்.

உம்மிடியார் என்றால் உயர் தரத்தை விட அதிக திருப்தி கொடுப்பதே.

நீடித்திருக்கும் வெகுமதிகள்.



பிறந்தநாள் கொண்டாட்டம், கல்யாண காலங்கள், வருடக்கொண்டாட்டங்கள், புது வருடப்பிறப்பு முதலிய பண்டிகைகளில் நண்பர்களுக்கு ஞாபக சின்னமாக அளிக்க இத் தட்டங்கள் மிகவும் தகுதியானவை. கைதேர்ந்தவர்களால் மிகவும் நன்றாகச் செய்யப்பட்டிருப்பதால் இத்தட்டங்கள் அளிப்போரின் களிப்புற்ற மனப்பான்மையை குறிப்பதுமன்றி உபயோகிப்பவர் மனதில் எப்பொழுதும் அக்களிப்பையே எதிரொலிக்கச் செய்யும் திறம் வாய்ந்தவை.

இத்தட்டங்களை அழகுபடுத்துவோர் தொழிலாளர்களாக இருப்பதோடு சிறந்த ஓவிய ஞானமும், அநாதியான அழகிய வஸ்துவின் நுண்ணிய வனப்பைக் கற்பிக்கத் தகுந்த திறமை வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

இன்று வெகுமதியாக அளிக்கப்படும் இவைகள் நாளடைவில் விலை மதிக்க இயலாத பரம்பரை சொத்துக்களிலொன்றாகிறது.

உம்முடி ராமய்யா செட்டி

(24)

குருசாமி செட்டி அண்டு கம்பெனி.

நகை தயாரிப்பவர்கள்.

தொழிற் சாலை.
62 கோவிந்தப்ப நாயக்கன் தெரு. ஜி. டி.
மதராஸ்.

கியாட்லாக் இனும்!

காட்சி சாலை.
25. நைனா பசார் ரோட்
ஜி. டி. மதராஸ்

# சந்யாசி சம்சாரியான கதை.

காட்சி க.



"எவ்வளவு மழைதான் பெய்யட்டும்! வானந்தான் இடிந்து விழட்டுமே! ஆன்ம வடிவமான என்னை என் செய்ய முடியும்?"

The United India is one of the best Life Assurance Companies in India.

## குமரன் ஆண்டி மடல்.


### காட்சி ௨.



"ஈர வேட்டியைக் காயப்போட்டால் எலி கடிக்கிறது; இதற்கென்ன செப்பலாம்?"

## சந்யாசி சம்சாரியான கதை.

### காட்சி ௩.



"இது நல்ல பூனை. இதை நம்முடைய ஆசிரமத்தில் விட்டு வைக்கலாம். பின்னர் எலி வராது"

The United India is absolutely a safe Office from Policy holders' point of view.

காட்சி ௪.



“ வெகு சந்தோஷம்! ஒரு பூனைதான்! தினம் இவ்வளவு பால் போதும்.”

பணம் போடுவோருக்கு முற்றும் பத்திரமான கம்பெனி யுனைடெட் இந்...



காட்சி ௫.



“இதுவரை ஒரு பூனை. இப்போது ஆறு உருப்படியாகிவிட்டதே! இனி பாலுக்கு வழி ........!”

Promt settlement of claims is a renowned feature of the United India.

## குமரன் ஆண்டு மடல்.

### காட்சி ௯.



ஒரு சிஷ்யன்:— ஸ்வாமி! இந்தப்பசுவையும் கன்றையும் வைத்துக்கொள்ளுங்கள்

ஸ்வாமியார்:— நீ தீர்க்காயுஷாயிருப்பாயாக. கவலை ஒழிந்தது. இனி பூஜை சுகமாகவிருக்கும்.

## சந்யாசி சம்சாரியான கதை.

### காட்சி ௭.



"இந்த மாடு பார்ப்பதற்கும் பால் கறப்பதற்கும் ஒரு ஆள் வேண்டும்"

Uninted India combines economy with efficient management.

## குமரன் ஆண்டுமடல்.

### காட்சி அ.



கிழவி:— இவள்தான் என் மகள்; பாடு பார்த்துக் கொள்வாள்.

சுவாமியார்:— பூனைகட்கு வேண்டிய பால்போக மிச்சமெல்லாம் உங்களுக்கு எடுத்துக்கொள்ளுங்கள்!

யூனைடெட் இந்தியா செட்டாகவும் திறமையாகவும் நடத்தப்படுகிறது.

## சந்யாசி சம்சாரியான கதை.

### காட்சி க.



பெண் கட்டுத்துறைப் பக்கத்தைப் பெருக்குகிறாள்.

Insure in the United India Life Assurance Company.

காட்சி ௧௦.



யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் இன்ஷியூர் செய்யுங்கள்.



காட்சி ௧௧.



"பெண்ணைக் கலியாணஞ் செய்து கொள்கிறாயா? என்ன சேதி!"

The United India is one of the best Life Assurance Companies in India.

காட்சி கஉ.



சுவாமியாருக்கு முகக்ஷவரம் நடக்கிறது.

பணம் போடுவோருக்கு முற்றும் பத்திரமான கம்பெனி யுனைடெட் இந்தியா.

காட்சி கங.



"இது பேஷான வாசனைத் தைலம்"

Safety and service are the foundations on which United India is built.

## குமரன் ஆண்டிமடம்.

### காட்சி ௧௪.



பெண்டாட்டி:— ஆக உருப்படி ஏழு. சாப்பாட்டுக்கு வகை என்ன?

பத்திரம் உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்.

## சந்யாசி சம்சாரியான கதை.

### காட்சி ௧௫.



உத்தியோகத்துக்குப் போகிறார்.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று"

South India has practically one Life Assurance Co , and it is the United India.

காரிலுள்ள பழுதுகளை ஒழுங்கு செய்துகொள்ள உங்கள் கார்களை அங்கேயே அனுப்புங்கள். அவர்களிடமேசிறந்த, திறன் வாய்ந்த வேலையாட்கள் உள்ளார்கள்.



கார்களுக்கு வைத்தியர்கள்.

காரைக்குடி தியாகராஜா மோட்டார் ஒர்க்ஸ்

செக்காலை



# தந்தை மகற் காற்று நன்றி.

திருவாளர் வல்லை பாலசுப்பிரமணியன் B. A.,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

இம்மன்பதைக் கண்ணுள்ள மனிதன், விலங்கு, மாஞ் செடிகள் முதலான எண்ணிறந்த உயிர்கட்கு, ஒவ்வொன்றும் தன்னைக் காத்துக்கொள்ளுதற்குப் பசி யுணர்ச்சியும், தனது இனத்தை என்றும் இடையறாது நிலைபெறச் செய்தற்கு, இணைவிழைச்சு அல்லது காம உணர்ச்சியும் (Sexual affinity) இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. நாம் வசிக்கும் இப்பெரிய உலகத்தில் ஓயாது நிகழும் மாறுதல்களும், பற்பல சமூகங்களின் ஆக்கமும் அழிவும், கோடானு கோடி அரசாங்கங்களின் தோற்றக் கேடுகளும், கேட்கும்போதே குருதி ஓட்டத்தைத் தடைசெய்யவல்ல பயங்கரமான போர்களும், என்னும் இவைகட்கெல்லாம் முதற்காரணமாய் நின்று இயக்குவன மேற்கூறிப் போந்தஇரண்டு இயற்கை யடிப்படை உணர்ச்சிகளுமேயாகும். இவ்விரு உணர்ச்சிகளையும் உயிர்கள் இயற்கைவழி நின்று போதிய அளவு அவ்வப்போது பயன்படுத்திக் கொள்வார்களானால் யாண்டும் சன்மார்க்கமும், செந்நெறியும் பரவும். அவ்வாறின்றி இவ்வுணர்ச்சிகளை நெறியல்லா நெறி செலுத்தி சுயநலத்தால் உந்தப்பட்டு, தசை செறிந்த வெற்றுடலுக்கு மட்டும் சின்னேரம் இன்பத்தைத் தந்து மீண்டும் துன்பத்திலாழ்த்தும் இழிதுறைகளில் உயிர்கள் புகுவார்களானால் எங்ஙனும் போரும், கொலையும், அல்லலும், துக்கமுமே மலிகின்றன. கடவுள் நமக்கு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் ஆற்றலைத் தந்திருக்கின்றார். அதன் துணைக்கொண்டு தீயன விலக்கி, நல்லன கடைப்பிடித்தல் உயிர்கள் கடன். செய்தீ வினையிருக்க தெய்வத்தை நோதல் என்பயன் விளைத்தற்கு? முற்கூறிய இரு உணர்ச்சிகளுள்ளும், மக்கட்பேற்றிற்கு இன்றியமையாத காரணமாயிருப்பது காம உணர்ச்சியாகும். தக்க பருவத்தில் இவ்வுணர்ச்சி எழுச்சிபெற்று அதனால் ஒன்று பொருந்துகிற ஒருவனும், ஒருத்தியும் தங்களது செயல்களாலும், எண்ணங்களாலும், உலகத்திற்கு நன்மை செய்பவோ, அன்றித் தீமை இழைக்கவோ, பெரிதும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். விழுமிய நோக்கங்கொண்டு, அதற்குரிய தவஞ் செய்தார்களாயின், ஒரு புத்தர் பெருமானை மீண்டும் தோற்றுவிக்கலாம். ஆனால் குரூர நெஞ்சினனாய்க் காரணமின்றியே பிறரை வாள்கொண்டறுத்தலைப் பொழுதுபோக்காக உடைய கொலை பாதகனையும் மேற்சொன்ன அவ்விருவரே தோற்றுவிக்கவும் முடியும். இந்நில வுருண்டையின் மேற்பரப் பெங்கும் முதன் முதல் மக்கள் தோன்றிய நாள்தொட்டு, இன்றுகாறும் மக்கட் கூட்டம் இடையறாது நிலைபெற்று வருகின்றது. இனியும் பல்லூழிகள் மக்கள் நிலைபெற்று வாழ்வார்கள். இப்பெருங் காலவரையறையினிடையே, பற்பல நன் மக்கள் தோன்றி, முன்னேற்றம் என்னும் ஒரு பெரிய தேரினைப் பிடித்திழுத்து அதன் செலவைத் துரிதப்படுத்தினார்கள். எனினும், அடுத்தடுத்துக் கீழ் மக்களும், கயவர்களும் உடனுக்குடன் தோன்றி, தமது ஆற்றலால் அத்தேரின் இயக்கத்தைத் தடுத்தும், அதனால் பிற மக்களை வருத்தியும், வந்தார்கள். ஆகவே புதிது பொருந்தப் பெறுகின்ற இரு இளங்காதலரிடை எத்தகைய நினைவு முனைத்து நிற்றல் வேண்டும்? வெறுங் காம இச்சையா? அன்று; கொழுத்த தசைத்திரளின் பரிச உணர்ச்சியா? அல்ல; மற்றென்னையெனின் அறியாமை என்னும் இருளிலும், அவா என்னும் பெருங்கடற் சுழலி

னும் சிக்கித் தவிக்கும் மக்களை ஒரு சிறிதேனும் முன்னேற்றவல்ல ஆண்டகையை அல்லது ஒரு திலகவதியாரை யாம் ஈன்றெடுப்போமா என்னும் விழுமிய நோக்கம் அவர் தம் உள்ளத்தில் அரும்பி யிருத்தல் வேண்டும். அந்நோக்கம் கைவரப் பெறுதற்குச் செயற்பாலனவற்றையுஞ் செய்தல் வேண்டும்.

ஒரு நாடு இனிப் பெறவிருக்கும் செம்மையினையாதல், சீர்கேட்டையாதல், அந்நாட்டிடை நிகழும் மணமுறை, ஆண் பெண்களுக்குள்ள கூட்டுறவு, குழந்தைகளை வளர்க்கும் விதம் என்னும் இவைகளைக் கொண்டு நன்றாய்க் கூறிவிடலாம். என்னை, அம்மணமுறைகளும், கூட்டுறவும் மக்கட் பேற்றிற்குக்காரணமாயிருத்தலினாலும் அச் சிறு குழவிகளே பிற்காலத்தில் அந்நாட்டின் அரசியலை நடத்துவிப்போராகலானு மென்க. நாகரிகமுதிர்ந்த மேனாடுகளில் குழந்தை வளர்ப்புக்கெனப் பெரிய சங்கங்களும், அதைப் பற்றிக் கூறும் எண்ணிறந்த நூற்களும் இருக்கின்றன. இம்மட்டுமா! தாய்தந்தையர்களின் பெயர்சொலத் தெரியாத அநாதைக் குழவிகளை எடுத்து வளர்ப்பதற்கு வியன்னா (Vionna) நகரத்தில் பெரியதொரு விடுதிச்சாலை அமைக்கப் பட்டிருக்கின்றது. இதைவிடப் பெரியதொரு அறம் வேறொன்றிருக்குங்கொல்? தாம் பெற்ற குழவிகள் தம்மெதிரிலிருந்தும், மானக்கேட்டிற் கஞ்சி அவற்றைத் தாம் அங்கீகரியாமல், விட்டுவிட்ட பிறகு அவைகளின் கதி என்னாவது? ஆகவே, அவையிற்றினைப் புறக்கணிக்காது, காத்தல் தம்முடைய தலையாய கடனென அந்நாட்டினர் கருதுகின்றனர். இத்தகைய அனாதைக் குழவிகளின் விடுதிச்சாலைகள் பிற்காலத்தில் பெரிய மேதாவிகளையும், சான்றோர்களையும், கல்வியாளர்களையும் தோற்றுவித்தன. ஈண்டு ஒரு நாடு தந்தை முறையில் நின்று தாய்தந்தையற்ற குழவிகட்குத் தன் கடனாற்றுகின்றது. இத்தகைய விடுதிச்சாலைகள் நம் மிந்திய நாட்டினும் நடைமுறையில் வரப்பெற்றால், ஆயிரக் கணக்கான சிசுக் கொலைகளையும், கோடிக்கணக்கான கருவழித்தலையும் தவிர்ப்பதாகும். இதனைக் குறித்து மாறுபட்டு நினைப்பாரும் உளர். அது நிற்க,

நம்மிந்திய நாடு இஞ்ஞான்று மெய்தியிருக்கும் சீர்கேட்டிற்கு அடிப்படையான முதற்காரணம் நம்மிடைநிகழும் மணமுறைகளும், ஆண் பெண் கூட்டுறவும், குழந்தைகளின் வளர்ப்பும் நேரிய முறையில் நடைபெறாததனால் என்று மேனோக்குடைய எந்த அந்நியனும் உடனே சொல்லிவிடுவான். ஆம்! யாம் ஒரு இந்தியனாயினும் என்ன? உள்ள குறைபாடுகளை மறைக்காத ஒப்புக்கொண்டு அவையிற்றினை நீக்க முயல்வோனே தாய்க்குரிய தொண்டு செய்தவனாவான். நம் நாட்டில் அதிலும் நம் தென்றமிழ் நாட்டில் எத்துணைபேர் சீரிய நோக்கங்கொண்டு மணம்புரிந்து மக்கட் பேற்றிற்காக விழைந்து நிற்கின்றார்கள்? மேலும், நமது சமயக் கொள்கையின் படி —இது தப்போ ஒப்போ அறியேம்—ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும், இன்றியமையாது மணவாழ்க்கைக்குட்பட்டு மக்களைப் பெறுதல் வேண்டும். அவன் மிடியனாயினும் பிணியாளனாயினும் நபும்சகனாயினும், அங்க ஈனனாயினும், மற்று எத்தகையோனாயிருப்பினுஞ் சரி —கட்டாயம் மணஞ்செய்து மக்களைப் பெறுதல் வேண்டும். அற்றேல், அவன் புத் என்னும் நரகத்தில் வீழ்ந்து ஊழிகள் தோறும் இடர்ப்படுவான், மக்களைப் பெறாதவன் "பிள்ளைப் பேறற்ற பாவி" என்று இகழப் படுகிறான். இவ்வசை மொழிக்கு அஞ்சி, நம் மூடபலர் மாற்றாருடைய பிள்ளைகளைச் சுவீகாரங் கொண்டும், அல்லது காப்பாற்ற வகையின்றியும், மேலும், மேலும் பல பெண்களை மணந்தும் அல்லற்பட்டுழல்கின்றனர். இத்தகைய ஆபாசக் குருட்டு நம்பிக்கையைத் தம் அளவிலேயே நிறுத்திக் கொள்ளாமல் மக்கள், பசு முதலிய ஒன்றுமறியா விலங்குகளினிடத்துஞ் செலுத்துகின்றனர். திவசம், திதி முதலிய காலங்களில் "அகத்திக்கீரைக் கட்டுக்களைக் கன்றினையுடைய பசுவிற்குப் பார்த்துக்கொடு" என்று எம் தாதையார் எமக்கு ஆணையிட்டதைக் கருதி யாம் பற்பல காலங்களில் நகைத்த துண்டு. ஆகவே, நம் நாட்டில் பிள்ளைப் பேற்றைக் கருதித் தவங்கிடந்தோர் பலர்; அரிதிற்றேடிய தம் செல்வத்தையெல்லாம் கோயில்கட்டும் இராமேசுவரத்தில் நாகப் பிரதிஷ்டை செய்தற்கும் செலவிட்டு வறியாராயினர் அநேகர். பார்ப்பனத் தம்பதிகட்குத் தாசம் துகிலும் காசும் மணியும் வாரி

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் இன்ஷியூர் செய்யுங்கள்.



யிறைத்து ஏழையானோர் எண்ணிறந்தோர். எனினும், எதனைக் கருதி, பெறுதற்கரிய மகப் பேற்றினையடைய நம்மவர் முயல்கின்றார்கள்? தாம் இறந்த பிறகு தமக்குக் கிரியைகள் செய்தற்கும், தமது பேரினைச் சொல்லுதற்கும் நெருப்பு யாற்றின் குறுக்கே மயிர்ப்பாலத்தின் மேல் ஒரு பசுவின் வாலைப் பிடித்தேகுதற்குக் கீழே ஒரு பார்ப்பனனுக்குப் பசு ஒன்றினைத் தானஞ் செய்தற்கும், பிள்ளை வேண்டு மென்று ஒரு சிலர் விழைகின்றார்; இறந்துபட்ட பின் கொள்ளி போடுதற்கும், நெய்ப்பந்தம் பிடித்தற்கும் வேறு சிலர் ஆண்மூளைகளை வேண்டுகின்றார்; தாமும் உண்ணாது, பிறர்க்கும் நல்காது மலைமலையாய்ச் சேமித்து வைத்த பொற்குப்பைகளைச் செல விடற்குப் பிள்ளை யில்லையே யென்று மற்றுஞ் சிலர் ஏங்குகின்றார்; தன்னுடைய தமையனுக்கு ஒரு பெண் பிறக்கு முன், அப்பெண்ணிற்கு மணாளனாக ஒரு மகனைப் பெற ஆத்திரப்படுவாள் ஒரு பெண்; தனது மாற்றாள் மூன்று பிள்ளைகளையும், இரண்டு பெண்களையும் ஈன்றெடுத்தால், அதற்கீடாகத் தானும் மூன்று பிள்ளைகளையும், இரண்டு பெண்களையும் பெறச் செயற்கரியன வெல்லாம் செய்வாள் மற்றொருத்தி.

"மற்றொருவர் தயவு எனக்கு எற்றுக்கு! யான் இறந்தால், பிணத்தைத் தூக்குவதற்குச் சரியாக நான்கு பிள்ளைகளும், பாடையின் கீழ்ப்புரண்டழுவதற்கு ஒரு பெண்ணும் இருக்கின்றாள்" என்று ஒரு நரை முதியாளர் இறுமாந்தார். மணஞ்செய்து கண்ணாரக் காணவேண்டி, பிள்ளைவரங் குறித்துத் தவங்கிடப்போர் இன்னுஞ்சிலர்; "யான் இறந்துபட்டபின், என்மாற்றானோடு மன்றத்தில் வாது புரிந்து, அவனைக் கெடுப்பதற்கு ஒரு பிள்ளை யில்லையே" என ஏங்குவார் பலர். அன்பர்களே! இவையெல்லாம் எத்துணை "விழுமிய" நோக்கங்கள் பார்மின்! இத்தகைய எண்ணங்கள் மக்கள் அகமும், புறமும் ஊடுருவிப் பாய்ந்து நிற்கும் இந்நாட்டில் அடிமைகளும், கயவர்களும், பயங்கொள்ளிகளுமே யொழிய, யாங்கனம் வீரர்களும், ஆண்டகைகளும், சான்றோர்களும் தோன்றுவார்கள்?

சபிக்கப்பட்ட நமது நாட்டில், தாயின் முலையைச் சுவைத்துக்கொண்டிருந்த ஒரு சிறு பெண் குழவி, பதறப்பதற இழுக்கப்பட்டு, மணப்பந்தரில் உட்கார வைத்துத் தாலி கட்டப்படுகிறாள். தன்னைச்சுற்றிலும் எண்ணிறந்த ஜனங்களையும், இடியோசை போன்ற அவர்களது பேரிரைச்சலையும் கண்டு மருளாவண்ணம், விளையாட்டுக்காக, அவள் கையில் ஒரு வாழைப்பழம் கொடுக்கப்படுகின்றது. மணம் இன்னதென்றும், கணவன் மனைவி என்னு மிருவர்க்குள்ள தொடர்பு இப்பெற்றித்தென்றும் அறியாத அவ்விளம்பெண், சின்னாட்களில் தாயாகின்றாள். தன்னுடைய தாயின் மடியின்மேல் தான் படுத்திருப்பதற்குப் பதிலாக, தன் மடியின்மேல் முழங்கையளவுள்ள ஒரு குழவி யிருப்பதைக்கண்டு, அவள் பைந்தளிர் போன்ற மேனி நடுக்குறுகின்றது. அக்குழவியை அவள், தன்னைக் கொல்லவந்த கூற்றுவனாகப் பாவிக்கின்றாள். அவள் தன் உடல் நிலை, மீனவழியின்றி, அறக் குலைகின்றது. மேல் நடப்பது, யாம் சொல்லவேண்டுவதின்று.

"ஒழுக்க முடையார்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"—

நம் நாட்டில் மணம் என்றால், மிக இலேசான காரியம். வறியன், பிணியாளன், அங்கவீனன், தளர்நடை முதியோன் என்னும் இவரெல்லாம் மணஞ்செய்து கொள்ளலாம். மனைவிமக்களைக் காக்கும் ஆற்றலும் பொறுப்பும் ஒருவனுக்குண்டோ என்று ஆராய்தல் கிடையாது. அவ்வாறின்றி, ஒருவரிருவர் "அந்தோ! எனக்குப் போதிய வயதிருந்தும், மனைவிமக்களைக் காப்பாற்றப் பொதுமான ஊதியங் கிடைத்திலதே" என்று பரிதவித்தால், அதற்குச் சமாதானங் கூறப் புராணங்களும், சாஸ்திரங்களும், பாகவதர்களும், புரோகிதர்களும் வந்துவிடுவார்கள். "அறியாச் சிறுவனே, உனக்கு இன்னும் அநுபவம்போதாது. யாம்சொல்வதைக்கேள். மணஞ்செய்துகொள்ளல் உனது கடன். உனது மனைவி மக்களைக்காக்க ஈசன்ஒருவன் இருக்கின்றான். அதற்கென்று மரம் நட்டவன், தண்ணீர் விடாமற் போகான். எல்லாம் பானை பிடித்தவள் பாக்கியம். உனக்குத் திடீரென்று அதிர்ஷ்டம்வந்துவிட்டாலும் வரும். பார், அப்பர் சுவாமிகளும்,

The United India is one of the best Life Assurance Companies in India.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்று அருளியிருக்கின்றார். ஆகவே, உன்கடன் மணஞ்செய்து மக்களைப் பெறவேண்டியது, உன்னையும், அவர்களையும் காப்பது ஈசன் கடன். இது புராண சம்மதமானது. புராணங்களினின்றும் எடுத்துக் காட்டுகள் எண்ணிறந்தனவாக யாங்கள் காட்டுவோம். வேண்டுமானால் பார், விசுவாமித்திர முனிவரை அப்பெருமான் மேனகையுடன் கூடி அவள் நலந்துய்த்தார். அதன் பயனாகச் சகுந்தலை பிறந்தாள். பிறகு, மேனகை, சகுந்தலையை அங்கீகரிக்குமாறு விசுவாமித்திரரை வேண்ட அவர்—ஆ, எத்துணை விருப்பு வெறுப்பற்றவர்—அக்குழவியைக் கண்ணெடுத்தும் பாரேனென்று தடுத்துவிட்டார். பிறகு, சகுந்தலை வளரவில்லையா? துஷியந்தனை மணக்கவில்லையா? நம்மிந்திய நாட்டிற்குத் தன் பெயரைக் கொடுத்த பரதனைக் கருவுயிர்க்கவில்லையா? இன்னும் வேண்டுமானால் கேள். குசேல முனிவர் எத்துணை மகா முனிவர்? அவர் ஆடையில் இந்திரன் குடிகொண்டான். வயிற்றில் அக்கினிவெற்றி சம்பன்னனாய் வாழ்ந்தான். அவருடைய வயிற்றுக்கும் முதுகிற்கும் வேற்றுமையே கிடையாது. தடவிப்பார்த்தால், கொப்பூழ் இருக்குமிடம் வயிறென்று அக்காலத்திருந்தோர் அறிந்தார்கள். இத்தகைய மகாமுனிவர் அசுவினிமுதலிய வான்மீன்கள் போன்று இருபத்தேழு பிள்ளைகளை ஈன்றார். அவர்களெல்லாம் இறந்துபட்டனரா? இறுதியில் கண்ணபிரான் அவர்கட்கு அருள் நல்கவில்லையா!" என்று இவ்வாறெல்லாம் பலபடக் கூறினால் எவனுடைய மனந்தான் இசையாது? அவன் ஒரு பெண்ணை மணக்கின்றான். இறுதியில்,

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப்
[பெறுவீர்
காப்பதற்கோ வழியறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத் தொன் மரத்திடுக்கில் கால்நுழைத்
[துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்திழுத்த குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே"

என்னும் பாட்டிற்கு இலக்கும் ஆகின்றான், பாவம்.

புராணக்கதைகளும், சாஸ்திரக் குப்பைகளும், எத்தகைய கொடிய நச்சுக்கல்வியினைப் பரப்புகின்றன என்று "பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்னும் பிறிதொரு கட்டுரையில் சிறிதே விளக்கிக் காட்டியிருக்கின்றேம். தமிழ்மொழியில் உள்ள குசேலோபாக்கியானப் பாக்களைப்படித்து யாம் இன்புற்றது போன்று வேறியாரும் இன்புற்றிரார்கள் என்று யாந்துணிந்து கூறவல்லேம். சில திங்கள்கள், இருக்கினும், நிற்கும்போதும், இரவு கண்துயிலும் போதும், பொறுக்கென நடக்கும்போதும், பொருந்தி ஊண் துய்க்கும் போதும், அவ்வழகிய பாக்களை, யாம் மறந்தும் எம் நா பாடியவண்ணமாயிருக்கும். குசேலமுனிவரின் தவத்தின் மேன்மை,வறுமையிற் செம்மை, சுசீலையாரின் கற்பின் திண்மை, கண்ணபிரானின் நட்புத்திறத்தின் விழுமம் என்னும் இவையெல்லாம் எம்மனோரால் உச்சிமேற்கொண்டு போற்றத்தக்கன. எனினும்,

"தந்தை மகற் காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்னும் அருமைத் திருக்குறளுக்கு இலக்காகக் குசேல முனிவரை எடுத்துக் காட்ட ஒருக்காலும் ஒருப்படேம். மற்றும், இக்கதையின் அசம்பாவிதத்தைக் காட்ட ஒரு சான்று இக்காலத்தில் எங்கும் பரவி வருகின்றது. அஃதியாதெனில் மிகக் குறைந்த பக்ஷம் பார்ப்பினும், சுசீலையம்மையார், ஆண்டிற்கொரு குழவியாக இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். எனவே, இருபத்தேழாவது மகவு கையிலிருக்கும்போது, முதற் பிள்ளைக்கு இருபத்தேழு அகவையாயிருத்தல் வேண்டும். இரண்டாவது பிள்ளைக்கு இருபத்தாறு ஆண்டாயிருத்தல் வேண்டும். மூன்றா மவனுக்கு, இருபத்தைந்து வயதாயிருத்தல் வேண்டும். இங்ஙனம், குறைந்தது, எழுபிள்ளைகளாதல் இருபது வயதிற்கு மேற்பட்ட ஆண்மக்களாயிருப்ப, இவர்களை வைத்துக்கொண்டு, குசேலரும், சுசீலையாரும், பிற மக்களும், வறுமைப் பிணியில் வருந்த வேண்டிய அமயம் எது என்பதே எமது ஐயம்.

இந்தியாவிலுள்ள சிறந்த லைப் அஷியூரன்ஸ் கம்பெனிகளுள், யூனைடெட் இந்தியா ஒன்று

தாடியும், மீசையும் முளைத்த இவர்களெல்லாம், தம் தாயை நோக்கி, "அம்மா! எனக்குக் கூழ்வார், அடுத்த மனைச்சிறான் அயின்ற பக்ஷணத்தை எனக்கும் அருந்தக் கொடு" என்று கண் சிவந்து வாய் பிதுக்கி அழுதார்களென்று கூறுதல் எத்துணை அசம்பாவிதம்? இவையெல்லாம் உண்மையாகவே நடந்திருக்கும் என்றும், இவைகட்கெல்லாம் காரணம் கண்ணனின் திருவிளையாடல் என்றும் சமாதானங் கூறும் கும்பகோணத்துப் பண்டிதர்களும், சங்கராசாரிய பீடங்களும் இல்லாமற் போகவில்லை என்பதை யாம் மறக்கவில்லை, மறக்கவுமில்லை. வேறொன்று விரித்ததற்காகச் சாலவும் வருந்துகின்றேம்.

அன்பர்களே! தாம் சிறிது கவலைக் குறைவாலும், அறியாமையாலும், விளையாட்டாகவும் இழைக்கும் சிற்சில குற்றங்கள் மலைபோல் வளர்ந்து தமது எழேழ் தலைமுறைகளையும் மீளாத் துக்கத்தில் ஆழ்த்துமென்று இளங்காதலரிருவர் ஒரு கணமேனும் உன்னுவார்களானால், தம் தீவினையை நினைந்து உதிரக்கண்ணீர் உகுப்பார்களென்பதற்கையமில்லை. ஆ! ஒரிளங் குழவி இன்றுதான் பத்துத் திங்கள் சாரிட்ட ஆணவக் கருவறையிலிருந்து கீழிறங்கியது. முதன்முதல் தன் சிறிய கண்களைத் திறந்து சுற்று முற்றும் நோக்குகின்றது. அதன் புன்முறுவல் தவழும் முகங்களில் ஆண்டவன் அருட்பெருந் தாண்டவம் விளங்குகின்றது. நட்பினர், நொதுமலர், பகைவர் என்னும் உணர்ச்சியும், காய்தலுவத்தல்களும் அதற்கில்லை. பிறர் தனக்குக் கற்றுக் கொடாமலே, தன் தாயின் முலையைப்பற்றிச் சுவைத்தலும்,தன்னுடைய சொந்த முயற்சியினால் மலமூத்திரங்களைப் போக்குதலும் முதன் முதல் செய்யும் வீரச்செயல்களாகும். அதன் உள்ளம், இறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலம்போல் மாசு மறுவற்றுப் பளிங்கென இலங்குகின்றது.

அவ்விளங்கன்று பயமும் அறிகின்றதில்லை. தன் மருங்கு ஓடும் பாம்பைப் பிடிக்கப்போகின்றது. தன்முகத்திற்கெதிரே யுள்ளதொரு விளக்குப் போகும் வழியெல்லாம் தன் கண்களைத் திருப்புகின்றது. "குழந்தையுந் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" என்னும் முதுமொழிப்படி அக்குழவி தன் செயல்களால் ஆண்டவனைக் காட்டுகின்றது. அஃது ஆண்டவன் உருவம், கிடைத்தற்கரிய செல்வம்; மகிழ்ச்சிதரும் ஊற்று. சின்னாட்களான பின் பிறர் செய்வதையுற்று நோக்கி, அவர்கள் செய்வனபோல் தானும் செய்ய முயல்கின்றது. இக்காலமே அதனைப் பதமுறப் பண்படுத்தற்குரிய சரியான காலம். தாய் தந்தையர்களுக்குச் சோதனைக்குரிய காலமும் இதுவே. இக்காலத்தில், பெற்றோர்கள் அக்குழவியைக் கொண்டு மீண்டும் ஒரு மெய்கண்டதேவரைத் தோற்றுவிக்கலாம். அற்றேல், ஒரு குடிலனையும் மீண்டும் உயிர்ப்பிக்கலாம். பதமுறப் பிசைந்த ஒரு மா உருண்டை எம் கையிலிருக்கின்றது. அதனைக் கொண்டு யாம் ஒழுகிய கண்களைக் கவரும் கவின்பெரு வனப் பினதாய்க் கலைமகளுருவத்தைச் சமைக்கலாம். அன்றியும், ஒரு பேயின் உருவத்தையும் சமைக்க எமக்கு ஆற்றலிருக்கிறதன்றோ? 'இளமையில் கல்' 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்னும் முதுமொழிகளை நோக்குக.

மேற்றிசையில் சில நாடுகளில் ஒருவனும் ஒருத்தியும் மணவாழ்க்கைக் குட்படுமுன் சுகாதாரம், வீட்டின் நிர்வாகம், நற்பிள்ளைப் பேறு என்னுமிவை போன்றவைகளைப்பற்றிக் கற்பிக்கும் கல்லூரிகளில் அவர்கள் இன்றியமையாததாகப் பயிலல் வேண்டுமாம். குறித்த காலத்தின் பிறகு நடைபெறும் பரீக்ஷையொன்றினில் தேறுவோர்க்கே மணஞ்செய்துகொள்ள உரிமையுண்டென்று பிறர் சொல்ல யாம் கேட்டிருக்கின்றேம். அத்தகைய கல்லூரிகள் நம்நாட்டில் நடைபெறுமாயின் எத்துணையோ நன்மைகள் பயக்கும்.

இஞ்ஞான்று உலகத்திலுள்ள கொலைஞர்கள், குற்றவாளிகள், வஞ்சகர்கள், பொய்யர்கள், அங்கஈனர்கள், தொழு நோயாளர் என்னும் விரும்பத்தகாத இவர்களெல்லாம் தத்தம் பெற்றோருடைய தீவினைப் பயன்களின் உருவங்கள் என்பதை எவராலும் மறுக்கவொண்ணாது. ஒரு மகன் கொலைஞனாதற்குக் காரணம் அவன் தாய் என்று யாம் சொல்லப் புகுந்தால் பிறர்க்கு வியப்பாகத் தோன்றலாம். எனினும் இப்பயங்கரமான உண்மையினை மறுக்க முடியாது. அம்மகன், தன்

The United India is absolutely a safe Office from Policy holders' point of view.

தாயின் வயிற்றில் கருவாயிருக்கையில் மானக்கேட்டிற்கோ அல்லது வறுமைக்கோ அஞ்சி அவள் அக்கருவை அழிக்க முயற்சித்தும் அம்முயற்சி பயன்படாது அக்கரு மகனாய்ப் பிறந்து இஞ்ஞான்று கொலைஞனாய்த் திகழ்கின்றான். கருவழித்தல் கொடிய கொலையன்றோ? தன் தாய் தன்னைக் கொல்லுதற்கு நினைத்த எண்ணங்களும் செய்கைகளும், அங்ஙனமே அப்பச்சைக் கருவில் பதிந்துவிட்டன. பிறகு கொலையன்றி வேறென் செய்ய அம்மகனால் முடியும்? பழியோரிடமும், பாவமோரிடமுமாயிற்று. கொலைஞன் தூக்கிடப்பட்டான். அவன் தாய் சும்மாவிடப்பட்டாள். பெரும்பான்மையும் மக்கள் இவ்வாறாகவே கொலைஞர்களாகிறார்களென்று மனோ தத்துவ நூலுடையார் இஞ்ஞான்று நிறுவிக்காட்டுகிறார்கள். "அவன் என்செய்வான்? என் வயிறுசெய்த பாவம்" என்று தாய்மார் தம்மையறியாமலே உண்மையைச் சொல்லக் கேட்கிறோமன்றோ?

'தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்"

என்னும் பொய்யாமொழி ஈண்டுச்சான்று பகர்தல் காண்க.

இனிக் கரவாடும் வன்னெஞ்சர்களும், பொய்யர்களும் எவ்வாறு ஆக்கப்படுகின்றார்கள்? நம் வீடுகளில் நாடோறும் பெற்றோர்கட்கும், பிள்ளைகட்கும் இடையில் நடைபெறும் சில சாதாரண நிகழ்ச்சிகளை எடுத்துக்கொள்வோம். எழியாண்டு நிறையப் பெற்ற சிறுவனொருவன் வீட்டில் பந்து விளையாடிக் கண்ணாடி விளக்கொன்றை உடைத்துவிட்டான். அவனுடைய தந்தையார் அவனை அதைப்பற்றிக் கேட்டபோது உண்மையையொளிக்காமல் "அப்பா, நான்தான் அதை உடைத்தேன்; தெரியாமற் செய்துவிட்டேன்; மன்னியும்" என்று இறைஞ்சுகிறான். உண்மை பேசியதற்கு அவன் அடைந்த பலனென்ன? முதுகொடிய நன்றாய்ப் புடைக்கப்பட்டான். மற்றுமோர்முறை அச்சிறுவன் உண்மைபேசுவானோ? கூறுமின். மற்றுமோர் முறை அச்சிறுவன் உண்மையிலேயே செய்யாத குற்றத்தினைச் செய்ததாகப் பலர் அவன் தந்தையிடங் குறைகூற, மறுபடியும் கோலோச்சுந் திருவிழா நடைபெறுகின்றது. சிறுவன் மிகவும் உறுதியோடு "அப்பா, அக்குற்றத்தினை யான் செய்யவேயில்லை. யான் செய்ததாகப் பிறழ உணர்கின்றீர்" என்று பன்முறை கூறியும், அவன் தந்தை "இல்லை. நீதான் அதைச் செய்தாய்; 'நான்தான் செய்தேன்' என்று கூறிவிட்டால் விட்டுவிடுகின்றேன்" என்று புடைத்த வண்ணமாய் இருக்கின்றார். மருங்கு நிற்போரும் "நான்தான் செய்தேன்? என்று சொல்லிவிடு. அதனாலென்ன, பிறகு பார்த்துக்கொள்வோம்" என்று இடித்துரைக்கின்றார்கள். சிறுவன் ஒன்றுஞ் செய்யத் தோன்றாமல், அடியைப் பொறுக்கலாற்றாது "நான்தான் செய்தேன்" என்று சொல்லிவிடுகின்றான். பார்மின்! முன்பொருசமயம் மெய்பேசியதற்காக அச்சிறுவன் தண்டிக்கப்பட்டான். மற்றொரு சமயம், பொய் பேசியதற்காகச் சும்மா விடப்பட்டான். நாடோறும் இவ்வாறு வளர்க்கப்படுஞ் சிறுவன் பொய்வளரு நெஞ்சினனாதலைத் தவிர்த்து மெய்கண்ட தேவனாதல் யாங்ஙனம்? அறிவிலாப் பெற்றோர்களையுடைய ஒவ்வொரு வீடும், ஆயிரம் ஆயிரமாகப் பொய்யர்களை வெளிப்படுத்தும் தொழிற்சாலையென்று கூறுதல் சிறிதும் மிகையாகாது. அமெரிக்க ஐக்கிய மாகாணத்தின் முதல் அக்கிராசனாதிபதியாயிருந்த ஆண்டகையான ஜார்ஜ்வாஷிங்டன் என்பார் சிறுபிள்ளையாயிருக்கையில், அவர்தம் பிறந்தநாள் கொண்டாட்டத்தன்று தம் தந்தையார் பரிசளித்த ஓர் கூரிய கத்தியால், தோட்டத்திலுள்ள அருமையான செடியொன்றினைச் சிதைத்துவிட அதைப்பற்றித் தந்தையார் தம்மைக் கேட்டபோது, "அப்பா! நானே அதைச் சிதைத்தேன்" என்று மெய்கூற, அதற்குத் தந்தையார், "கண்ணே! செடிபோனது எற்குப் பெரிதன்று. உண்மை பேசும் உன்னைப் பெற்றதே பெரிய களஞ்சியம்" என்றெடுத்து உச்சிமோந்ததும் ஆகிய உண்மை நிகழ்ச்சியினை ஈண்டு நேயர்கட்கு நினைப்பூட்டுகிறோம். வாஷிங்டனுடைய தந்தையார் தக்காரென்பது அவர் தம் எச்சத்தால் சிலவாண்டுகட்குப் பின்பு காணப்பட்டது.

மற்றும், இளமைப் பருவத்தில் சிறுகுழந்தைகள் தம்மைச் சுற்றிச் நோக்குந் தோறும் புதிது புதிதான பொருள்களைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க, பற்பல விதமான அறிவுள்ள கேள்விகளைக் கேட்கின்றன. எம். ஏ. முதலிய உயரிய பட்டப்பரீக்ஷைகளுக்கும் கேட்கும் வினாக்களுக்கும் இலேசாக விடையிறுக்கலாமாயினும் இக்குழவிகள் கேட்கும் வினாக்களுக்கு எளிதில் விடையிறுக்க இயலாது. மேலே அண்ணாந்து பார்த்து "வெள்ளையாயிருப்பது என்ன?", "நட்சத்திரங்கள் என்றால் என்ன!", தன் தாய் புதிதாய்க் கருவுயிர்த்த மகவைக் கண்டு, "இத்துணை நாட்கள் இல்லாத தம்பி இப்போது எங்கிருந்து வந்தான்?", "பந்தினைக் கீழே ஓங்கி அடித்தால் அதனைக் குதிக்கச்செய்வது எது?', "கிராமபோன் பெட்டியிலிருந்து யார் பாடுவது?", "மின்னல் மழை இடி இவைகள் எங்கிருந்து வருகின்றன?" என்பனவும் இன்னோன்னபிறவும் சிறுபிள்ளைகள் சாதாரணமாய்க் கேட்கும்கேள்விகள். மேற்கண்ட வினாக்களுக்குப் பெற்றோர்கள் என்ன விடையிறுக்கின்றார்கள்? அந்தோ! தாம் தெய்வத்தினிடம் பொய் பேசுகிறோமென்றுங் கருதாமல் "கண்மணி, மேலே 'மானம்' என்று வெண்மையாயிருப்பது பெரிய துப்பட்டியைக் கடவுள் போர்த்திருக்கின்றார்; நமது இறந்துபட்ட முன்னோர்கள் புண்ணியஞ்செய்தால் நட்சத்திரங்களாய்ப் பிரகாசிக்கிறார்கள். துருவனும் அவ்வாறே நட்சத்திரமாய் ஒளிர்கின்றான். உன் தாய் நோயாய்ப் படுத்திருந்தபோது, அவளைப் பார்க்க வந்த மருத்துவச்சி கூடையில் ஒருகுழந்தையைக் கொண்டுவந்து உன் தாயின் பக்கலில் கிடத்திவிட்டாள்; அவன்தான் உன்தம்பி. பந்திற்குள்ளே ஒரு குட்டிச்செவுத்தான் இருந்து அதைக் குதிக்கச் செய்கின்றான். கிராமபோன் பெட்டியில் ஒரு பையன் உட்கார்ந்துகொண்டு பாடுகிறான். மின்னல் என்பது சீதை கட்டிக்கொண்டிருக்கும் சேலையிலுள்ள சரிகையின் பளபளப்பு; இடியென்பது பீமன்போடுங் கூச்சல்; மழை என்பது கும்பகர்ணன் கடல் நீரைப் பருகி மூத்திரமாய்ப் பெய்தல்" என்று முறையே விடையிறுக்கின்றனர். இவையெல்லாம் பெரும் பெரும் அண்டப்புளுகுகளென்று குழந்தை தனது திருப்தியற்ற பார்வையாலும், மேலும்மேலும் போடும் குறுக்கு விசாரணைகளாலும் நன்கு காட்டிவிடுகின்றது. உண்மையாகவே பெரும்பான்மையாய்த் தந்தைமார்கட்கு இவ்வினாக்களுக்கு விடைகள் தெரியா. குழந்தையின் அளவற்ற அறிவு வேட்கை தணிக்கப்படவில்லை.

மற்றுஞ்சில பெற்றோர் தம் குழந்தைகளுக்கு எந்நேரமும் தின்பதற்குக் கண்டதைக் கொடுப்பதனாலேயே தாம் அன்பைச் செலுத்துகிறோமென்று பிறழ நினைத்து பின் விளைவதறியாது குழந்தைகள் தடுத்தும் மேலும் மேலும் தின்பண்டங்களையூட்டியவண்ணமாயிருக்கின்றனர். இதனால்பெருவயிறு, வயிற்றுளைச்சல், அஜீரணம், மாந்தபேதி, பல்லில் சொத்தை, பல்லில் புரை போதல், வாய்நாற்றம், மலச்சிக்கல் என்னும் நோய்கட்குக் குழந்தைகள் இரையாகி மடிவதும், இறவாதிருப்பினும், சாநாள் காறும், தொழுநோயினால் பீடிக்கப்பட்டுப் புவிக்குச் சுமையாயும், மருங்கிருப்போர்க்கு வெறுப்பாயும் காலத்தையோட்டுகின்றன. மாற்றவள் மகவு உண்ணுதலைப்போன்று தன் குழவி உண்ணாதிருத்தலைக் கண்டு வயிற்றெரிச்சல் கொண்டு அங்கலாய்ப்பதும், கண்ணீருகழிப்பதுமான பெண்மக்களும் உளர். "அம்மே! உன் மகன் பெருந்திண்டியால் இறந்தான்" என்று பிறர் சொல்லக் கேட்டும், செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்களாகிய சிலபெண்கள் "அந்தோ என்மகன் சாகுமுன் வடையும் வாழைப்பழமுங் கேட்டானே; பாவி நான் கொடுக்கவில்லையே, இன்றுவது போயிருக்கக்கூடாதா" என்று வாயிலும், வயிற்றிலும் அடித்து அலறுகின்றார்கள்.

மக்களிற் சிலர் தெற்றித் தெற்றிப் பேசுதல், அவர்கள் இளமையில் செல்லங் கொடுத்துக் கெடுக்கப்பட்டதாலும், அப்படிப்பேசும் பிறரைப் பார்த்துப் பழகுதலாலும் என்க. தெற்றிப் பேசுபவர் ஒருவர் தமது வீட்டிற்கு வந்து பேசுகையில், அவ் வீட்டிலுள்ள பெற்றோர், அவர் எதிரிலேயோ அல்லது அவர் சென்ற பிறகோ, தம் மகனைப் பார்த்து "குழந்தாய்! அவர் எப்படிப் பேசுகின்றார்? சிறிது பேசிக்காட்டு பார்க்கலாம்" என்று வேண்ட குழந்தையும் இறும்பூதெய்தி அவ்வாறே பேசுகின்றது. "ஆ! கண்மணி நன்று பேசினாய்" என்று பெற்றோர் அப்

பணம் போடுவோருக்கு முற்றும் பத்திரமான கம்பெனி யுனைடெட் இந்தியா.



Safety and service are the foundation on which the United India is built.

பிள்ளையை மார்போடணைத்தும், உச்சிமோந்தும் பாராட்டுகின்றார்கள். சிறு விளையாட்டு மலையைப் போன்ற வினையானது. அவனும் தெற்றுவாயனாகின்றான். பலரால் இகழப்படுகின்றான். பலர் நேரிலாதல் பின்னாதல் இவன் போகும் அலங்கோலத்தைக் கண்டு நகைக்கிறார்கள். எழுத்தறக் கற்றவனாயினும் ஒரு பேரவையில் நின்று பேச முடியவில்லை. விலங்கினின்றும் மக்களை வேறுபடுத்தும் ஒரு தனிப் பேருகிய பேசும் ஆற்றலை இழக்கும்படிப் பெற்றோராகிய பாதகர்கள் செய்து விட்டார்கள். ஆ! இதைக் குறித்து மேற்சென்றெழுத எம் மனம் எழவில்லை. சுருங்கச் சொல்லின், பெற்றோரது தீவினையால் குருடராயினோர் பலர்; செவிடரானோர் சிலர்; ஊமைகளாயினர் எண்ணிறந்தோர்; கூன் முதுகைப் பெற்றோர் ஆயிரம் பேர்; குஷ்டநோய்ப்பட்டார் இலட்சம் பேர்; நடைப் பிணங்களாய்த் திரிவோர் கோடிக் கணக்கில் இருக்கின்றார்கள். கருவுயிர்த்திருக்கு ஞான்று தாயினது கவலையீனத்தால் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டுபிறக்கும் இரட்டைப் பிள்ளைகளை யாம் இற்றை நாட்களிலும் காண்கின்றோமல்லமோ? பெற்றோர்களே! நீவிர் ஈன்ற மக்களை வளர்க்கத் தெரியாவிடின், முன்பு ஒருநாள் ஆதியும் பகவனும், ஔவை, திருவள்ளுவர் முதலியோரைப் பெற்றவுடன் விட்டு ஓடிவிட்டது போன்று நீங்களும் ஓடி விடுங்கள். அநாதைக் குழந்தைகள் வளர்ப்புக்கென அமைக்கப்பட்டிருக்கும் விடுதிச் சாலைகளில், அவை நன்றாய் வளரும். அவற்றினின்றும் மீண்டும் திருவள்ளுவரும் ஔவையும், கபிலரும், பரணரும் தோன்றுவார்கள்.

சில பெற்றோர்கள், தம் மக்களை நன்றாய் அடித்து வளர்த்தலே சீரிய முறையாகுமென்று எண்ணி, இவர்களைப் போன்ற பேதைமார் சிலர் மெச்ச மெச்ச தம் மக்களைக் கண்ணோட்டம் பாராது புடைத்துக்கொண்டேயிருப்பார்கள். தம் செய்கைக்கு ஆதாரமாக, "அடிமேலடி அடித்தால்அம்மியும் நகரும்" "அடியாதமாடு படியாது" என்பன போன்ற தீய பழமொழிகளையும் எடுத்துக் காட்டுவர். மக்களைத் திருத்தி வளர்ப்பதில் அடிப்பதைப் போன்ற நேர்மையற்ற நெறி யாம் இதுகாறுங் கண்டிலம். அடிக்கும் தந்தையைத் தநயன் பகைவனெனப் பார்க்கின்றான். வீடு அச்சிறுவனுக்கு நரகமாயிருக்கின்றது. மற்று, அவன் எந்நேரமும் கவலைக்கும், அச்சத்திற்கும் சீற்றத்திற்கும் கொள்கலமாயிருக்கின்றான். இனி, இக்கவலை, அச்சம், சீற்றம் என்பன உயிர்கள் உள்ளத்தைப் பாழ் படுத்தி உடலில் நச்சு நீரைப் பரவச் செய்து, சாக்காட்டை தூண்டுவித்தல் போன்று வேறெதுவும் இல்லையென்க. சீற்றத்திற்காளாகி அது தணியா முன்னரே மகவை யெடுத்து மார்பகத்தில் இருத்திப் பாலூட்டுந்தாய், தான் குழவிக் கூட்டுவது பால் அல்லவென்றும், நஞ்சினையே பாலோடு கலந்து ஊட்டும் பூதகி யென்றும் தன்னைத் திண்ணமாய் நினைத்துக்கொள்ளுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக தீண்டியதும் உயிரைப் போக்கவல்ல கொடிய நஞ்சினையுடைய பாம்பு, தான் அமைதியாயும், மகிழ்ச்சியோடும் இருக்கையில், அதன் கோரைப் பற்களுக்கிடையில் உள்ள நச்சுநீர்ப் பைகளில் தூய தண்ணீரே இருக்குமென்றும், உயிர் போகுமே என்னுங் கவலையின்றி, யாம் அதைப் பருகலாமென்றும், அதற்குச் சீற்றம் தரும் நிகழ்ச்சி யொன்று நேர்ந்தால், பைகளிலுள்ள அந் நீர் நஞ்சாகப் பரிணமிக்கின்றதென்றும், இற்றை ஞான்றை உயிர்நூற் புலவர்கள் ஐயமறக் காட்டுகின்றார்கள். ஆகவே, சீற்றங்கொண்ட தாயினது குருதியும், முலைப்பாலும் நஞ்சாக மாறி மகவைக் கொல்கின்றன.

சில தந்தைமார், தாம் சில மக்களைப் பெற்றவுடனே, தாங்கள் எல்லா அறிவும், அநுபவமும் எய்திவிட்டதாக நினைத்துத் தமக்கு நிகர் யாரும் இல்லையென்று இறுமாந்து நிற்கிறார்கள். "யான் ஆறு பிள்ளைகட்கும் மூன்று பெண்களுக்கும் தந்தை. எத்தனையோ பொய் சொல்லி இவர்கட்கெல்லாம் மணமுடித்தேன். இதுகாறும் பத்து சாவு எடுத்தேன்; ஆகையினால் நான் சொல்வதைக் கேள்" என்று சிலர் சொல்ல யாம் கேட்கிறோம். இவர் பத்துப்பிள்ளைகட்குத் தந்தையான அக்காரணந் தொட்டே, பொய்மை முதலிய குற்றங்கள் நிகழ்த்த இவர்கட்கு உரிமை உண்டு போலும்! ஒரு தந்தை தன் மக்கள் எதிரிலேயே

பத்திரம், உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்.



புகைச் சுருட்டுப் பிடிக்கிறான்; பொடியும் போட்டுக் கொள்ளுகிறான்; மயக்கந் தரும் சாராயத்தையும் குடிக்கிறான். இவைகளையெல்லாம் கடைகளிலிருந்து வாங்கிவரத் தன் மகனை ஏவுகின்றான். எனினும் முன்னறி தெய்வமாகிய இவனிடமிருந்தே கற்றுக்கொண்ட குற்றங்களை இவன் மக்கள் நிகழ்த்தினால், இவனுக்குப் பொல்லாக் கோபம் வந்து விடுகின்றது. இஃது எற்றுக்கோ தெரியவில்லை? எமக்குத் தெரிந்த நண்பரொருவர் புகைச் சுருட்டுப் பிடிக்கும் வழக்கமுடையவர். அவர்தம் புதல்வனும் அக் கொடிய பழக்கத்திற்காளாகி, ஆனால் தந்தையினெதிரே பிடித்தற்கஞ்சி மறைவாகப் பிடித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் இதைக் கண்டு விட்ட தந்தையார் — என் செய்தார் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் — தன் மகனை விளித்து "அப்பா! நீ என்னைக் கண்டு அச்சமுறல் எற்றுக்கு? நான் செய்த குற்றத்தை நீயுஞ் செய்தால், அதற்காக உன்மீது சீற்றமுறுதல் பேதைமையன்றோ? தீப்பழக்கமாயினும், யானே உனக்கு அதைக் காட்டிக் கொடுத்தேன், போனது போக! இங்கு வா, எதிரேயிருக்கும் இருக்கையில் அமர்ந்து நீயும் ஒரு சுருட்டுப்பிடி" என்று தன் சுருட்டுப் பெட்டியினின்றும் ஒன்றினை எடுத்து அவனுக்குக் கொடுத்தார். அன்பர்களே! இவர் தம் மகனுக்குக் காட்டிக் கொடுத்த பழக்கங் கொடிதாயினும், அவனைத் தன்னோடுடன் இருத்திச் சம உரிமை நல்கியதற்காக அவர் யாவராலுங் கொண்டாடுதற்குரியர். ஆம்! தன் மக்களை நட்பினர் போன்று சம உரிமையோடு நடத்துபவனே உண்மைத் தந்தையாவன். குடும்ப விஷயங்களில் அவர்களையுங் கலந்து ஆலோசித்தல் வேண்டும். ஆண்டே இருவர்க்கிடையிலுள்ள, அன்பு கிளர்ச்சி பெற்றெழும். தந்தை சைவராயிருக்கலாம்! மகன் பிரமசமாஜத்தினனாயிருக்கலாம். தந்தை பெண்களுக்குக் கல்வி கூடாதென்பார்! மகன் வேண்டுமென்பான். எனினும், இத்தகைய வேறுபாடுகட்கிடையே, நீக்கலாகாத ஒற்றுமையைக் காணலாம். அற்றன்றி, சைவராயிருக்குந்தந்தை தன் மகனையுஞ் சைவனாயிருக்க வற்புறுத்தினால், இவர்கள் புறத்தில் ஒட்டாலும், அகத்தில் மனம் புழுங்கி வேர்ப்பார்கள். குடும்ப அமைதி கெடும்.

சாதாரணமாய் நம் நாட்டில் இது போழ்து பெற்றோர்கள் மக்களுக்குக் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டுமானால், ஆயிரம் ரூபாய் செலவிட்டு, மேள வாத்திய முழக்கங்கள் ஆர்ப்பரிப்ப, நடனமாது சிங்காரமாய் நாட்டியமியற்ற, சுற்றத்தாரும் நட்பினரும் சூழ்ந்திருக்க, மகனையும் நன்றாய் அலங்கரித்து மோட்டார் வண்டியிலிருத்தி ஊர்வலம் வந்து, எழுத்து நாற்றம் இன்னதென்றறியாத ஒரு பார்ப்பனனுக்கு தூசும், துகிலும், காசும், மணியும் வழங்கி, அவனால், ஒரு ஓலைச் சுவடியில் "அக்ஷராப்பியாசம்" செய்வித்தலே என்று நினைத்திருக்கிறார்கள். ஆ! இவர் தம் புல்லறிவும் இருந்தவாறென்னே! கல்விப்பயிற்சிக்குத் தாசியாம், நாட்டியமாம், வாத்தியமாம், மோட்டார் வண்டியாம், பால் பழங் குடித்தலாம், சுற்றத்தார் மரியாதை செய்தலாம், பிறகு அவர்கள் சச்சரவும் இடுவார்கள். கல்விப் பயிற்சிக்கு மிகவும் 'நல்ல' தொடக்கம்! முதலே கோணலாயிற்று; முற்றும் கோணலாதற்கு ஐயமுண்டோ?

பிறகு, மகன் சிறிது வளர்ந்ததும், அவன் அறக்கெடுமாறு, சீராட்டிப் பாராட்டி வளர்த்தற்கு அளவேயில்லை. வீட்டிலுள்ள வேலைக்காரர்களும், மற்றவர்களும் இவனுக்கு அடங்கியிருத்தல் வேண்டும். ஒரு பொருளை விழைந்தானாயின் அதனைப் பெற்றே தீருவான். இவனை "சிறிய எஜமானன், சின்ன ஐயா" என்று அங்கிருப்போர் அழைப்பார்கள். பள்ளிக்குப் போதல் கூடாதென்று இவ்விளைய பெருமான் திருவுளம் பற்றுவாராயின், "அங்ஙனமேயாகுக, ததாஸ்து" என்று மருங்கிருப்போர் பின் பாட்டுப் பாடுவார்கள். முன்னவனே முன்னின்றால் முடியாததொன்றுளதோ? படிப்பது ஓரெழுத்துக்கூட இல்லாவிட்டாலும், இவர்க்கிருக்கும் ஆசிரியன்மார்கள் எண்ணிறந்தோர். பள்ளிகளில் வேறு; வீட்டில் வேறு ஆசிரியன்மார்கள். இவ்வாசிரியர்கள் மாணவனுடைய அறிவு வளர்ச்சியை நாடாது ஊதியத்தின் மேலேயே நாட்டமுடையவர்களாகையால், அவனைக்கொண்டு ஒன்றுஞ் செய்ய விடாமல், எல்லாந் தாங்களே செய்து அவனை

மிகத்திறமையாகவும் அனுதாபத்துடனும் உதவிபுரிவதே

வெறும் மனப்பாடம் செய்யச் சொல்லி ஒப்பிக்கச் சொல்லுவார்கள். பெரும்பான்மையும் பள்ளி ஆசிரியர்களே வீட்டிலும் வந்து பாடஞ் சொல்வதால், அன்று முதல் அச்சிறுவன் படிக்கவேண்டுவதில்லை. பரீக்ஷையில் வரும் வினாக்களை முன்னரே சிறுவனுக்குக் கற்பித்து, அவனுடைய ஆசிரியன்மார் ஆண்டுகள்தோறும் அவனைத் தேறிவிடச் செய்வார்கள். இறுதியில் மெட்ரிகுலேஷன் முதலிய துரைத்தனத்தார் நடாத்தும் பரீக்ஷைகளில் இவ்வாசிரியன்மாரது செல்வாக்கும் உதவியும் பயன்படாதபோது, சிறுவன் நடுக்கடலிற் கலங் கவிழ்ந்தாற்போலத் தவிக்கிறான். "ஊக்கமது கைவிடேல்" என்று சொல்லிக்கொண்டு கஜினி மகமது பதினேழு முறைகள் இந்தியாவின்மீது படையெடுத்ததுபோன்று இவனும், பரீக்ஷைகள்தோறும் தவறாது போகின்றான். இத்துடன் இவனது "கல்வியும்" முடிவெய்துகின்றது.

பெற்றோராயினோர், தமது மக்களது மனநாட்டம் எந்தத் தொழில் துறையிலிருக்கின்றது என்று கூர்ந்து சூக்குமமாக அறிந்து அவரவர்களை அவ்வத் துறைகளில் பயிற்சிக்கு விடவேண்டும். ஒருவனுக்கு இலக்கியப் பயிற்சியின் மீது மனம் நாடும். வேறொருவனுக்கு மருத்துவ நூற்பயிற்சியில் நாட்டம் மூண்டு நிற்கும். மற்றொருவன் இரசாயன, பௌதிக ஆராய்ச்சியில் முன்னணியில் நிற்பான். இன்னொருவன் வர்த்தக வியாபாரத் துறைகளில் தலைசிறந்து விளங்குவான். பின்னொருவன் உழவு, கைத்தொழில், தச்சுவேலை என்னுமிவைபோன்றவைகளைத் தன் காதலியைக் கட்டியணைத்தல்போன்று ஆர்வத்தோடு செய்வான். இந் நுட்பங்களையெல்லாம் விடுத்து எல்லாப் பிள்ளைகளும் பி. ஏ. எம். ஏ. பட்டங்களுக்குப் படிக்க ஆரம்பித்து விட்டதால், அப் பட்டங்களுக்குள்ள மதிப்பும் போய்விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்றது; அப் பட்டங்களைப் பெற்றவர்கட்கும் மதிப்பில்லை. தமக்கு விருப்பமின்றியும் தம் பெற்றோரது வற்புறுத்தலால் இத்துறை நண்ணியவர்கள் மீண்டும் தமக்கு விருப்பமுள்ள துறைகளிற் போகக் காலமின்மையால், ஒன்றுஞ் செய்யத்தோன்றாது வாய் வேதாந்தம் பேசிக்கொண்டு ஒன்றுக்கும் பற்றாத நடைப்பிணங்களாய்த் திரிகின்றார்கள். முதிர்ந்த மூங்கில் வளையாதன்றோ?

இலக்கியத் துறையில் மனம் நாடாத ஒருவனை "ஏடது கைவிடேல், புத்தகம் அஸ்த பூஷணம், எந்நேரமும் படி, படி" என்று சொல்வதனால் என்ன நன்மையுண்டு? தலைவிதியே என்று புத்தகத்தைக் கட்டிக்கொண்டு ஏதோ ஒன்றை உளறிக் கொண்டிருப்பான். திண்ணமாய் அவன் அத்துறையில் முன்னேறுதலில்லை. அதற்காக அவனை, சோம்பேறி, மக்கு, மூடன் என்று வசைபாடுபவர்கள், தாங்களே அவ்வசைமொழிகளுக்கு இலக்காயிருப்பதைக் காட்டுகின்றார்கள். அச்சிறுவனையே தச்சு வேலையில் விட்டுப் பாருங்கள். சில்லாண்டுகளுக்குள், அவன் அத்துறையில் உலகம் புகழும் சிறந்த அறிவாளியாகின்றான். தன் தாய்நாட்டிற்கும் ஒரு சிறந்த புதல்வனாக விளங்குகிறான். எந்நேரமும் தன் மகன் ஏடுங் கையுமாக இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்ட ஒரு தந்தை இருபது ஆண்டாகியும் எட்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த தனது மகனைப் பார்த்து "அடே பாதகா! நீயும் ஒரு பிள்ளையா? உன் வயதில் முத்துசாமி ஐயர், பி. ஏ. பரிக்ஷையில் முதலாமாகத் தேறினாரே" என்று அடிக்கடி சொல்வதுண்டு. மகனுக்கு இதைக் கேட்க சகிக்கவில்லை. வெகு நாட்கள் பொறுத்துப் பார்த்தான். ஒரு நாள் திடீரென்று துடுக்காக "அப்பா, சரிதான், உமது வயதில் முத்துசாமி ஐயர் சென்னை உயர்தர நீதிமன்றத்தில் பிரதம நீதிபதியாக இருந்தாரே! நீர் ஏன் அப்பா அப்படியில்லை" என்றுவிடையிறுத்தான். இதற்குள் திரைவிடப்பட்டது. பிறகு என்ன நடந்ததென்று எம்மாற் சொல்ல முடியவில்லை.

ஒருசிறிதும் கட்டுக்குட்படுத்தப்படாமல் விடப்படும் சிறுவர்கள் கெடுமாறுபோலவே, அவர்களை எந்நேரமும் கண்காணிப்பாய்ப் பார்த்தலும் கேடு விளைக்கும். குழந்தைகளின் ஒவ்வொரு செய்கையினையுஞ் சந்தேகித்துக் கண்டிக்கப் புகுதல் நலமன்று. இவ்வாறு சந்தேகிக்கப்படும் குழந்தைகள் தான் பிற்காலத்தில் பக்கத்தாரெவரையும் ஐயுறும் சந்தேகப் பிராணிகளாகின்றார்கள். குழந்தைகளுடைய துடுக்குத் தனத்தை யடக்குவது அறிவீனம். பசுங்கன்று ஆவின வயிற்றினின்றும் கீழிறங்கிய வுடனே துள்ளித் துள்ளித் தாவுகின்றது.

யூனைடெட் இந்தியா கம்பெனியின் லட்சியம்.

## தந்தை மகற் காற்று நன்றி.

நஞ்சு பொறிக்கப்பட்டவுடனே, மிகச் சிறிய தேளுங்கூட கொடுக்கைத் தூக்கிக் கொண்டு எவரைக் கொட்டலாமென்று பரபரப்பாய் அங்குமிங்குந் திரிகின்றது. இதுவெல்லாம் இயற்கை. அறப் பசித்தவனுக்குச் சோற்றின்மீது வேட்கையும், பருவமுதிர்ந்த இளங் கன்னி பொருத்திக்கு தன் காதலன்மீது சிறு நகையோடுங் கலந்த கடைக்கண்ணோக்குப்போதலும் எவ்வாறு இயற்கையும், நோயற்ற வாழ்விற்கு அறிகுறியு மாகுமோ, அங்ஙனமே, இளஞ்சிறார்களுக்குத் துடுக்குத்தனம் இயற்கையும், நோயற்ற வாழ்விற்கு இலக்கும் ஆகும். இங்குமங்கும் அசையாது மந்தாகாரமாய் உறக்கங் கொண்டிருக்குங் குழவிகள் நோய்வாய்ப்பட்டனர் என்றறிதல் வேண்டும். எனவே, பெற்றோராயினோர், தம் மக்களின் துடுக்குத்தன்மையை அறவே அழித்துவிட முயலாமல், அதனை யளவாக அடக்கித் தூநெறியில் செலுத்தமுந்துவார்களாக.

மனோவேகத்தினும் விரைவாகச் செல்லக்கூடிய பரிமா ஒன்று இவர்ந்து செல்பவன், அதனை யவ்வாறே விட்டு விட்டால், அது காற்றினுங் கடுகப் பறந்து தன்னையும் தன் தலைவனையும் ஒரு பள்ளத்தாக்கில் வீழ்த்திவிடும். அவ்வாறின்றி, இவர்ந்து செல்வோன் அவ்விலங்கின் கலினத்தை மிகவும் உறுதியாக இழுத்துப் பிடித்துவிட்டால், பரிமா ஓட இயலாது நின்றுவிட, குறித்த இடத்தைச் சேருதல் முடியாது. இவ்விரண்டுஞ் செய்யாமல் அதனைச் சிறிதே அடக்கி அதன் விரைந்த செலவைத் தான்குறித்த இடத்திற்குப் போகப் பயன்படுத்திக் கொள்வோனே அறிவாளியாவான்.

மக்களை எந்நேரமும் வீட்டிலடைத்துவைத்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து, ஞாயிற்றின் வெப்பமும், பனியின் குளிருங்கூட அவர்களுடம்பில் படாமல் காத்துவருதல், விரைவில் அவர்களைத் தற்காத்துக்கொள்ளும் ஆற்றலை இழக்கச் செய்து, சிறகொடிந்த பறவைகளைப்போல் ஆக்கிவிடுகின்றது. அன்னோர்கள் தமக்கும் பயன்படாது பிறர்க்குஞ் சுமையாகத் திரிகிறார்கள். இன்றியமையாத காலம் வருங்காறும் அவர்களைக் கவனித்து வந்து பிறகு தம் கையே தமக்குதவியென்று சொல்லி விட்டு விடுதல் வேண்டும். அப்பொழுதே, 'அவர்கள் முழு மனிதத் தன்மை யடைந்தவர்களாவார்கள். இத்தகைய ஒரு நல்ல அமயம், ஏழைகளின் மக்களுக்குத் தாமாகவே வாய்க்கின்றது. வறுமையின் செம்மை இதுவேயாகும். ஆ! வறுமைப் பிணியின் அனுபவங்கள் எத்துணை இனிப்பாயிருக்கின்றன" (Sweet are the uses of adversity.) என்று உலகம் புகழும் ஓங்குயர் புலவரான ஷேக்ஸ்பியரது திருவாக்கை ஈண்டு நோக்குக. ஞாயிற்றின் கதிர்கள் படாமல் எந்நேரமும் நிழலிலேயே வளரும் மரஞ்செடிகள் பையப்பையத் தம் பசுமையை யிழந்து, இலைகள் வாடி வெளுத்து விரைவில் படுகின்றன. இவற்றினோடு, பனியால் வருந்தி வெயிலாலுலர்ந்து, காற்றாலசைந்து, மழையால் நனைந்து, பச்சைப் பசேலென்று வானுற ஓங்கி வளரும் அடவிகளிலுள்ள மரங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். தாய்ப் பறவைகள் தம் பார்ப்புகளை இன்றியமையாத காலம் வருங்காறும் பாதுகாத்து, அது நேர்ந்து சிறகுகள் முளைத்தவுடனே அவற்றினைக் கூட்டினின்றும்வெளியே பிடித்துத் தள்ளிவிடுகின்றன. இருக்கவேண்டிய காலத்திற்குப் பிறகும் அப் பார்ப்புகளைக் கூட்டிலடைத்துவைத்து, தீனியும் குறைவில்லாது அவைகட்குக் கொடுத்தபோதிலும், சின்னாட்கழித்து அவைகளை வெளியே விட்டபோது, சிறகுகளில் வலுவின்றி, உறக்கங் கொண்டு பறக்க ஆற்றலின்றி, தத்தித் தத்திக் குதித்து விரைவில் அப்பார்ப்புகள் பட்டனவென்று, அவற்றைக்கொண்டு ஆராய்ச்சி செய்த உயிர்நூற் புலவர்கள் திண்ணமாய்க் கூறுகின்றார்கள்.

இவற்றினையெல்லாம் ஓராது, "என் மகன் உடம்பு பூப்பட்டால் புண்ணாகும்! காற்று வீசினால் கருகும்! சந்தனம் பூசினால் கொப்புளிக்கும்" என்று வீண் பெருமிதத்தோடு சொல்லி அம்மக்களை ஒன்றுக்கும் பற்றாதவராகச் செய்து, தாங்கள் திடீரென்று இறந்து அவர்களைக் கலங் கவிழ்ந்த மாலுமிபோற் செய்த தந்தை தாயர்களைப் பாதகர்களென்று கூறாமல், வேறென்னவென்றழைப்பது? இவ்வாறு விடப்பட்ட இளைஞனொருவன் இறந்து பட்ட தன் தந்தையை நினைந்து,

"அள்ளிக் கொடுக்கின்ற பொன்னுக்கும்
ஆடைக்கும் ஆதரவாய்

The United India's Policies are equal to Gilt-edged Securities.

கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமே
என்னைக்குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்திலே
என் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே
தந்தையாகிய பாதகனே"

என்று அலறினான். என்செய்வது? சென்ற காலம் திரும்பி வராது. இத்தகைய துக்கமுடிவை யுடைய நாடகங்கள் தென்னிந்தியாவிலுள்ள பெரும்பான்மையான வீடுகளில் நடிக்கப்படுகின்றன. கதை ஒன்றேயாயினும், நாடகக் கூட்டத்தினர் ஆங்காங்கு வெவ்வேறு பெயர்கொண்டு நாடகம் நவிற்றுகின்றார்கள்.

மேற்சொன்னவை யெல்லாம், சிறப்புப் பற்றி ஆண்மக்களைப் பற்றியபோதிலும் உடனுக்குடன் அவற்றைப் பெண்மக்களுக்குங் கொள்ளலாம். இதற்காக எம்மீது சிரிபுணர்ச்சி கொள்ளாது தாய்மார்களும், சகோதரிகளும் எம் நிலையை உண்மையாய் உணருமாறு இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகின்றோம். நம் நாட்டில் பெண்ணாய்ப் பிறந்ததே பாவம் என்று பெண்களே கருதும்படி ஆண் மக்கள் செய்வார்களானால், நமக்கு உய்தி எஞ்ஞான்று? கருவுயிர்த்த தாயும், தான் ஈன்றது பெண்ணென்று தெரிந்ததும், தான் பெண்ணாயிருந்தும், முகத்தைச் சுளித்துத் திருப்பிவிடுகின்றாள். என்னை? தான் பெண்ணாய்ப் பிறந்து பட்ட துயரங்கள் அவளுக்கும் தெய்வத்திற்குமே தெரியும். பெண்களுக்குக் கல்வி வழங்கப்படுவதில்லை. அவர்கள் அப்பெறற்கரிய பேற்றிற் குரியரல்லாராம். அவர்கள் கலவிக்கு மட்டும் உரிய உயிரற்ற பொருள்களாம். அவர்கட்கு எஞ்ஞான்றும் உரிமை கிடையாது. கடைத்தெருவில் ஒரு பொருளை விற்பவன் அதனை மினுமினுக்கி வைத்திருப்பது போன்று, பெண்மக்களும் பெருஞ்சுமையுள்ள ஆடை அணிகலன்களால் அலங்கரிக்கப் படுகின்றார்கள். பல பெண்களைப் பெற்றவனுக்கு, இகழ்வார் முன் எறுபோற் பீடு நடையில்லை. "இவன் தன் பெண்களை எங்ஙனம் விற்பனை செய்கிறான், நான் பார்க்கிறேன்" என்று பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்து அறிவிழந்த ஒரு பேதை எக்காளம் போடுகின்றது.

இவையிற்றினையெல்லாம் நோக்குழி, எமக்கு மணமுடிந்தால், இப் புல்லறிவாளர்க்குப் புத்தி புகட்ட வீம்புக்காயினும் எமக்குப் பிறப்பதெல்லாம் பெண்மணிகளாயிருக்கலாகாதா என்று தவங்கிடக்கின்றோம்.

பெண்மக்களுக்கு தக்க பருவத்தில் நாணம் என்னும் அணிகலம் தோன்றித் தமது புறவுறுப்புக்களை மறைத்துக்கொள்ளும் உணர்ச்சி இயற்கையாகத்தானே அரும்புகின்றது. அதுகாறும் பெற்றோராகிய பாதகர்கள் காத்திருப்பதில்லை. ஒரு சிறு பெண்மகவு ஒன்றும் அறியாது ஆடையின்றி உலவினால், அதனைக்கண்டு மற்றவர்கள் "என்னடி, சிறுக்கி! ஆண்பிள்ளைகளின் எதிரே அப்படித் திரியாதே; பூவாடை கட்டிக் கொள்; அவர்களிடமும் விளையாடாதே? உள்ளே போ" என்று அதட்டி வெருட்டுகின்றார்கள். உள்ளம் பளிங்கெனத் திகழும் பால்மணமாறாத அக்குழந்தை "ஏன் நம்மை இவ்வாறு வைகின்றார்கள்? பூவாடை கட்டிக்கொள்ளுதற்கும் அஃதின்றியிருப்பதற்கும் வேற்றுமை யாது? அதிலும் ஆண்பிள்ளைகட் கெதிரே ஆடையின்றி யான் இருக்கக் கூடாதாம்; இதுகாறும் ஒன்றென்றிருந்த நமக்கும் அவர்கட்கும் வேறுபாடியாது!" என்றிவ்வாறெல்லாம் அகமுகமாகக் கூர்ந்து நினைக்கின்றது. இதன் விளைவென்னை? சொல்லவும் வேண்டுமோ? பெண் பிஞ்சில் பழுத்துவிட்டாள். பழுத்தபிறகு உதிர்ந்துபோத லன்றோ அடுத்தபடி?

இனி, மகள் பூப்படைந்ததும் வெளியே போதல் கூடாது. விற்பனைக்குரிய பொருள் வாங்குபவர்க்கு மட்டுங் காட்டப்படும். தெருவில் என்ன நடக்கிறதென்று பலகணி வழியாய்ப் பார்ப்பினும், பன்னீராட்டைப் பெண்ணின் தலைமீது விபசாரக்குற்றம் வந்திழிகின்றது. அதிலும், ஒரேனழக்குடும்பத்திலுள்ள பூப்படைந்த பெண், பல ஆண்டுகளாகத் தான் காலால் நடக்கும் இடம் பத்து சதுர அடிக்குள்ளாகவே யிருக்கும். வீட்டின் அடுப்பினின்றும் எடுக்கும் சாம்பற்குப்பையே அவள் காணும் இமயமலை; நீராடுதற்கெனத் தொட்டியில் உள்ள வெந்நீரே அவள் பார்க்கும் மகாசமுத்திரம்; அழுக்கு நீர்வடியும், புழுக்கள்

யுனைடெட் இந்தியா பாலிஸிகள் மிகச்சிறந்த பத்திரங்களாகும்.



நெளியும் சாக்கடைகளே அவள் நோக்கும் கயல் மீன்கள் புரளும் புண்ணிய அகண்ட காவேரி; வீட்டில் ஒழுக்கடைந்த பிள்ளையார் மாடமும், கடுவீடுமே அவள் போற்றும் தில்லையம்பலம். அவள் தந்தையே மகாத்மாகாந்தியடிகள்; தாயே மேரி மகாராணியார். இவ்வாறிருக்கும் பெண்ணிற்கு வேறு குறையென்ன? அன்பர்களே! மேற்சொன்னவைகளில் ஓர் அணுவளவேனும் மிகைபடக் கூறியிருந்தால், எம்மை வாதுக்கழையுங்கள்; யாம் நிரூபித்துக் காட்டத் தயாராயிருக்கின்றோம். கல்வியுமில்லை; படிக்கவுந் தெரியாது; சிறிது படிக்கத் தெரிந்தால் நஞ்சினை யூட்டும் நாவல்கள்; நல்லோரிணக்கங் கிடையாது; வெறுங் காலப் போக்கு. "சோம்பேறி மனம் பேய் நடமாடும் தொழிற்சாலை" (An idle brain is the devils' Workshop) என்னும் ஓர் ஆங்கிலப் பழமொழியின் கருத்துப்படி மகள் பேயின் வயப்பட்டு எண்பது கோடி நினைந்தெண்ணுகிறாள். அவள் எண்ணுவது யாதென்று நேயர் கட்குத் தெரியும்.

மக்களைப்போற்றி வளர்ப்பதில் கவனிக்க வேண்டிய முறைகளுள் மேற்சொன்னவைகள் நூற்றில் ஒரு அமிசத்திற்குக்கூடப் பற்றாதாயினும், இவ்வொரு அமிசந்தானும் தெரியாத ஒருவனும் ஒருத்தியும் மணவாழ்க்கைக் குட்படுவதைக்கண்டு எம் நெஞ்சம் நடுங்குகின்றது. மேல்நாடுகளில் மக்கள் வளர்ப்புக்கென ஏற்பட்டுள்ள சங்கங்களையும், அமைப்புக்களையும், அதைப்பற்றி விரிவாய்க் கூறும் எண்ணிறந்த நூற்களையும், அந்நாட்டு மக்கள், தம் குழவிகளைப் போற்றி வளர்ப்பதில் செலுத்தும் பொருளையும், கண்ணுங்கருத்துமான கவலையையும் சிறிதேனும் உற்று நோக்குவோமானால், அவர்கள் ஆண்டவர்களா யிருப்பதற்கும், நாம் அடிமைகளாயிருப்பதற்கும் காரணம் விளங்காமற் போகாது. தந்தை மகற்காற்று நன்றிகளையெல்லாம் செய்த பிறகே, மகன் தனக்குச்செய்ய வேண்டிய நன்றியை எதிர்பார்க்கலாமேயொழிய அதற்கு முன்னன்று. இதுபற்றியே மக்கட்பேறு (புதல்வரைப் பெறுதல்) என்னும் அதிகாரத்தில் நம் நாயனார்,

"மகன் தந்தைக்காற்று முதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ்சொல்"

என்னுந் திருக்குறளைப் பத்தாவதாகவும், இறுதியதாகவும் அமைத்திட்டார். இக்காலம் நம்நாடு எய்தியுள்ள சீர்கேட்டை யுன்னி அதற்குத்தக,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்பதை,

"பெற்றோர் தமக்குப் பிள்ளைகள் தெய்வம்"

என்று மாற்றி பொன் எழுத்துக்களில் எழுதி ஒவ்வோர் வீட்டின் சுவற்றிலும் தூங்கவிடலாமாவென்று எம்மனம் வினவுகின்றது.

பெருமக்களே! பிள்ளைகளைப் பெற்றெடுத்த உங்களுக்கு யான் மேற்சென்று என் சொல்லப் போகிறேன்? பெற்ற உங்களுக்குப் பிள்ளைகளின் அருமை தெரியும். எனினும், ஆங்காங்கு பெற்றோர்கள் தம்மக்களுக்கு நல்லன நாடியும், அவர்களறியாமலே தீயன விளைவது கண்டு, எம்மையறியாமலே மிகவும் நீண்ட இக்கட்டுரையினை மனம்போன போக்கைத் தழீஇ எழுதலாயிற்று. கண்காணாத் தெய்வத்தை, உள்ளதென்று சொன்னாலும், இல்லையென்று சாதித்தாலும், அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நாத்திகம் பேசுதல் பாவமென்று சிலர் நினைப்பதுபோல் நாம் நினைப்பதில்லை. கடவுளின் உண்மை, இன்மைகளைக் குறித்து, அவரவர் ஆராய்ச்சிக்குத்தகவும், கல்விக்குத்தகவும், அனுபவ அறிவிற்குத்தகவும் தத்தம் கொள்கைகளை வெளியிட அவரவர்க்கு முழு உரிமை உண்டு. ஆனால், கண்கண்ட தெய்வங்களாகிய குழந்தைகளைப் போற்றி வளர்த்தல் பெற்றோராகிய எல்லாருக்கும்—ஆத்திகனாயினும், நாத்திகனாயினும், மேனாட்டானாயினும் கீழ்நாட்டானாயினும், சைவனாயினும், வைணவனாயினும்—யாவராயிருப்பினுஞ் சரியே, எல்லாருக்கும் ஏற்பட்ட முதற்கடமை யென்று நிலை நாட்டுகிறோம். சகோதரர்களே! நாம் இந்நிலவுலகுண்டையில் வாழ்கின்றோம். அவ்வாறு வாழுங்காறும், நுமது பெற்றோர்க்குக் கீழ்ப்படிதலுள்ள பிள்ளையாயிருங்கள்; அன்புள்ள கணவனாயிருங்கள்; நல்ல தந்தையாயிருங்கள். அதுபோன்றே எம் அருமைச் சகோதரிகளே! நீங்களும் பணிவுள்ள பெண்களாயிருங்கள்; ஆசைக்காதலியா யிருங்கள்; பால் நினைந்தூட்டும் தாயாயிருங்கள். நீங்கள் ஆள்

A Policy in the Unitcd India combines patriotism and prudence.

திகராயிருப்பின் ஆண்டவன் உங்கட்குத்தானே தன் இன்னருள் பாலிப்பான்; நீங்கள் நாஸ்திகராயிருப்பின் இயற்கையன்னை நமக்கு அருள்மாரி வழங்குவாள்.

மேனாட்டுச் சான்றோரான அடிஸன் (Addison) துரைமகனார் எழுதிய சிறிய கதை யொன்று யாவர்க்கும் பயன்படுமாதலால் அதனைத் தழீஇ ஒரு சில கூறி இக்கட்டுரையினை முடிக்கின்றோம்.

ஜெயராமனும், இரத்தினமும் ஒன்றிய உணர்வுடைய இணைபிரியா நட்பினர். இருவரும் ஒரு சாலை மாணவராயிருந்து பிறகு பள்ளியை விட்டு வாழ்க்கைத் துறையிலிறங்கினார்கள். ஜெயராமன் ஒரு வர்த்தகக் காரியாலயத்திற் சேர்ந்து தனது ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும், தன்னினும் மேற்பட்டோரை மகிழ்வித்து, படிப்படியாக உயர்ந்து அவ்வூர் அரசனறிய வாழ்ந்தார். ஏராளமான பூஸ்திதிகளும், ஜமீன்களும், அரண்மனைகளும் அவருக்குச் சொந்தமாயிருந்தன. இரத்தினம் என்பார் மேலும் மேலும் படிப்பதிலேயே ஊக்கஞ் செலுத்தித் தம்நாட்டில் மிகக் கற்றோர் சிலருள் தாம் ஒருவராக மதிக்கப்பட்டார். இருவரும் முப்பதாண்டடைந்ததும் மணஞ் செய்து கொண்டார்கள். ஏறக்குறைய ஒரே காலத்தில், ஜெயராமர், ஜெயராஜன் என்னும் மகனுக்கும், இரத்தினம் சாந்திமதி என்னும் பெண்ணிற்குந் தந்தையானார்கள். ஆனால் தீவினை வந்து மூண்டதால் இரத்தினம் தன் அருமை மனையாளைச் சின்னாட்களில் இழந்து, ஆற்றொணாத் துயரத்துள் மூழ்கி, ஜெயராமர் அடிக்கடி அவர் தம் இருக்கை போந்து தேற்றத் தேறியிருந்தார். தாயின் உதவியின்றித் தன் பெண்ணை வளர்த்தல் கஷ்டமாதலால், அவளை ஜெயராமரின் மனையாளிடம் விட்டு வைக்க இரத்தினம் விழைந்தார். அதே காலத்தில், தமக்குப் பெரிய சொத்து இருக்கின்றதென்று இறுமாந்து, செல்வந்தர்களுடைய பிள்ளைகள் ஒன்றுஞ் செய்யாமல் வறிதே காலங் கழிப்பார்கள் என்பதை யோர்ந்து, தனது மகனாகிய ஜெயராஜனை இரத்தினத்திடம் விட்டு வைக்க ஜெயராமர் விழைந்தார். மேலும், இரத்தினம் சிறுவர்கட்குக் கல்விப் பயிற்சி செய்வதில் மிகவும் சமர்த்தர். எனவே, இரு பெற்றோர்களும் உடன்பட்டதும் அவ்விளங் குழவிகள் தம் தாய் தந்தையர் முகங்களைத் தெரியு முன்னரே அவைகளை மாற்றிக் கொண்டனர். சிறிது வளர்ந்ததும் ஜெயராஜன் இரத்தினமே தனது உண்மைத் தந்தையென்றும், சாந்திமதி ஜெயராமரே தன் உண்மைத் தந்தையென்றும் நினைத்து வாழ்ந்து வந்தார்கள். எனினும், பெற்றோர் அடிக்கடி ஒன்று சேர்வதுபோல் இவ்விரு மக்களும் ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் ஏகி விளையாடுவார்கள். இரத்தினம் ஜெயராஜனுக்குத் தீவிரமான கல்விப் பயிற்சியைத் தந்தார். அச்சிறுவனும் நல்ல அறிவோடு படித்துத் தான் ஏழையாயிருத்தலையும் நினைத்து, "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பதைக் கடைப்பிடித்து, மேலும் மேலும் ஊக்கத்தோடு உழைத்தான். இறுதியில் அவன் தன் நாட்டுச் சட்டங்களில் நன்றாய்த் தேறி, நியாயவாதிகளுக்குள் முன்னணியில் நின்றான். சாந்திமதியும் ஜெயராமரின் அருமை மனையாட்டியின் ஆதரவால், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நல்லாரிணக்கம் பெற்று, கல்வியறிவொழுக்கங்களிலும் நன்கு தேர்ச்சியடைந்து, அஞ்ஞான்று எழிலோடுங்கூடிய பருவமுதிர்ந்த இளங் கன்னியாய்த் திகழ்ந்தாள். ஜெயராஜனும் சாந்திமதியும் ஒருவரை யொருவர் கண்டு உரையாடல் வழக்கமென்று முன்பே சொன்னோமல்லவா? அவ் விளையாட்டு நட்பு, இஞ்ஞான்று முதிர்ந்து காதலாய்ப் பழுத்தது. இஃதியற்கை தானே. என்னை?

> "கண்ணொடு கண்ணிணை நோக் கொக்கின்
> வாய்ச் சொற்கள் என்ன பயனுமில"

என்பது உண்மையாகலானென்க. செல்வமகளாகிய சாந்திமதியை வதுவையில் கொள்ள விழைந்த ஜெயராஜன், தன் ஏழ்மை நிலைகண்டு பெரிதும் இரங்கி, அவளை எவ்வாற்றானும் அடைதற்கு, மேலும் மேலும் உழைத்துப் பெருஞ் செல்வனாயினான். தன் உண்மை மகன் இங்ஙனம் சீரும் சிறப்பும் எய்துவதைக் கண்டு கட்டுக்கடங்கா மகிழ்ச்சி கொண்டு ஜெயராமர் தன் மகனை ஒருநாள் அழைப்பித்து உண்மையை வெளியிட்டார். "செல்வ மகனே! வறுமை உன்னைச் செம்மைப்

யுனைடெட் இந்தியாவில் பணம்போடல் தேசபக்தியையும் ஜாக்கிரதையும் காட்டுவதாம்.



படுத்தியது; எனது நண்பர் இரத்தினம் உன் கல்வி வளர்ச்சிக்காகச் செய்த பேருபகாரத்திற்கு அவர் தம் உண்மைத் திருமகளாகிய சாந்திமதியை நிற்கு மணம் புரிவித்தலே யான் அவருக்குச் செய்யுங் கைம்மாறாகும். இவ்வுண்மை வெளியிட்டால் ஒருமாறுதலும் நிகழாதிருக்குமாக. என்றும் போல் நீ இரத்தினத்திற்கு உகந்த மகனாகவே யிருப்பாய். சாந்திமதியும் முன் போன்றே என் அருமை மகளாயிருப்பாள். நீங்கள் என்றும் செழித்திருக்குமாறு யாங்கள் எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்" என்று முடித்தார். ஜெயராஜனுக்குப் பேச வாயெழவில்லை. அடியற்ற மரம்போல் தன் தந்தையின் அடிகளில் பணிந்து அவைகளைத் தன் மகிழ்ச்சிக் கண்ணீரால் நனைத்தான். இரு காதலர்க்கும் மணம் நடைபெற்றது. மருங்கு நின்றோர், "இவ்விரு மக்களைப்பெற இவர் தம் பெற்றோர்கள் என்னோற்றனர் கொல்?" என்று வியந்தார்கள்.


> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற".

> "எழுபிறப்பும் தீயவை தீண்டாப் பழிபிறங்காப்
> பண்புடை மக்கள் பெறின்".

வைரத்தைப்போல் பூரிப்புடைய செயற்கை
புஷ்யராக நகைகள்.
செயற்கை புஷ்யராகத்தில் செய்த நகைகளைப் பார்ப்பவர்கள்
வைரமோ என்று திகைப்பார்கள்.
செயற்கை புஷ்யராக நகைகள்
சவரன் பொன்னால் செய்யப்பட்டு கியாரண்டியாய் அனுப்பப்படும்.
கண்ணாடி கற்களை வாங்கி ஏமாறுமல் நமது செயற்கை
புஷ்யராகங்களை வாங்கி திருப்தியடையுங்கள்.
பி. கோபாலஸ்வாமி நாயுடு அண்டு சன்,
(7)
ஆபரண வியாபாரம்,
ஆலந்தூர் போஸ்ட். (மதறாஸ் சமீபம்.)

யுனைடெட் இந்தியா பாலிஸிகள் மிகச்சிறந்த பத்திரங்களாகும்.

## ரயிலுக்குப் போகிறார்கள்.



பகல் ஒரு மணிக்கு ரயிலுக்குச் செல்கிறார்கள்.
புருஷன் :— ரயில் வந்துவிட்டது. சீக்கிரம் வா!
மனைவி:— கட்டுப்போசாக்குறேக்! வேகமாகத்தான் வருகிறேன்.

தென்னிந்தியாவிலுள்ள ஒரே லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி யுனைடெட் இந்தியாவே.

# மங்கையின் வீரம்.

பண்டிதை—சு. பாலாம்பிகை அம்மாள் எழுதியது.

ஓர் நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்நாடு தன்னகத்தேயுள்ள மங்கையரை அறிவும் ஆற்றலுமுடையவராகப் பெறுதல் வேண்டும். அன்றேல் அஃதெவ்வாற்றானும் முன்னேறாதென்பது துணிபு. தமிழ் நாட்டின் பண்டைக்கால நிலைமையும் தற்கால நிலைமையுமே இதற்குப் போதிய சான்றாகும். அற்றைநாட் பற்பல வீர மகளிரையீன்ற தமிழ்த்தாய் இன்று ஏனையோர் கையிற் சிக்கியும், வேறு பலவிதங்களால் நலிந்தும் தனது பழம்பெருமையையிழந்து வருந்துகின்றாள். கண்ணகி முதலிய வீர மகளிரையும், ஔவை முதலிய கவியரசிகளையும் சீதை முதலிய கற்பரசிகளையு மீன்ற புனிதநாடு இன்று செயலற்றிருப்பது பரிதபிக்கத்தக்கதே.

பெண்களைக் கீழ்மைப்படுத்தத் தொடங்கியஞான்றே நாடு தன்பெருமையை யிழக்கத் தொடங்கிற்று. அந்நாளில் கல்விவிஷயத்தில் ஆடவரோடு பெண்டிர்க்குஞ் சமவுரிமை வழங்கப்பட்டது. அதன் பயனாகவே அவர்கள் கல்வியறிவிற் றலைசிறந்து விளங்கினர். இதைக் கம்பர் பெருமான் 'பெருந்தடங்கட் பிறைநுத லார்க்கெலாம் பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்' என்னும் இச்செய்யுளில் விளக்கியருளினர். கல்வியினாலும், கல்வியாளருடன் நெருங்கிப் பழகுவதனாலும் முதுக்குறைவும், வீரமும் பெற்று வீரசிகாமணிகளாய்-தேசாபிமானிகளாய் விளங்கினர்.

அருஞ்சமரில் ஆணுடைதரித்துப் போர்க்கோலம் பூண்டு மொய்யமர்புரிந்த இராஜபுத்திர வீரமாதருடைய பெரு வீரமும், தத்தம் புத்திரர்களைப் போர்க்கோலம் பூணுவித்துப் போருக்கனுப்பினோர், அவர்கள் போர்க்களத்தில் இறந்துபட்டுக் கிடக்க மகிழ்ந்தோர், தத்தங் கரங்களினால் அவர்கள் தலைகளைச் சீவி முடித்து யுத்தத்திற்கனுப்ப வாயத்தஞ்செய்தோர் ஆகிய வீர மங்கையர் சரித்திரத்தை நாம் நூல்கள் வாயிலாகவறியலாம். ஓர் வீரத்தாய் தனது புத்திரனைப்பற்றிக் கூறுங்கால் "ஈன்று புறந்தருதலென்றலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே, வேல்வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக் கடனே, நன்னடை நல்கல் வேந்தற்குக்கடனே, யொளிருவா ளருஞ்சமமுருக்கிக், களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே' என்கின்றாள். வீராவேசமும் தேசாபிமானமுமே இம்மங்கையர்பால் பெரிதும் ததும்பிக்கிடந்தன. இத்தகைய வீரமேயன்றியிதனின் வேறுபவீரமும் மங்கையரிடத்து நிலைபெற்று வந்தது. இதனோடொருபுடையொத்தும் ஒவ்வாதும் நின்றதுவே நமது கண்ணகியாரின் வீரமாகும். இந்நிகழ்ச்சியைச் சிறிது கவனிப்பாம்.

நண்பகற் காலமாயிருந்தது. ஆயமகளிர் அழகிய குரவைக்கூத்தை யாடி முடித்தனர். அவர்களுள் தலையாய வொருத்தி நீராடி வருகின்றவள் மற்றையோரை நோக்கிக் குறிப்பாலொரு செய்தியைத் தெருட்டினள். அங்கு நின்ற வேற்றுமா

The United India Life Assurance Co., is one of the foremost

தொருத்தி அச்செய்தி கூறிய மங்கையை நோக்கி, தோழீ! சிலம்புகொண்டு சென்ற என் காதலனை வரக் காண்கின்றிலேன். காணாமையால் உண்டான துயர் வரம்பிகந்து என்னை வாட்டா நின்றது. அக்கினியைப் போல் என் நெட்டுயிர்ப்பு எழா நிற்கின்றது. அதுவுமன்றி இவ்வாய்ச்சியர் என்னை நோக்கி யாதோ கூறுகின்றனர். அது எனக்குண்டான பெருநஷ்டத்தைப் புலப்படுத்துவதைப்போல் தோன்றுகின்றதே பாங்கீ, யான் செய்வதறியேன் என இரங்கிக் கூறினள். கூறுகின்றாளை நோக்கி அன்னாய், அரசன் தேவியினுடைய காற்சிலம்பைத் திருடிய கள்வன் இவனாமென்று நின் கணவனைப் பாண்டிய ராசனுடைய ஏவலாளர் கொலை செய்தனர். இதுவே அம்மங்கையர் நின்னை நோக்கிக் கூறியகூற்றின் உட்பொருள் என்றாள்.

தாய் தந்தையர் உற்றார் உறவினர் முதலியோரைப் பிரிந்து தன் கணவனே தஞ்சமென அவனோடுடன் சென்ற அம்மாது நல்லாள் தன் கணவன் வெட்டுண்டிறந்தானென்பது கேட்பின் யாது செய்வாள். விழுந்தாள், பொங்கியெழுந்தாள், கையால் முகத்திலறைந்தாள். அன்பனே நீ யெவ்விடத்துற்றாய் எனக்கூறி மயங்கினாள். அழுதாள். அவ்வாறழுதவள் சிறிது நேரத்திற்றேறி 'அறக் கடவுளே, பாண்டியன் செங்கோல் கோடித் தவறிழைப்ப யான் கணவனை யிழந்து கைம்மை நோன்பு நோற்கும் மகளிரைப்போல் இருந்து வருந்தும் ஒருத்திதானோ?' எனக் கூறிக் கதிரவனை நோக்கி 'செங்கதிர்ச்செல்வ! நீயறிய என் கணவன் கள்வனோ' என வினவினள். அசரீரி 'அவன் கள்வனல்லன்' என்றது.

அதன் பின்னர் கண்டோர் அஞ்சும்படி வீராவேசத்துடன் தன் மற்றச் சிலம்பைக் கையிற்றாங்கிக்கொண்டு யாவருக்குங் காண்பித்து இதன் விலைபைக் கொடுக்கவாற்றாது என் நாயகனைக் கள்வனெனக் கொன்றார்களே யென்றழுதுகொண்டு மதுரைக்குச் செல்கின்றாள். அவ்விடத்துள்ளார் யாவரும் அவளை நோக்கி இக்காரிகையார்க்கு அளவற்ற துன்பத்தை யுண்டாக்கி என்றும் வளையாத செங்கோல் இன்று வளைந்தது. ஆதலால் யாதுவிளையுங் கொல்லோ என்றனர். சிலர் கோவலன் வெட்டுண்டிறந்து கிடந்த விடத்திற்கு அவளை யழைத்துச் சென்று காட்டினர். காலைவாய் தான்கண்ட அழகிய திருமேனி மாலையில் வெட்டுண்டுகுருதியால் மூடப்பட்டுக் கிடப்பதைக்கண்டு ஆற்றாது விம்மி விம்மியழுது 'ஐயனே, நின்பொன்னன்ன திருமேனி வெறுநிலத்தில் பொடியாடிக் கிடத்தல் தகுதியாகுமா? மலர்மாலைகளினால் மறைப்புண்டுகிடக்கும் திருமார்பம் இன்று வெறுந்தரையிற் படிந்திருப்பது அழகாகுமா? என் கண் முன்னே நின்திருமேனியினின்றுங் குருதி கொப்பளிக்கச் செயலின்றிக் கிடப்பது நியாயமாகுமா?' என்று பலவாறு பன்னிப்பன்னி யரற்றினாள். அதன்பின்னர் வீராவேசம் பிடர்பிடித்துந்த வஞ்சினந்தீர்க்க வெண்ணி அரசன் மாளிகையை நோக்கிச் செல்கின்றாள். சென்று "வாயிலோயே வாயிலோயே அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத் திறைமுறை பிழைத்தோன் வாயிலோயே" என வாயிற் காவலனைக் கூவி "இணையரிச்சிலம் பொன்றேந்திய கையள், கணவனையிழந்தாள் கடையகத்தாளென் றறிவிப்பாயே யறிவிப்பாயே" என அரசனுக்குத் தன் வரவை யறிவிக்குமாறு கூறுகின்றாள். காவலன் அங்கு சென்று 'அரசே, நின்வாயிலில் மிக்க கோபமுடையவளாய் பொற்சிலம் பொன்றைக் கையிலேந்திக் கொண்டு நிற்கின்றாள். அவள் கணவனை யிழந்தவளைப்போற் காணப்படுகிறாள். தன் வரவை நிற்குணர்த்துமாறு

among the Life Assurance Companies of India.



வேண்டுகின்றாளென்றான்.' அதைக்கேட்ட அரசன் 'அவளை யீண்டுத்தருக'வென்றான்.

அரசன் ஏவலின்படி கண்ணகி மாளிகையுட் புகுந்து அவனையணுகினள். அதுகண்ட மகிபன் 'நீர்சொரிகின்ற கண்ணையுடையையாய் இங்கு நிற்கின்ற நீயார்' என வினவினன். 'நிருப, சிபிமனு முதலிய செங்கோன் மன்னராலாளப்பட்ட பூம்புகார் நகரமே என் உறைபதியாகும் (நீ கொடுங்கோலுடையாய் எனக் குறிப்பிற் கூறினாள்.) மிக்க புகழ் பொருந்திய உயர்குடிப் பிறந்தோனாகிய மாசாத்துவன் என்னும் வணிகனுடைய மகன், என் காற்சிலம்பு விற்றல் காரணமாக இங்கு வந்து நின்னாற்கொல்லப்பட்ட கோவலன் என்பானுடைய மனைவி, என் பெயர் கண்ணகி' என்றாள். 'நங்காய், கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலல்லவே, காரணமின்றிக் கடுங்கோலரசனெனப் பழி கூறுதல் தர்மமாகுமா' என்றான். 'என்னுடைய நாயகன் கள்வனல்லன், அவனாற் கொண்டுவரப்பட்ட சிலம்பு என்னுடையதாகும். அதனுண்மை காண்பாயாயின் அதனுளிடப்பட்ட அரி மாணிக்கம்' என்றாள். 'என்னுடைய தேவியின் சிலம்புளிடப்பட்ட அரி முத்து. அச்சிலம்பை இங்கு கொண்டுவந்துடைத்துப்பார்ப்போம்' என உடைத்தனர். உடைத்தபொழுது அதினின்றும் மாணிக்கந் தெறித்தது. கண்டான் அரசன். உடல் நடுங்கிற்று. 'பொற்கொல்லனுடைய சொற்கேட்ட யானோ அரசனாவேன். யானல்லவோ கள்வன். மிக்க கீர்த்திவாய்ந்த என் தொல்குலம் என்னாலேவடுவுற்றது. ஆதலால் என் வாழ்நாள் இன்றோடு முடிவுபெறக் கடவது' என்று கூறி அரியாசனத்தினின்றும் விழுந்து ஆருயிர்துறந்தான். அதனையறியாத கோப்பெருந்தேவி "மக்களிழந்தவிடும்பையினும், மனையாளிழந்த விடும்பையினும் மிக்க விடும்பை போராத விதவை யிடும்பை" என்று நினைந்து தன் கணவன் செய்த பெரிய தவறையுமுணர்ந்து கண்ணகியைத் தேற்றக்கருதி யவளையணுகி 'அன்னாய், நீரெம்மைப் பாதுகாத்தருளல் வேண்டும்' என அவர் பாதகமலங்களில் வீழ்ந்து பணிந்தாள். வீழ்ந்துபணிந்த இறைவியை நோக்கி 'அரசர் பெருமாட்டி, அநேக பத்தினிப் பெண்கள் பிறந்தவூரிற் பிறந்தேனாகிய யானும் ஓர் பத்தினியாயிருந்தால் இவ்வரசனோடு மதுரையையு மெரியுண்ணச் செய்வே'னென்றுரைத்து 'மதுரையிலமரும் மங்கையரே, ஆடவரே, தெய்வங்களே, முனிவர்களே யாவருங் கேளுங்கள். என் நாயகனைக் குற்றமின்றிக் கொன்ற அரசனுடைய நகரத்தின்மீது யான் சீறுகின்றேன். ஆதலால் என்மீதுண்டாகுங்குறை யொன்றுமில்லை' என தனதிடது கொங்கையைத் திருகி அந்நகர்மீ தெறிந்தாள். எறியவே அங்கியங் கடவுள் அந்தண வேடந்தாங்கிக் கண்ணகியார்க்கு முன்வந்து தோன்றி 'மகாபத்தினி, யான் யார் யாரை யழித்தல் வேண்டும்' என்றது. அம்மாது நல்லாள் "பார்ப்பாரறவோர் பசு பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவி யெனுமிவற்றைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்றாள். உடனே அவள் சொல்லியவண்ணம் தீப்பற்றி யந் நகரையழித்தது.

வணிகர்குல திலதமாகிய கண்ணகியார் தன் குலத்து வழக்கங்களி லொன்றாகிய உடன் போகாமையைச் சிதைக்க முன்வந்தாள். வழக்கத்தைச் சிதைத்து முன்வருதலென்பது இலேசான காரியமன்று. அப்படியிருந்தும் ஓர் பெண் முன்வந்து இவ்வழக்கத்தை உடைத்தெறிந்தது போற்றத்தக்கதேயாகும். வேற்றூரில் அயலார் மனையில் நாயகனை யகலவிட்டுத் தனித்திருந்தாள். கணவனிறந்த செய்தியெட்டிற்று. கதறினாள். கதறியும் அவளுடைய வீரம், மற்

இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில்

றைய பெண்மக்களைப்போல் அழுது கொண்டுவாளாவிருக்கவொட்டாது, அரச சபையை நாடிச்செல்லத் தூண்டியது. தூண்டவே புறப்பட்டுச் செல்கின்றவள் தன் கற்பினுறுதியை நினைந்து அங்குள்ள மங்கையரை நோக்கி 'மடவீர், என்கணவனை முன்போலக்கண்டு அவன் நல்லுரையைக் கேட்பேன். அங்ஙனங் கேளாதொழிவேனேல் என்னை யிகழுமின்' எனத்துணிந்து கூறுகின்றாள். பின் அவனிருக்குமிடஞ் சென்று தான்கூறியகூற்றை நிறைவேற்றி யாண்டனையை யடைந்து இராசதர்மத்திற் றப்பிய அரசனுடைய காவற்காரனை (வாயிற்காரனைக் கூவுமுகத்தால் அரசனைத் தாக்கியுரைக்கின்றாள்) என அவனை யழைத்து அவன் மூலமாக அரசசபையை யடைந்து அரசனை நோக்கி, யவனைத் துணிந்து வாதத்திற் கழைக்கின்றாள். அழைத்துக் கடுமொழிகளா லவனை வைது சிலம்பையுடைத்துத் தன் நாயகன கள்வனல்லனென நிரூபித்துக் கோவலனுடைய உயிருக்குப் பதிலாக அரசனுடைய உயிரை யந்தகனுலகனுப்பியதனோ டமையாது நகரையு மெரியுண்ணப் பணித்து மீண்டாள். பொதுவாக இச் செயல்கள் யாவும் மங்கையாற் செய்தற்கரிய செயல்களேயாகும். இம்மாதின் பெருவீரம் அழியாது நிலவுவான்வேண்டியே இளங்கோவடிகளால் இந்நூலியற்றப்பட்டதெனின் அவரைப்பற்றி யாம் இங்கெடுத்துக் கூறவேண்டியதில்லை.


# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

| | |
|---|---|
| பட்டு - - - - | கம்பளிப் போர்வைகள் - - |
| சேலைகள் - - - | நார்மடிகள் - - - - |
| ரவிக்கைகள் - - - | மடிதாவணிகள் - - - |
| தாவணிகள் - - - | கம்பளித் தொப்பிகள் - - |
| துப்பட்டாக்கள் - - | உருத்திராட்சங்கள் - - - |
| பல்காணுக்கள் - - | ஜபமாலைகள் - - - - |
| வெண்பட்டு வேஷ்டிகள் - | வயிரவப் பிரசாதக் கயிறுகள் - |
| வெண்பட்டுச் சவுக்கங்கள் - | கஸ்தூரி - - - - |
| கெண்டைப் பட்டுகள் - | கோரோஜனை - - - - |
| தலைப்பட்டுகள் - - | பச்சக்கற்பூரம் - - - |
| பித்தளைப் பாத்திரங்கள் - | குங்குமப்பூ - - - - |
| விக்கிரகங்கள் - - - | பால்பெருங்காயம் - - - |
| காஷ்மீர் சால்வைகள் - - | |

முதலிய சகல சரக்குகளும் மிகவும் சரசமான விலைகளுக்கு அனுப்பப்படும். விலை ஜாப்தா இனாம்.

The Manager,
SILK PITAMBER Co., Benares City.

மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.


யுனைடெட் இந்தியா லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி ஒன்றேயாகும்.

ஒரு கோடி கிறிஸ்தவர் எப்படி உண்டாயினர்?

## ஹிந்து கோயில்.



பஞ்சமன்:—பெண்டாட்டி பிள்ளையோடு வந்திருக்கிறேன். சுவாமி கும்பிடவேண்டும்.

ஐயர்:—நீங்கள் உள்ளே நுழையக் கூடாது. நுழைந்தால் கோவில் தீட்டாகி விடும் ஓடிப்போங்கள்.

Insure in the United India Life Assurance Company.

## ஹிந்து பள்ளிக்கூடம்.




உவாத்தியார்:—எவ்வளவு துணிவு. பஞ்சமனுக்கு இங்கே இடமேது?

தாய்:—பிள்ளையைப் படிக்க வைக்கவும் முடியவில்லையே? பாதிரியார் பள்ளிக்கூடத்துக்
காவது போகலாம்.

யுனைடெட் இந்தியா லைப் அஷியூரன்ஸ் கம்பெனியில் இன்ஷியூர் செய்யுங்கள்.



## ஹிந்து வைத்தியர்.



பஞ்சமர்கள்:—சாமி! இவனுக்குக் கால் எலும்பு முறிந்து விட்டது. ஏதாவது
ந்து போடவேண்டும்.

வைத்தியர்:—மருந்து போடலாம். எப்படித் தொடுகிறது?

The United India is one of the best Life Assurance Companies in India

## சோற்றுக்கடை.




**பஞ்சமன்:**—காசு கொடுத்தாலும் சோறு கிடையாதா? பிள்ளை அழுகிறது. அதற்காவது கொஞ்சம் போடக்கூடுமா?

**கிளப்ஐயர்:**—சூத்திராளுக்கே சோறு கிடையாது. உங்களுக்கேது இங்கே? பிள்ளை அழுதாலென்ன செத்தாலென்ன? தூரப்போ!

இந்தியாவிலுள்ள சிறந்த லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனிகளுள். யுனைடெட் இந்தியா என்று

**"His Master's Voice"**

எவ்விதமான மனக்கவலையையும் நீக்கி

**நம்மை உத்ஸாகப்படுத்துவது—சங்கீதம்.**

பவித்வான்களுடைய ஸங்கீதத்தை நாம் விரும்புகிற சமயத்தில்
நம்முடைய சௌகர்யப்படி கேட்பதற்கு ஹேதுவாகுவது,

**கிராமபோன் மெஷின்களும் பிளேட்டுகளும்.**

அதில் உயர்ந்தவை 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாயிஸ்'

என்ற அடையாள

இந்த மாதிரி முள்ளவைதான்.

**காரைக்குடி, ஏ. வி. அன் ஸன்ஸ்,**

ஒன்றுதான்.

இவர்களிடந்தான் புத்தப்புதிய மெஷின்களும் பிளேட்டுகளும் கிடைக்கும்.

காரணம்

**இவர்கள் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து நேரே தருவிப்பவர்கள்.**

மாதா மாதம் புதிதாய் வெளியிடப்படுகிற பிளேட்டுகள் இவர்களிடம்
உடனுக்குடன் கிடைக்கும்.


ஏராளமான மெஷின்களும் பிளேட்டுகளும் இவர்களிடம் ஸ்டாக்கிலிருப்பதால்
அவரவர்களுக்கு இஷ்டமானதைப்பார்த்து வாங்கிக்கொள்ளலாம்.

**தி. கிராமபோன் கம்பெனி, லிமிடெட், கல்கத்தா.**

இப்பொழுதுள்ள 6 சிலிண்டர் மோட்டார்களுக்குள்
சந்தோஷமாக எல்லோரும் விரும்புவதில்

முதன்மையானது

# எஸ்ஸெக்ஸ் ஸூப்பர் ஸிக்ஸ் கார்கள்.



காரணம் என்ன?

[illegible]. விலையில் குறைவு.

[illegible] அதிகம். செலவு சுருக்கம்.

ஸ்பேர் பார்ட்ஸ்கள் தயாரிலிருப்பது நம்பிக்கையான இடத்தில் வாங்கக்கூடியது.

அமெரிக்காவிலிருந்தே பின் [illegible].

இவைதான் முக்கியமானவைகள்.

அதோடு இப்பொழுது வரும் கார்கள்

அதிக இம்ப்ரூவ்மெண்டுகளுடன் அழகாயும் உறுதியாயுமிருப்பது.

காரைக்குடியில் எப்பொழுதும் புதிய கார்களைப் பார்வையிடலாம்.

**எ. வி. அன் சன்ஸ்**

காரைக்குடி.


ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களுக்கும் புதுக்கோட்டை ஸ்டேட்டுக்கும் ஏஜண்டுகள்.

சோல் ஏஜண்ட்ஸ்:— மெட்ராஸ் மோட்டார் ஹவுஸ், சென்னை.





## பிராமணத் தெரு.




ஐயர்:—*அக்கிரஹாரத் தெருவில் ஏன் வந்தாய்? போ! போ!*

பஞ்சமஸ்திரி:—*சாமி! சாமி! செத்தேன்! செத்தேன்! இனிக் கல்லாலடிக்க வேண்டாம். ஓடிப்போகிறேன்.*

The United India is 'One of the strongest, soundest, best managed

## செட்டியார் ஊரணி.



ஐயர்:—இந்த ஊரணியில் பஞ்சமர்கள் இறங்கக்கூடாது. போங்கள் !

பஞ்சமஸ்திரீகள்:—வேறு தண்ணிரே இல்லே. சாமி! ஒரு பானே மொண்டு கொள்கிறோம். வீட்டிலே எல்லாருக்கும் நாவரண்டு போய் விட்டது.

ஐயர்:—இறங்கினுல் தீட்டாகிவிடும். சீக்கிரம் போ! நிற்காதே!





## கிறிஸ்தவர் கோயில்.




பாதிரியார்:— எங்களுடைய கடவுள் எல்லாருக்கும் பொதுவானவர். கோயிலினுள் தாராளமாகச் செல்லலாம். வாருங்கள்! வாருங்கள்!

## கிறிஸ்தவர் பள்ளிக்கூடம்.





பாதிரியார்:—பிள்ளைகளுள் வித்தியாசம் ஏது? வாடா மகனே! உள்ளே வா! நன்ருகப் படிக்கலாம்.

செட்டாகவும்" நடத்தப்படுமொரு லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியாகும்.




## கிறிஸ்தவர் வைத்தியசாலை.



பாதிரிகள்:—யாருக்கு நோயுண்டாகிறதோ அவர்கட்கு வைத்தியம் செய்யவே இருக்கிறோம். தீண்டாமை என்பது எங்களிடம் இல்லை.

Safety and service are the foundation on which the Unitec

## கிறிஸ்தவர் உபந்யாச மண்டபம்.



பாதிரியார்:—கிறிஸ்தவராக் விட்டால் ஒரு வித்தியாசமுமில்லை. எல்லாரும் ஒன்றாக இருக்கலாம். ஒன்றாக வணங்கலாம். ஒருவரை யொருவர் தொட்டால் தீட்டாகி விடாது. எல்லாரும் கடவுளுடைய பிள்ளைகள்.

பத்திரம், உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்.

# கம்பனர் காவியம்.

பண்டிதை—பத்மாசனி அம்மாள்.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லா
மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
வோங்கு நிழலிலிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத்
திறல்சேர் இராமன் றிருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க்கிதயங் களியாதே.

பூவுலகிற் செல்வமெல்லாம் பொருந்தியரசு வீற்றிருந்தாலும், தேவருலகிற் கற்பக விருக்ஷ நிழலிலிருந்தாலும் ஸ்ரீராமபிரானது திருக்கதை யமைந்துளதாகிய கம்பநாடரது கவிதையிற்போல் கற்றவர்களுடைய மனம் இன்பமடையாது எனக்கூறும் ஆன்றவர் மெய்யுரைக்கிணங்க கம்பனரியற்றிய காவியமானது செந்தமிழ்க் காவியங்கள் பலவற்றினும் ஓர் மாமணி போன்று திகழ்கின்றது. சிந்தாமணி சிலப்பதிகாரம் சூளாமணி மணிமேகலை முதலான பல்பெருங் காவியங்களின் மத்தியில் கம்பனர் காவியம் விளங்கும் மாட்சி தாரகை நடுவட் டண்மதிபோன்று நாவலர் டலக்கும் நல்விருந்தா யமைந்துள்ளது.

கவிகுல திபமாகிய கம்பனர், வால்மீக முனிவர் கூறுகிய இராமசரித்திரத்தை யெடுத்துக்கொண்டு தமது உள்ளத்துணர்ச்சி காரணமாக வெழுந்த இன்பத்தைக் கவியெனுமுயிர்தமாக, "நாம் பெற்ற இன்பத்தை மற்றையோரும் பெற்றிடுக" வென்னும் தியாக வுணர்வுடன் சொரிகின்றனர். இக்கவிஞர் சிகாமணி மோனைத் தொடையும் எதுகைத் தொடையும் முரண்படாதிருக்கவும் உவமை உருவகம் தீபகம் முதலாகிய அலங்கார வகைகள் அமைந்திருத்தற்காகவும் கவிபாடினால்லர். இயற்கையினமைந்த மதிநுட்பத்தால் இப்பெரியாருள்ளத்தினின்றும் இன்பமிகும் கவிகளூற்றெடுத்துப் பெருகலாயின. வடமொழியில் கவி என்பதற்கு அலங்கரித்தலை யுடையது என்பது பொருளாகும். உண்மைக்கவிஞன் இயற்கையின் அழகையுள்ளவாறுணர்ந்து அதனையே கவிகளெனப் புனைகின்றான். அங்ஙனம் புனையப்பட்ட கவிகள் கவிஞனுடைய மனோபாவத்தைப் பிரதி விம்பிக்கும் கண்ணாடி போன்று விளங்குகின்றன. கவிகள் என்னும் பெயருக் குரியன இயற்கையினமைந்த கவிகளே. இக்கவிகளில் இயற்கைத் தோற்றங்களெல்லாம் நேரிற்கண்டு அநுபவித்தாற்போன்று பொலிந்துவிளங்கும். இக்கவிகள் கற்பவருக்கு மனவெழுச்சியைக் கொடுத்து அவருக்கு இயற்கை யோடிசைந்த இன்பத்தை யளிக்கவல்லன. இவ்விதமான நல்லிலக்கணம் வாய்ந்த கவிகளாற் புனையப்பட்டு விளங்கும் காவியமாகிய இராமாயணத்தைப் புனைந்த கம்பநாடர் "கவிச்சக்ரவர்த்தி" யென்னும் சிறப்பமைந்த நாமத்திற் குரியானர்.

கவிச்சக்ரவர்த்தியாம் கம்பனர் சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய பழையகாவியவாசிரிய ரமைத்த முறையில் பாக்களை

The United India is absolutely a safe Office from Policy holder's point of view

யமைத்தா ரல்லர். தாமாகவே ஓர் புது முறை கண்டு விருத்தப்பாவால் செய்யுட்களமைத்தனர். விருத்தப்பாவால் இத்தகைய நூல் யாத்தல் தொல்காப்பியனார் காலத்தில் அமைந்ததோர் முறையல்ல. இராம சரிதத்தை மாத்திரம் வால்மீகர் வாக்கினின்று மெடுத்துக்கொண்டு தமது உள்ளத்தினின்றும் எழுந்த உணர்ச்சியாகிய இன்கவிகளை ஆக்குகின்றார்.

'உலகம்' என்னும் மங்கலச்சொன் முதலாக வெடுத்துக்கொண்டு கவிமழை பொழிய ஆரம்பித்து முதற்கட் கடவுள் வணக்கங் கூறிப் பின்னர்,

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறையு ஞான மிலாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாரு முனிவரோ?

என்பன முதலிய கவிகளால் அவையடக்கம் கூறுகின்றார். அதன் பின்னர், தமது கவிதையின் போக்கை உய்த்துணரவைத்தாற் போன்று ஆற்றுப்படலத்தை அமைக்கின்றார். கோசலநாட்டை யலங்கரிப்பதாகிய சரயுநதியானது வேண்டியார் வேண்டியாங்கீயும் வள்ளியோர் போன்று மேகங்கள் வழங்கிய மழைத்தாரைகளால் வெள்ளம் மிகுந்து பெருக்கெடுத்து மலைமீதுள்ள மணி, பொன், மயிற்பீலி, யானைக்கோடு, அகில் முதலான மலைபடு திரவியங்களை அள்ளிக்கொண்டு வருதலால் வணிகமாக்கள் போன்றும், மலைகளை யெடுத்தும் மரங்களைப் பிடுங்கியும் கொண்டுவருதலால் சமுத்திரத்தில் அணை கட்டிய வானர சேனைபோன்றும், ஈக்கள் வண்டுகள் மொய்க்கத் தக்கதாகவும், அளவுகடந்து உட்டெளிவின்றித் தேக்கெறிந்துவருதலால் கள்ளுண்மாந்தர்போன்றும் பொலிகின்றது என்று அதன் போக்கினைப் புனைந்து, பின்னர் அதன் தோற்றத்தை,

எயினர்வாழ் சீறூ ரப்பு
மாரியி னிரியல் போகி
வயின்வயி னெயிற்றி மாதர்
வயிறலைத் தோட வோடி
அயின்முகக் கணையும் வில்லும்
வாரிக்கொண் டலைக்கு நீரால்
செயிர்தருங் கொற்ற மன்னர்
சேனையை மானுமன்றே.

முல்லையைக் குறிஞ்சி யாக்கி
மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்தல் தன்னைப்
பொருவரு மருத மாக்கி
யெல்லையில் பொருள்க ளெல்லா
மிடைதடு மாறு நீராற்
செல்லுறு கதியிற் செல்லும்
வினையெனச் சென்ற தன்றே.

என்பன முதலிய கவிகளால் அழகுபெறப் புனைகின்றார்.

இங்ஙனம் கூறுமுகத்தானே தமது காவியமானது ஆற்று நீர் போன்று நேர்பொருளுடையதாய் பலவிதமான அலங்காரங்களு மமைந்ததாகவும், பலவிதமான அர்த்தங்களைத் கொடுக்கக் கூடியதாகவும், முல்லையைக் குறிஞ்சி யாக்குதல் முதலான திணைமயக்கங் கூறுமாற்றால் தாம் முதனூலின் மாறுபடத் தமது தமிழ்நாட்டிற் கேற்ற விதமாக சரித்திரப் போக்கையும் வருணனை முதலியவற்றையும் மாற்றியமைத்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

பின்னர் ஆற்றுவளத்தாற் செழிப்படைவதாகிய கோசல நாட்டை வர்ணிக்கின்றார். நாட்டு வளங்கூறவே கவிச் சக்ரவர்த்தியார், தம் உள்ளத்தில் பல்வகை வளங்களும் துளும்பி நிறைந்துள்ள ஓர் நாட்டின் மத்தியில் நிற்பவர் போன்று பாவனை செய்கின்றார். அப் பாவனையானது அவருள்ளத்தினின்றும் பொங்கியெழுந்து கவிகளாய்ப் புறப்படுகின்றன. அங்ஙனம் புறப்படவே,

பணம் போடுவோருக்கு முற்றும் பத்திரமான கம்பெனி யுனைடெட் இந்தியா.



வரம்பெலா முத்தந் தத்தும்
மடையெலாம்பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக்
குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப்
பரப்பெலா மன்னம் பாங்கர்க்
கரம்பெலாஞ் செந்தேன் சந்தக்
காவெலாம் களிவண் டீட்டம்.

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம் வீற்றிருக்கு மாதோ.

என்பன முதலிய கவிகளால் கோசல நாட்டின் செவ்விய வளத்தைச் சிறப்புடன் புனைகின்றார். சகல வளங்களும் துளும்பியிருத்தலைப் புனைந் துரைத்துப் பின்னர் தமது உளமானது அந்நாட்டிற் குறை யொன்றைக் கண்டுகொள்ள முடியாமையால் அளவுகடந்த பெருமிதத்துடன்:—

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

என்னுங் கவியினால் வறுமையில்லாமையால் கொடையுமில்லை; சத்துருக்களின்மையால் வலிமையுமில்லை; பொய்யில்லாமையால் உண்மையுமில்லை; பல சாஸ்திரங்களும் மேவுதலால் வெள்ளறிவுமில்லை யென்று கூறுகின்றார்.

இங்ஙனமே கோசல நாட்டின் தலைநகராகிய அயோத்திமா நகரையும் நவரசாலங்காரங்களும் பொருந்த வர்ணித்து அந்நகரத்தின் சிறப்பு உளங்கவர்ந் தெழுதலாலுண்டாகிய பெருமிதத்தால்,

கல்லாது நிற்பார் பிறரின்மையிற்
கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்ல
ரல்லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு
மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு
மில்லை மாதோ

என்னும் கவியினாலே கல்லாதவர்களில்லாமையினாலே கல்வியில் வல்லாருமில்லை; வல்லரல்லாருமில்லை; எல்லாரும் எல்லாச் செல்வமும் பொருந்தியிருத்தலினாலே வறியோருமில்லை; செல்வருமில்லையென அழகுபெறக் கூறுகின்றார்.

மிதிலைக் காட்சிப் படலத்தில் மிதிலைமாநகரை வருணிக்கப் புகுந்த கம்பனார் அந்நகரமானது, துவசங்களாகிய கரங்களால் யான்செய் மாதவத்தினால் ஸ்ரீதேவி செந்தாமரை யிருக்கையை விடுத்து ஈண்டு வந்துறைகின்றாள். ஆதலால் நீர் விரைவில் வாரும் என்று ஸ்ரீராமரை யழைப்பது போன்று விளங்கினது, எனச் சிறப்புறப் புனைந்துரைக்கின்றார். இங்ஙனம் கூறும் பாடல்களை யுற்றுநோக்குங்கால் கவிச் சக்ரவர்த்தி சமயத்துக்கேற்ற விதமாகப் பொருட்களின் இயல்பான செய்கைகளைத் தமது நுண்ணறிவாற் சித்திரித்துக் கூறும் கற்பனாசக்தி தெள்ளிதினுணரக் கிடக்கின்றது.

எண்ணரு நலத்தினா ளினையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

Safety and service are the foundation on which the United India is bu

# குமரன் ஆண்டு மடல்.

என்னும் கவியினாலே கம்பநாடர் வால்மீகர் கதைக்கூற்றை மாற்றிப் பண்டைத் தமிழர்பால் வழக்கமாயிருந்த "காதல்மணம்', பொருந்து முறையில், ஸ்ரீராமரும் சீதாதேவியும் ஒருவரை யொருவர் உள்ளத்தின்மினிரும் காதலுடன் நோக்கினார் எனக் கூறுகின்றார். அன்றியும் இருவர்பாலுற்ற காதலையும்,

மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ

என்னுங் கவியினாலே அழகுபெறப் புனைகின்றார். கார்முகப் படலத்தில் ஸ்ரீராமபிரான் வில்வளைக்க எழுந்த அழகினைக் கற்போருள்ளம் வீரத்தாற்றோன்றிய பெருமிதமெய்தத்தக்க தன்மையுடையதாக,

பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
யெழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகண் மூப்பகை வென்றார்.

என்னும் கவியாற் கூறுகின்றார்.

வரைக்காட்சிப் படலத்தில் இவர் இயற்கைத்தோற்றங்களை யழகுபெறப் புனைந்து கூறும் பாடல்கள் கற்போர் இதயத்தைக் கவர்கின்றன. இதனை வாசிக்கும்போது வாசிப்போருள்ளமானது பலவிதமான வளங்களும் நிறைந்துள்ள ஓர் மலையினின்று அதன் தோற்றத்தை யுற்றுநோக்குவது போன்ற ஓரின்ப உணர்ச்சியைப் பெறுகின்றது. அன்றியும்,

தெருண்ட மேலவர் சிறியவர்ச்
சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ
ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு
ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தன்னிற
மாக்கிய விரதம்

என்பது முதலிய கவிகளை யுற்று நோக்குங்கால் கவிஞர் சிகாமணி இயற்கைப் பொருள்களில் மனித உள்ளத்தி னுணர்ச்சியைக் கண்டு கவியமைக்கும் திறமை நன்கு விளங்குகின்றது.

மாந்தளி ரனைய மேனிக்
குரத்தியர் மாலை சூட்டிக்
கூந்தலின் கமுகின் பாளை
சுழலினொ டொப்புக் காண்பார்
ஏந்திழை யரம்பை மாத
ரெரிமணிக் கடகம் வாங்கிக்
காந்தளம் போதிற் பெய்து
கைகளோ டொப்புக் காண்பார்
கோளி பங்கய மூழ்கக் குளிர்கயம்
கோளி பங்கய மூழ்கக் குலைந்தவால்
ஆளி பொங்கு மருவரை யூடழிந்
தாளி பொங்கு மரம்பைய ரோதியே
மந்தார மூர்து மகரந்த
மளைக்கு லாவும்
அந்தா ராசர்க் கரசன்ற
வனீக வெள்ளம்
நந்தா தொலிக்கு நாலைப்பெரு
வேலை யெல்லாம்
செந்தாமரை பூத்தெனத் தீப
மெடுத்த தன்றே

என்பன முதலாகிய கவிகள் கற்றோராலும் மற்றோராலும் நனிபாராட்டுதற்குரியன.

கம்பநாடர் ஆங்காங்கே யிடத்துக்கேற்ற விதமாகச் சந்தபேதங் கொள்ளுமுறை நனி பாராட்டற்குரியன. கடிமணப் படலத்தில் சீதா தேவியின் விரகதாபத்தைப் புனைந்துரைக்குங்கால்,

உரவே தமிலா ருயிரீ தமெனுக்
கரவே புரிவா ருளரோ கதிரோன்
வரவே யெனையா ளுடையான் வருமே
இரவே கொடியாய் விடியா யெனுமால்

என்பது முதலாகச் சோகரசந் ததும்பும் தன்மைவாய்ந்த சந்தத்தாற் கவியமைக்கின்றார்.

பத்திரம், உபகாரம் இவையே யுனைடெட் இந்தியா எனும் கட்டிடத்தின் அடித்தளங்கள்.

மந்தரை ஸ்ரீராமராது முடிசூட்டை கைகேயிக்குக் கூறுங்காலையில், சந்தோஷத்தினால் கைகேயி கொடுத்த மாலையை அம்மந்தரை வாங்கிக் கோபத்துடன் நிலத்தெறிந்தமையைக் கூறுங்கால்,

தெழித்தன ளூரப்பினள் சிறுகண் மையுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தையக் கொடிய கூனியே

என ரௌத்திர ரசந்ததும்புந் தன்மைவாய்ந்த சந்தத்தாற் கவியமைக்கின்றார்.

வாலியின் மார்பிற் சரந்தொடுத்த சந்தர்ப்பத்தில், ஸ்ரீராமரை வாலி வைதமையைக் குறித்து,

வாய்மையு மரபுங் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளற்
றாயவன் மைந்த னேநீ
பரதன்முன் றோன்றி னாயே
தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்தாற் றீங்கன் றாமோ
தாய்மையு மன்றி நட்புந்
தருமமுந் தழுவி நின்றாய்,
கோவியற் றரும முங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா
வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற
வன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலுஞ் சிந்தை

என்பன முதலாகிய கவிகளமைந்துள்ள சந்தமானது, கற்போர்க்கும் கேட்போர்க்கும் ஆராவின்பத்தை யளிக்கின்றன. கோபமும் அழமும் அடக்கமும் நிந்தையும் அமைந்தனவாகிய இக்கவிகளைக் கேட்கும்போது கல்லாத ஒருவனும் கம்பர் கவியின் சிறப்பை யுணர்வான். கடல் தாவு படலத்தில் கம்பநாடர் அநுமானுடைய போக்கை அலங்கரித்திருக்கும் அழகிய பாடல்கள் எவருள்ளத்தைத் தான் கவரா? சூடாமணிப் படலத்தில் சீதாதேவி, ஸ்ரீராமருக்குக் கூறும்படி கூறிய மொழிகளைக்கேட்ட அநுமார் கூறிய வுரைகளை,

வீவாய் நீயிவண் மெய்யஃதே
நுய்வா னின்னுயி ருய்வானும்
போய்வா னந்நகர் புக்கன்றோ
வேய்வான் மௌலியு மெய்யன்றோ.

என்பது முதலிய கவிகளாற் கூறுகின்றார். இவ்விடத்தில் இவரமைத்துள்ள சந்தத்தின் அழகு அளவுகடந்த மாண்புடன் பொலிகின்றது.

அநுமார் சீதாதேவிக்கு இராமருடைய ரூபலாவணியங்களைக் கூறும்போது,

திரண்டில வொளியில திருவின் சேர்வில
முரண்டரு மேருவின் முரிய மூரிநாண்
புரண்டில புகழில பொருப்பென் றொன்று
திரண்டில புயங்களுக் குவமமேற்குமோ[போன்

எனப்புயங்களுக்கு மலை உவமை கூறத்தக்க தொன்றல்லவென்று புனைந்துரைக்கின்றார். கடல்காண் படலத்தில், "சிலை மேற்கொண்ட திருநெடுந்தோட்கு உவமை மலையுஞ் சிறிதேய்ப்ப" எனச் சீதையின் பிரிவாற்றாமையால் புயங்கள் மெலிந்து போனமையால், முன்னர் உவமித்தற்குத் தகுதிவாய்க்கப் பெறாதிருந்த மலையும் சற்றே ஒப்பாக அமைந்தது என அழகாக முன்பின் தொடர்புறப் புனைகின்றார்.

இனிமேல் இவர் சண்டையைக் குறித்து அமைத்துள்ள பாடல்கள் மிகுந்த சிறப்புடையன. ஒருநாள் நடந்த யுத்தத்திற்கும் மறுநாள் நடந்த யுத்தத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. இராம கும்பகர்ணயுத்தம் ஒரு மாதிரியாயிருக்கும். இராமராவண யுத்தம் ஒரு மாதிரியாயிருக்கும். ஒவ்வொருவருடைய யுத்தத்திற்கும் ஒவ்வொரு முறையமைந்துளதா யிருக்கின்றது.

இக்கவிஞர் சிகாமணி, இரண்டு விதமான பொருள்படக் கவியமைக்குந் திறமையுமுடையர். இராவண சங்காரத்தின் பின் ஸ்ரீராமபிரான் சீதாதேவியை அழைத்துவரும்

South India has practically one Life Assurance Co, and it is the United India.

படி விபீஷணரை யனுப்பினர். அங்ஙனம் விபீஷணரா லழைத்து வரப்பட்ட சீதா தேவியை ஸ்ரீராமபிரான் சர்ப்பத்தைப் போற் சீறியெழுந்து பார்த்து,

ஈண்டிற முவந்தனை
யொழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம்
பரக்கன் மாநகர்
ஆண்டுறைந் தடங்கினை
யச்சந் தீர்ந்திவண்
மீண்டதென் னினைவெனை
விரும்பு மென்பதோ

என்பது முதலாக எழுபாட்டால் நிந்திக்க லுற்றார். இந்த நிந்தனையைக் கவிஞர் சிகாமணி "என்றனன் புலவர் புந்தியான்" என முடித்திருக்கின்றனர். பின்னர் தசரதன், ஸ்ரீராமர் சீதையை நிந்தித்தமை சீதையின் கற்பை உலகில் நிலைநிறுத்துவதற்காக வெனக் கூறியதாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. இங்ஙனம் இராமர் கூறியது மெய் யென்பதைக் காட்டுவதற்காகக் கம்பர் நிந்தனைக் கவிகளில்,

பெண்மையும் பெருமையும்
பிறப்புங் கற்பெனுந்
திண்மையும் ஒழுக்கமும்
தெளிவுஞ் சீர்மையும்
உண்மையும் நீயெனு
மொருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன்
புகழின் மாய்ந்ததால்

என்ற கவியை இருபொருள் தரப்புனைந் துள்ளார். சீதையாகிய நீயொருத்தி பிறந்தமையால் பெண்மை முதலான குணங்களெல்லாம் வண்மையில்லாத அரசனது புகழைப் போலழிந்து விட்டன என நிந்தனையும், பெண்மை முதலான குணங்கள் நீயாக உருவெடுத்துப் பிறந்தமையினாலே, வண்மையால் ஜனகனுக்கு உண்டாகிய புகழ் அவனது இல்லத்தளவில் நின்றது; உன்னைப் பெற்றபுகழ் உலகமெங்கும் பரவியது எனச் சிறப்புற விளக்குகின்றார்.

கவிஞர் சிகாமணியான கம்பனார் காவியத்தைத் துருவியாராய்ந்தால் கணக்கிட முடியாத நுண்பொருள்களெல்லாம் மலிந்து கிடக்கக் காணலாம். ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் கம்பனார் காவியத்தை யாராய்ந்தாலும் அது பின்னும் ஆழ்ந்த பொருளுடையதாய்க் காணப்படுவதல்லாமல் ஓர் முடிபிற்கு வாராது.

கவிஞர் பெருமான் கோதாவரி நதியைப் புனைந்துரைக்குங்கால் கவியின் இலக்ஷணத்தையும் சிலேடையினமைத்துக் கூறியிருக்கின்றார். அது வருமாறு:—

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருடந்து புலத்திற்றாகி
அவியகத் துறைக டாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்

இதன் பொருளையும் கவிக்குப் பொருந்திய முறையானே கண்டுத் தருவாம்.

புவியினுக்கு அணியாய்—பூமியிலுள்ளோர்க்கு அலங்காரமாகி ஆன்றபொருள் தந்து—அமைந்தனவாகிய தர்மார்த்த காம மோக்ஷ மென்னும் நான்கு புருஷார்த்தங்களையுமளித்து, புலத்திற்றாகி—அறிவினையுடையதாகி, அவி அகத்துறைகள் தாங்கி தேவாது அவியுணவை பொத்த அகப்பொருட்டுறைகளைத்தாங்கி, ஐந்திணை நெறியளாவி—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தல் ஆகிய ஐந்து வகையான நிலங்களின் மார்க்கத்தைப் பொருந்தி, சவியுறத்தெளிந்து—கற்பவரது மனம் ஒளிபெறும் வண்ணம் தெளிந்து, தண் என்று ஒழுக்கமும் தழுவி—தண்ணளி பொருந்திய ஒழுக்கினையு முடையதாகி இருக்கின்றன கவிகள் என்றவாறு.



# எருமை மாட்டுச் சண்டை.



மலாய் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் கிட்டா சமஸ்தானத்தின் தலைநகராக விளங்கும் அலோர்ஸ்டார் நகரத்தில் நடைபெற்ற எருமை மாட்டுச் சண்டையின் படம் இதுவாகும். சுமார் அறுபது ஆண்டுகட்கு முன்னர் பிரலீஸ் ராஜ குடும்பத்தில் நடைபெற்ற ஒரு கலியாணத்தில் வேடிக்கையாக இச்சண்டை முதன் முதலில் நடத்தப்பட்டது. அதைப் பின்பற்றி இதனை யொரு வருடாந்த விழாவாக்கிவிட்டனர். இப்படியே கிட்டா ராஜ்யத்திலும் சுமார் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் வேடிக்கையாக (மாயன் சுக்கா அத்தி) ராஜகுமாரர்கள் நடத்தினார்கள். பிற்பாடு நம் நாட்டு 'மஞ்சு விரட்டு' மாதிரி கதிர் அறுவடையானதும் வருஷா வருஷம் நடத்த முற்பட்டுவிட்டனர். ஏராளமான ஜனங்கள் கட்டணம் செலுத்தி இவ் வேடிக்கையைப் பார்க்க வருகின்றனர். குதிரைப் பந்தயத்தில் நடப்பதுபோல பந்தயங்கள் பிடிப்பதுண்டு. வேடிக்கையாக நடந்த இவ்வைபவம் கட்டாயத் திருவிழாவாக மாறி இன்று பெருஞ் சூதாட்டமாகி விட்டதென்னலாம். முதன் முதலில் ஆரம்பித்த பிரலீஸ் ராஜாங்கத்தார் இதன் தீமையையறிந்து இப்போது கண்டிப்பான உத்திரவுமூலம் நிறுத்திவிட்டார்கள். இதிலுள்ள முக்கிய விசேஷமென்னவென்றால் எருமைக் கடாக்கள் எண்ணெயிட்டுப் பாலிஷ் செய்த மாதிரியாக வழுவழுவென்று கறுத்துப் பருத்திருப்பதும், நீண்ட பெரிய கொம்புகளுடனும் அதிகமான ரோஷத்துடனும் சண்டையிடுவதுமேயாகும். இதற்கு ராஜகுடும்பத்தினர் விஜயஞ் செய்வதுண்டு. கிட்டாவிலும் கிளண்டானிலும் இத்திருவிழா பேர்பெற்றிருக்கிறது.

M. Ramamoorthi, Chief Agent for Tanjore, Pudukottah & Ramnad Districts

## உடலினை உறுதி செய்.



சாண்டோ லெ. சோமசுந்தர செட்டியார்.

You get better return for your money from a United India Policy than else-where.

# பயிற்சியும் வலிமையும்.

கீழைச்சிவற்பட்டி, ஸாண்டோ லெ. சோமசுந்தரச் செட்டியார்.

### முகவுரை.

**அன்புடைச் சோதரி சோதரர்களே!**

இந்நாளில் நம் நாட்டு மக்கள் மெலிந்து பலங்குன்றி, நடப்பதற்குங் கூடப் போதிய சக்தியற்றவர்களாக விருப்பதைக் காண்கின்றோம். பெரும்பாலான சிறுவர்கள் தேக வலி வற்றவர்களாகவே யிருக்கின்றனர். இக்குலைவிற்குக் காரணம் என்ன? தாய் தந்தையர் பாற் போதிய உரமின்மையேயாம். தேகத்தில் பலமும், ஆரோக்கியமுமுள்ள குழந்தைகளை விருத்திசெய்ய முயலுவது ஆண் பெண்ணினது கடமை யென்பதை நாம் கூறவேண்டியதில்லை. அதற்கு இன்றியமையாதது தேகாரோக்கியமும், திடகாத்திர சரீரமுமேயாம். இவைகளைப் பெறுவதற்குத் தேகப்பயிற்சி அவசியமாம். ஆண் பெண் அடங்கலும் நோயற்றவர்களாய் தேகாரோக்கியமும் திடகாத்திரமும் பெற்றிருக்க முயற்சி செய்வதுடன், தங்கள் தங்களது குழந்தைகளும் அவ்வாறிருக்கும்படி செய்வது அவர்களது கடமையேயாம். ஐசுவரியத்துடன் சதா நோயாளிகளா யிருப்பதைவிட, ஐசுவரியமின்றி நோயற்ற வாழ்வோடும் திடகாத்திரத்துடனும் ஜீவிப்பதானது மிகச் சிறந்த தென்பதே அறிந்தோர் கொள்கையாம். கோடி கோடி பணம் கொடுப்பினும், தேகாரோக்கியம்-பலம் இவைகள் வாங்க முடியாதன. மனிதர்களுக்கு ஆனந்தம் பணத்தில் இல்லை. ஆரோக்கியமும் திடகாத்திரமுமான சரீரத்திலேயே உளதென்பது எவராலும் மறுக்கத்தக்க தன்று. பணங்கா செல்லாம் சௌகரியத்திற்காக ஏற்பட்டிருப்பதைக் கவனியாது சௌகரியத்தைப் பணத்திற்கு இரையாக்குகிறார்கள், அந்தோ!

### தேகப்பயிற்சியும் வலிமையும்.

இப்பூவுலகில் உற்பவித்த மக்களனைவரும் சரீரபலத்தை முக்கியமாக விரும்புவார்கள். அதை யடைய அநேக உபாயங்கள் இருக்கின்றன வெனக் கூறப்படினும், அவைகளுக்குள் உடற்பயிற்சி உயர்ந்த ஒன்றாகும். இந்த உலகத்தில் சுகமாகவும் பயமில்லாமலும் வாழ்வதற்கு மனிதனுடைய உடம்பில் பலம் வேண்டியது அவசியமாகும். வெறும் வேதாந்தம் பேசி திண்ணைச் சோம்பேறிகளாய், பலமற்றவர்களாய்ப் போய்விட்ட நாம் இனியாவது பலமுடையவர்களாக முயற்சி செய்யவேண்டும். ஒரு தேசத்தின் பெருமை அநேகமாய் அத்தேச மக்களின் உடல் வலிமையையே காரணமாகக் கொண்டுளது. வலிமை குன்றிய மக்களால் நாடு வறுமை யுறுகின்றது. ஒரு செடி நன்கு வளர்க்கப்பட்டாலன்றி, அது வாடிப் போகின்றது. அவ்வாறாக, குழவிப்பருவம் தொட்டுச் சரியாகப் பாராமரிக்கப் படாத மக்களின் எதிர்கால வாழ்வு என்னாம்? உடல்வலி யுற்றவர் வாழ்க்கையின் போராட்டத்தைத் தாங்கி நிற்க ஏற்றவர்களா யிருச்கின்றனர்.

முற்காலத்தில் நம் நாட்டவர்கள் தேகப் பயிற்சியில் சிறந்தவர்களாக விளங்கி யிருந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் தேகப்

M. Ramamoorthi, Chief Agent for Tanjore, Pudukottah & Ramnad Districts

பயிற்சியிற் சிறந்தவர்கள் வைத்து ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். தேகப்பயிற்சி பென்பது அக்காலத்தில் சாமான்யமானதாக எண்ணப்பட்டிருக்கவில்லை. இக்காலத்தில் அவ்வெண்ணம் மாறுபட்டிருக்கின்றது. தேகப்பயிற்சியாளனுக்கு மனோபலமும் விருத்தியடைந்திருக்குமாதலால், இவன் இன்னொருவனுடைய துணையையே விரும்பாமல், அசகாய சூரனாக விளங்குவான். ஒவ்வொரு வாலிபரும் தேகபலம் கருதி தேகப்பயிற்சியைக் கைக்கொள்ளல் இன்றியமையாததாகும். போர்க்காக வன்றியினும், பிற எத்தொழிலிலும் மனம் தளராமல் நிலைத்து நின்று சாதிப்பதற்கு தேகபலமும் மனோபலமும் அவசியமாகலின், அவ்விரண்டையும் பழக்கத்திற்குக் கொண்டுவருதற்கு உரித்தான முறை தேகாப்பியாசமே யாகும். முறையாகச் செய்யப்படும் தேகப்பயிற்சியானது யோகசாதனங்களில் ஒரு பிரிவாகவே கவனிக்கப்படுகின்றது. தேகப்பற்சி, ஏற்ற மனோ நிக்கிரகம், கொண்டு செலுத்தும் வைராக்கியம், இவற்றைப்பற்றி நினைக்கும் போது நமது பூர்வகால ரிஷிகளின் நினைவும் அவர்களது தபசின் பெருமையும் நினைவுக்கு வருகின்றன. ஆகவே, ஒரு பலவானுக்கு அவசியம்வேண்டுவது, அவனது உட் கருவிகளின் தளராத் தன்மையேயாம். ஒவ்வொரு வாலிபரும் தமது தேகங்களைத் தளராமல் மனோற்சாகத்துடன் பழக்கி வருவதால் எக்காரியங்களையும் முடிவு வரையில் கொண்டுசெலுத்தும் ஆற்றல் கைகூடும். தேகாப்பியாச முறையிற் பழகிவரும் வாலிபர்க்கு இப்பருவத்திலேனும் வயது முதிர்ந்த அப்பருவத்திலேனும் நோய்கள் அந்தணுகவே மாட்டா என்பது நிச்சயம். இத்தகைய நோயற்ற மனோற்சாகத்துடன் தேகவலியுடைய வாலிபர்களே தற்போது வேண்டப்படுகின்றனர். தளர்ந்த இருதயமும், கோழை நெஞ்சமும், வளர்ந்து முதிராத சுவாசாசயமும், நோயடைந்ததும் சீரணஞ் செய்து கொள்ளச் சக்தியற்றதுமான ஆமாசயமும் உடைய ஒரு வாலிபன் இவ்வுலகிற்கே பயன் படாதவனாகின்றான். இந்திரிய வலிபற்றவன் இவ்வுலகில் இருந்தென்ன இறந்தென்ன? தேகப்பயிற்சியால், மேற் கூறப்பட்ட குறைகளெல்லாம் நிவர்த்தியாகி அவ்வாலிபனே, உலகத்திற்கு, தன் தேசத்திற்கு, தன் ஊருக்கு, தன் குடும்பத்திற்குப் பெரும் புகழையும் உயிர் சுதந்திரத்தையும் தேடிக் கொடுக்கும் ஆற்றலும் வைராக்கியமு முள்ளவனாக வளர்வான்.

தேகத்தின் தசை நாம்புகளைக் கட்டுவதற்கும் பலப்படுத்துவதற்கும் தேகப்பயிற்சி அவசியம் வேண்டியதாகிறது. ஒருவன் குறித்த காரியத்தைத் தளராது செய்து முடித்தற்கு, அவனது தசை நார்கள் அல்லது தசை நாம்புகள் நன்றாயிருத்தல் வேண்டும். தேகப்பயிற்சியானது, தசை நார்களையும் கட்டுவதுடன் மாத்திரம் நில்லாது, தேகத்தில் வளரும் அதிகமான கொழுப்புகளையும் அதிகமான தசைகளையும் கழித்து ஒழுங்குபட நிறுத்துகின்றது. தேகத்திற்குக் கொழுப்பும் சதையும் அவசியம் வேண்டுவன வாயினும், அவை அளவுக்கு மிஞ்சினால், தேகத்திற்குக் கனத்தையும் பலக்குறைவையும் சோம்பலையும் எழுப்பி விடுமாகலின், தேகாப்பியாச காரியத்தால், அவை ஒழுங்குபட வேண்டியது அவசியமே யாகும். தேகாப்பியாச மானது உட்கருவிகளுக்கு ஊக்கத்தையளித்து பலமான காரியங்களைச்செய்வதில் மலைப்பற்ற தன்மையையும் அவைகட்குக் கொடுக்கிறது.

நமக்கு மிகவும் அவசியமாக வேண்டியது பலம். "சக்தி" யின் செய்தியே நமக்கு இப்போது முக்கிய தேவையாயிருக்கிறது. "வலிமையுடன் இருக்க வேண்டும்" என்

ம். இராமமூர்த்தி, சீப் ஏஜண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.



பதே நாம் தற்காலம் செபிக்க வேண்டிய மந்திரம். ஆகவே, நமக்குத் தேவைப்படுவது சக்தி-பலம்-வல்லமையேயாகும். அமெரிக்கர்கள் பின்பற்றும் கொள்கைதிறமையாகும். இந்தியர்களது கொள்கை சக்தியாக இருக்கட்டும். வீரமுள்ள நாகரிகத்தைக் காண்பிக்கும் இரு குறிகள் யாதெனில் ஆண்மையோடு கூடிய விளையாட்டுகளில் விருப்பமும், நல்ல சுத்த வீரர்களைப் புகழுவதுமேயாம். தன் பலத்தை விருத்தி செய்து கொள்ளுவதே ஒவ்வொருவருடைய கொள்கையாயிருந்து வரவேண்டும்.

செல்வர்கள் உடற்பயிற்சியும் அறிவுப் பயிற்சியுமின்றிச் சோம்பேறி வாழ்வை மேற்கொண்டு துன்புறுகின்றார்கள். அவர்கள் தம் தொழில்களைக் கவனிப்பதோடு, உடற்பயிற்சியின் பொருட்டுச் சில வேலைகளும் செய்தல் வேண்டும். மனித வாழ்வை விரும்புவோர் அனைவரும் வேலை செய்தல் வேண்டும். சோம்பேறி வாழ்வில் இன்பம் உண்டா?

ஸர். சுரேந்திர நாத் பானர்ஜி தமது பண்டை நினைவுகளைப்பற்றி எழுதி வெளியிட்ட புத்தகத்தில் பின் வரும் விஷயங்கள் காணப்படுகின்றன :—

"என் தேக சுகத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் காரணம் இன்னதென்று நான் குறிப்பிட வேண்டுமெனப் பல நண்பர் என்னைக் கேட்டுக் கொள்ளுகின்றனர். இப்போது எனக்கு வயது எ௬-க்கு மேலாகி விட்டது. அப்படியிருந்தும் நோயற்ற வாழ்வும் தெளிந்த புத்தியும் உடையவனாகவிருக்கின்றேன். அதனால் எனது அனுபவம் உபயோக முள்ளதாயிருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். சரீர சுகத்தைக் காப்பாற்றுவதே முதற்கடமையென்னும் விரதத்தை ஏற்றுக்கொண்டவனாக இருந்தேன். யந்திரம் வேலை செய்வதற்கு முன் ஒழுங்கான நிலையில் அமைய வேண்டும். பல பெரியார்கள் நம் தேசத்தில் சிறு வயதிலேயே இறந்து போயிருக்கின்றனர். சுகத்தைக் காப்பாற்றுவதற்கு முதன் முதலாக வேண்டியது சரியான காலங்களில் தவறாமல் செய்யப்படும் தேகப் பயிற்சியே என்று நான் கருதுகிறேன். என் வாழ்நாட்கள் முழுவதும், இப்போதுகூட நான் காலையில் அரை மணியும், மாலையில் முக்கால்மணியும் தேகப்பயிற்சி செய்வதுண்டு. பல வேலைகள் ஏற்படுவதால் மாலைப்பயிற்சி நிற்பதுண்மையாயினும் காலையில் ஒருபோதும் நிற்பதில்லை. நான் பாலியத்தில் டம்பல்ஸ், கரலா முதலியனவும் செய்வதுண்டு"

என எழுதியிருக்கும் உண்மையை நாம் கவனிக்க வேண்டும். அல்லாமலும், மகாத்மா, சுவாமி சிரத்தானந்தர் முதலிய பல பெரியார்களும் தேகப்பயிற்சியின் அவசியத்தை வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

நமது விளையாட்டு.

முற்காலத்தில் நமது இந்திய நகரங்களிலும் கிராமங்களிலும் சிறுவர்களது தேகாப்பியாசத்தை முன்னிட்டு அனுஷ்டிக்கப்பட்டு வந்த இந்திய விளையாட்டுகளை இந்நாளில் எங்கும் காணோம். அவைகளைப் பற்றிப் பேசுவதுகூடக் கேவலமெனக் கருதப்பட்டு வருகின்றது. முற்காலங்களில் எங்கும் சிறுவர்கள் பற்பலவிதமான விளையாட்டுகள் விளையாடுவதைக் காணலாம். மல்யுத்தஞ் செய்தல், தாவிக் குதித்தல், சிலம்பம் பழகுதல், ஓடுதல், நீந்துதல், படகு ஓட்டுதல், இந்தியக் கால்பந்து, எறிபந்து, குழிப்பந்து, கரலாச் சுற்றுதல், கஸரத்- தண்டால் பஸ்கி எடுத்தல் முதலிய விளையாட்டுகளினால், சிறுவர்கள் சரீர சுகமும் பலமும் பெற்று வந்தனர். இத்தகைய விளையாட்டுகளை இந்நாளில் பார்ப்பது அரிதாகவிருக்கின்றது. இவ்விளையாட்டுகளுக்குப் பொருட்

Safety and service are the foundation on which the United India is built.

செலவென்பது கிடையாது. இவைகளெல்லாம் சாதாரண இலகுவான விளையாட்டுகள். ஆனால், தற்காலம் மேல்நாட்டு விளையாட்டுகளை சிறுவர்கள் விரும்புகின்றனர். அந்நாட்டு விளையாட்டினும், செலவற்ற, உடம்பாலேயே செய்யத் தகுந்த—உடம்பினைச் சீக்கிரம் உருவாக்குகின்ற, விளையாட்டுகள் அனந்தமுண்டு. இவைகள் ஒரு கொள்கையும் முறையும்பற்றியவைகளாயிருக்கின்றன. எனினும், கிராம விளையாட்டுக்கள் மீண்டும் அனுஷ்டிக்கப்படவேண்டும். தற்காலத் தேவைக்குத்தகுந்தாற்போல் அவைகளை மாற்றி எல்லோரும் அவைகளைக் கைக்கொள்ளுமாறு தீவிர பிரசாரம் செய்ய வேண்டும். இவ்விளையாட்டுக்களை ஒழுங்காக முறையோடு செய்து வருபவர்களது தேகம் நன்கு வலுவடையும். அவர்கள் வனப்புள்ளவர்களாகவும் சுக தேகிகளாகவும் விளங்குவார்கள். மல் யுத்தம்-சிலம்பம் முஷ்டியுத்தம் இவைகளிலொன்றைத் தெரிந்திருக்கும் ஒருவர் உடல் மிகவும் சுறுசுறுப்புள்ளதாகவும், ஆபத்துக் காலத்தில் இலகுவாய்த் தப்பித்துக்கொள்ளக்கூடியதாகவுமிருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால், இக்காலத்தில் நமது மாணுக்கர்களும் நாகரிகம் பெற்றவர்களென் றெண்ணப்பட்டவர்களும் பழகும் தேகப் பயிற்சி, தேகப்பயிற்சியென்று கூறப்படுவதற்கே உரியதல்ல. ஒழுங்காகவும் நாணயமாகவும் உடையணிந்து, வேறு பலமான விளையாட்டுக்களிலீடுபட முடியாத காலத்தில் பெண் பிள்ளைகள் விளையாடும் பந்தடிக்கும் விளையாட்டால் என்ன தேக பலன் கிடைக்கும் ? இவ்விளையாட்டினால் பலம், தேகக் கட்டு முதலியவைகளைப் பெறமுடியுமா ? ஒருநாளும் பெற முடியாது. அன்றி, இது ஆண்மையுள்ள விளையாட்டுமாகாது.

## இளைஞர்கள் வாழ்வு.

பெற்றோர்கள், அவர்கள் தனிகர்களாகவிருந்தாலும் அல்லது வறிஞர்களாகவிருந்தாலும் தங்கள் பிள்ளைகள் சர்வ கலாசாலைகளில் படித்து, உயர்தர உத்தியோகஸ்தர்களாக வரவேண்டுமென விரும்புகின்றனர். சரீரசுக சம்பந்தமான தேகாப்பியாசக்கல்வி முற்றும் புறக்கணிக்கப்படுகின்றது. இக்காலத்து மாணுக்கர்கள், கூட்டம் நிறைந்தும் ஆபாசமானதுமான நாடகசாலைகளுக்கும் பிற களியாட்டச் சாலைகளுக்கும் செல்லுகின்றனர். வருங்கால வக்கீல்கள், வைத்தியர்கள், உயர்தர அரசாங்க அதிகாரிகள், பெரிய வியாபாரிகள் முதலிய பலரது இளமைப்பருவம் இவ்வாறு கழிகின்றது. பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் உயர்தர சர்வகலாசாலைப் பட்டங்கள் பெற வேண்டுமென்பதையும், உயர்ந்த குடும்பங்களில் அவர்கட்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்பதையும், அவர்கள் உயர்தர அரசாங்க உத்தியோகங்களிலாவது வியாபார ஸ்தாபனங்களிலாவது அமரவேண்டுமென்பதையுந் தவிர வேறு எண்ணமெதுவுங் கிடையாது. சரியான தேகாப்பியாசங்கள் செய்யும்படியும், ஒழுங்கான வாழ்க்கையை நடத்தும்படியும் கடினமான ஜீவியத்தை மேற்கொள்ளும்படியும், ஆண்மைத்தனமான விளையாட்டுக்களில் கலந்துகொள்ளும்படியும், விவசாயம் போன்ற பல்வேறு தொழில்களைச் செயயும்படியும் சிறுவர்கள் தூண்டப்படுவதில்லை. இவ்வாருகக் கடினமான வேலைகளெதற்கும் தகுதியற்றவர்களாகவும், தேசாபிமானமுள்ள ஆண்மக்களது வேலைகளை மேற்கொள்ள முடியாதவர்களாகவும், ஆபத்துக் காலங்களிலுங்கூடத் தங்களையும், தங்களது பெண்டு பிள்ளைகளையும், சொத்துசுகங்களையும், திருடர்கள் போக்கிரிகள் முதலியவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்களாகவும் நம் நாட்டு வாலிபர்கள் வளர்ந்து வருகின்றனர். இவர்களது திறமையெல்லாம் இவர்களது பேனுமுனையிலும், நாக்கு நுனியிலும்தான். தம்மையும் தமது பெண்டுபிள்ளைகளையும் சொத்துச் சுகங்களையும் காப்பாற்றுவதற்கு நாட்டுப்புறத்தவர்களை வேலைக்கமர்த்திக்கொள்ள வேண்டியதிருக்கிறது. ஆண்மக்களைப்போல் வாழ்க்கையை நடத்தமுடியாத இவர்களது கேவல வாழ்க்கையைப் பற்றி என்ன சொல்லுவது? இத்தகையோர்களைப் பெரும்பாலோராகக் கொண்டுள்ள ஓர் சமூகம் எவ்வாறு பலமடையும்? எவ்வாறு ஊக்கமாகவிருக்கும்?

## தற்காப்பு.

கடினமான வாழ்க்கையை நடாத்தச் சிறுவர்கள் பயிலவேண்டும். ஆடம்பர வாழ்க்கையைவெறுத்துத் தள்ளவேண்டும். எவ்வினமாவது சுதந்தரத்தோடும் தன் மதிப்போடும் இருக்கவேண்டுமாயின் கடினமான வாழ்க்கை நடத்தும் தன்மை அவ்வினத்தவரிடை இருந்துவரவேண்டும், தம்மைக் காத்துக்கொள்ளப் பிறரது உதவியை எதிர்பார்த்திருப்பவர்கள் என்றும் அவர்கட்கு ஆட்பட்டிருக்க வேண்டுவதுதான். நித்திய வாழ்க்கையிலுங்கூட ஒவ்வொருவரும் தமது உரிமைகளையும் சொத்துச் சுகங்களையும் பாதுகாத்துக்கொள்ளத் தம்மையே நம்பியிருக்கவேண்டும். பிறர் உதவியை நம்பியிருத்தலாகாது. அஹிம்ஸா தர்மம் தற்காப்புச் செய்துகொள்ளலாகாதெனத் தடைசெய்யவில்லை. சரீர பலத்தோடிருப்பது ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமையாகும். அவர்கள் அக்கிரமமாகப் பிறருடன் வலிந்து சண்டைக்குச் செல்லாது, தமது உரிமைகட்கும் சொத்துச் சுகங்கட்கும் ஆபத்து வருங்காலத்தில் தமது ஆண்மைத்தனம் தம்மைவிட்டு அகலவில்லையென்பதையும், தமது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளத் தம்மிடம் போதிய பலமிருக்கிறதென்பதையும் காட்டிக்கொள்ளவேண்டும்.

## சக்தியைப் பாதுகாத்தல்.

நமது சமூகத்தில் அநேகமாக ஒவ்வொருவரும் யௌவன காலத்திலேயே தம் சக்திகளை வீணுக்கிவிடும் குற்றத்திற்கு உட்படுகிறார்கள். பலமின்மைக்கு இதுவே முக்கியமான காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. கூடியவரையில் எல்லா வழியாலும் சக்திகள் செலவிடப்பட்டு, முடிவில் கடவுளால் நமக்கு அபரிமிதமாக அளிக்கப்பட்ட மூலாதார சக்திக்கும் கேடு உண்டாகிறது. உபாத்தியாயர்கள், வக்கீல்கள், வர்த்தகர்கள், வைத்தியர்களுங்கூட அதிக காலம் திடசரீரிகளாக இருப்பதில்லை. இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. மேலே சொல்லப்பட்டவர்கள் அநேகமாய் படித்தவர்களாயிருந்தும் ஏன் இவ்வாறு சக்தி குன்றியவர்களாயிருக்க வேண்டும்? நல்ல யௌவன தசையிலேயே இவர்கள் பல நோய்வாய்ப்பட்டுத் தேகம் சக்தி குன்றியவர்களாய்ப் போய்விடுவதற்குக் காரணமென்ன? இளமைப் பருவத்தை யெல்லாம் சிற்றின்பத்துறையிற் கழித்து இரத்த ஓட்டம் குன்றப் பெற்று, நரம்புகளெல்லாம் தளர்ந்து தள்ளாட முதுமைப் பருவத்தைப் பெற்று, நோயாளிகளாக இருத்தல் இயற்கைக்குப் பெரிதும் விரோதமாகும். இளமையிலேயே நரம்புகள் தளரும்படியும் இரத்த ஓட்டம் குறையும்படியும் செய்து கொள்ளுவது உடலைச் சீக்கிரத்தில் அழித்துக் கொள்ள வழிதேடுவதேயாகும். இரத்தத்தைச் செலவழிப்பதில்இளைஞர்கள்பெரிதும் கவனமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

## பெண்களின் தேகப்பயிற்சி.

பெண்மக்கட்குத் தனித்த முறையில் தேகப்பயிற்சி அவசியமின்று; வீட்டு வேலைகளே போதுமான பயிற்சியாகிறது; வேலையற்ற செல்வச் சீமாட்டிகள் உடல்நலம் கருதி ராட்டினம் சுற்றினால் போதிய சுகம்

கிடைக்கிறது என ஒரு அன்பர் எழுதியிருந்ததைப் பார்த்தேன். அவைகள் ஆரோக்கியத்திற்கான பயிற்சியாயிருக்குமென்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், அழகு, பலம், தேகக்கட்டு, தைரியம், ஆபத்துக்காலத்தில் எதிர்க்கும் சக்தி இவைகளையடைய மேற்சொன்ன வீட்டு வேலைகள் மட்டும் போதாவென்பது உடற்கூறு சாஸ்திரிகள் கண்ட உண்மை. காலை முதல் மாலைப் போதுவரை சீவனோபாயம் கருதி உழைக்கும் பெண்களைத்தவிர, மற்ற பெண்களெல்லாம் குறித்த ஒருநேரம் தமது சக்தியைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய பயிற்சியிலீடுபடவேண்டியது அவசியமாகும். வீட்டுவேலை செய்ய அவசியமில்லையென்றெண்ணும் தனிகர் வீட்டுப் பெண்களும், மனோமுயற்சியிலீடுபட்டுள்ள பெண்களும் கட்டாயமாகத் தேகப்பயிற்சி செய்யவேண்டும். துஷ்டர்களால் துன்பம் நேருங்காலத்தில் அவர்களை எதிர்த்துத் தகர்க்கத்தக்க பலத்தைப் பெண்களடைந்திருக்கவேண்டும். அப்பலத்தையடையத் தேகப்பயிற்சி அவசியம் வேண்டும். தற்காலத்துப் பெண்கள் இரவு காலத்தில் கதவைத் திறந்து வெளிவருவதற்கும் அஞ்சுகின்றார்கள். சிறிய சம்பவங்கட்கும் பிறர் உதவி வேண்டியதிருக்கிறது. உதவியற்ற காலத்தில் இவர்களின் கதியென்ன? எப்போதும் உதவியாளர் கூடவேயிருக்கிறார்களென்பதில்லை; தனிப்படும் சமயமுமுண்டு. அச்சமயத்தில் ஏதேனும் நேர்வதாயின் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் ஆற்றலைப் பெண்மக்கள் அடைந்திருப்பது குற்றமாகாதென்றே எவரும் எண்ணுவர்.

“இப்போது நமது மாதர்கள் சுகாதாரக்கேடான நிலைமையில் வசிக்கின்றார்கள். அவர்கள் தேகப்பயிற்சி செய்யவும், சுகாதாரமான வாழ்க்கையை நடாத்தவும் போதிய வசதிகளை நாம் அவர்கட்குச் செய்து கொடுக்கவில்லை. இவ் விஷயத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை. நம் இந்து மாதர்கள் பலர் வாலிபப் பருவத்திலேயே உயிர் துறக்க நேரிடுகிறதென்பதை நாம் அநுபவத்தில் கண்டு வருகிறோம். பேறு காலத் துன்பம் பொறுக்கமாட்டாது இறக்கும் மாதர்களின் தொகை இந்து சமூகத்தில் வெகு அதிகம். நம் மாதர்கள் சிறுவயதிலேயே உயிர் துறப்பதை நாம் தடைசெய்ய வேண்டுமாயின், அவர்கட்கு தேகப்பயிற்சி செய்வதற்கான வசதிகளை நாம் செய்து கொடுத்தல் வேண்டும்.” என ஸ்ரீ லாலா லஜபதிராய் ஓர் உபந்யாசத்தில் சொல்லியிருக்கிறார்.

பெண் மக்களின் உடல் செழிப்புறாமல் வாட்சியுற்றிருக்குமானால், அப்பெண்ணினது நாயகனுடலும்—அவரது குழந்தைகளின் உடல்களும் செழிப்புற முடியாதென்று கூறவேண்டியதில்லை. வீரத் தாய்மார்கள் இல்லா நாட்டில் வீரக் குழந்தைகள் எங்ஙனம் பிறக்கும்? ஆகவே, வீரத்திற்குத் தாய்மார்கள் ஊற்றுக்களாயிருக்கவேண்டும். வீரம் என்பது இருபாலார்க்கும் பொதுவாயதே. வீரம் ஆண்மக்களுக்குத்தான் வேண்டும், பெண் மக்கட்கு அது ஏற்றதல்லவெனக் கூறுபவர், முன்னைய நமது வீரமங்கையர் சரிதங்களைப் படிக்கட்டும்.

“விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பாராம்”

“நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்”

பாரதியார்

### வீரர்கள் சரிதம்.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் சும்மாயிருப்பதற்காக அவைகளுக்குப் பேய் பிசாசுகளைப்பற்றிக் கதைகள் சொல்லிப் பயமுறுத்தும்வழக்கத்தைவிட்டுவிட்டு, வீரர்களின் சரிதங்களைத் தம் பிள்ளைகட்கு உபதேசித்து வரவேண்டும். சிறு குழந்தைகட்குக் கதைகள் கேட்பதில் வெகு பிரியம். அவர்களது கவனமெல்லாம் அவர்கட்குப் பிரியமான விஷயங்களிற் செலுத்தப்பட்டதும் அவர்கள் தாமாகவே துஷ்டத்தனம் எதுவும் செய்யாமல் சும்மா இருந்து விடுவர். மேலும், வீரர்கள் சரிதங்களை அவர்கட்குக் கூறுவதால் அவர்கள் மனத்தில் ஆண்தன்மை பிறக்கும். பிற்காலங்களில் வீரர்களாகமிளிருவார்கள்.

### முடிவுரை.

சுகாதாரத்தால், அதில் முக்கியமான தேகாப்பியாசத்தால், நமது சக்திகளையெல்லாம் பெருக்கிக்கொண்டு பெருவாழ்வு வாழ்தல் கூடும். ஒருவன் தன் ஆற்றலுக்கேற்ற வண்ணம் வஞ்சகமின்றி உழைத்தல்வேண்டும். இத்தகைய உழைப்பு உடம்பிற்கும் உளத்திற்கும் வேண்டும். ஒருவன் உடம்பைமட்டும் தடிப்பேற வளர்க்கும் முழுமகன் ஆதல்கூடாது. உள்ளத்தையும் உடம்பையும் ஒருங்கேபோற்றி வளர்த்தல் வேண்டும். இயற்கையின்பங்களை இயற்கை கற்பிக்கும் வண்ணமே மிதமாகத் துய்ப்பது உடம்பை-உள்ளத்தை—உயிரை வளர்ப்பதாகும். அமைதியோடு, சாந்தியோடு உள்ளமும் உடம்பும் உழைப்பில் இசைதல் வேண்டும். உழைப்பு மனிதனை ஆக்குவது கவலையோ மனிதனை அழிப்பது. ஆகவே, நாம் இயற்கை வாழ்வு வாழ்ந்து, உடம்பை அரண்செய்து, வாடாத இளமையோடும் குன்றாத வீரத்தோள்களோடும் இன்புறுவோமாக! தோள்களில்வீரலெட்சுமி, முகத்தில் ஆரோக்கிய லெட்சுமி, நெஞ்சில் விஜய லெட்சுமி குடி கொள்ளப்பெற்ற இளங்குமரிகளையும் குமாரர்களையும் உற்பத்தி செய்வோமாக!




உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

—திருமந்திரம்.

ஸ்டார் அண்டு கம்பெனி மானேஜர்.

M. Ramamoorthi, Chief Agent for Tanjore, Pudukottah & Ramnad Districts.

## திவசங்கொடுத்தல்.





ம். இராமமூர்த்தி, சீப் ஏஜண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமனாதபுரம் ஜில்லா.


# சாஸ்திரி மகன் சாஸ்திரி.

அஞ்சா நெஞ்சன்.

டிப்டி கலெக்டராக இருந்த அப்பு சாஸ்திரி பிள்ளை வெகு மட்டம். அப்பு சாஸ்திரி தன் பிள்ளையை நன்றாகப் படிக்க வைத்து லண்டனுக்கனுப்பி ஐ ஸி எஸ். பரீக்ஷையில் தேர்ச்சிபெறச் செய்யவேண்டுமென்று கருதினார். பிள்ளையாண்டான் நாலாவது பாரத்திற்குமேல் ஏறுகிறபாடாயில்லை. கலெக்டர் பிள்ளையாகையால் வெகு பாடுபட்டு வாத்தியார் சொல்லிக்கொடுத்துப் பார்த்தார். ஒன்றும் ஏறுவதாக இல்லை. இந்த சமயத்தில் அப்பு சாஸ்திரி காலஞ்சென்றுவிட்டார். அப்பு சாஸ்திரி வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டி வாழ்ந்தபடியால் தம்பிடிகூட மிச்சமில்லை. இந்தப் பிள்ளையாண்டானைக் கொண்டுபோய் வேத பாடசாலையில் போட்டார்கள். அங்கு பல வருஷங்கள் நன்றாகச் சாப்பிட்டு மொழு மொழென்று வளர்ந்தான். அப்பு சாஸ்திரி பிள்ளை தனக்கு கலெக்டர் உத்தியோகம் தரவேண்டியது முக்கியமான கடமையென்றும், இல்லையென்று சொல்வது சாஸ்திர விரோதமாகுமென்றும், தகப்பன் பார்த்த வேலையை மகனுக்குக் கொடுப்பது சாஸ்திர சம்மதமானதென்றும், இதுவரையில்தான் மைனராதலால் உத்தியோகங் கேட்கக் கூடாதென்று இருந்ததாகவும், இப்போது மேஜராகிவிட்டபடியால் தாமதமில்லாமல் கலெக்டர் உத்தியோகத்தைத் தமக்குத் தரவேண்டுமென்றும் மேலதிகாரிக்கு ஒரு மனு எழுதிப் போட்டார். ஜில்லா கலெக்டரிடம் விசாரணைக்கு வந்தது. விசாரணைத் தேதியன்று அப்பு சாஸ்திரி பிள்ளை குப்பு சாஸ்திரியானவர் புதிதாகச் சலவைசெய்யப்பட்ட பத்தாறு சோமன் ஜோடியில் ஒன்றை பஞ்சகச்சம் வைத்துக் கட்டிக்கொண்டு மற்றொன்றை உடலில் யோக வேட்டியாகப் போட்டுக்கொண்டார். புதிதாக வெளுத்த பூணூல் மாட்டப்பட்டது. அவர் அப்பா போட்டிருந்த பழய ஆல்பக்கா கோட் ஒன்றைத் தலைப்பாகையுடன் சுருட்டிக் கட்கத்தில் வைத்துக்கொண்ட திருக்கோலத்துடன் ஜில்லாக் கலெக்டர் ஆபீஸுக்கு வந்து சேர்ந்தார். அங்குள்ள சேவகன் குப்புசாஸ்திரியைக் கொண்டு போய் அதிகாரி முன்பு விட்டான்.

குப்புசாஸ்திரி:—(இடது கையைத் தூக்கிக்கொண்டு) "தீர்க்காயுஷ்மஸ்து"

கலெக்டர்:—(சிரிப்பை அடக்கிக்கொண்டு) நீர் யார்?

குப்பு:—நான்தான் கலெக்டர் பிள்ளை! தெரியாதோ?

கலெக்டர்:—கலெக்டரா! அவர்யார்?

குப்பு:—எங்கப்பாதான்!

கலெக்டர்:—உங்கள் அப்பா பெயரென்ன ஓய்!

குப்பு:—எங்கப்பாதான் கலெக்டர் அப்பு சாஸ்திரி.

கலெக்டர்:—நீர் எதுவரையில் படித்திருக்கிறீர்?

குப்பு:—மூன்று வேதங்களையும் கனந்


Star and Company Managers.

தம் உருவேற்றி முடித்துவிட்டேன்.

கலெக்டர்:—(சிரிப்பு பொறுக்க முடிய வில்லை) ஆங்கிலம் ஏதாவது தெரியுமா?

குப்பு:—வெகுநாளைக்கு முந்தி, அதுவும் கொஞ்சதூரம் படித்தேன். அதில் வரும்படி ஒன்றுங் கிடைக்கவில்லை. சம்பளம் கேட்டார்கள். கொடுக்க வழியுமில்லை. செட்டியார் பாடசாலையில் என்ன சாப்பாடு! வெகு பேஷ்! போங்கோ!

கலெக்டர்:—(ஏதடா சனியன்!) இப்போது ஆங்கிலம் ஏதாவது தெரியுமா?

குப்பு:—அது தெரிந்ததனுல் என்ன கௌரவம்! மிலேச்சபாஷை! தேவ பாஷையில் பரமசிவனுல் அருளப்பெற்ற வேதத்தையே உருவேற்றி யிருக்கும்போது இதைப்பத்தி என்ன கவலை.

கலெக்டர்:—(மூக்கில் விரலைவைத்து யோசித்துக்கொண்டிருந்தார்.)

குப்பு:—என்ன ஐயா! சந்தியாவந்தன காலமாகிவிட்டது. உத்தியோகத்தைக் கொடுங்களேன்? எங்கள் அப்பாவின் உத்தியோகம் எனக்குக் கிடைக்கவேண்டியது தானே?

கலெக்டர்:—அதற்கு பி. ஏ. க்கு மேல் படிப்பு வேணுமையா?

குப்பு:—எல்லாவற்றிற்கும் மேலான வேதத்தையே படித்திருக்கும்போது மற்ற படிப்பென்னத்துக்கு?

கலெக்டர்:—பி. ஏ. வரை படிக்காவிட்டால் அந்த உத்தியோகம்கொடுக்கச் சட்டமில்லை.

குப்பு:—எங்க சித்தப்பா போலீஸ் சூப்பிரண்டா இருந்தார். அவன் பிள்ளைக்குப் போலீஸ் சூப்பிரண்டு வேலை கொடுத்திருக்காள். எங்க பெரியப்பா ஈழமங்கலம் கிராமம் தானமாக வாங்கி வைத்தார். அதிலே வருகிற வரும்படி எங்க பெரியப்பா பிள்ளைக்குக் கிடைக்காமலா போச்சு! அது மாதிரிதானே இதுவும்?

கலெக்டர்:—கவர்ன்மெண்டு உத்தியோகம் கிராம வரும்படியா ஓய்!

குப்பு.—வரி கொஞ்சமா வசூலான காலத்திலேயே எங்கப்பாவுக்கு மாசம் ஐநூறு ரூபாய் வந்துகொண்டிருந்தது என்று எங்கம்மா சொல்ருள். இப்போது வரி அதிகமாக வசூலாகிறதாமே? ஆகையால் சம்பளம் அதிகமாகத் தரணும். எங்கப்பா செத்து பத்து வருஷம் நாலுமாதமாகிறது. அவ்வளவுக்கும் கணக்குப்பார்த்துப் பணம் அனுப்பும்படியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலெக்டர்:—பியூன்!

பியூன்:—ஓய் சாஸ்திர மூட்டை! போரும் வெளியே!

குப்பு:—பெரியவாளைப் பார்த்து அப்படிச் சொல்லாதே!

பியூன் கையைப் பிடிக்க ஆரம்பித்தான்.

குப்பு:—அடே! அடே! தொடாதே! தொடாதே! போய்விடுகிறேன்.

பியூன்:— கட்டத்தில் என்னங்காணும் மூட்டை.

குப்பு:—உத்தியோகங் கொடுத்தவுடன் போட்டுக் கொள்ள வேணுமோ இல்லையோ? அதற்காகத்தான் எங்கப்பா போட்டிருந்த சட்டையுங் குட்டையுங் கொண்டு வந்தேன்.

பியூன்:—போம் போம் வெளியே!

குப்பு:—(ஆபீஸை விட்டு வெளியே வந்தார்) காலம் கெட்டுப்போய் விட்டது! கலி முத்திப்போய் விட்டது! மழை பெய்யவில்லை! தகப்பனுடைய தொழிலை பிள்ளைக்கு இல்லையென்கிருள்! தர்ம சாஸ்திரங்களையெல்லாம் கவனியாமல் பாவத்துக்காளாகிருள்! படிச்சவாளுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது! என்று புலம்பிக் கொண்டே சபிண்டிக்காரர் வீட்டுக்குச் சென்ருர்.



# பூங்காவனம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு.

குட்டிச் சாத்தன் A. B. C. D. E. F. etc.

இராமானுஜம் செட்டியார் வாதியாக இருந்து சிலம்பனூரிலுள்ள கோதானம் சுப்பிரமணிய ஐயர் பேரில் ரூ. ௨0000-க்குத் தொடரப்பட்ட நஷ்ட ஈட்டு வழக்கானது பங்குனியீ நக-உ விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிராதின் சுருக்கம் வருமாறு:—

“சுமார் ஏழு மாதங்கட்கு முன்னர் இறந்த எனது தகப்பனுர் வைதருணி நதியைக் கடக்கும் பொருட்டுச் சபிண்டி காலத்தில் கன்ருேடுகூடிய பசுமாட்டை இவ்வூர் கோதானம் சுப்பிரமணிய ஐயருக்கு தானம் செய்தேன். அவர் வாங்கிய நான்காவது மாதத்திலேயே வேருெருவருக்கு விற்கப் பட்டு அது கொல்லப்பட்டு விட்டது. இது காரணமாக எனது தகப்பனுர் வைதருணி நதியைக் கடக்க முடியாமல் இக்கரையிலிருந்து ௨௭-நாள் பெருந் துன்பப்பட்டுப் போனுர். பின்னர் சபிண்டி ஒன்றுக்கு இரண்டு பங்காகச் செய்ய வேண்டியதாயிற்று. அந்தச்செலவு வகையில் ரூ. ௧0000-மும், என் தகப்பனுருக்கும் எனக்கும் ஏற்பட்ட காலஹரணத்திற்கும், கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் பர்த்தியாக நஷ்ட ஈடு ரூ. ௧0000-மும், வியாஜ்யச்செலவும் குறித்த தேதி முதல் வட்டியும் கிடைக்கும்படியாய்க் கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களை மிக வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.”

இதற்குமேல் பிரதிவாதி கோதானம் சுப்பிரமணிய ஐயர் ஒரு ஸ்டேட்மெண்டு கொடுத்தார். அதன் சுருக்கம் வருமாறு :-

“வாதியினிடம் நான் பசுமாடு தானம் வாங்கினது வாஸ்தவம். அவராகவே வலிய என்னை அழைத்துக் கும்பிட்டு விழுந்து கொடுத்தார். பசுமாடு இருக்கிறவரை நான் வைத்துக் கொள்ளவேண்டுமென்ற நிபந்தனை எதுவும் கிடையாது. இதைத் தவிர பிராதில் சொல்லியிருப்பதுமுழுதும் புரட்டு. சபிண்டிச் செலவுத்தொகையாவது, நஷ்டத் தொகையாவது என்னைக் கேட்பதற்கு எந்தவிதமான நியாயமுங் கிடையாது. ஆதலால் மகா-ள-ள-ஸ்ரீ கோர்ட்டாரவர்கள் கேசைத் தள்ளுபடி செய்து வாதியிடமிருந்து செலவு தொகை வாங்கிக் கொடுக்கும்படி செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்”.

வாதி இராமானுஜஞ் செட்டியார் கூட்டிலேற்றப்பட்டார்.

**வாதி வக்கீல்:**— உமது பெயர் இராமனுஜஞ் செட்டியார் தானே?

**இராமானுஜஞ்:**— ஆமா.

**வாதி வக்கீல்:**— உம்முடைய தகப்பனுருக்கு முதலில் ஒருதாம் சபிண்டி செய்தீரா?

**இராமானுஜஞ்:**— ஆமா.

**வாதி வக்கீல்:**— மறுபடியும் இரண்டாமுறை சபிண்டி செய்தீரா?

**இராமானுஜஞ்:**— ஆமா.

**வாதி வக்கீல்:**— எதற்காக இரண்டு முறை சபிண்டி செய்தீர்?

**இராமனுஜஞ்:**— முதல் சபிண்டி வீணுப்ப் போய்விட்டது. அதற்காக இரண்

டாமுறை செய்தேன்.

**வாதி வக்கீல்:**— ஏன் அது வீணாய்ப் போய்விட்டது?

**இராமானுஜஞ்:**—சபிண்டியில் கொடுத்த பசுமாட்டை கோதானம் சுப்பிரமணியையர் விலைக்கு விற்றுக் கொன்றுவிட்டபடியால் அது வீணாய்ப் போய்விட்டது.

**வாதிவக்கீல்:**—பசுமாடு செத்ததற்காக சபிண்டியை மறுமுறை செய்ய வேண்டிய அவசியம் என்ன?

**இராமானுஜஞ்:**—சபிண்டியோடு பசுத் தானம் செய்யப் பட்டது. பசுத்தானம் வீணாய்ப் போய்விட்ட படியால் சபிண்டியில் செய்த சகல காரியங்களும் வீணாய்ப் போய் விட்டன. எனவே இரண்டாம் முறை, ஒன்றுக்கு இரண்டாகச் சபிண்டி செய்ய வேண்டியதாயிற்று.

**பிரதிவாதி வக்கீல்:**—உமது தகப்பனார் ஆற்றைக் கடக்க முடியாமல் கஷ்டப்பட்டதை நேரில் பார்த்தீரா?

**இராமானுஜஞ்:**—இல்லை.

**பிரதிவாதி வக்கீல்:**—முன் செய்த சபிண்டி வீணாய்ப் போய்விட்டதென்பதை நீர் எப்படி அறிந்து கொண்டீர்?

**இராமானுஜஞ்:**—பஞ்சாங்கக்காரர் அப்படிச் சொன்னார்.

**பிரதிவாதி வக்கீல்:**—மறுபடி ஏழு மாதத்திற்கு முன் இறந்தவருக்குச் சபிண்டி செய்ய வேண்டுமென்று உமக்கு யார் சொன்னது?

**இராமானுஜஞ்:**—பஞ்சாங்கக்காரர்தான்.

**பிரதிவாதி வக்கீல்:**—அவர் எப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னார்?

**இராமானுஜஞ்:**—முன் ௫000 ரூபாய்க்குச் செய்தபடியால் இப்பொழுது இரட்டிப்பாக ௧0000 ரூபாய்க்குச் செய்ய வேண்டுமென்று சொன்னார்.

**பிரதிவாதி வக்கீல்:**—இந்த ௧0000 ரூபாய்க்குச் சபிண்டியில் ரொக்கமும் சாமானுமாகப் பஞ்சாங்கக் காரருக்கு எவ்வளவு ரூபாய் போயிருக்கும்?

**இராமானுஜஞ்:**—பாதிக்கு மேலிருக்கும்.

**பிரதிவாதி வக்கீல்:**—பிரதிவாதியிடம் பசுமாடு கொடுக்கும் பொழுது ஏழுமாதம் வரையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நீர் ஒப்பந்தம் செய்து கொண்டதுண்டா?

**இராமானுஜஞ்:**—இல்லை.

இதற்குப் பிறகு பஞ்சாங்கம் கிட்டுவண்ணு வாதி தரப்புச் சாக்ஷியாகக் கூட்டிலேற்றப்பட்டார்.

**வாதி வக்கீல்:**—இராமானுஜஞ் செட்டியார் தகப்பனருக்குச் சபிண்டி செய்து வைத்தீரா?

**கிட்டுவண்ணு:**—ஆம்.

**வாதி வக்கீல்:**—எத்தனை முறை செய்து வைத்தீர்?

**கிட்டுவண்ணு:**—இரண்டு முறை.

**வாதி வக்கீல்:**— இரண்டாம் முறை செய்ய வேண்டிய அவசியம் என்ன?

**கிட்டுவண்ணு:**—முதன் முறை செய்தது பிரஷ்டமாகி விட்டது.

**வாதி வக்கீல்:**— அதற்குக் காரணமென்ன?

**கிட்டுவண்ணு:**— வைதருணி நதியைக் கடப்பதற்காகப்பசுதானம்செய்யப்பட்டது. இறந்த ஜீவன் வைதருணி நதியை இறந்த ஆறுவது மாதத்திற்குப் பிறகே கடக்க ஆரம்பிக்கிறான். அந்தக் காலத்தில் அதற்கெனக் கொடுக்கப்பட்ட பசு, தானம் வாங்கியவர் கையிலிருக்க வேண்டும். அப்படி இல்லாமலும் கொல்லப்பட்டும் போய்விட்டபடியால் மறுபடியும் செய்யவேண்டியதவசியமாகி விட்டது.





**வாதிவக்கீல் :**—ஒன்றுக்கு இரண்டாகச் செய்ய வேண்டியதற்கு அவசியமுண்டா?

**கிட்டுவண்ணு :**—உண்டு. குறித்த தவணை கடந்து செய்யப்படும் காரியங்கள், குறித்த காலத்தில் செய்யவேண்டிய அளவைப்போல் இரண்டு மடங்கு செய்தால் தான் திருப்திப்படும்.

**பிரதிவாதி வக்கீல் :**— இராமானுஜஞ் செட்டியார் தகப்பனார் ஆற்றைக் கடக்க முடியாமல் நின்றதை நீர் பார்த்தீரா?

**கிட்டுவண்ணு :**- இல்லை. ஆனால்...........

**கோர்ட்டார் :**— கேட்கிறதற்கு மட்டும் பதில் சொல்லும்.

**பிரதிவாதி வக்கீல் :**—இந்த மாதிரி ஆற்றைக் கடக்க முடியாமல் நின்றவர்களை எப்பொழுதாவது பார்த்ததுண்டா?

**கிட்டுவண்ணு :**— இல்லை.

**பிரதிவாதி வக்கீல் :**— அவர் ஆற்றைக் கடக்க முடியாமல் கஷ்டப்படுகிறாரென்று எதைக்கொண்டு சொன்னீர்?

**கிட்டுவண்ணு :**— எங்கள் பெரியவாள் அப்படிச் சொல்லியிருக்கிறாள்.

**பிரதிவாதி வக்கீல் :**— உங்கள் பெரியவாள் அப்படி யாரையாவது நேரே பார்த்ததாகச் சொன்னார்களா?

**கிட்டுவண்ணு :**— இல்லை.

**பிரதிவாதி வக்கீல் :**- உமது பெரியவர்கள் எதைக்கொண்டு சொன்னார்கள்?

**கிட்டுவண்ணு :**-- சாஸ்திரங்களைக் கொண்டுதான்.

**பிரதிவாதி வக்கீல் :**— நீர் சாஸ்திரம் படித்திருக்கிறீரா?

**கிட்டுவண்ணு :**- இல்லை. சமஸ்கிருதம் கூடத்தெரியாது. எங்கள் பாட்டனார் படித்ததாகக் கேள்வி.

**பிரதிவாதி வக்கீல் .**— கோதானம் சுப்பிரமணிய ஐயரைத் தெரியுமா?

**கிட்டுவண்ணு :**— பேஷாகத் தெரியும். இதோ நிற்கிறாரே. இவர் தான்.

**பிரதிவாதி வக்கீல் :**- அவர் வீட்டில் பசுமாடு இருப்பதைப் பார்த்திருக்கிறீரா?

**கிட்டுவண்ணு:**-ஆம் பார்த்திருக்கிறேன்.

**பிரதிவாதி வக்கீல்:**—அவர் வீட்டில் சுமார் எத்தனை பசுமாடுகள் இருக்கும்?

**கிட்டுவண்ணு:**-ஒன்று அல்லது இரண்டு; சில சமயங்களில் மூன்றும் இருக்கும்.

**பிரதிவாதி வக்கீல்:**—இதுவரை அவர் எத்தனை மாடுகள் தானம் வாங்கியிருப்பார்?

**கிட்டுவண்ணு:**—அதை எப்படிக் கணக்கிட முடியும்?

**பிரதிவாதி வக்கீல்:**— உத்தேசமாகச் சொல்லும். வருஷத்திற்கு எத்தனை மாடு வரக்கூடும்?

**கிட்டுவண்ணு:**—உரு மாட்டுக்குக் குறையாது. ஓகோ! கணக்கு வந்துவிட்டது. அவர் பசுமாடு வாங்க ஆரம்பித்து இருபது வருஷங்கள் ஆகிறது. இதுவரை ௫00 மாடுகளுக்கு மேல் வாங்கியிருக்கிறார். மாடொன்று முப்பது ரூபாய் விலை வைத்தாலும் ௧௫000 ரூ ஆகிவிட்டது. ரொக்கம் வேறே வாங்கியிருக்கிறார். அடே அப்பா! எவ்வளவு பணம்! எல்லாம் இந்தப் பயலுக்கு என்னாலேதானே வந்தது?

**கோர்ட்டார்:**—இது கோர்ட்டு. கேட்கிற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லும்.

**பிரதிவாதி வக்கீல்:**—கோதானம் சுப்பிரமணிய அய்யருக்கும் உமக்கும் சிநேகமுண்டா?

**கிட்டுவண்ணு:**—அவர் சிநேகமாயிருக்கிறவரை நானும் சிநேகம்தான்.

**பிரதிவாதி வக்கீல்:**—அவர் வாங்குகிற தானங்களில் உமக்கு ஏதாவது பங்குண்டா?

**கிட்டுவண்ணு:**—பங்கு கிடையாது.

**பிரதிவாதி வக்கீல்:**— பசு மாட்டுடன் கொடுக்கும் ரொக்கப் பணம் யாரைச் சேர்ந்தது?

*கிட்டுவண்ணு:*—அது பஞ்சாங்கக் காரரைச் சேர்ந்தது.

*பிரதிவாதி வக்கீல்:*—கோதானம் சுப்பிரமணியய்யர் வாங்குகிற ரொக்கத்தை உமக்குத் தருவதுண்டா?

*கிட்டுவண்ணு:*—முன் தந்துவந்தார். இப்பொழுது சில மாதங்களாகத் தருவதில்லை.

*வாதி வக்கீல்:*—இதற்கு முன் தானம் வாங்கிய மாடுகளில் ஏதாவது ஆறு மாதத்திற்கு முன்னால் விற்கப்பட்டு கொலை செய்யப்பட்ட விஷயம் உமக்குத் தெரியுமா?

*கிட்டுவண்ணு:*—தெரியாது.

[இரண்டாவது சாக்ஷியாக ஸ்டோரேஜ் கம்பெனி மானேஜர் ஜான்புல் கூட்டிலேற்றப் பட்டார்.]

*வாதி வக்கீல்:*—உம்முடைய வேலையென்ன?

*ஜான்புல்:*—ஆடு மாடுகளை வாங்கி அறுத்து உரித்து ஐஸில் போட்டு அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது.

*வாதி வக்கீல்:*—கோதானம் சுப்பிரமணி அய்யரை உமக்குத் தெரியுமா?

*ஜான்புல்:*—தெரியும்.

*வாதி வக்கீல்:*—ஆறு மாதங்களுக்கிடையில் அவரிடத்தில் ஏதாவது மாடு வாங்கியதுண்டா?

*ஜான்புல்:*—ஆம். மூன்று மாடுகள் வாங்கினேன்.

*வாதி வக்கீல்:*—அவைகளுள் வாதி இராமனுஜஞ் செட்டியாருடைய தகப்பனர் சபிண்டியில் கொடுத்த மாடு ஒன்றென்பதை நீர் அறிவீரா?

*ஜான்புல்:*—அறிவேன். அவைகளுள் அதுதான் மிகக் கொழுத்திருந்தது. அது இராமானுஜஞ் செட்டியாரிடம் தானம் வாங்கினதென்று கோதானம் சுப்பிரமணியய்யரும் கூறினர்.

*பிரதிவாதி வக்கீல்:*—நீர் வாங்குகிற மாடுகளை உயிரோடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுண்டா?

*ஜான்புல்:*—அப்படியும் செய்வதுண்டு.

*பிரதிவாதி வக்கீல்:*—குறிப்பிட்ட இந்த மாட்டைக்கொல்லப்போவதாகப் பிரதிவாதியிடம் நீர் தெரிவித்தீரா?

*ஜான்புல்:*—இல்லை.

*வாதி வக்கீல்:*—குறிப்பிட்ட மாட்டைக் கொல்லக்கூடாதென்று பிரதிவாதி உம்மைக் கேட்டுக் கொண்டாரா?

*ஜான்புல்:*—இல்லை.

*வாதி வக்கீல்:*—உம்மால் வெளிநாடுகளுக்கு உயிரோடு ஏற்றும் மாடுகள் அங்கு என்ன செய்யப்படும்?

*ஜான்புல்:*—அங்கேயும் கொன்று சாப்பிடப்படும்.

[இதற்குமேல் பிரதிவாதி கோதானம் சுப்பிரமணிய ஐயர் கூட்டிலேற்றப்பட்டார்]

*பிரதிவாதி வக்கீல்:*—உமது பெயரென்ன?

*சுப்பிரமணிய:*—சுப்பிரமணிய ஐயர்.

*பிரதிவாதிவக்கீல்:*—கோதானம் சுப்பிரமணிய ஐயரென்று உம்மை அழைப்பதுண்டா?

*கோதானம்:*—ஆம்.

*பிரதிவாதி வக்கீல்:*—ஏன் உம்மை அப்படிக் கூப்பிடுகிறார்கள்?

*கோதானம்:*—இந்தப் பக்கத்தில் பசுமாடு தானம் கொடுப்பவர்களெல்லாம் என்னிடம் தான் தருவது வழக்கம்.

*பிரதிவாதிவக்கீல்:*—உமக்குத் தருவதற்குக் காரணம் என்ன?

*கோதானம்:*—எட்டுப் பிள்ளைகளோடு கூடிய பெரிய குடும்பஸ்தன் என்பதுதான்.

*பிரதிவாதி வக்கீல்:*—இந்தப் பசுமாடு தானம் எதற்காகக் கொடுக்கிறார்கள் என்பது உமக்குத் தெரியுமா?

*கோதானம்:*—யாராவது செத்துப் போனால் கொடுப்பார்கள்.





*பிரதிவாதி வக்கீல்:*—வைதருணி நதி என்றிருப்பது உமக்குத் தெரியுமா?

*கோதானம்:*—தெரியாது. நான் அங்கே போனதில்லை. எனக்கு சாப்பாட்டுக்கே பணமில்லாத போது எப்படி யாத்திரை போகமுடியும்?

*பிரதிவாதி வக்கீல்:*—அப்படி ஒரு ஆறு இருப்பதாகவும் அதை இறந்து போன ஜீவன் கடந்து போவதற்காகப் பசுமாடு தானம் கொடுப்பதாகவும் நீர் அறிவீரா?

*கோதானம்:*—தெரியாது.

*பிரதிவாதி வக்கீல்:*—நீர் இதுவரை எத்தனை பசுமாட்டுத் தானம் வாங்கியிருப்பீர்?

*கோதானம்:*—ஐந்நூறுக்கு மேலிருக்கக்கூடும்.

*பிரதிவாதி வக்கீல்:*—அந்தத் தானங்களை வாங்கும்போது வைதருணி நதியைக் கடப்பதற்காக இந்த மாடு கொடுக்கப் படுகிறது என்று யாராவது உமக்குச் சொன்னதுண்டா?

*கோதானம்:*—ஒருவரும் சொன்னதில்லை.

*பிரதிவாதி வக்கீல்:*—வாதி இராமானுஜஞ் செட்டியார் உமக்கு மாடு தரும் போது இந்த விஷயத்தைச் சொன்னாரா?

*கோதானம்:*—இல்லை.

*பிரதிவாதி வக்கீல்:*—இந்த மாட்டை ஆறு மாதங்களுக்கிடையில் விற்கக்கூடாதென்று ஒப்பந்தம் பேசி வாங்கினீரா?

*கோதானம்:*—இல்லை.

*பிரதிவாதி வக்கீல்:*—இது வரையில் வாங்கிய மாடுகள் முழுமையும் நீர் வைத்திருக்கிறீரா?

*கோதானம்:*—அவ்வளவும் வைத்திருந்தால் எப்படி இரைபோட முடியும்? நல்ல விலை வரும்போது விற்று விடுவேன்.

*பிரதிவாதி வக்கீல்:*—பஞ்சாங்கம் கிட்டுவண்ணுவைத் தெரியுமா?

*கோதானம்:*—தெரியும்.

*பிரதிவாதி வக்கீல்:*—கோதான விஷயத்தில் உமக்கு ஏதாவது இடைஞ்சல் செய்தாரா?

*கோதானம்:*—ஆம்.

*பிரதிவாதி வக்கீல்:*—என்ன செய்தார்?

*கோதானம்:*—முதல் முதலில் எனக்குக் கோதானம் ஒன்று கிடைக்கும் பொழுதே அதில் தக்ஷிணையாக வைக்கப்பட்ட பத்து ரூபாயைத் தனக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அப்படியே எப்போதும் செய்யவேண்டுமென்றும், அப்படியில்லாவிட்டால் ஒரு மாடுகூடக் கிடைக்காமல் செய்துவிடக்கூடுமென்றும் என்னைப் பயமுறுத்தினர். அவர் சொல்லுவதைத்தான் பிரபுக்கள் கேட்பார்கள். ஆகையால் நானும் பயந்துகொண்டு தானம் வாங்கி வந்ததும் தக்ஷிணையாக வைக்கப்பட்ட ரூபாயைக் கொண்டுபோய் அவர் வீட்டில் கொடுத்து விடுவது வழக்கம். மாடும் வேட்டியும் தான் என்னைச்சேரும். பால் மோர் விற்றும் மாட்டை விற்றும் கன்றுகளை விற்றும் குடும்பத்தை நான் நடத்திக்கொண்டுவருகிறேன். சென்ற ஆறேழு மாதங்களாக குடும்பத்தில் நோயும் கஷ்டமும் அதிகப்பட்டுவிட்டபடியால் தக்ஷிணைப் பணம் குடும்பச் செலவில் அடிபட்டுப் போய்விட்டது. வட்டியோடு தருவதாக பஞ்சாங்கம் கிட்டுவண்ணுவிடம் சொன்னேன். அவர் ஒத்துக்கொள்ளவில்லை. பின்னால்வந்த பணங்களைக்கொண்டுபோய்க் கொடுத்ததற்குப் பூராப் பணமும் வந்தால் தான் வாங்க முடியும் என்று சொல்லி விட்டார். இதனால் அவருக்கும் எனக்கும் பெரிய மனஸ்தாபம்.

*வாதி வக்கீல்:*—கோதானம் கொடுக்கும் பொழுது ஏதாவது சொல்லிக் கொடுப்பது உண்டா?

கோதானம் :— ஆம்.

வாதி வக்கீல் :–என்ன சொல்லுவார்கள்.

கோதானம் :— என்னவோ சமஸ்கிருதத்தில் சொல்லுவார்கள். அது எனக்குத் தெரியாது. நான் சமஸ்கிருதம் படிக்கவில்லை.

வாதி வக்கீல்:—இறந்த வீட்டில் உமக்கு எதற்காகப் பசுமாடு தருகிறார்களென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்?


கோதனம்:—நான் ஏழை. பிள்ளைகுட்டிக்காரன். புண்ணியமென்று கருதித்தான் எனக்குத் தருகிறார்களென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

இதற்குமேல் இரு தரப்பு வக்கீல்களும் தங்கள் தங்கள் கட்சியை சாமர்த்தியமாக வெகு நேரம் எடுத்துப் பேசினார்கள். பின்னர் கோர்ட்டாரால் அளிக்கப்பட்ட தீர்ப்பு வருமாறு:—

"வாதியின் தகப்பனார் வைதருணி நதியைக் கடக்க முடியாமல் கஷ்டப்பட்டாரென்பதற்குச் சாக்ஷி ருஜுவாக வில்லை முதலில் செய்த சபிண்டி வீணாய்ப் போய் விட்டதென்பதற்குப் போதிய ஆதாரம் காட்டப்படவில்லை. வைதருணிய நதியைக் கடப்பதற்காக இப்மாடு கொடுக்கப்பட்டதென்று பிரதிவாதிக்கு விளக்கிச் சொல்லப்படாததோடு குறிப்பிட்ட காலம்வரையோ அல்லது மாடு உயிரோடிருக்கும் வரையோ பிரதிவாதி வைத்துக்கொள்ள வேண்டுமென்று எவ்வித ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. பஞ்சாங்கக்காரருடைய துர்ப்போதனையின் பேரில் இந்தக் கேஸ் கொண்டு வரப்பட்டிருக்கிறதே யன்றி வாதிக்கு உண்மையில் இந்த நஷ்டங்கள் ஏற்படக் காரணமில்லை. நஷ்டமேற்பட்டிருந்தால் வாதியின் புத்திக் குறைவையே காட்டும். ஆதலால் இந்தக் கேசைத் தள்ளுவதோடு பிரதிவாதியின் செலவை வாதி கொடுக்கும்படியும் தீர்ப்பளிக்கிறேன்."

84306


## நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதிலுண்ட கயிற்றின் (Wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும் பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷகாலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்க கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும் குறைந்த விலை ரூ. 4–8–0. தபால் செலவு அணா 8.

(20) தி. பான்ஸி வாட்சு அவுஸ், 15 ஜி. டி. மதராஸ்.